# OPPAARIS

## I

CONTENTS

1. Rati madaṉa navarattiṉa oppāri

2. Rati madaṉa navarattiṉa oppāri

3. Navīṉa navarattiṉa madaṉarati oppāri

4. Navaraca kadamba oppāri

# ரதி மதன
# நவரத்தின ஒப்பாரி



K.A. மதுரை முதலியார்
ஷண்முகானந்த புத்தகசாலை
பார்க்டவுன் மதுராஸ்

உ

ஸ்ரீ ஜோதிமயம்

இரதி மதன நவீன

# நவரத்தின ஒப்பாரி



எ. வி. எஸ். டிப்போ,
பக்டி ... பேட்டை

இவை

சென்னை, V. A. T. ராஜனின்
மாணவரும் குமாரருமாகிய
V. T. இராஜேந்திரன் அவர்களால்
மிகத்தெளிவுடன் எழுதப்பெற்றதை

K. A. ராஜுனா முதலியார் அவர்களது
ஸ்ரீனிவாச அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது

காபிரைட்] [விலை ரூ 1-50

# ரிஜிஸ்டர் அறிக்கை:-

இதனால் உலகில் பலபுத்தகவியாபாரிகளுக்கும், மற்றும் கல்வியிற்சிறந்தவித்வான்களுக்கும் அடியிற்கண்டுள்ள யான் தெரிவித்துக் கொள்ளுவது யாதெனில், சென்னை V. T. ராஜேந்திரன் என்பவரால் எழுதப் பெற்ற இரதிமதன ஒப்பாரி என்னும் நவீன நவரத்தின ஒப்பாரியை அடியிற் கண்டுள்ள யான் 1866-ம் வருஷத்திய 25-வது ஆக்ட் 20-வது பிரிவு, 3-வது விதியின் பிரகாரம் சனம் தங்கிய கவர்மெண்டில் (ரிஜிஸ்டர் காபிரைட்) செய்யப்பெற்றிருப்பதால் இதை பதிப்பிக்கவோ பிரட்டி எழுதவோ முயற்சிப்பாரேல் இதனாலுண்டாகும் சகல நஷ்டங்களுக்கும் பாத்திரராவார்கள் என்பதை இதனால் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

**கே. ஏ. மதுரை முதலியார்,**

ஷண்முகானந்த புத்தகசாலை,

பார்க்டவுன், சென்னை-3

உ

ஜோதிமயம்.



இரதி மதன நவீன

# நவரத்தின ஒப்பாரி

## விநாயகர் காப்பு வெண்பா.

சித்பரன் தபசிருக்க சிங்மாரன் கணை தூவ
நெற்றிவிழியால் மதனும்—பற்றியதை
ஒப்பாரியாக ஓதுதற்கு ஐங்கரனே
தப்பா தருளெனக்குத் தா.

## (ஐங்கரன் வணக்கம்)

இராகம் வெண்செந்துரை

ஆதிகைலாயமதி லம்பிகை யருகமர்ந்தி
பாதிமதியைப் பொருத்தி பாம்பாபரணமுடுத்தி
ஆதிதுயின் ஞானயனும் அருகினிலே நின்றிடவும்
சோதியொண் அமரரெல்லாம் வாயார வாழ்த்திடவும்
சூரவார குலமுடன் பொரமும் நக்மான் மழுவும்
நாரதர் வீணையிட்டவும் நந்தி நம்பனமர்ந்திடவும்
பொல்லாத சூரபத்மன் யோக்கியமாய வதரித்து
சொல்லொணு துன்பமதை சூரன் செய்தானுர் கரித்து
ஆக்ரமித்து சூரபத்மன் அமரர்களை கொடுமைசெய்தான்
சக்கிரமாய் தேவரெல்லாம் ஜெகத்பனருகில்வந்தார்

ஆண்டவனமரர் குறை அறிந்தே மனம் பதற
தாண்டவனும் நெற்றிவிழி தன்னை திறந்தார் சிதற
ஆறு பொறியவ்வழியில் அக்கினிபோலே புவியில்
சீறியே சரவணையில் சிதறிவிழ அப்பொறியில்
ஆறு குழந்தை யந்த அரும்பொய்கை தன்னில் நீந்த
சீருடனதை யறிந்த சத்தி பாதத்தைப் பணிந்தே
ஆனந்தங்கொண்டோடி வந்து ஆறுமைந்தரை யணைத்து
தோணவே வாரியெடுக்க ஏகமொருருவாகக் கண்டு

அரன் விழியால் சரவணையில் அவதரித்த மைந்தருக்கும்
சரவண பவனெனவே ஷண்முகனென்று பெயரமைத்து
ஆராட்டி சீராட்டி அம்பிகையாள் தாலாட்டி
மனமகிழ்ந்து பாலூட்டி வளர்த்தனர் பாராட்டி

அமுதவல்லி யெனும் மாது அமரேசனு மப்பொழுது
சுமதி தெய்வானையாய்ப் பிறந்து கார்த்திகேயனை மணந்து
அசுரரைக் கருவறுக்க அம்பிகையாள் வேல் கொடுக்க
நசுக்கியே உயிர் மடிக்க நான் மறைகளும் துதிக்க

அமரர் குறைபோக்கி அசுரனை மயிலாக்கி
கமழும் கழுகாசலத்தில் கந்தனமர்வாகி
அழகுவேல் கைஜொலிக்க அறுமுகவன் வீற்றிருக்க
தொழுது வர்ணமயில் நடிக்க துந்துமி நாரதர் வணங்க
அயன்மகன் நாரதரும் அவன் வந்த செய்தியையும்
நயமுடன் வள்ளியென்னும் நங்கைதனைக்கண்டதுவும்
அதிரூபலாவண்யமும் அருங்கிளியின் வரலாறும்
கதிரேசனுக் குரைக்க கானவேடன்போல் நடிக்க
ஆரணங்கு வள்ளிதனை அணுகியே ஓர்மானை
யாரடி பிடித்தாரதனை என்று அதட்டியே காதலுடனே
அரிவை வள்ளி மாதுடனே ஆசைவார்த்தை பேசிடவே
பரிவேடர் வந்திடவே முருகன்வேங்கை மரமாகிடவே
அண்ணன்மார் சென்றிடவே அரிவையங்கு நின்றிடவே
பண்டார கிழவனைப்போல் பரிவேடர்முன்வரவே
ஆண்டிதனைக்கண்டவுடன் அடிபணிந்தார் வேடுவரும்
வேண்டியே தன்தங்கையிடம் விட்டகன்றார் ஐவரும்

அவன் கொடுத்த மேகன் திணையை — ஆண்டியவர் திருடிடவே
குவளையி லடைத்தவரும் — குக்கவிட்டு கீழ் விழவே
அடவியில் ஜலமருந்த — அரிவைவள்ளி யைப்பிடித்தே
தடாகத்தில் தாகம் தணிந்தே அந்த தையலைகேலி புரிந்தே
அண்ணலே யுனை நினைக்க நீ — யானையைப்போல் அங்கு நிற்க
கண்ணீர்விட்டு கான வள்ளி — கதறி முருகனை யணைக்க
அப்பயமெற வள்ளியரை — ஆதரித்தான் வேல்முருகன்
உதவி செய்த ஐங்கரனே — உவந்து வரந்தா ஜெகனே
அங்கஜனை பரமசிவன் — அனல் கொண்டெரிக்கவும்
மங்கைரதி வருந்தியதும் — மாரனுயிர் மீண்டதுவும்
அருள்பாசி பிறைதனிலே — அணங்கனைக் கொண்டாடுவதும்
பொருந்தவே இக்கதையுரைக்க — பாலகனை காருமையா
ஆதிகுருதேவா — ஐங்கரனே நீ வாவா
ஜோதிச்சுடரொளியே — சுகுணக்கதிர் மணியே
பாலைக்கொண்டு பல்துலக்கி — ஓலைக்கொண்டு நாவழித்து
வேலை தவறாமல் — விக்கினரே யுனை நினைந்து
முழுகி பயிரார்ந்தி — முன்குடுமி பின்பொட்டு
வழுவின்றி யான் முழுகி — வெந்நீரதை குழைத்து
அரஹரா என்று — அணியலுற்றேன் வெந்நீரை
குறைதீர வேயுனக்கு — கும்பிளியில் ஜலமெடுத்து
தோட்டமது திறந்து — கொன்னை தைத்து பூவெடுத்து
தோட்ட முடன் மாலைகட்டி — தெரிசிக்கவுனை மேல் தொடுத்து
அப்பமதிரசமும் — அவல் கடலை தேங்காயும்
முப்பழமுந்தனுக்கு — மூஷிகனே யளிப்பேன்
சிவசிவாவென் றுனை — தெண்டனிட்டேன் கண்பாரும்
அரஹரா என்றுயிப்போ — அணிந்தேனுன் திருப்பாதம்
மூஷிக வாகனே — முக்கண்ணன் புத்திரனே
காட்சிதரும் காரணனே — கற்பக விநாயகனே
உத்தாருளாலே — உலகில் சிறுபாலகன்யான்
விந்தையுடன் ஒப்பாரி — வேல்மாரன் மேல்பாட
இசைகள் தவறாமல் — எதுகை மோனைமாறாமல்
வசைச்சொற்கள் வராமல் — வந்தெனக் கருள் புரிவாய்

## கலைமகள் வணக்க ஒப்பாரி மெட்டு

வீணையை கரமேந்தும் வேதாந்த வேசியரே
கானகர கீதமதை கரமேந்தும தாயாரே
நான்முகனின் தேவியரே நல்லகலை வாணியரே
யானிம் மதனில் கவியை அன்னையும் அருளாளே
பாடவரந் தாருமம்மா பாவலர்கள் தம் சபையில்
நீடவே துணையிருப்பாய் நித்ய கல்யாணியரே
நான் பாட வகையறியேன் பாட்டின் பயனறியேன்
உனைதேட வகைதெரியேன் சிறுகுழந்தைபாலன் யான்
காமன் கதை பாட கல்விக்கரசியரே
தாமதம் செய்யாமல் தாயே துணைவருவாய்

## குரு வணக்க ஒப்பாரி மெட்டு

சகலகலை யேநிதினைவைத்த சற்குருவே தஞ்சமையா
பலகலையும்ஓதிவைத்த பணிமுன்னைஎன் குருவே
ஓரெழுத்தை ஈரெழுத்தாய் ஓதிவைத்த என்குருவே
பத்தெழுத்தையோரெழுத்தாய் பதியவைத்தஎன்குருவே
யாரை மறந்தாலும் தாயை மறப்பதில்லை
தாயை மனதில் வைத்தேன் தந்தையைநெஞ்சில்பதித்தேன்
சரபக் கவிபாடும் தலைமையுள்ள என் குருவே
உரமிகுந்த வேல் முருகன் வரக்கவியை பெற்றவரே
வி. ஏ. தியாகராஜனெனும் வித்தகனே என் குருவே
நீயோதிவைத்த கவி நிகழ்த்திடவே அருள் தருவாய்

## தக்கன் வரலாறு அவன் தலத்தின் மகிமையும்

## ஒப்பாரி மெட்டு

திருமூர்த்தி மூவரிலே திசைமுக பிரமனவன்
தரும நெறியுடனே சத்யலோகம் ஆண்டுவர
பிரம்மனிட வலது பாதமதிலே பிறந்த
வரத்தில் மிகுந்தவொரு வல்லவனும் தக்கனவன்

கைலாசகத்தில் ஓர் யுகமாய்
சிரமூன்று தலைகீழாய்
பாரதவம் செய்யலுற்றான்
பரமசிவனை நினைந்து
சம்புசிவ மூர்த்தியவர்
தக்கன் தவத்திற்கிரங்கி
அவனருகில் வந்துநின்று
அக்கணமருள் புரிந்தே
இணங்கி தவம் புரிந்தாய்
ஏதுவரம் வேண்டியிங்கு
உண்மையதனை தெளிவாய்
ஓதுவாய் பக்தனே நீ
இயம்புவாய் தக்கனவன்
என்று ஈசனவர் கேட்க
ஆசையுற்று நினையாமேவா[illegible] அதிசயத்தை என்மனதில்
உலக முழுவதையும் தான் ஒருவனே ஆளவேண்டும்
துலக்கமுடன் தேவரெல்லாம் எனக்குதொண்டுபுரியவேணும்
எதிர்த்தவரை மாய்க்கவேணும் எதிரின்றிவாழவேண்டும்
சதி என்ன செய்தாலும் நான்சாகாதிருக்கவேண்டும்
உன் பக்கத்திலமர்ந்திருக்கும் பராசக்தி யெந்தனுக்கு
புத்திரியாய் பிறக்க புரிவீர் அருளெனக்கு
சத்தியந்தமாது தன்னை சாமி நீர் பிராமணர் போல்
சித்தங்களித்துவந்து செய்வீர் விவாக மன்றேல்
மகேஸ்வரா நீரெனக்கு மருமகனாகவேண்டும்
நிகரில்லா எந்தன் புகழ் உலகில் நீடித்திருக்கவேணும்
என்று தக்கனுரைக்க ஈசனிதை கேட்டு
நன்றென்று அப்படியே நாதன் வரமளித்தார்
வரம்பெற்ற தக்கவன் வணங்கி பரமேஸ்வரனை
குறைகளெல்லாம் தீர்த்த தென்று கெம்பீரன் நகரடைந்தான்

(பராசக்தியானவள் தக்கனுடைய யாக குண்டத்தில் தக்கனுக்கு மகளாகப் பிறந்து தாக்ஷாயணியென திருநாமம் புனைந்து வளர்ந்து வருதல்)

## ஒப்பாரி

ஆதி பரமசிவன்
அருகிருக்கும் அம்பிகையை
ஜோதி சொருபனவர்
சுந்தரமுடனழைத்து
கோதிலா மங்கையரே
கோதிலாள் நங்கையரே
நீதயாய் தக்கனுக்கு
நானளித்த வரப்படியே

அந்த மன்னனுக்கு மகளாய் மா தே பிறப்பாய்
எனனுடைய மொழியை எதிர்த்து கூறவேண்டா மடி
கோதில்லாமங்கையுரே அா.கே கமலையாய் நீ பிறந்தால்
வேதியர் ரூபத்துடன் விவாகமுகை நான் புரிகுவன்
சீக்கிரம் செல்வாயடி செயிறைடையபார்வதியே
யாகக்கியமை க்ககன் யாகாக்கினி தானக்கே
ஈசனுரை கேட்ட ரேணுகையாளப்போ
வாசமுள்ள நாதன்மொழி வழுவாமல் வந்தடைந்தாள்
மகளையடையவெவுறு மாவீர தக்கமைவன்
இருக்கைமலவன் அக்னி வேதவல் ளிமா தவனும்
யாகமது வளர்த்தி அரும்பூசை செய்யலுற்றுச்
ஏகமாய்த் தேவரெல்லாம் யாகமந்தசுற்றிய மயர்ந்தார்
அந்த சமயத்திலே அம்பிகையாள் ஏது செய்தாள்
விந்தையுடை அக்கினியில் விகசமாய்த் தோன்றுநின்றாள்
அக்கினியில வந்துதித்த ஆரணமலைக கண்டவுடன்
மிக்க மகிழ்வடைந்தான் மிசுரமாய் மலைமலவ
தக்ஷண்டயாகத்திலே நைய்மதித்ததிலே
தாக்ஷாயணி யணவே திருநாமம் சூட்டலுற்றாம்
அதிக செல்வாக்குடனே அம்பிகையாள் வளர்ந்தவும்
தாதிமாரும் தோழிகளும் தகுந்தடமை செய்திடவும்
மாங்க பருவமுடையளும் வயது பனிரெண்டாச்சு
காலை சூதம நேரம் மங்கையர்க் குறித்தச்சு
தக்கனிடம் வளர்ந்து வரும் தாக்ஷாயணியை
பரமன் வேதியர் ரூபத்துடனே வந்து
மாங்கல்யம தரித்து மாயமாய் சொல்லுமொப்பாரி
வெண்நிலாவைச் சூடும் வேதாந்தனிதை யறிந்தே
கன்னிகை தாக்ஷாயணியை கல்யாணம் செய்வதற்கு
ஈசனெழுந்தாரே
தண்ணி மனதினிலே
தன்னுடைய ரூபத்தை தான் மாற்ற துணிந்தாரே
காவென்றழைத்தாராம் வருத்து மறுவேடம்
மாமனுரை யோதுமொரு மறையவர் போலாக
கைதனிலே பஞ்சாங்கம் கடவுள் தர்ப்பை பிடித்தார்
செய்தவம் பலித்தென்று சீக்கிரமாய் வாராராம்

தக்ஷன் அரமனைக்கு தானொருவர் காணாமல்
தாக்ஷாயணியருகே தற்பரனும வந்து நின்றார்
வேதியரை கண்டவுடன் வேதாந்த ரூபியவள்
கேதில்லா மனதுடனே கும்பிட்டுவணங்கலுற்றாள்
வணங்கிய மாதரை வாழ்த்தினார் ஈஸ்வரனும்
பிணக்கமாய் மாதவளும் சிரித்து கீழ்விழவும்
இதுதான் சமயமென்று எடுத்தாரே மாங்கல்யம்
புதுமையுடன் கழுத்தில் நாதனும் தரித்தார்
மாங்கல்யம் தரித்து மறைந்தார் மகேஸ்வரனும்
தேங்குயில் கன்னிகையும் திடுக்கிட்டு விழிக்கலானாள்
கழுத்தினிலே மாங்கல்யம் கண்டாள் தாக்ஷாயணியும்
வழுத்திடவே தந்தையரை வரவழைத்தார் மாதுமையும்
தக்ஷனவன் வந்தானே தையலரைக் கண்டானே
அக்ஷணமே துயரங்கொண்டு அரனை நினைந்தானே
கலங்கிய தக்ஷனுக்கு காட்சி தந்து ஈஸ்வரனார்
இலங்கவே உண்மைதனை இயம்ப சந்தோஷமானார்
மனது களித்து தக்கன் மருமகன் மகேசனுடன்
தானும் மணங்கூட்டி தயங்காது தனுப்பலுற்றான்
தாக்ஷாயணி தற்பரனும் தக்கனை விடைதனை பெற்று
அக்ஷணமே யகன்றார் அருள்வெள்ளி மலைதனக்கே

## மதவேள் உற்பத்தி ஒப்பாரி

மலையை குடையாய் பிடித்த மன்னனந்த மாயவனும்
நிலைகுலைந்து லக்ஷ்மியுடன் நிமலன் தனை நோக்கி
பாலன் வரம் பெறவே பரந்தாமன் தவமிருந்தார்
காலகாலனவரும் கருத்தல் தவத்திற் கிறங்கி
சூலமும் கபாலமுடன் சியாமளன் எதிர் தோன்றி
ஆலகாலத்தை யுண்ட அம்பலவாணன்கேட்பார்
யாது குறை கொண்டு என்னை நினைந்து நின்றீர்
ஓதுவீர் மைத்துனரே ஒன்றுக்கு மஞ்சாதீர்
பரமன் மொழிகேட்டு பரனந்தோன் கூறுகிறார்
வரமொன்றுபெற்றிடவே வரவழைத்தோமும்மையென்று

காதலனி பகற்கு கன்னிகையை மணப்பதற்கும்
ஆதரவில்லாததினால் அதிலுமதில் மானி கள்
பிற புரி மை இல்லாமல் பரதவித்து மாளுகிறார்
சிறப்பு போ சிற்றின்ப சேர்க்கைக்கு வழி வேவே
மகனென்று எனக்களித்தால் மாசிலா மணியீசா
மகவு பெருமையுண்டு மேதினியில் சவேசா
என்று மொழிந்திட்டு சென்று புகழ்ந்தார்
தகவென்று ன் வரமே நாரணர் களித்தார்
வரம்பெற்று தந்தாரே வாமனனும் லட்சுமியும்
ஒரு பத்து மாதம் சென்று உலகில் மதன் பிறந்தான்
ஒருவயது இருவயது ஓரிரண்டும் மூன்றாச்சு
பருவம் பதினாறு பண்டமாரனுக்காச்சு

## இரதி உற்பத்தி ஒப்பாரி

இமயவர் அசுரர் முதல இருந்து திருப்பாற்கடலில்
அமிர்தங் கடைந்திடவே ஆவல் கொண்ட நன்னாளில்
இன்பமாய் மந்தர கிரியை இவர்கள் ஒரு மத்தாக்கி
அண்டம் புகழ் வாசுகியே அணைக்கும கயிறாக்கி
இராக்கதர் ஒரு புறமும் இமையவர் ஒரு புறமும்
தாரான அமிர்தம் தாங் கடைய வச்சமயம்
இளம்பருவமான மங்கை அலை கடலிலெழுந்திருக்க
கலக்கமுற்றுதேவரெல்லாம் கண்டு ஆனந்திகைக்க
இரதியென திருநாமம் இசைந்தளித்து மங்கையரை
பரமபதி தன்மகளாய் பக்ஷமாய் வளர்த்தனரே

## தேவர்கள் மதன் ரதிக்கு திருமணம் நடத்த யோசித்தல் ஒப்பாரி

கல்வி தொழில்தனையே கலைமாரனுமியற்ற
நிலவ மரர்களும் நினைத்து பரனிடம்
இலக்ஷ்மியின் சமேதன் எம்பெருமான் மைந்தன் மதன்
திலகம் போல் வடிவுடையோன் திடசாத்திரம்படைத்தோன்

இருவருக்கும் பொருத்தம — இருந்தி வேதிறக்கும்
கருத்துடைவர் நிமித்தம் கணிந்தமர நாள்முகூர்த்தம்
இனிதாய் மகமதவாண்டு — இராசியோ மீ...
...ணிவாயாடி திங்கள் கண்டு காலைஏழ்மரத...
இன்பமாய் குருவாரம — இவ கள முகூர்த்தம நேரம்
...ண் மூன் றுமை...யோனும் — ...குத கண நதவ ...ரும்
இசைந்து இவ பந்தலின — இல்லை க ...வகர்யம ...வ
தி...சபு ம் வலங்கரி...க — சிக்கர்ய மணம ...தலமர

## (மதனா மணப்பந்தலின் சிறப்பு ஒப்பாரி)

உம்பர்புகழ் பைங்கிளியாள் — உயிர் ...செல்வதியாள்
குயபமுல்ல ரதியாள — ...பாலகுருபகவ...
உத்தமி ...ரதிக்கும் — சித்த... வேன் ...ரைக்கும்
நித்திய மங்களமாய் — நி...ம் தி பந்தலுக்கும்
உச்சித ...ம்பம நாட்டி — உ...ந்த கலசம் பூட்டி
...ச்சித கொடிஏற்றி — க ...ருந்து ... ...ட்டி
உ... ராஜ மாலைகளால் — உடர்ந்தபொருப்தல் ...
...ரா ...ர் ...ட்டார் — ப...
ஓவ்வொருக்கப பத்திக்கும — ஒழுங்கொழுங்கா ...தி...நிற்கும்
வெவ்வெரு ப வெளிப்புரத்தில் — வார் ...டகேட்டிருக்கும
யானைக் ...முகு குண்டாம் — வாகா ...தென்னங்குலை ...ம்
யானைபின்னி மண்டபத்தில் — ...ற்றபுறம்
...ன் பறம் வித்துமை களால் — உயர்லஸ்தர் குலேப்பக்கலாம்
...ல்லூத்த கோரட்லகளாம் — ...க...பெ...மை ...ரிசரி
உக்கமிட்டு ஊஞ்சலாடும — ...ரா... பாடி புக புல்களுகம்
சொ...கிட ...ம்...ம் — ஜோடிபுரு ...ட்ட மடும்
உறி கட்டும் தூக்க ...தர்ன் — ...வரிதகுருவிமை ...வாம்
கரிச்சிட்டு கவு...ரி — ச...ம ...தில் வா...ம் பயிரி
உயர்தொரு பாண்டுகளாம் — ஓலமிடும் கினார்தெ ...டுவாம்
...ய...ர ...ாகசுரம் — நாகரீச புளுட்டாரம்
உகந்ததம்பூர் மோர்சிங் கடம் — வீணை புல்புல்தாராதி ...ம்
அகமகிழ் சுரவீணை — அமரர்தன் ...கசேனை

உலகளந்தோன் மகனை — யலங்கரித்தாரே மதனை
கலக்கமின்றி பந்தலிலே — கம்பீரமாய் அமர்த்திடவே
உல்லாச ரதியை கூட்டி — உத்தமிமார் முழுக்காட்டி
மல்லால் கூந்தல் துவட்டி — மயிலெண்ணெ தான் தடவி
உலர்த்தியே கூந்தலை — உத்தமிமா சிக்கருத்து
நலமிருக்க ஜடையுமிட்டு — நாகர்கமலர் சூட்டி
உலகம் விலைமதிக்கும் — ருத்ராக்ஷ சேலைகட்டி
கலக்கமின்றி மையுமிட்டு — சவ்வாது பொட்டுமிட்டு
ஒட்டியாணம் பாடகமாம் — உகந்தமுத்து சரப்பளியாம்
மெட்டெடன பொட்டுகளாம் — மோதிரம் காப்புவளையல்
உச்சியில்லே மயிர்மாட்டி — வைர கமல் காதில்பூட்டி
கச்சித ஜிமிக்கி சூட்டி காலில் — செயின் கொலுசுமாட்டி
உத்தமியை அலங்கரித்து — உயர்ந்த திலகமிட்டு
நெற்றிவிலை கட்டிகட்டி — நீலவர்ண சாந்துமிட்டு
உமையவளும் லக்ஷ்மியும் — உகந்த கலைவாணியரும்
மழுந்சாய் மாமன் கண்ணன் கன்னியரை அழைத்து வந்தார்
அப்போ வேலை தவறாமல் — விருது மழுங்காமல்
நான் முகூர்த்தபடியே — நாராயணன் மருமகட்கு
உத்தமகுணமாரன் — உலகோர் புகழ்தீரன்
பத்தினிரதியினை தான் — பதிமாலையே தரித்தான்
உம்பர்கள் வாழ்த்திடவும் — உகந்தாசி கூறிடவும்
அம்பிகை சமேதனுடன் — அரியயனும் வாழ்த்திடவும்
உயர்வுடனே சேஷையிட்டார் — உற்றபந்து மொய்யுமிட்டார்
நயமுடன் விருந்தருந்தி — நடந்தார் விதி
ஊக்கமுடன் மாரன் — உத்தமி ரதியுடனே
ஆரோக்கிய நகர்தனிலே — அரசுரிமை செய்தனரே

## தற்பரனின் மாமனுமான தக்கன் ஒருநாள் தன் மகளையும் மருமகனையும் பார்த்து போக வெள்ளியங்கிரிக்கு வருகிறான்

### ஒப்பாரி மெட்டு

தபமிகவும் சிறந்த — தக்கனவனும் ஒருநாள்
உபசரிப்பாய் மருமகனையும் — உத்தமி தன்புத்திரியையும்

காணவென நினைந்து கடுகடந்தானே
வேணதூரம் தாண்டி வேகமாய் வந்தானே
ஆனைபரி சேனையுடன் ஆர்ப்பாட்டமாக வந்தான்
மானை ஈரமோந்து மதிகலங்குனவந்தான
கஞ்சா வெறியன் கள் வெறியமாரண்டி
அவர் மிஞ்சியமயக்கத்தினால் மயங்கியமர்ந்திருந்தார்
மாமனான தக்கனவன் ராசபைக்கு வந்ததனை
சோமசுந்தரன் காணவில்லை சூரனறிந்தேயிதனை
மதியாதமர்ந்திருக்கும் மருமகனைக் கண்டானே
குதித்தெழும்பி தக்கனவன் கண்கள் சிவந்தானே
கண்கள் சிவந்தானே காந்தாளம் கொண்டானே
எண்ணம் பல கொண்டு எரிபார்ந்து நின்றானே
கடவுளெனும் பெயரை கபடவனின் கொண்டதினால்
அடமாய் நமை மதியா திருக்க மனம் துணிந்தானே
கர்வமொழியவேணும் நம்மை கண்டாலே மதிக்கவேணும்
தற்பரனுமிவனும் நமக்கு தாழ்ந்தவனாக வேணும்
என்றுமே கோபமுடன் ஏகினான் தக்கனவன்
பின்னமே புரியவென்று பாவியாகம் செய்யலுற்றான்

## தக்கன் யாகம் செய்வதைக் கேள்வியுற்ற தாட்சாயணி தனது நாதனிடம் விடைபெற்றுச் செல்லும் ஒப்பாரி

யாகக்குழியொன்று அகலமாய் வெட்டச் செய்தான்
நாகலோகத்தாரும் தன்மதியும் சூரியரும்
பதிநொரு ருத்திரரும் பரமன் விஷ்ணு தேவர்களும்
அதிமதுர லட்சுமியும் அஷ்டதிக்கு பாலகரும்
கின்னரர் கிம்புருடர் கருடகாந்தர்வருடன்
எண்ணில்லா பேர்குழ யாகமதை செய்யலுற்றான்
தந்தை செய்யும் யாகமதை தாட்சாயணி கேள்வியுற்று
அந்தமுள்ள நாதனெதிர் அம்பிகையாள் வந்து நின்று
பெற்றெடுத்த எந்தன் பிதா விற்பனரின் யாகமதை
இக்ஷணமே கண்டுவர எனக்கு விடை தாருமையா

கன்னிமொழிகட்ட சிவன் கலகலவென்றுநகைத்து
அன்னைபோல் அருகிருக்கும் அறிவை யர்க்கு கூறுகிறார்
என்னை ஜெயிப்பதற்கும் எனக்கு மேலாவதற்கும்
உன் தந்தை யாகமதை ஊக்கமுடனேயியற்ற
அன்னமே நீ அங்குசென்றால் அவமதித்து பேசிடுவான்
நன்றல்ல செல்லுவது நாயகியே இங்கிருப்பாய்
சனுமை மொழி கு இணங்காமல் ஈஸ்வரியாள்
அவசியம் போகவேணும் ஐயனே என்றுரைத்தாள்
அப்படியானால் பெண்ணே அரிவை நேர செல்நிடுவாய்
தப்பிய நேர்ந்ததானால் முகம் தலைனில் விழிக்காதே
அவமானப்பட்டு இங்கு ஆரணங்கே வாராதே
கவலைத்தில் வைத்து இதை கடுகவேசெல்மாதே

பிறகு தாக்ஷாயணி பரமனிடம் விடைபெற்று தக்னிடம்வர தக்கன் மகளை தூஷித்து ஏசவும் உடனே அவள் தனது சரீரத்தை யாகத்தில் உதறி விட்டு பருவதராஜனின் மகளாக ஜெனிக்கிறாள்

தக்கன் பரமனால் உண்டாக்கப்பட்ட
வீரபத்திரரால் மடிக்கப்படுகிறான்

பரமன் பிறகு நிஷ்டையில் அமர்ந்து விடவும், சரப சிவன் செய்த தவத்தின் மகிமையானது தேவர்களுக்

கெல்லாம் அனல் கொண்டு வீச அத்தபசை
யழிப்பதற்கு இந்திரன் மதனுக்கு
அழைப்போலை அனுப்பிய ஒப்பாரி.

ஏந்திழை பெண்ணேரதியே எம்பெருமான் மருமகளே
காந்த வதனியரே காமுண்ணல்மாதரசே
எந்தனுக்கு இந்திரனார் இணக்கமுடனனுப்பியதாள்
செந்தமிழ் வாசகத்தை செப்பிடுவேன் கேளுமம்மா
எழிலுள்ள தேவர்கட்கு இடையூறு நேர்ந்ததற்கு
பழிவந்து சேர்ந்துவிடும் பாதுகாக்க விடையளியும்

ஏகம்பன் உனது தந்தை இருந்திடுமோர்பதத்தை
தோகையை விலக்காவிடில் தொந்திரவு நேருமடி

எல்லோர்க்கு வல்லவனடி இறையவர் அரசனடி அவனுக்கு
பொல்லாங்கு நேராமல் போய்பார்த்து வரேனடி

ஈசன் தபசழித்து இடையூரை தானொழித்து
ஆசை விசுவாசியரே அதிவிரைவில் யானவரேன்

ஏகபோகமுடனே இணங்கிடு காதியர்களாய்
பாகனாலடியில் பரமநிஷ்டையமர்ந்தார்

எதிரிலாரேகத்தினால் இமையவருலகமெல்லாம்
கதிரோங்கி தீக்ஷண்யமாய் கனல்கொண்டு வீசுவதால்

ஏங்கியே இந்திரனும் ஏந்திழையே இவ்வேளை
பாங்கியே அனுப்பியதாய் பராமரிப்பாய் யானிருந்தால்

எந்தனையே ஏசிடுவார் இழிவாகக் கூறிடுவார்
உந்தனிடந்தை செய்யும் யோகத்தா ழிந்திடுவார்

எவ்வளவோ தொண்டர்க்குறை என் தந்தை தீர்த்திருக்க
அவர் மைந்தனுமெனக்கு ஆபத்துக்கள் நேராதடி

இப்போதே அப்பரமன் யோகம் செய்யுமிடத்தே
தபமைச் சென்றழித்து கையலரே வாரேனடி

ஏகிட விடைகொடடி இனியமொழி புங்கொடியே
தோகை இளங்கொடியே தயங்காதே இத்ததியே

## அங்கஜன் வார்த்தையைக்கேட்ட இரதிமாது பிரிவாற்றாமையினால் புலம்பும் ஒப்பாரி

காதலரே என் கணவா கரும்புவில் மன்மதரே
பாதகியானென்னைவிட்டு பாவி இந்திரன் சொற்கேட்டு

காலகாலனிடமே கண்ணாளா சென்றாலே —நீ
மாளுவது திண்ணமையா மாதுமொழி கேளுமையா

கண்ணாளா நாமிருவர் கனம்பெருகவாழுவது
மண்ணாளும் இந்திரருக்கு மனதுதானாதற்கு

கபடம் வைத்துதேவேந்திரன் கடவுளைப் பகைக்கவைத்தான்
விமலன் தபசழிக்க வில்மாரா போகாதீர்

கன்னியென் குடிகெடுக்க காத்தனும் காத்திருந்தான்
மன்று இவமொழியை மறுத்தவைவாம் நல்வழியை
கவலையின்றி இந்திரனும் கடவுள் போமொருநா
அவன மனைவி தாலி தன்னை அறுத்தெறியக்கூடாத
கர்த்தன் தனை எதிர்த்து காசினியல் யான் வர்
எத்தனையோ கோடியுண்டு என் கணவா மேனுமின்றி
காதகரை யழிப்பார் கடுமையுளோரை வதைத்தார்
பாதம் பணிபவர்க்கும் பரசுபாணி வரமளிப்பார்
கண்மூன்றுடைய சிவன் கங்காளனை எதிர்த்தால்
பண்ணோடு மண்ணாவீர் மலமதரே யறிவீர்
கல்லும் துவ மதுரை கும கருப்பைக்குள் முட்டைக்கும்
பல்லாயிர ஜீவனுக்கும் படியளக்கும் கர்த்தனிடம்
உன் குறும்புவில் செல்லாது கணையும் நில்லாது
அரும்புகணை வெல்லாது அரன் தபசு பொல்லாது
அவர்கண் திறந்து பார்த்தாலே அனலால் எரித்திடுவீர்
அண்டமதில் உனைப்பரித்து அவனியில் வாழேன் துணைத்து
கருத்துள்ள என்மொழியை கைவிடுவீர் கண்ணாளா
வருத்தமகற்றி இனி வாழ்வாய் மணவாளா

## (போக வேண்டாமென்று மறுத்த இரதிக்கு மதன் சொல்லும் ஒப்பாரி)

போதுமடி மாதரசே நீ புத்திமதி சொன்னதெல்லாம்
மாதுந்தன் சொல்கேட்டால்என்மானம்வெட்கம் போமகளும்
புரந்தரன் எனைமதித்து பூதனுக்கினை எதிர்த்து
நிரந்தரமாய் விகிதம் திருபித்தா ரிச்சமயம்
நான்போகாதிருந்தேனால் இப்பூவுலகோர் என்னைகண்டால்
தோகையே ஏசிடுவார் தூஷணித்து பேசிடுவார்
போதை வெறியனுக்கு புகழ்மாரனும் பயந்து
ஒருபேதைபெண்சொல்கேட்டு பதுக்கமுற்றுனென்பார்கள்
பூவையே அபயமென்றால் புகழளித்து காக்கவேணும்
தேவனுக்கு இணைக்கு பொல்லாங்கு நேராது
ஆதலினால்இப்போது அருள்வாய் விடை தப்பாது
பரமனால் எனை ஜெயிக்க பாவையே யாகுமோடி

அவன் விரதமதை கெடுத்து வருவேன் புகழ் தொடுத்து
புரியம் யோகத்தாலே பொன்னுலகம் நடுங்குதடி
அரிவையே அதை யழித்தால் அன்னமே புண்யமடி
புயங்கொள்ளியாம் பரமன் என் பாணத்தை கண்டாலவன்
அபயமிட்டு தபங்குலைந்து அலைந்தோடுவானெழுந்து
பங்கமொன்று எந்தனுக்கு பாவையரே வாராது
அங்கஜன் கொடுத்த கணை அன்னமே வீண்போகாது
பதரி துடிக்காதே நீ பயந்து மனம் சோராதே
குதர்க்கம் விளைத்து வாரேன் கோபாலன் மருமகனே
போவதற்கு பயந்து ஆவல் கொண்டுனை யணைந்து
காதலிலே யானிருந்தால் கலியுகமெல்லா மிகழ்ந்து
பஞ்சப்பாணத்தனையே பரசு பாணி மீதனிலே
வஞ்சியர் விடுத்தான் வையகத்தில் வியாதியுண்டு
பரட்டமுடனே பகவானை திராகி
பிதற்றன் தபங்கலைத்து வாரேன் புகழ் வகித்து
எனக்கு போக விடைகொட்டி பொழுதேறி போகுதடி
உன் சோகந் தணிந்திடவே சரசிமுத்தமிடடி
எனபோக சவுந்தரியே பொக்கிஷ காதக்கிளியே
ஆகம இளங்கொடியே ஆரணங்கே மெய்ரதியே
ஏக விடைகொடடி இணக்கமுள்ள பைங்கொடியே

## இரதிதேவி விஷ்ணுவை இகழ்ந்துரைக்கும் ஒப்பாரி

மன்மதனே என் துரையே மனதினிக்கும் சர்க்கரையே
உன் தந்தையின் பலத்தால் உப்பர்பிரானை பகைத்தால்
மண்ணோடு மண்ணாவீர் மகேஸ்வரன் மன துவேஷத்தால்
சண்டாள இந்திரனால் சதிக்குள்ளானீர் புவியேறல்
மாவஷ்மையுள்ள உனது தந்தை மன்னவரேயவர் நடத்தை
சாவஷி குசுவுடனோ சாற்றுவேன் என் கருத்தை
மந்தையிலே மாடு மேய்த்தான் மாமனை யன்று மடித்தான்
நந்தகோபனிடம் வளர்ந்தான் நடுக்கடலில் போய்படுத்தான்

மாதர்களை ஏமாற்றி மகிழ்வெண்ணை தன்னைப்பற்றி
காதகன் திருடியுண்டான் கன்னிகள் சேலை யொளித்தான்
மண்ணை வாரியுண்டானே மத்தாலடிபட்டானே
குன்றைகுடையாய் பிடித்தான் கோகுலர் வீட்டில்வளர்ந்தான்
மடுவினுலே குதித்தான் மலைப்பாம்பு மேல் நடந்தான்
கொடுமையாய் பூதகியின் கொங்கையிட பால் குடித்தான்
மச்சமதை கொத்தி தின்னும் மகிழ்கருடன் மேல் தினமும்
அச்சமின்றி சுற்றிடுவான் அலைந்து திரிந்திடுவான்
பங்காளிகள் சண்டையிட்டால் பதுங்கிருந்து பாரதத்தில்
சங்கையின்றிதுரியன் படை சாகச்செய்தான்படுகளத்தில்
மாது குந்திதேவி பெற்ற மா கலியோ கர்ணனைத்தான்
யாதுமறியாதவன் போல் அமர்களத்திலே மடித்தான்
மதியென்னும் சந்திரனை மாதாக்கினைந்தானே
அதனுல் அரிச்சந்திரன் அவனியில் பிறந்தானே
மாதர்களை கற்பழித்தான் மணிக்கலையால் வேலனிடம்
பாதகன் ஒருவிரலால் பாணந்தைத்து மாண்டானே
மண்ணளந்தான் மம்மதையால் மாபலியை அன்றொருநாள்
என் தகப்பனுரிடம் போனுல் எரிந்திடுவீர் நெற்றிக்கண்ணுல்
மங்கையென் சொல் மீருமல் பங்கமொன்று வாராமல்
அங்கபங்கம் நேராமல் அகங்களித்துய்வோம்புவியில்

## மதன் சிவனை இகழ்ந்துபாடும் ஒப்பாரி

கற்பினுக் கருங்கலமே சிற்பரன் தபோபலமே
நற்றுமறை முகத்தானே நாரர்யணன் மருமகனே
கஞ்சா வெறியனடி கனவெறியன் மாயாண்டி
நெஞ்சிரக்கமில்லாத நிஷ்டூரன் உன் தகப்பன்
காயமெடுத்த கதை காசினியில் கேட்டாயோ அவனுக்கு
தாயேது தந்தையேது தமையன் தம்பிதானேது
கல்லாலடியும் பட்டான் கண்ணப்பனின் எச்சலுண்டான்
வில்லாலடி பட்டொருநாள் விஜயனுக்கு வரமளித்தான்
கங்கையெனும் பெண்மணியை கனஜடையில் மறைத்தான்
அம்மங்கைமாதவிடாய்போதுமகிழ்ந்துதிரம் வழித்தெரிந்தான்

கடலில் வலைபோட்டு கந்தனையோர் மீனாக்கி
திடமாய் மீனைப்பிடித்த உமையை மணம் புரிந்தான்
காட்டில் பத்மாசூரனுக்கு கபடமின்றி வரமளித்து
ஓட்ட பிடித்தாண்டி உன் தந்தை மாயாண்டி
காகுத்தன் எந்தன் பிதா கர்த்தனிட சேதிகண்டு
தோகையரைப்போல் நடித்து அங்கு சூரனை எரிக்கலையா
கபடனந்த ராவணனின் கீதமிசை தம் கேட்டு
உமையவளை யளித்து ஓட்டாண்டியாக நின்றாண்டி
கலங்கி சிவன் நிற்பதனை கண்டு எந்தன் தந்தையவர்
இலங்கைக்கரசன் தன்னை ஏமாற்றி மீட்கலையா
காவியுடுத்தியன்று காத்த சிறுதொண்டன் தனை
பாவியவன் ஏமாற்றி பிள்ளைகறி சோறு தின்றான்
கனமுடன் முன் பிறந்த கணபதிக்கு மணமுடிக்க
பண்பின்றி முழித்து கொண்டு பாதையிலே குந்தவைத்தான்
கந்தனெனும் இளையமகன் காளையாய் திரிந்து கொண்டு
செந்தில்வாழ் குறத்தியரை சேர்த்து களவுசெய்ததுண்டு
யானையென்னும் மாட்டுறி காசினியைசுற்றி வந்தான்
மானை புலித்தோலை ஆடையாயுடுத்தி கொண்டான்
கம்பீரமாய் மேனியெல்லாம் சாம்பல் பூசிதிரிந்தானே
பாம்புகளை உடல் முழுதும் அணியணியாயணிந்தானே
பிணங்களை யுறவாக்கிசுடு காடுதனில் அலைந்தாண்டி
பிணங்களை பிடுங்கி தின்று பேய்போலலைந்தாண்டி
கட்டுக்கடங்காத காதகம் புரிந்தாண்டி
பிட்டுக்கு மண் சுமந்து பிறம்பாலடிப்பட்டாண்டி
கனகமுலையாளே என் காமக்கனஞ்சியமே
எனையாரென்று மதித்து எதிர்த்தாய் மனங்கொதித்து
கரும்புவில் தானிருக்க அரும்பு கணையிருக்க அவன்
துரும்புக்கு சமானமடி நீ துணிந்து விடை கொடடி

## இரதிதேவி சிவனைப் புகழ்ந்து விஷ்ணுவை இகழும் ஒப்பாரி

தென்றல் தேர் மன்மதரே தெய்வீக நாயகரே
கன்னிப்படை காதலரே கரும்புவில் அங்கஜரே

திருக்ஷேத்ர தரியென்னும் திகம்பரனார் என் தகப்பன்
பெருமையறியாமல் பேசுகிறீரெந்தனுடன்
சிரித்து புரமெரித்தார் தேவர்களை யாதரித்தார்
துதித்தோர்க் கருளளித்தார் தொண்டற்குகாக்ஷி தந்தார்
தீரன் வல்லாளனுக்கு தேவன் மகனானார்
சீருடன் அன்னவர்க்கு சித்தியுடன்முத்தி தந்தார்
சிறுவன் மார்க்கண்டனுக்கு சிறப்புடன் மனங்களித்தே
மரலியை யுரைத்துவரம் மகிழ்ந்தளித்தார் வையகத்தே
திருநாளை போவார்க்கு சிதம்பரத்தில் முத்தி தந்தார்
அருங்காளி நாணமுற அம்பலத்திலாடி நின்றார்
தக்கனிட மமதையை தாவொழித்த உமையவளை
பக்குவமாய் பருவதனிக் புத்திரியாய் பிறக்கவைத்தார்
திக்குபுகழ் நான்முகனின் தீரமதை போக்கிடவே
கொக்கரித்து ஓர் சிரத்தை கிள்ளினார் புகழுறவே
திருநீலகண்டரிடம் தீவிர பகை போக்க
திருவோடளித் தொளித்து தரிசனந்தந்தாரவர்க்கு
தேர் விஜயன் பாரதத்தில் போர் புரிந்து தேர்ச்சிபெற்ற
பாசுபதாஸ்திர மளித்தார் பகையாளி தோல்வியுற
திகம்பரனை இழந்து தேவேந்திரன் சொல்கேட்டு
சுகபோகத்தை வெறுத்து சொல்லாதீரெனை விடுத்து
உன்திரமெங்கு செல்லாது தேவன் கோபம் பொல்லாது
பாரளந்தோன் உனது தந்தை பக்குவங்கள் வெல்லாது
தன்மையுள்ள என் ராஜா தற்பரனிடம் போனால் அவர்
கண்திறந்து பார்த்தாலே கனல் கொண்டெரிவீரே
உன் தந்தையை பெருமிதப்பாய் தானினைந்து சொல்லாதீர்
அந்தமாயன் புரிந்த அநீதியைக் கேட்டிடுவீர்
தங்கபணியணிகள் தானணிய சக்தியற்று
சங்கையிற்றி துணபமாவே தேகமதி லணிந்து
தன் மார்பில் பெண்ணை வைத்து திருநாமத்தை யணிந்து
அன்றோர் ஈருடன் மீது ஆரோகணித்தான் சிறந்து
திருப்பதி மலைமேலே துடுக்கர் பெண்ணை வைத்துக்கொண்டு
கருத்து கலங்கி நிற்கும் கோவிந்தனை புகழ்ந்தீரென்று

திவிரமாய் மாபலியை பாவியவன் ஏமாற்றி
மூவடிமண் தானங்கேட்டு மோசம் புரிந்தான் பகட்டு
தாட்டிக மாய் அண்ணன் தனை தான் வஞ்சித்து தங்கைதனை
கூட்டிக்கொடுத்தானே கோபாலன் அர்ச்சுனருக்கு
சிறுவர் போல் விளையாடி தனஞ்செயனுட னுலகில்
பருவமாதரை சேர்த்து பாதகன் வைத்ததுண்டு
உன் தந்தை கோமாளியெனும் தன்மையதை சொன்னாலே
இந்த உலகம் சிரிக்கும் ஏழுலகமும் நகைக்கும்
திரிபுரதகனிடம் திடமென்றே நீ போனால் உன்
விரதம் பலிக்காது வெற்றி பெற முடியாது
தேவேந்திரன் மொழியால் தீங்குவரும் உந்தனுக்கு
கோவேயென் மொழிகேட்டு கூடியிருப்பீரிங்கு
தங்கமய பஞ்சணையில் தத்துவமாய் நாமிருந்து
பொங்கமுடனே சுகித்து போகித்திட யோகமுண்டு

## அங்கஜன் தனது தந்தையின் பராக்கிரமத்தை கூறும் ஒப்பாரி

சரசக்கிளியே ரதியே சந்திரமுக ஒளியே
விரகதாபக்கிளியே விண்ணவர் புகழ் மதியே
சங்குசக்ராயுதனை செங்கருட வாகனனை
மங்கையரே தூஷித்தாய் மகிமை யறியாமல்
சஞ்சலமே நீக்கிடுவார் தாசர் துயர் போக்கிடுவார்
பஞ்சமுற வஞ்சகரை பகைத்து வதைத்திடுவார்
சத்திய நாராயணனால் சங்கரித்த பேர்களையும்
முத்திபெற்ற தொண்டரையும் சித்தினியே கேள் நீயும்
தசக்கிரீவ வரமழித்தார் தக்க வக்ரனை வதைத்தார்
சிசுபாலனைசிரத்துணிந்தார் திரௌபதிக்கு துயிலளித்தார்
சாகாவரம் பெற்ற போகசாலி இரணியனை அவன்
ஏகபோகம் தவிர்த்து இருபினவாய் பிளந்தெறிந்தார்
சரணமென்றே பிரகலாதன் ஜெகத்திலே புகழுறவே
உரமுறவே காத்தாரடி உண்மையிது காணுமடி
சகஜமாய் முதலைதனை சக்கரத்தால் வதைத்ததனை
கஜேந்திரர்க்கு காண்பித்தார் கார்வண்ணன் எனதுபிதா

சதுர்முகனையடித்த சார்ந்தவேதத்தைக்கவர்ந்துப்
பதுங்கிய சோமுகனை பரந்தாமனுமவனை
சமுத்திரத்தில் போர் புரிந்து சோமுகனைவதைத்தெரிந்து
கமழும் வேதத்தையளித்தார் கடுந்துயரமேயொழித்தார்
சோமுகனொழிந்த பின்பு சூரன் இரண்யாக்ஷதனும்
பூமிதனைப் பாயாக பாவியும கவர்ந்தேக
ஸ்யாமளனவர் பறந்தே சமுத்திரனுட் புகுந்து
கியாதயுற்றஇரண்யாக்ஷதனைகொன்றார் கூர்மமாய் துணிந்தே
துருவனையே ஆதரித்தார் துளசிங்கன் காக்ஷிதந்தார்
வறுமையுற்ற குசேலருக்குவையகத்தில் செல்வந்தந்தார்
சங்கரிக்கு பயந்து கங்கையை ஜடையில் வைத்து
திங்களணிந்தவனை தேவிபுகழும் சிவனை
ஜெகமலா மிகழுதடி சிந்து வித்தை காரனடி
புகையும் சுடுகாடதிலே புரண்டு திரிவான் மயிலே
சப்தரிஷி சாபத்திலே தாருகாவனமதிலே
ஒப்பும் பெண்கள் காதலிலே யோனிஇழந்தான் புவிமேல்
சந்திரனை பெண்ணாக்கி சேர்ந்து சுகித்ததினால்
சந்திரமதியைப் பெற்று சங்கரன் காட்டில் விட்டான்
சாம்பலைபூசிக்கொள்வான் சரபங்கனையணிந்துக்கொள்வான்
கம்பீரமாய் காளையேறி காசினியை சுற்றிடுவான்
செஞ்சடை சித்தனடி சிவகணத்தின் முத்தனடி
கெஞ்சாவெறியனடி கபாலமேந்தும் பித்தனடி
என் செங்கையில் வில்லிருக்க சித்ரவட்டகுடையிருக்க
மங்கை படையிருக்க மலர்கணை கையிலிருக்க
சங்கரன் தபசழிக்க சரசியரே யானிருக்க
அங்கபங்கம் நேருமோடி அன்னமே விடை கொடடி
நான் சத்திசிவன் விழியால் தணல் பற்றி மாண்டாலும்
இத்தரையே புகழும் பெயர் எங்கும் ஜொலிக்கும்
சரியொத்த தேவர்குறை தவிர்க்காதிருப்பேனானால் என்னை
பெரிதும் நகைத்திடுவார் கலியுகத்தோர் ரேசிடுவார்
கண்டோர் நகைத்திடுவர் கலியுகத்தோர் ரேசிடுவார்
அண்டமதில் உள்ளவர்கள் என்னை அபலையென்று கூறிடுவார்
சத்தியத்தை நான் மறவேன் சரசியே விடை கொடடி
முத்தமிழ் ராஜேந்திரனின் சொற்படியே சென்றுவாரேன்

## இரதிதேவிபரமேஸ்வரரின் பராக்கிரமத்தை புகழ்ந்துரைக்கும் ஒப்பாரி

சங்கரன் மருமகரே ஷண்முகனின் மைத்துனரே
மங்கள குஞ்சரரே என் மையலுக்குகந்தவரே
சித்திசிவன் பெருமை ஜகதலத்தில் கூறவெகருல்
எத்தனையோ கோடியுண்டு ஏடுமிடங்கொள்ளாது
சர்சனே முன்னொருநாள் சந்திர சேகரனுர்
திருவண்ணுமலை தனிலே திருவவதாரம் செய்த
சேதியினை கூறுகிறே சித்தஜரேகேட்டிடுவீர்
ஆதி அக்கினிகுலத்தில் அவதரித்தவல்லாளன்
சல்லமா தேவியுடன் சதிபதியாய் வாழ்ந்திருந்தார்
அல்லாமல் வெகு நாளாய் அவர்மனக் குறைகேளாய்
சேயொன்று இல்லாமல் சித்த மெலிந்திருந்தார்
கியாதியுள்ள வல்லாளன் குவலயத்தில் தானம்செய்தார்
தானதர்மம் செய்தானே தவமிருந்து பார்த்தானே
காணாத கோவில்களுக்கு கட்டணங் கொடுத்தானே
சல்லாப மன்மதரே சத்தி சிவனுமொருநாள்
வல்லாளன் மன்மதரே சன்யாசியைப்போல்
தன்னுடைய பூதங்களை சன்னியாசி யுருவமுடன்
அந்நாட்டின் தாசிகள் வாழ் அரண்மனைக்கனுப்பிவைத்தார்
தாசிவீடு முற்றிலுமே சன்யாசிகள் புகுந்தார்
ஈசன் மட்டும் மன்னனிடம் இனிதுடனே வந்து நின்றார்
சுவாமியார் வருகிறதை தானறிந்து வல்லாளன்
விவாதமின்றியே பணிந்து வேண்டியதை கேளுமென்றான்
சன்யாசி வாய்திறந்து சாற்றிடுவார் மன்னனிடம்
இன்றுன் நான் காதலெனும் இச்சையுற்று வந்தேனென்றார்
தாசிவீட்டில் போகவென்றால் காசு இல்லை என்னிடத்தில்
ஆசையது தீர்ந்திடவே தாசியை யளிப்பீரென்றார்
சற்றுநேரம் என்னுடனே சரசம்செய்தால் போதுமன்று
அற்று விடும் என்னுசை ஆதரிக்க வேணுமின்றுர்
சங்கமர் சொன்ன மொழியை சிரமேற்கொண்டு அரசன்
அஷணமே தாசியில்லம் அடைந்தே எங்குத்திரிந்தான்

தாசிகள் வீடுமுற்றும் சன்யாசிகள் தானிருக்க
மோசமொமா வருமோவென்று மெய்மறந்து மன்னர் திகைக்க
சாமிக்குறைத்தமொழி தவராதிருந்திடவே
தாமதமில்லாமல் தன்மனைக்கு வந்திடவே
சல்லாமாதேவியரும் தயங்கி வந்த நாயகனை
நல்ல மொழிபேசி நங்கையாம் மன்னவனை
சங்கதியை கேட்டுமங்கை சரசனின் மனப்படியே
இங்கிதமுடனேற்க இசைந்தாள் இளங்கொடியும்
சரசனே என்மணாளா தயங்காதீரினிமேது
பரதேசியின் விரதம் தணிப்பேன்யான் தப்பாது
என்று சம்மதிக்க பூவையகும் சந்தோஷம் கொண்டானே
உம்பர் பிரானிடமே ஓடோடி வந்தானே
சாஷ்டாங்கமாய் பணிந்தான் ஸ்வாமி நீர் வாருமென்றான்
மாஷிமாய்மனைவியிடம் உன்மனம் போல்நடவுமென்றார்
சொல்லிய சங்கமரை ஜோபித முடனனுப்ப
சல்லமா தேவியரும் சன்யாசியைப்பணிய
சதிபதிகள் தல் நிலையை சங்கரனறிந்தாரே
அதிபதியாம் அச்சமயம் அன்பாய் மறந்தாரே
சரசம்புரியாது சன்யாசியும் மறைந்தார்
ரிஷிபிண்டம் போலவள் வயிற்றில் நிமலன் சுதனுதித்தார்
சங்கதியறிந்த மன்னன் தனயனை வாரியணைக்க
மங்களமான மைந்தன் மாயமாகவே மறைய
சஞ்சலங்கொண்டு மன்னன் தனித்து புலம்பி நிற்க
அஞ்சாதே என்று சிவன் அரசனெதிர் வந்து நிற்க
தயங்காதே மன்னவனே உன்தத்துவத்தை கண்டறிந்தே
மயங்காமல் உந்தனுக்கு மைந்தனுகவே பிறந்தேன்
சந்ததிக்கு பதிலாக தப்பா திருந்திடுவேன்
எந்த யுகத்தினிலும் உனக்குமக்கடன் தருவேன்
நீ சாயுச்ய பதவிபெற தனித்து கருமம் செய்வேன் என்றே
மாயமாய் மறைந்தாரே மதிசூடிய பரமன்
சங்கரனை நீரெதிர்த்தால் பங்கமடைந்தே மடிவீர்
மங்கையுறையை மறுத்தால் மண்ணோடு மறைந்திடுவீர்
சதிசெய்து என்னை விட்டு சண்டாளன் மொழிகேட்டு
பதியேநீர் போகாதீர் பஞ்சபாணத்தை தொட்டு

## மன்மதன் பரமனின் செய்கைகளை ரதிக்கு உரைக்கும் ஒப்பாரி

பேசும் புகழ்ரஞ்சிதமே என் பேரின்ப பொக்கிஷமே உங்கள்
ஈசனின் சிலாக்கியமே இப்படிக்கேள் ரத்தினமே
பிட்டு மண்சுமந்தான் பிரம்படியைபட்டு நொந்தான்
கட்டழகி கங்கையைத்தான் கபடன் ஜடையில் வைத்தான்
பேய்கணத்தையுறவாக்கி போய் திரிவான் சுடலையிலே
மாய்ந்த பிணத்தையெல்லாம் மகிழ்ந்து புசிப்பான் மலையிலே
பத்ரகாளி தன்னுடனே பரமனன்று தில்லையிலே
நிர்த்தனித்து தோற்றானே நியாயமது பூங்குயிலே
பக்தர்களை வஞ்சித்தான் பாவிகட்கு வரமளித்தான்
பித்தனிவன் செய்வதெல்லாம்பேதைதகுணமாகுமோ தான்

பார்வதியின் சொல்கேட்டு பிரமனின் சிரமறுத்து
சீர்கெட்டு சித்தம் நொந்து திரிந்தானே பித்தங்கொண்டு

பதியிழந்து நாடிழந்து பரதேசி கோலங்கொண்டு
கதியிழந்து மலைமீது அந்த கங்காளன்வீற்றிருப்பான்

பிச்சையென்று அன்றொருநாள் பிள்ளைக்கறிசோறு தின்று
கொச்சை தனம்புரிந்தான் கோதைக்குடல் பாதிதந்தான்

பரிவேடன் எச்சல் தின்றான் பாதத்தாலுதையும் பட்டான்
கரிமுகர்க்கு மணமுடிக்க காசில்லாமல் விழித்தான்

பாலயிர்த பிருக்க பரமனு முன்னமன்
ஆலகாலத்தையுண்டான் ஆண்டிபோல்கோலங்கொண்டான்

பதிறுறு வயதெனவே பசர்த்தமொழியை மறந்து
வாதித்தன்று எமன்தனை எட்டியுதைத்தான் சிந்து

பொய்சொல்லும் பித்தனடி போதை வெறியனடி
மெய்மறந்து வரமளித்து முழித்து விழிப்பானடி

அவனை பெற்றெடுத்தபேர்யாரு பேர்தெரிந்தால் நீ கூறு
உலகில்-சொற்புத்தி கேட்டுமவன் சோங்கி விழிப்பான் பாரு

பாதகங்கள் நேராது பழியெனக்கு சேராது
ஆதரிக்க போமெனக்கு ஆபத்துக்கள் வராது

பெண்ணே உன் தந்தையர்க்காய்
அண்டர் முனிவரெல்லாம்
பரமன் திருவிழியால் பாவையே
திரிலோகமும் புகழும் என்
நான் போகவிடை கொடடி
நாகபாணியே மகளைத்
பரிந்து நீ பேசாதே
அபயமென்றார் பார்மீதே
நான் மாண்டாலும் இந்த
தீவிரபெயர் விளங்கும்
பொழுதேறி போகுதடி
நான்கலந்து வாரேனடி.

---

## இரதிதேவி மன்மதனுக்கு தாரையால் சந்திரனுக்கு சாபம் நேரிட்டதை கூறும் ஒப்பாரி

தேம்பல் பிறையழகா
சாம்பசிவன் மருகா
யோசனையில்லாமல்
நேசரே அக்கதையில்
பிரகஸ்பதியென்னும்
திறமுள்ள சந்திரனும்
ஆயுத வித்தைகற்க அவ
தேய்பிறைச் சந்திரனின்
பிரகஸ்பதி மனைவி
சரசசல்லாபமாது
விரகமே கொண்டாளே
பிறந்தான் அச்சமயம்
யாகமது செய்வதற்கு
போகமாது கொள்ள
குருபிரான் போனபின்பு
தருமநெறியுடனே
குருபத்தினி தனக்கு
பொருத்தமுள்ள தாரையவள்
தானோர நானோர
பாலனை தானமக்கி
திகட்டாதசொல்லழகா
சரசனே என் வடிவழகா
மோசம்போனேர் வேணகண்டு
திகழ்ந்துவேனுக்கு ஒன்று
பண்புள்ள குருவிடத்தில்
தேவதேவ மைந்தர்களும்
றடைக்கலம அடவே
தேஜசும் துலங்கிடவே
பாவையவள் தாரையெனும்
சந்திரன்மேல் காதலென்னும்
வித்தகியாள தாரையாளும்
பிரகஸ்பதிக்கே விகிதம்
அழைத்தான் குருவிவரை
பூங்கொடி விடையும் தர
குணமுள்ள சந்திரனும்
தாய்போல் நினைத்தவனும்
கோமானும் காவலானல்
பாலகன்மேல் காதலானல்
நாயகியாள் காதலுற
பகர்வாள் மனதார

மோகமானே னுன்மீது — மகிழ்ந்துரைக்குள் வாருமடா
தோகை எனதுமையல் — தீர்த்தணைந்து சேருமடா
யாருமறியாமல் — அறைக்குள்ளே போவோமடா
சீருஞ் சித்தஜன் கணை — சிதைந்தோட பாருமடா
சரையும சர்ப்பம்போல் — தழுவி யணைந்தாலே
யாரும் நமக்கெதிரோ — அன்பாய் புரிவோம் லீலை
பருவமான நம்வயது — போனால் வருமோடா
பொருத்தங்கொண்டுவெகுநாள் — பூவை எதிர் பார்த்தேனடா
சொல்மொழியை கேட்டானே — சிறுவன் சந்திரனும்
கல்போல நின்றவனும் — கலங்கியேசொல்வானவனும்
அருமையாய் எனைவளர்த்த — அன்புள்ள மாதாவே
குருபத்தினியான — குலதெய்வமே தாயாரே
பொருந்தாது நம் காதல் — பாவம் வந்து நேருமம்மா
வருந்துவார் குருவந்தால் — வஞ்சமிகதாகுமம்மா
எந்தன்மீது காதல் கொள்ள — ஏற்காது உந்தனுக்கு
துன்பமுறவே நகரம் — துணையாகுமே நமக்கு
பார்த்தாளே தாரையவள் — பாலன் சொல்லும் பர்மச்கதை
அந்த நமது யெண்ணம் — அணுவும் பலிக்காதே
என்று சமாளித்து தாரையரும் — சந்திரனைப் பார்த்து
கமழும் உன் மனக்கருத்தை — கண்டு மகிழ்ந்தேனென்றாள்
பாருலகில் உந்தனைப்போல் — பாலகனை கண்டதில்லை
வேறுவிதமான எண்ணம் — வேந்தனே உன் மனதினிலில்லை
என்றுரைத்த ஏந்திழையாள் — இருந்துவிட்டாள் அன்றுதினம்
நன்றென நாள் பார்த்து — நாயகிதணிந்தாள் மனம்
தனியாக காதல் கொண்ட — தாரையவள் ஒருநாள்
சனிவாரமன்று சிறு — சந்திரனைப் பார்த்துரைப்பாள்
கண்ணே என் தெள்ளமுதே — கல்வியில் சிறந்தவனே
எண்ணெயினால் ஸ்நானம் செய்ய — எழுந்திருந்துவா சுதனே
என்றவனை கைபிடித்து இழுத்து சென்றாள் தனியறைக்கே
ஒன்றுமே தோன்றாமல் — உத்தமன் போனான் பிறகே
சப்ரமஞ்சபீடத்தின் மேல் — சந்திரனமர்த்திருக்க
ஒப்பில்லா கேர்ந்தயரும் — உகந்து எண்ணை தேய்க்க
கண்களை மூடியிருக்க — கண்டாளே காதகியாள் அவள்
தன் ஆடையை யகற்றி — நிர்வாணமாக நின்றாள்

கண்திறந்து பாருமடா
உன் மையல் தீர்த்திடுமேன்
இனிசொல்லா துன் நீதியெறி
துல்லித மாய்லீலைசெய்ய
என்று கபிட்டிணைத்தானே
மட்டிலா காதலினால்
புத்தி தடுமாறி
சித்தினி பெண்மயிலே
முன் சொன்ன நீதிநெறி
அன்றாகினி தாரையரின்
ஒக்களிப்பாக இவர்
மிக்க களிப்புடனே
தெய்வலோகம் போன
செய்தயர்கம் முடித்து
ஆசிரமத்துள் நுழைந்தார்
யோசித் துணர்ந்தாரே
பள்ளியறைக்குட் புகுந்து
சொல்லொணா கோபங்கொண்டு
சண்டாளி தாரையரே
என்னஇவ்வஞ்சனைகள்
என்று கண்கள் பொறிபறக்க
மூண்டை நீ இப்பொழுது
கல்லாக மண்ணாக
தொல்லையுற்றே யொளிந்த
குருத்துரோகமே புரிந்த
குருபத்தினி தனக்கு
சதியான காரியத்தை
பதினைந்துநாள் வரையில்
அமாவாசையன்று முதல்
கமழும் பௌர்ணமிமுதல்
இதுபோல முன்பின் யோசியாமல்
சந்திரன் போல் பங்கம் வரும்
சங்கரனை பகைத்தால்
இங்கிதமாய் நாம் சுகித்து

சுந்தரமணி யெந்தனை
உகந்த மதியதனை
சேயிழை ஏனையழைத்தே
துணையிருப்பா யகத்தே
கனிவாயை முத்தமிட்டாள்
மயங்கியவன் மேலே விழுந்தான்
பொன் மொழி சந்திரனும் அந்த
சேர்த்தணைத்தே அத்தருணம்
முழுதும் மறந்தானே
ஆனந்தத்தி லாழ்ந்தானே
கொக்கோகலீலை செய்து
மகிழ்ந்திருக்கும் போது
தெய்வீக குருநாதன்
திரும்பினரே போதன்
யாரையும் காணவில்லை
யோகஞான திருஷ்டியிலே
பார்த்தாரிருவர்களை
சொல்வாரெருவார்த்தை
சதிமோசம் செய்தானே
எத்தனைநாள் செய்தாயோ
கர்ந்தானகோபங்கொண்டார்
பிடியடிசாபமென்றார்
காதகி நீ போகவென்றார்
சந்திரனை இழுத்துவந்தார்
குலத்துரோகி சண்டாளா
குழந்தை நீயல்லவோடா
செய்ததால் சந்திரனே
தேகம்குறையும் சொன்னேன்
வளர்வாய் பதினைந்து தினம்
கறைந்துபோ முனதுஜடம்
முழிக்காதே அங்கஜரே
சாற்றுகிறேன் கேள் மன்மதரே
சாலது நீ உண்மையையா
இணங்கி இருப்போமையா

மண்குதிரை யுன் தந்தை அவரை மதித்தாற்றி லிறங்காதே
அன்னவரின் சேதியெல்லாம் அறிவிப்பேனிப்போதே

## இரதிதேவி விஷ்ணுவின் திருவிளையாடல்களை இகழ்ந்துரைக்கும் ஒப்பாரி

கரும்புவில் கையேந்தும் அரும்புகணை அங்கஜனே
குறும்பனென்றீரென் தகப்பன் கோதைமொழி கேளுமையா
மண்ணுண்ட தன்பிதா கமலக்கண்ணன் சேதியதால்
மண்ணும் விண்ணுமே நகைக்கும் மகிதலமெல்லாம் பழிக்கும்
கஞ்சனெனும் மாமன்தனை வஞ்சனையாய் கொன்றானே
துஞ்சாமல் கோபிகளின் சேலையை யொளித்தானே
ஆட்டியுரலிலே கன்னியரெல்லா மடிக்க
கொட்டமடங்கா உன்தந்தை கோவென்றழுதானே
காட்டில் மாடு மேய்த்தானே கப்பைகளி தின்றானே
கூட்டித்தரா அர்ச்சுனன்பின் கூலிவாங்கி திரிந்தானே
கானகக் குரங்குகளை கபடனுறவாக்கி
ஆணவங்கொண்டு திரிந்தான் அன்னை தந்தையை மறந்தான்
காட்டகத்தில் சுக்ரீவன் கனத்தமொழிக்காய் மறைந்து
வாட்டி வதைத்தானே வாலிதன்னையே துணிந்து
கூனியின் முதுகினிலே குண்டதை எறிந்ததாலே
காரணியை விடுத்துகாட்டில் கனிந்து சென்றான்கேளே
கட்டழகி சீதைதனை காட்டில் பறிகொடுத்து
பட்டினியாய் கிடந்து பரதவித்தான் துடித்து
கண்ணயர்ந்து உறங்க கனத்தமனை யில்லாமல்
அன்னவன் பள்ளிகொண்டான் ஆனந்தமா அரவத்தின்மேல்
கபடுவைத்து துரியனையே காதகனும் கொல்லவென்று
குடைதட்டி சைகை செய்தான் சூதுடனே வீமனுக்கு
கனத்தவொரு பாரதத்தில் காண்டிபர்க்கு சாரதியாய்
துணைக்கூலியாளானான் துரோகியென பெயரெடுத்தான்
கண்ணனென்தகப்பன் அவர்கண்ணெடுத்துப்பார்த்தாலே
மண்ணோடு மண்ணாவீர் மன்மதரே நாயகரே
கங்காளனை பகைக்க காதலரே போகாமல்
இங்கே நீ ரெத்தனுடன் இன்புறுவீர் சோராமல்

## இரதிமாது பரமனிடம் போகவேண்டாம் என்று தடுக்கும் தர்க்கப்பாடல்
## இரதி சொல்

### இந்நா ஒரு சேதி என்ற மெட்டு

பல்லவி

போகாதே நாதா போகாதே நாதா
பூவைசொல் கேள் விநோதா (போ)

அநுபல்லவி

ஏகபோகமுடைய இல்வாழ்வை விடுத்து
இந்திரனின் மொழியை இன்பரே எடுத்து
தோகையுரைக்கும் மொழி தன்னை நீர் தடுத்து
செல்லவேண்டாம் துரையே மலர்கணை பிடித்து

### மதன் சொல்லும் மேற்படி மெட்டு

தடுக்காதே மானே தருணம் நீதானே
தையல் ரதியே தேனே (தடு)

அநுபல்லவி

அடுக்குமோடி யுன் தந்தை அந்தவும் புரிய
அனல்கொண்டமரர் லோகம் அவர் கண்ணீர் சொரிய
துடிக்கும் தேவர்கள் துயர் தேனே நாமறிய
தெரிந்தும் போகாதிருந்தால் தகுமோடியானே (தடு)

### இரதி சொல் அநுபல்லவித் தொடர்

நமது வாழ்வு தாளாமல் நாதா வஞ்சகமே
நாடியுரைத்தா னிந்ரன் நம்பாதீர் தன்னை
உமைபாகனை பகைத்தால் விகர்ப்பம் நேரிடும்
உத்தமரே உமக்கு உரைத்தேன் அஞ்சகமே (போ)

## மதன் சொல் அநுபல்லவி

முனிவர் தேவர்களெல்லாம் மலர்கணையாலே
மெய்மறந்தே யோகத்தை விடுத்தார் பெண்பாலே
கனித்த பரமனிட கடுந்தபத்தாலே
கஷ்டம் வருமிதனை கவனிப்பாய் மயிலே (நடு)

## இரதி சொல் அநுபல்லவி

கஷ்டம் வந்தால் நமது காதல் விண்போமா
பாருலகில் மன்மத வாழ்க்கைக் கீடாமா
இஷ்டரதிய ளிங்கு ஏங்கிடலாமா
ஏகிடில் எந்தனுயிர் இனி இருந்திடுமா (போ)

## மதன் சொல் அநுபல்லவி

பங்கம் ஒன்றும் நேராது பரமனின்றாலே
பாவையே மடிந்தாலும் பார்புவிமேலே
எங்கும் புகழ்ஜொலிக்கும் ஈசன் விழியாலே
எரிந்தான் மதனென்றே - இரதிமயிலாளே (நடு)

---

## பொன்னுலவு சென்னிகுள என்ற மெட்டு
## இரதி சொல் கண்ணி

மங்களகுணகரனே இங்கிதமனோகரனே)

சங்கரனை வெல்ல உம்மாலாகுமா — உமை
பங்கனிட கோபம் வீணில் போகுமா

மங்கையான் மொழி யங்கீகரித்து நீர்
செங்கையாலெனை இங்கிதமுடன்

அங்கஜரே சேர மனஸ்தாபமா — பாற
பங்கயன் மகனே என்மேல் கோபமா

## மதன் சொல் மேற்படி மெட்டு

புத்தனை மிகசிறந்து இத்ததி மனந்துணிந்து

சித்தினியெனை தடுத்தல் நீதியா—தேவர்
நத்தியதை கைவிடுதல் கியாதியா—அந்த
அத்தனின் தபம் சத்தியலோகம்
பற்றி எரிவதால் சித்தங் கலங்குது
சித்த சுத்தனெந்தனுக்கு வாதியா—அவன்
நித்தியானந்த சொருப ஜோதியே (பித்)

## இரதி சொல் மேற்படி மெட்டு

வாதியாகிய பரமன் சேதியையறிந்திடாமல்

*கியாதியாய் மலர்கணையை தாங்கியே—ஜெக
ஜோதியிடம் போரேனென்றீர் தேங்கியே—இது
நீதியோ ரதி மாது யெந்தனை
அனுதியாக்கி நீர் பாதிமதியோனை
கோதிலா தடைந்து சென்றால் பாங்கியே—பூவில்
ஏது செய்வேன் ஓதுவீர் நீரோங்கியே

## மதன் சொல் மேற்படி மெட்டு

சோங்கியே மனம் கலங்கி பாங்கியே புலம்பாதே

ஆங்கெனக்கு தீது ஒன்றும் நேராதே—மன
தேங்கியே தடங்கலொன்றுங் கூறாதே—புக
ழோங்கிடகணை தாங்கி இதுததி
மூங்கிலோன் தபம் சாங்கியமுடன்
பூங்கொடி யழிப்பேன் மொழி மீராதே—துயர்
தாங்கியே தேவேந்திரனை சீராதே (பித்)

## மன்மதன் மஹா பாரதத்தின் கதையை
## இரதிக்குச் சொல்லும் ஒப்பாரி

கும்பமுலையாளே கோவைப்பிதழ் கனியே
நம் பரமனின் அருள்மகனே நல்லமுதே மணியே
என் தந்தைதனை எதிர்த்து தனூர்மாரன் பேரேனென்று
இந்திராதி தேவர்களை இழித்தே பழித்தாயின்று
அற்பமாக எண்ணாதே அன்னமே என் தந்தைதனை
பற்குணனின் மைத்துனனை பாரனந்த மாயவனை
என் தந்தை மனது வைத்தால் தற்பரனின் நெற்றிவிழி
ஒன்றுமே செய்யாது உலகத்திலாகும் பிரிய
மர்யனிட சூழ்ச்சியெல்லாம் மாயனறிந்திருந்தால்
நியாயந்தவறி என்னை நில்லென்று சொல்வாயோ

ஆனாலும் கேளுமடி ஆயனிட வீரமெல்லாம்
உபாயமுடனுரைப்பேன் ஊக்கமுடன் கேளுமின்னும்
குருநாடாம் குருகுலமாம் குந்திமக்கள் ஐவர்களாம்
பெருமையுள்ள பாண்டுவிற்கு பிறந்ததொரு மைந்தர்களாம்
ஆருவாசர் மந்திரத்தால் தோகை குந்தியாள் வயிற்றில்
அருமையுடன் பிறந்தார் அவனியையாள் புவியில்
தருமருடன் வீமன் தனஞ்செயன் நகுலனுடன்
சிறுவன் சகாதேவன் சேயராய் பிறந்தவுடன்
பங்காளி பிள்ளைகளாம் பக்ஷமுள்ள துரியனவன்
எங்கும் புகழ் ஜொலிக்க இசைந்தரசு செய்துவந்தான்
அஸ்தினபுரிய தனை அவர் அரவக்கொடி யேந்தி
கீர்த்தியுடன் பகுதி பெற்று கிருபையுடன் ஆண்டுவந்தார்
இந்திர பிரஸ்தமதில் இன்பமுள்ள ஐவர்களும்
சிந்தை களித்தே இருந்தார் தேனே இன்னும் கேளும்
இந்த கதையிருக்க இன்னொன்று கேளுமடி
அந்தமுள்ள பாஞ்சால அரசன் மனம் வாடி
தன் புத்திரியை மணக்க புகழுள்ள வீரர்கள்
இத்தரணியில் இல்லையென்று ஏங்கியிருக்கையிலே

அமைச்சரும் பிரதானிகளும் அரசனின் குறையறிந்து
நிமைக்குள் ஓர் யோசனையை நிகழ்த்திடுவார் துணிந்து
தங்களிட புத்திரிக்கு தக்கவரன் வேண்டுமென்றுர்
மங்கள குணகரனே மர்மமொன்று கூறுவோம்
உன் மகளுடனே பிறந்த மகேந்திர வில்லை யெடுத்து
அகமகிழவே நிறுத்தி அருள்விதமே விடுத்து
வில்லை வளைப்போர்க்கு செவ்விழியை தாரேனென்றுர்
எல்லோரும் ஆசைகொண்டு இங்ஙனமே வந்திடுவார்
என்றுரைத்த மந்திரியின் யோசனையை நம்பி மன்னன்
நன்றெனவே நாள் பார்த்து நாட்டில் விதம்விடுத்தான்
ஐம்பத்தாறு தேச அரச களும் கண்டறிய
தெம்புடனே ஓலை தெரிவித்தான் மணம்புரிய
ஓலை கண்ட மன்னரெல்லாம் வந்தார் பாஞ்சாலதேசம்
ஞானமுடன் வில்வளைத்து நாணமடைந்தார் மோசம்
கடைசியில் அர்ச்சுனனும் ஓர்கிழவன் போல் ரூபங்கொண்டு
விடைபெற்று வந்தாரே வேந்தனவன் துணிந்து
கண்டு கிழவன் தனை கைகொட்டி நகைத்தாரே
என்ன இவனால் முடியு மென்று இருந்தாரே
தொண்டு கிழவனவன் துடைதட்டி எழுந்திருந்தவன்
கண்டவுடன் வில்லதனை கரத்தில் தூக்கி பிடித்தான்
மச்சக்கொடியறுத்தான் மகேந்திர வில்லை பொடித்தான்
மெச்சவே ராஜரெல்லாம் மீசுரமாகவே கர்ஜித்தான்
பக்கத்தில் சீடனைப்போல் பச்சைவண்ணன் நின்றிருக்க
கெக்கலிக்கொட்டி கிழவன் கேலிசெய்தே நகைக்க
இன்னும் என்ன தாமதமோ என்னை மணப்பதற்கு
சென்று நீ கேட்டுவாராய் சீடனே என்றதற்கு
மைவிழியாள் பாஞ்சாலி மாலையை கரமேந்தி
சையோக நாயகியாள் தலைசாய்ந்துமே வணங்கி
மாலை தரித்தாளே மாவீரன் அர்ச்சுனனை
சோலைப் பசுங்கிளியாள் தோத்தரித்தே மாயவனை
வீராதிவீரரெல்லாம் வெட்கி தலைகுனிந்தார்
தீரன் துரியோதனனும் தீராத கோபங்கொண்டான்

பூங்காளி தத்துவத்தை  பஞ்சவர்மேல் காட்டிடவே
ஆங்காரக்காரனவன்  ஐவரை மடித்திடவே
மாமனா சகுனியுடன்  மர்மமாக யோசித்திட
பூமன் சகுனிடவன்  படுகுழி மார்க்கம்தேட
சகுனியின் யோசனையால்  சண்டாளன் துரியனவன்
சொக்குடன் ஐவர்களை  சூது செய்ய எத்தனித்தான்
அரக்குமா மாளிகையில்  ஐவர்களை தங்க வைத்து
இறக்கவே அம்மாளிகையை  எரிய விட்டான் துணிந்து
என் தந்தையிட தந்திரத்தால்  தயங்காமல் வீமனவன்
ஐந்துபேர் தனைத்தூக்கி  அர்த்தராத்திரியில் நடந்தான்
மற்றுமொரு தந்திரத்தால்  மாபாவி துரியனவன்
குற்றம் புரிந்தானே  குடிகேடன் சகுனியுடன்
படுத்திருந்த பாய்தனிலே  பாம்புகளை ஏவி விட்டான்
தொகுத்தயென் தந்தையிட  துணையால் பிழைத்தாரே
குளத்தில் குளிக்கச் செய்து  கூருசி நாட்டி வைத்தான்
களங்கமற்ற எந்தன் பிதா  காப்பாற்றி பிழைக்க வைத்தார்
அருந்திடும் சாதமதில்  ஆலகால நஞ்சையிட்டான்
பொருந்தாது சாதமெல்லாம்  பீமன் புசித்து விட்டான்
நஞ்சுண்ட பீமனவன்  மதிமயங்கி தரையில் விழ
தஞ்சமென்று தர்மர்முதல்  தவித்துப்புரண்டு அழ
பஞ்சவர் படுந்துயரம்  பாரளந்தோன் தானறிந்தார்
சஞ்சலமகற்றிடவே-ஓர்  ஜோகிபோல்வேடங்கொண்டார்

ஆயாசம் கொண்டிருக்கும்  ஐவரிடம் வந்தாரே
மாயமூலிகையாலே  மன்னனை எழுப்பினாரே

அலண்டு எழுந்தானே  ஆவேசமாய் பீமன்
கலங்கின ஐவர்களை  களிக்கச் செய்தார் மாயன்

இன்னும் சில நாள் சென்று  இடும்பன் துரியனவன்
சண்டாள சகுனியிட  சதியோசனையாலே

மன்னர் பஞ்சபாண்டவரை  மாசபைக்கழைத்து வந்து
தன்மையுடன் பேசி  நாசகாலனும் துணிந்து
சகுனியின் சூழ்ச்சியால்  சதுரங்கம் ஆடிடவே
தொகுத்து சூதாடியதால்  தோற்கசெய்தான் பாரினிலே
நாடிழந்தார் நகரிழந்தார்  நல்லபணி தானிழந்தார்
வீடிழந்தார் பொருளிழந்தார்  வீரமுடி தானிழந்தார்

தானும் அடிமையானார் — தலைசாய்ந்து மரலானார்
வேணுமென்று சகுனி — விகற்பமொன்று செய்யலானான்
பத்தினி துரோபதையை — பணையில் வைத்தாடிடவே
மெத்தவே தர்மருக்கு — மீசுரமாய் கூறிடவே
சரியென்று சம்மதித்தார் — கொக்கட்டான் ஆடலுற்றார்
அரியவே தோற்றாரே — அமைதியாய் அமர்ந்து விட்டார்
கர்ஜ்ஜித்தே துர்ச்சாதனன் — கடுங்கோபமாக வந்தான்
பத்தினி துரோபதையை — பூர்ச்சபைக்கு இழுத்து வர
அரசர் சபை நடுவே — ஆணவமாக கொண்டுவந்தான்
சிரங்குனிந்து ஐவர்களும் — சித்திரம் போலே இருந்தார்
கலகலவென்று நகைத்த — கபடன் துரியோதனனும்
மலைபோல்சிம்மாதனத்தில் மம்மதையாய் யமர்ந்தவனும்
உரியடா துர்ச்சாதனனே இந்த — உத்தமியாள் சேலைதனை
பரிகாசமாகவன்று தம்மை — பார்த்து நகைத்தவளை
என்று துரியனுரைத்திடவே — துர்ச்சாதனன் கோபமுற்று
சிறிதுமே அஞ்சாமல் — சிறியவன் பற்கடித்து
கரகரவென்றே சுழன்று — கரத்தால் சேலையை இழுத்து
பரபரப்புடன் வலித்தான் — பாதகன் மிகதுடித்து
அந்த சமயத்திலே — அலறியே துரோபதையாள்
நின்று சபைதனிலே — நாராயணனை துதித்தாள்
அறிந்தாரே எனது தந்தை — ஆதிமூலன் அவள் துயரை
மறைந்திருந்து துரோபதைக்கு — மாளா துயில் வளர
கணக்கற்ற சேலைகளை — சாகுத்தானளித்தாரே
முடிமங்கலஞ்சூடி மன்னரெல்லாம் — மனப்பிரம்மை கொண்டாரே
கைசோர்ந்து காலசோர்ந்து — கரத்தமுடி சோர்ந்து
மெய்சோர்ந்து துர்ச்சாதனன் — மண்ணின் மீதில் விழுந்து
மடிந்தவன் போலானான் — மாயன் தயவாலே
துடித்து துரியனவன் — துரை மன்னர் முன்னாலே
பன்னிரண்டு வருடம் — பாண்டவர் வனம்போக
இன்னுமோராண்டுமவர் — இருந்து மறைவாக
பதின்மூன்றாம்வருடத்திலே — பரிந்து இவர் நாடடைந்தால்
நீதியுடன் பாதிநாடு — நிச்சயமளிப்பேனென்றான்
நல்லதென்று ஐவர்களும் — நாயகியாள் துரோபதையும்
பொல்லாத சபதம் செய்து — போனார் வனவாசம்

என்னை பெற்றேன் கருணையினால் பதிமூன்று நல்வருடம்
வற்றாத பொய்கையை போல் வாழ்ந்த வைரவர்களும்
ஆண்டு பதினான்கு ஐவர்களும் கழித்தே
தூண்டினார் என் தந்தைதனை தூதுக்கு அவனிடத்தே
தூதுசென்ற மாயனையும் துணிகரமாய் கொல்லவென்று
ஆசனத்துடன் சிம்மாசனமும ஜோடித்தான் துரியனன்று
நாடு கொடுத்திடவே தம்மால் முடியாதென்றான்
ஜோடியாய் சமர் புரிந்து சேகரித்து கொள்ளுமென்றான்
சரியென்று படுகளத்தில் சமர்புரிந்தார் கௌரவர்களால்
துரியனுடன் பிறந்த தொண்ணூற்றொன்பது பேர்கள்
அனைவரையும் வென்றாரே ஆயன் சகாயத்தில்
துணைகொண்டு துரோபதையாள் செய்த சபதம் முடிந்தாள்
அவர் பாண்டவர் சகாயனடி பக்தர்களின் நேயனடி
பாண்டவர்க்கும் மைத்துனனடி என் தந்தை ஐம்பம்
[பனியாதடி
தான் மாண்டுமடிவேனென்று மாதே வருந்தாதே
சென்று தனத்தானே சித்திரப் பூங்கோதே
நாழிகையாகுதடி நான்போகவேணுமடி
தோழியரே எந்தனை நீ தொந்தரவு செய்யாதேயடி

## மன்மதன் கூறியதைக் கேட்ட இரதிதேவி மன்மதனுக்கு அரிச்சந்திரனின் திவ்விய சரித்திரத்தை கூறும் ஒப்பாரி

கரும்புவில் மன்மதனே கங்காளன் மருமகனே
அரும்புவில் வேலேந்தும் கரனே அருங்கிளி வாகனனே
துரும்பையா ஈசனுக்கு துணிந்தெதிர்க்கப் போகாது
குரும்பு புரிந்தோர்க்கு அவர் கோபமது பொல்லாது
கனிந்தவரை யீடேற்றிப்பார் பணிந்தவர்களுக்கு வரமளிப்பார்
துணிந்தவரை ஜெயிப்பார் தொண்டர்க்கருள் புரிவார்
என் தந்தை பெருமைதனை தானுரைப்பேன் கேளுமையா
அந்தமுள்ள மன்மதரே அன்புடைய அங்கஜரே

அயோத்தி நகராண்ட அரிச்சந்திர னென்றொருவன்
தியாக மிக புரிந்து திகழ்நீதியாய் இருந்தான்
நீதிதவறுதான் தெரியும் பிசகாதான்
பாதிமதியோனை படுக்கையிலும் மறவான்
சத்தியம் தவறாமல் தவநிலை மாறாமல்
அனித்தியமில்லாமல் அயோத்திநகரை ஆண்டுவந்தான்
இவன் சத்தியத்தையழிக்க தேவர்கள் ஒன்றாய் சேர்ந்தார்
நித்ய விஸ்வாமித்திரரும் நெருங்கியவன் பாலடைந்தார்
ராசு புரிவதற்கு தரவேணும் தானமென்றார்
உச்சரித்து அரி சந்திரன் உசிதமாய் பொன்னளித்தார்
நல்லது மன்னவனே நமக்குக்கொடுத்த பொன்னை
இல்லையென்று சொல்லாமல் இன்பரே வைத்திருப்பீர்
என்று சொல்லி நடந்தே இன்னும் சில நாள் கழித்தே
கன்னியர்களை யனுப்பி கபடம் புரிய வைத்தே
நாடுமுழுவதையும் நாட்டமுடனே பறித்தார்
பாடுபடவஞ்சித்து பதட்டமுடனே யுரைப்பார்
முன்னேயான் வைத்த பொன்னை தாமதம் செய்யாமலின்று
தந்திடுவா யெனக்கு தக்ஷணமே என்று
என்ற உரைகேட்ட எழில் மிகுந்த மன்னவனும்
ஒன்றாக செல்வமெல்லாம் உத்தமரே உனக்களித்தேன்
ஆயினும் முப்பது நாள் ஆனதோர் தவணைதனில்
நேயமுடனளிப்பேன் நிஷ்டூரம் ஏனோ என்மேல்
என்று மனைவியாள் சந்திரமதி மகன் லோகிதாசனுடன்
மனது கலங்காத மந்திரி சத்திய மூர்த்தியுடன்
நகரைவிட்டு நடந்தார் நக்ஷத்திரகனுடன்
சுகமனைத்தையும் துறந்து துன்ப மிகவும் கடன்
தீர்க்கவே காசிநகர் தீவிரமாய் வந்தாரே
பார்ப்பனராம் காலகண்ட அய்யரில்லமடைந்தாரே
பத்தினியும் பாலனையும் பார்ப்பனர்க் கடிமையாக்கி
சித்தமகிழ கடனை சேர்த்தே முனிவருக்கு
நக்ஷத்திரகனிட நற்கூலிதன்னைத் தர
இச்சையுற்று வேறுகதி இல்லாமலே பதர
தோட்டி கடுமைபட்டான் சுடலையில் மாடறுத்தான்
வெட்டி பிணத்தை சுட்டால் வாய்க்கரிசி வாங்கியுண்டான்

வெட்டியான் போகவேலேந்திவரும்பிணத்தை எதிர் பார்த்து
கட்டை முட்டையடுக்கி காத்திட்டான் களித்து
இப்படி இவனிருக்க ஏவல் கொண்ட வேதியர்
தற்பை யறுத்துவர தேவதாசன் காட்டைய
காட்டிலே தேவதாசன் காலமது தீண்டி
மாண்டு மடிந்துவிட மகன் சேதியைக் கேட்டு
அடிமைகொண்ட அய்யரிடம் ஆரணங்கு விடையும்பெற்று
கோடுமையுள்ள காட்டைநாடி கோரமாய் மகனைக்கண்டு
தோகையிவள் புலம்பி சுடலை கரைக்கேத்தி
வாருடனே கட்டைமுட்டை வல்லமையுடன் பொறுக்கி
காஷ்டமது அடுக்கி கலங்கி மிக புலம்பி
வேஷ்டியுடன் மகனை வளர்த்திருளே தீயிட
அனல் பற்றி எரித்திடவும் அரிச்சந்திரன் கண்டிடவும்
மனக்கொதிப்பு கொண்டுமவன் மகாகோபம்கொண்டிடவும்
ஆர்ப்பரித்து பற்கடித்து ஆரணங்கெதிரில் வந்தான்
யாரடி கள்ளியென்று அதட்டியவன் கேட்கலுற்றான்
விபர மறிந்தானே மைந்தமகனை தன்னுடைய
சவத்தைச் சுடக்கூலி தந்திடவேணுமென்று
கார்ப்பணம் முழத்துண்டு கட்டாயம் தரவேணும்
நேர்மையது பிசகாமல் நேரிழையேசெல்லவேணும்
அடிமை கொண்ட அய்யரிடம் ஆரணங்கே வாங்கிவாராய்
சடுதியில் வருவாயென சந்திரமதி சம்மதித்து
புருஷன் சொல்தவறாமல் பூவை இளங்கொடியாள்
துரிதமாக சென்றாளே சேயிழை மாதுமவள்
திரும்பி வருகையிலே திக்விஜய காசிமன்னவன்
அருங்குழந்தை தன்னை ஏவலரே கொன்று எறிந்தான்
அந்த குழந்தை தன்னை அருஞ் சந்திரமதி யறிந்தாள்
தன்னுடைய மைந்தனென்று தாவியவனெடுத்தாள்
கள்ளியென்று அன்னவளை காசிராஜன் நிச்சயித்து
துள்ளவே வெட்டும்படி தோட்டியிடம் கொடுத்து
தோட்டியவன் அழைத்துவந்துதுணைவன் அரிச்சந்திரனிடம்
வெட்டி புரியும்படி விட்டுச்சென்றான் அத்தருணம்

நல்லதென்று அரிச்சந்திரன் நாயகியை கண்டானே
அல்லெல்லா மறிந்து அங்கம் துடித்தானே
மனைவியை வெட்டுதற்கு மனது துணிந்தானே
குணமுடன் பரமனடியை கும்பிட்டு பணிந்தானே
ஓங்கியே வெட்டுகையில் ஓடிவந்தார் கௌசிகரும்
சோங்கவே அரிச்சந்திரனை துண்ணிக்காதே என்றவரும்
சொல்லவே கேட்டானே சோகமிகக் கொண்டானே
தொல்லையுற்று கௌசிகனை தூஷணித்து நின்றானே
துணிந்தவன் மறுபடியும் தோகைமரைவெட்டலுற்றான்
கனிந்தளவிது தந்தை கங்காளன் எதிரில் வந்தார்
மடிந்த மகனை எழுப்பி மகாதேவன் தந்தாரே
முடிமீது ராஜ்யத்தை பழைமையாக யுணர்த்தாரே
லோகிதாசனுக்குபட்டம் ...தனமுடனளித்து
யோகி எனது தந்தை யுள்ள மிககளித்து
மங்களமாய் வாழச் செய்தார் பின்னுதி மன்னவனை
அங்கஜனே கேட்டீரோ அம்பலவன் சேதிதனை
இனியாகிலும் எனது இனிய மொழி மீருமல்
கனிந்த எனது முகம் காதலரே சோராமல்
பட்டியணைந்தினி நாம் கட்டிலிலாரோகணித்து
திட்டமுடன் வாழ்த்திடுவோம் தெய்வீகசரந்தொடுத்து

## இரதிதேவி யுரைத்ததைகேட்ட மன்மதன் கோபித்து மார்க்கண்டேயர் சரித்திரத்தை ரதிதேவிக்கு கூறும் ஒப்பாரி

ஏதடி மாமயிலே இனிய பசுந்தேனே
சூதனுன் தந்தைதனை சூரனென்றாய் மானே

பித்தன் புருஷனடி பேயாட்டக்காரனடி
சித்தமது சுத்தமில்லா ஜெகஜாலக்கள்ளனடி

மூன்றென்று பேசிடுவான் மூழித்து திகைத்திடுவான்
ஒன்று மறியாதவன் போல் உலகில் பிதற்றிடுவான்

அவனுடைய சேதிதனை ஆரணங்கே கூறுகிறேன்
கவலையின்றி மாமயிலே கதையதனை நீ கேளேன்

தவத்திற் சிறந்தவராம் தவயோகிவானவராம்
குவலயமெல்லாம் புகழும் மிருகண்டு மகரிஷியாம்
மனைவியாள் மருத்துவதி மாதுடனே யிருந்து
துணைவியுடன் இல்லறத்தில் தானிருந்தார் சிறந்து
மைந்தனில்லா குறையால் மனது மெலிந்துமவர்
இருந்திடும நாளினிலே இந்திரப்பதிப் போனார்
மைந்தனில்லை என்றிவரை மாசபையில் சேர்க்காமல்
தொந்தரை புரிந்து தேவர் துரத்தினர் பூலோகமதில்
மிருகண்டு மகாமுனிவர் மானா துயரமுற்று
பெருமான் பரமன் தனை பரிந்து தபம் புரிந்து
ஆளனும் தேவியுமாய் அகோர தவம் புரிந்தார்
நீலகண்ட முனிவர்முன் நிமலனார் வந்து நின்றார்
ஏதுவரம் வேண்டி என்னை துதிக்கிறீரென்றார்
கோதுடைய மைந்தன் வரம் கொடுத்தருளும் தேவர் என்றார்
முனிவரை கேட்டு முக்கண்ணன் கூறுகிறார்
புனிதரே உங்களுக்கு பிள்ளைவர மில்லையென்றார்
இல்லையென்று பிள்ளைவரம் இடதுடனளித்தாலும்
வல்லவன் மடிந்திடுவான் வாழ் பதினறுவயதில்
பதினறு வயதுவரை பாலன் வளர்ந்திருப்பான்
அதற்குப்பின் ஏமனவன் அவன் உயிரைப்பற்றி போவான்
சம்மதமோ உங்களுக்கு சாற்றிடுவீ ரித்தருணம்
என்றுரைக்க மாமுனிவர் ஈசனே தாருமென்றார்

## பிறகு மிருகண்டிற்கு மகனை மார்க்கண்டேயன் பிறந்து நமனை வென்ற ஒப்பாரி

ஐரெண்டு திங்கள் சென்று அருங்குழலாள் மருத்துவதி
நொய்யவே மெய்வருந்தி மகனை பெற்றாள் தினத்தில்
மார்க்கண்டனென்று பெயர் மகனுக்கமைத்தாரே
சீர்த்தியாய் சிறுவன் தனை செல்லமாய் வளர்த்தாரே
அரியகலை ஞானமெல்லாம் அறிந்தானே மார்க்கண்டனும்
நெறியுடன் தெய்வப்க் திநித்தமும் கொண்டானவனும்

பதினாறு வயதினிலே சதமாக மாள்வதென
விதி தன்னை மதியாலே வெல்லத் துணிந்தானே
தன்னையின்றோட்டத்தில் தனயன் விடை பெற்றானே
எண்ணிலா க்ஷேத்ரமெல்லாம் ஏகி நடந்தானே
இவனுக்கு ஆயுள் பதினாறு ஆனது பாரப்போது
காயமழிப்பதற்கு காலன் வரும் வேளையது
ஆற்று மணலெடுத்தான் ஆவிடை லிங்கம் செய்தான்
போற்றிய ஈஸ்வரனை பூசை புரிந்து வந்தான்
கணக்கு சரியாச்சி காலன் எதிரில் வந்தான்
பிணக்குமுன்ன பாலகன்போல் பாசக்கயிறெறிந்தான்
பாசக்கயிர் விழவே—உடங்கள் பரமன் எதிரில் வந்து
மோசமாய் மரலிதனை மோதிவிழ உதைத்து
ஒரு சிறுவனுக்காய் பரிந்து சித்து வித்தை செய்தானே
பெருமையுள்ள எமன்தனை பூவில் உதைத்தானே
என்றும் பதினாறு ஆயுள் அளித்தானே மார்க்கண்டனுக்கு
சந்நியாசி உன் கப்பன் தத்துவமிதோ மிகுத்து
இத்தகைய புத்தகனை வியம்பினாய் பெருமையுடன்
மெத்த பகட்டுடைய மேன்மை மிக வுள்ளசிவன்
அவனாலே எந்தனுக்கு அழிவு வந்து நேருமென்று
கவலைமதில் எண்ணாதே காதற்கினியாளே
நான்—போக விடை கொடடி போய் வாரேன்பரமனிடம்
அவன் யோகந்தனை யழித்து உடன் வருவேன் களித்து

## மறுபடியும் மதன் இரதி தேவிக்கு தேறுதல் கூறும் ஒப்பாரி

ஆகையினால் மயிலே—துயர்— அணுகாது பூங்குயிலே
போக விடை தந்தாலே புகழ் பெறுவேன் தரணியிலே
அபயமென்றடைந்தவரை அலையவிடலாகாது
விமலனுக்கு நாம் பயந்து நின்று விடப்போகாது
அரனுக்கு பயந்து நின்றால் அவனியோரென்னை கண்டால்
புழுதுகிட்டேனென்று புறம்பேசி ஏசிடுவார்
அஞ்சாரத ஆரணங்கே அரன் பெரிதல்ல எனக்கே
செஞ்சடை சித்தன் தவத்தை சீருலைப் பன் யோகமதை

அங்கையினில் வில்லிருக்க அரும்பு கணையிருக்க
மங்கையர் படையிருக்க மணிவட்ட குடையிருக்க
அருங்கிளி வாகனமிருக்க அமைத்ததென்றல் தேருமிருக்க
இருள்யானை எனக்கிருக்க ஈசனை கண்டு திகைக்க
அதிவிரைவில் சென்றிடுவேன் அரன் நிலையைக்கண்டிடுவேன்
சதிசெய்து வென்றிடுவேன் ஜெயம் புரிந்து வந்திடுவேன்
அன்னமே என் தந்தையின் அனுக்கிரகமிருக்க
பின்னமொன்று நேராது பிந்தனின் தபழிக்க
அமரர்களுக்காய் பரிந்து அங்கஜன் கணை தொடுத்து
விமலனிடம் மாண்டாலும் விண்ணுலகில் கியாதியுண்டு
ஆவியை துறந்தேனும் அமரர்கள் தீர்க்கவேணும்
தேவிரதி வேண்டாம் தீவிரமாய் போகவேணும்
ஆரணங்கே தேனே அன்னை ரதிமானே
சீரிய விடை தாரேன் சீக்கிரம் தா செந்தேனே
அங்கஜனுரை மொழிபோ ஆரணங்கான் கேட்டாளே
மங்கையரும் மாரனுக்கு மகிழ்ந்து மொழி கூறலானே

## மன்மதன் சொன்னதை கேட்டு மனது திடுக்கிட்டு இரதி மறுத்துக் கூறும் ஒப்பாரி

ஏந்தலரே என் ராஜா எனக்கிசைந்த காதலரே
வேந்தரே யானுனக்கு வேம்பானேன் அங்கஜரே
அண்டமதிலே நாம் ஆனந்தமாய் வாழுதற்கு
சண்டாள தேவரெல்லாம் சத்ராதியாயிருந்தார்
கொங்கை யிதழ் விம்முதைக்கு கோதைமுனங்குன்னுதைப
செங்கையால் லெனை தழுவ சித்தமெதிர் பார்க்குதையா
கொள்ளி வைக்கபிள்ளையில்லை குடமுடைக்க மைந்தனில்லை
அள்ளி அரிசியிட ஆண்டு திதிக்காளுமில்லை
நாம் பாலப் பிராமையா பக்கமெல்லாம் பூபூக்கும்
கோலக் குழலாளின் கொஞ்சிமொழியார் பரிக்கும்
எந்தன் சொல் தட்டிடாதே எனக்கிசைந்த புண்ணியரே
உந்தனை விட்டரை நாழி உலகில் வாழேன்கண்ணியரே
தேவர் துயராறுலென்ன தெய்வலோகம் அழிந்தாலென்ன
யார்தாலொழிந்தாலென்ன அதனால் நமக்காவதென்ன

சிரித்து விளையாடும் சின்னஞ்சிறு பெண்ணாச்சே
என்னை வெறுத்து தனியாக்கி விம்மாரா போகலாச்சே
என் வார்த்தை மீறாதீர் இந்திரன் சொல்கேளாதீர்
கண் மூன்றுடையசிவன் கோபத்திற் காளாகாதீர்

## இதைக் கேட்ட மதன் மறுபடியும் இரதிதேவிக்கு தேருதல் கூறும் ஒப்பாரி

மாமயிலே இரத்தினமே என் மனதுக்கிசைந்தவளே
கோமள வல்லியரே கொஞ்சும் மொழியாளே
ஆண்டிக்கு நாம் பயந்து அமரர்களை துரோகம் செய்தால்
வேண்டியபழி நேரும் வித்தகிபோகாதிருந்தால்
பங்கம் ஒன்றும் நேராது பாவையே நீ அஞ்சாதே
மங்களமுடன் வருவேன் மயிலே மேதுஞ்சாதே
நல்வாக்கு நீ கொட்டி நானும் தபசழிக்க
அல்லலை நீ விட்டிடடி அங்கஜன் பெயர் செழிக்க
வாடி வருந்தாதே வண்ணமுகஞ் சோராதே
ஓடி ஒரு நொடியில் வந்திடுவேன் தப்பாதே
பாங்கியர் சூழ்ந்திருக்க பவளப் பசுங்கிளியே
ஊஞ்சலில் நீயாடி உகந்திருப்பாய் மெய்ரதியே
போகும் பயணமதை பூவையே மறுக்காதே
ஏகம்பவாணனிறால் இடைஞ்சலொன்றும் நேராதே
அப்படி எந்தனை அரனெதிர்த்தாலும்
தப்பாமல் தேவரெல்லாம் எனக்கு தனித்துணை வருவார் என்
என்னை எதிர்த்த சேதி எந்தன் பிதா கேட்டாலே
கண் மூன்றுடையோனென்று கார் வண்ணன் பாராமல்
பழிக்குபழி வாங்க பரந்தாமன் சக்கரத்தால்
ஈசனின் கழுத்தையறுத்திடுவார் காந்தாளே கோபத்தினால்
பச்சை நிறத்தோனிடம் — உங்கள் பரமன் ஜெயம் செல்லாது
அச்சுதனின் மைந்தனே நீ தன் அரும்புகளை பொல்லாது
பரமன் தபசழித்தாலே பாருலகில் கீர்த்தியுண்டு
அபயமென்ற தேவர்களால் எனக்கனுக்கிரகம் மெத்தவுண்டு
அனுவேந்தி சென்றுவர தயங்காமல் விடைகொடடி
மனுநீதி தவறாத மார்க்கமிதுதானடி

## மதனுரைத்ததைக் கேட்ட இரதி மாது கதறிப் புலம்பும் ஒப்பாரி

ஐயையோ என் கணவா
　ஆங்கஜவேள் சிங்கார
மெய்மறந்து பேசுகின்றீர்
　மதனுக்மனுரே
பொடிமருந்து போட்டாரோ
　பொல்லாத் இந்திரனும்
அடிமைபோல் போரேனென்றீர்
　அரன்பதிக்கே நீர் தானும்
சாரையும் சர்ப்பம்போல்
　சரசமுடன் நாம்வாழ
பேராசை கொண்டாரு
　பொல்லாத படுபாவி
நிமிஷம் பிறிந்தறியேன்
　நிரந்தரனே உன்னை விட்டு
கமழும் நம் பாசபந்தம்
　கட்டர செய்தான் பகட்டு
போகாதே போகாதே
　பூவை என் சொல் மீருதே
ஆகாதே ஆகாதே
　என் சொல் அலட்சியமாய் பாராதே
கலந்து சுகித்து இங்கு
　காலத்தை கழித்திடலாம்
நலந்தவரி பரமனிடம்
　நாதனே போகவேண்டாம்

## மேல்விழுந்து புலம்பும் ரதியை தேருதல் படுத்தி மாரவேள் மறுபடியும் கூறும் ஒப்பாரி

வேல்விழி மாதரசே
　விண்ணவர் புகழமுதே

வாலி வயதடைய
வாலிப பெண்ணணங்கே
சின்னஞ்சிறு வயதில்
சித்தினியே உனை விடுத்து
தன்மையுள்ள காரணத்தால்
தவித்து புலம்புகின்றாய்
என் வார்த்தை மீறாதே
ஏலக கருங்குழலே
கண்மூன் றுடையவனின்
கடுந்தபசை யானழித்து
சீக்கிரத்தில் வந்திடுவேன்
உன்—சித்தம் கலங்காதே
பாக்கிய அணைமே
பவழ ரதி கிளியே

## முடிவில் ரதிதேவி மன்மதனுக்கு விடையளிக்கும் ஒப்பாரி

அனங்கனுரை மொழியை
அன்னரதி கேட்டாளே
பிணங்காமல் மனது
பின்னும் யோசித்தாளே
பிடிவாதங் கொண்டாரே
பிராணகாந்தன் என் கணவர்
முடியா தினிமீது
மன்மதரை யான்தடுக்க
என்று மனந்துணிந்து
இளமாரனைப் பார்த்து
பொன்போன்ற நன்மொழியாள்
பூவை மனங்களித்து
கன்னிரதி கிளியாள்
கண்ணனுக் குரைப்பாள்
மன்மதரே இந்நாளும்
என்று மகிழ்ந்து தாம்பூலமளித்தாள்

## மன்மதன் பரமசிவன் தபசழிப்பதற்கு புறப்படும் ஒப்பாரி

ஈசன் தபசழிக்க
இந்திரனின் சொற்படிக்கு
வாசன் மகன்போக
வஞ்சிரதி விடையளிக்க
இயல்புடனே ஸ்நானஞ்செய்து
இந்திரவர்ண பட்டுடுத்தி
துயிலாலே நீர் துவட்டி
துய்யவனை மனதில்பதித்து
ஏழு பதுமார் கலவிகச்சை
ஏழுசுத்தாய் பிகுவெடுத்து
கழுத்தில் ருத்ராக்ஷமணிந்து
மையில் காப்பு கொலுசணிந்து
இருகாதில் குண்டலமாம்
இனிய பச்சைமேல் முருக்காம்
பருவமதன் மார்தனிலே
பகட்டான பதக்கங்களாம்
இனியதொரு நெற்றியிலே
எழிலுடன் திலகமிட்டான்
கனிவுடன் கரும்புவில்லை
கரமது பிடித்து நின்றான்
அருங்கிளி வாகனத்தை
இயல்புடனலங்கரித்து
சீருடனுயர்ந்தானே
சிவன் தபசழிக்க வென்றே
இருள் யானை கன்னிப்படை
இவன் பின்னணிவகுக்க
கரும்தால் தென்றல் தேரேறி
காமனும் வீற்றிருக்க
இணையில்லா வட்டகுடை
எதிரே நிழல் கொடுக்க
துணைவிரதி எதிரில் நிற்க
தோகையர் ஆலாத்தி சுற்ற
ஏகிடவே துணிந்து
ஈசனை மனதில் நினைத்து
மோகசிலையை இழுத்து
மலர்கணையை கைபிடித்து
இன்னலிலா திருக்க
இளங்கொடி விடைகொடுக்க
அன்னக்கிளியும் பறக்க
அங்கஜன் பயணமிட

## மன்மதன் சகுனங்காணுதல் ஒப்பாரி

பூனை குறுக்காச்சு
புதுப்பானை எதிராச்சு
ஏணியும் சாணானும்
எதிரில் வரலாச்சு
வாணியன் எண்ணை விற்று
வாரான் எதிரினிலே
வாழைக் குமரியவள்
மீளா நெருப்பெடுத்தாள்
வலியனிடமாச்சு
வக்கா எதிராச்சு
தாயறுத்த முண்டை
தனக்கெதிரில் வரலாச்சு
வக்கணை யிட்டொருத்தி
ஒப்பாரி வைத்தழுதாள்
எக்காலவேதியனும்
ஏப்பமிட்டெதிரில் வாரான்

வாய்விட்டு ஆந்தையது வருந்தியலருது பார்
சாய்ந்தது ஆலமரம் சதுராகமு அந்நேரம்
விசிரக்கல் மாளிகைதான் வளையாய் இடிந்துவிழ
கையில் கட்டோலையுடன் கணக்கன் எதிர்வர
வழுக்கைமொட்டை பிராமணத்தி வாராளெதிரினிலே
கொழுத்த எருமைக்கிடா அப்போகும்மாளமிட்டு ஓடிவர
வந்து சகுனமெல்லாம் வாழ்மாரனெதிரினிலே
பெரிதுமதை பாராமல் பயனமது சோராமல்
வஞ்சியர் படையுடனே வாரான் வேகமுடனே
செஞ்சடையோன் தபத்தை சீராய் கலைந்திடவே
ஒரு காத தூரத்தில் உமைபரமன் யோகத்திலே
அமர்ந்து இருக்கையில் காமன் எதிர் வருகையில்
வட்டமாலியோகமதை வாழ் மாரன் கண்டானே
கடவுளே காருமென்று கைதொழுது நின்றானே

## யோகத்திலிருக்கும் பரமனைக் கண்டு மன்மதன் வணங்கும் ஒப்பாரி

அமரேசன் சொற்படிக்கே
அரனார் தபசழிக்க
மனதார மனைவியிடம்
தகுந்த விடை பெற்றுமதன்
அன்னக்கிளி வாகனத்தில்
அங்கஜன் அதிவிரைவில்
கண்மூன் றுடையோனிடம்
கடுகிவந்தா னவ்விடத்தில்
ஆதிபரமன் செய்யும்
அகோரதபம் கண்டானே
சோதிப்பதெவ் விதமெனவே
சேர்க்கங்கொண்டு நின்றானே
ஆற்றிலிறங்கியவன்
அலறவே ஸ்நானம் செய்தான்

வேற்றுமை தனை தவிர்த்து
விமலனெதிரில் வந்தான்
அருகுதும்பை கொன்றைமலர்
அறுத்து வந்தே அங்கஜனும்
திரிலோகன் பாதமதில்
தூவி சரணம் செய்தான்
அரஹரா பரனேயென்று
அடிமலர் வணங்கி நின்றான்
சிரம் வணங்கி போற்றிசெய்து
சிற்பரனை தெண்டமிட்டான்
ஆதிபரம் பொருளே
அடியேனின் சற்குருவே
நான் நீதியில்லா காரியத்தை
நிகழ்த்தவந்தே னுன்னிடத்தே
ஆயிரக்கண் ணிந்திரர்க்கு
அபயஸ்தம் மளித்ததினால்
வாய்மொழி பிசகாதிருக்க
வந்தேனுனை எதிர்க்க
அடியேன் மன தார
ஆண்டவனே உந்தனுக்கு
கொடுமையொன்றும் செய்யேனே
கொன்றை யணிந்தோனே
என்று அஞ்சி பயந்து நின்றான்
அரன்மீது தியானமானான்
மிஞ்சியே கரும்புவில்லை
மன்மதனும் கைபிடித்தான்
அரும்பு கணை எடுத்தான்.
அத்தனிட பாதம் வைத்தான்
தான் துரும்பையா உந்தனுக்கு
துணை செய்ய வேணுமென்றான்
முன்னே ரதியிடத்தே
யானுன்னை தூஷணித்தேன்

கண்மூன் றுடையவரே கபடமொன்றும் வைத்தறியேன்
என்று அத்தனை சுத்திவந்தான் அவர்க்கு வலமாக நின்றான்
சித்தத்திடமே கொண்டான் சித்தஜன் சிலைபிடித்தான்
கரும்புவில் கைபிடித்தான் அரும்புகணை எடுத்தான்
பரம்பொருள் மீதுவிட பஞ்சபாணன் துணிந்தான்
அங்கஜன் விடுத்தகணை அரன்மீது பாய்ந்திடவே
சங்கரன் கண்திறந்தார் தபயோகத்தை மறந்தார்
கண்கள் சிவந்தாராம் காந்தானம் கொண்டாராம்
மின்னல் விழிபோல மிரள விழித்தாராம்
படபடென்று மீசையது பற்றி துடிக்குதுபார்
விஷமுண்ட ஈசனுக்கு விபரம் புரிந்ததுபார்
ஆற்றொணு கோபங்கொண்டார் அச்சுதன் மகனைக்கண்டார்
அவர் நெற்றிக்கண்ணைத்திறந்து நிரக்கமனந்துணிந்தார்
அரன் விழியைத்திறக்க அல்லாளுவ மன்மதனும்
பரபரப்பாய் தெய்வலோகம் பதருது எரிந்ததினால்

மதன் மடிந்த பிறகு ஆரோக்கியத்திற்கு இரதிதேவி சொற்பனங் கண்டு புலம்பும் ஒப்பாரி

பாவை ரதிமாது பஞ்சணையின் மேல் துயின்று
தேவியவள் கண்ணயர்ந்து நித்திரைசெய்தாளேயன்று
பாதிராத்திரி வேளையிலே பத்தினி கனவுகண்டாள்
மாது மனந்துடிக்க மண்ணணில் புரண்டழுதாள்
பக்க மதிலிடிந்து பாரில் விழவும் கண்டாள்
மிக்க காவேரி நதி மேல் வெள்ளம் வரவும் கண்டாள்
பங்கய மலர் கூந்தல் பரிந்து அலையக் கண்டாள்
மாங்கல்ய மருந்துவிழ மங்கை கனவு கண்டாள்
பின்னவிட்டு வைத்தமலர் பெரிது முறக்கண்டாள்
மின்னவிளங்கொடியாள் மாரிமுகு கொடுக்கக்கண்டாள்
பரந்தாமன் மைந்தனுக்கு பரிணயமாகக் கண்டாள்
விரகமதன் யானையின் மேல் ஊர்வலம் வரவே கண்டாள்

புறக்கடையில் வைக்கபோர்புதுமையாய் எரியக்கண்டாள்
வாழைக்குலை மள்ளக்கண்டாள் வஸ்திரமும் புறக்கண்டாள்
பாண்டத்திலிருக்கும் ஜலம் பொங்கியே வழியக்கண்டாள்
ஆண்டவனாலே மதன் அனலா லெரியக்கண்டாள்
பதைத்து எழுந்திருந்தாள் பாங்கியர்களை அழைத்தாள்
கதறி கண்ணீர் விடுத்து கனவு கண்டதை யுரைத்தாள்
பாங்கிகளே தோழிகளே பரமனிடம் போன
தேங்காத என் கணவன் தீவிரமாய் மாண்டாரடி
பர்த்தாவை பறிகொடுத்த பாவிநானோனடி
இத்தருணம் யானறிகி அறிந்து வருவேனடி
என்று பைங்கிளியாளுரைக்க பாங்கியர்கள் விழிக்க
அங்கனமோர் தூதுவனும் அதிவிரைவில் ஓடிவர
பஞ்சபாண்டவர் மடிந்த பழியை யுரைத்து வருந்த
சஞ்சலம் கொண்டு விழுந்தே தையல் மனமெலிந்தே
பதறிப் புலம்புகிறாள் பாரில் விழுந்தழுதாள்
பதறிக் கண்ணீர் விடுத்தே கட்டழகி ஏதுரைத்தாள்
பாங்கிளா தோழிகாள் என் பர்த்தா மடிந்தாரடி
கூந்தலைந்து வர கோதை துயில் புரள
சாந்தமதை விடுத்து தகப்பனிடம் வாராளே
செடிக்கொரு கூந்தலாக சிக்குபட்டு வாராளே
மடிந்த கணவனிடம் மாதுரதி வந்தாளே
எரித்திருக்கும் சாம்பலதை இன்பரதி கண்டாளே

## காமன் எரிந்த சாம்பலருகில் புரண்டு இரதிதேவி புலம்பும் ஒப்பாரி

ஆசையுள்ள என் புருஷா அங்கஜவேள் சிங்கார
என்—நேசம் மறந்தீரோ—என்னை நடுவீதிவிட்டீரோ
போக வேண்டாமென்றேனே பெண்மணியாளென்
ஏகமர் மறுத்து எரிந்து நீராகலாமா [மொழியை

வடக்கே மழை பொழிய என்னை தேடிய ராஜாவே
வெள்ளம் வந்து மோதவிட அந்த
வெள்ளத்தை நீந்துவேனோ வல்லவனே என் ராஜா
வாழ்க்கைத்துணை மன்னவனே எங்கள்
வள்ளலை தோற்றபாவி இந்த
வையகத்தில் வாழ்வேனோ வஞ்சிமனம் தாழ்வேனோ (1)

தெற்கே மழை பொழிய என் தெய்வீக ராஜாவே
தென்றல் வந்து மோதவிட என்
தென்றலுக்கு மீள்வேனோ தேனே அமுதமே
தித்திக்கும் செங்கரும்பே என்
தேசிகரை தோற்றபாவி இந்த
தேசத்தில் வாழ்வேனோ தேங்காதிருப்பேனோ (2)

காய்க்கும் பிராயத்திலே என் காமதுர ராஜாவே
கனிபழுக்கும் நாளையிலே என்
காதல் திருவே கரும்புவில் அங்கஜரே
கரிகால எமனுன்னை கண்டு வைத்தானோ என்னை
கண் கலங்க வைத்தானோ (3)

பூக்கும் பிராயத்திலே என் பூமாரா மன்மதனே
பிஞ்சுவிடும் காலத்திலே எங்கள்
பரமன் மருமகனே பரத மன் நற்சுதனே
படும்பாவி காலனுன்னை பார்த்து வைத்தானோ
என்னை பரதவிக்க வைத்தானோ (4)

ஐந்துதலை நாகனுக்கு என் அழகு துரை ராஜாவே
அடிநாக்கில் மச்சமுண்டு
கொஞ்சிய பழத்துக்கும் கொஞ்சம் கசப்புண்டு
ஓடுகிற தண்ணீரில் உன்னை சுழலுமுண்டு
காமதுரையே கலவிக்கிசைந்தவரே—கந்தனிடை மைத்துனரே
உன் மீராமம் கருப்பொழிய உந்தன்
தேகமெல்லாம் தங்க நிறம் (5)

மடுவங்கரையோரம் என் மன்மத ராஜாவே ஒரு
மயில்போல் நின்றிருந்தீர் உன்னை
மயிலென்றும் பாராமல் அந்த மரணிபடுபாவி

மாயமாளசண்டாளன் இந்த மாது என்மேல் வஞ்சங்
உன்னை மயக்கம் போட்டு கொன்ருனே (கொண்டு (6)
புன்னை மரம் மேலே என் புண்ணியனே ராஜாவே நாம்
புருவைப்போல் கொஞ்சிருந்தோம் அந்த
பொல்லாத தேவரெல்லாம் நம்மை பார்த்து சகியாமல்
உன்னை பரமனிடம் ஏவவிட்டு அவர்
படுமோர்சம் செய்யலாமா (7)
உனக்கு கட்டுண்டுகாவலுண்டுஎன் காமதுரைராஜாவே
நமது கல்விழைத்த மாடியிலே அந்த
கட்டு கலந்ததென்று கனியே கனிரசமே
கற்கண்டே சர்க்கரையே கன்னிரதி நாயகரே
உன் காவலது சேர்ந்ததென்று அந்த
காலதூதர் கைதனிலே நீகட்டுண்டுமாண்டதென்று (9)
வெள்ளியால் கொள்ளிபண்ணி என் வேல்மார ராஜாவே
வெண்கலத்தால் தோண்டி பண்ணி
வாழையில போட்டு வலது பக்கம் நூல் மாத்தி
பிண்டம் பிடித்து வைக்க என் பருவ துரையே
பச்சைக்கிளி வாகனனே இந்த
பருவரதிக்கும் உனக்கு ஒரு புத்திரனும் இங்கே இல்லை (8)
பம்பை மயிர் விரித்தேன் என் மன்மத ராஜாவே
பாதியுயிர் உள்ளடக்கி இங்கே என்
பர்த்தாவும் மாண்டதினுல் இந்த பரமன் தபசடியே
ஒரு பறைச்சியைப்போல் நின்றழுதேன் (10)
கோரை மயிர் விரித்தேன் என் பொஞ்சும்கனி அங்கஜனே
குறையுயிரை உள்ளடக்கி இங்கே என்
கணவனும் மாண்டதினுல் இந்த கொடும்பாவி பரமனிடம்
ஒரு குறத்தியைப்போல் நின்றழுதேன் (11)
சங்பங்கிபூர்க்கும் என்சாமி துரைராஜாவே
சந்தனக்கல் மேடையிலே இந்த
தையல் ரதி நின்றழுதால் என்
ஆசைமணவாளா என் அங்கஜவேள் கண்ணாளா
அரும்புயில் கையேந்தும் அதிதீரசிங்காரா நமது

தெய்வலோகம் கேழ்-கும் அந்த
தெய்வ சபைதனிலே திருநடனமாடி வரும்
திலோர்த்தமை திடுக்கிடுவா நான்
திக்கில்லாபாவியென்று அவள் தெம்பி புலம்பிடுவாள் (12)

தோட்டத்து மருடம்பூ என்னை தேடிய ராஜாவே
துணையான தாழம்பூ என்
காமவேள் சிங்காரா கரும்பு வில்லமாரா — நான்

தாமரை மலரிழந்தேன் தாலிச்சரடிழந்தேன்
தலைக்கெண்ணை சீப்பிழந்தேன் ஜவ்வாது பொட்டிழந்தேன்
இந்த தற்பரன் தபசடியே இங்கே
தரையில் புரண்டழுதேன் (13

## பிறகு இரதிதேவி யோகத்தில் அமர்ந்திருக்கும் பரமசிவனிடத்தில் வந்து நிந்தித்து புலம்பும் ஒப்பாரி

சண்டாளா என் தகப்பா சங்கரனே சாம்பசிவனே
உண்டோ இவ்வனியாயம் உம்பர் பெருமானே
சதிசெய்தென் மன்னவனை தனல் கொண்டெரிக்கலாமா
பதியைப் பிரிந்துலகில் பாவி நான் வாழலாமா
சஞ்சலந்தேடி வைத்தாய் என் தாலியை யறுக்க வைத்தாய்
மஞ்சளுங்குங்குமமும் ரதென்னை வெறுக்கவைத்தாய்
என்னை சிறுவயதில் வளர்த்து சித்தஜர்க் கெனையமைத்து
இந்த பருவவயதினிலே பரதவிக்கச் செய்தீரே
சிலைமாரனுந்தனுக்கு செய்த பிழை என்னவய்யா
புரமூன்றெரிந்தவனே புண்ணியனே கூறுமையா
சிரமுடன் சேர்ப்பங்கொண்டு மருமகனை நீ வதைத்தாய்
உரமுடைய தேவரெல்லாம் உந்தனை நகைத்திடுவார்
சிங்கமால் அவர் தக்ப்பன் இந்த சேதியைஅறிந்தாலே
சங்கையில்லா உன் தலையை அவர் சக்கரத்தாலறுப்பாரே
ஜெகதலமெல்லாம் பழிக்க சுபம் செய்ய அமர்ந்தீரோ
பகைத்து என்குடி கெடுக்க பரமனே நினைத்தீரோ

செய்த உபசாரம் தந்தைநீ தாளொணுதா
வையகத்தோர் உனை பழிக்க வகைபேச செய்குவதோ
சிறியோர்கள் செய்பிழையை பெரியோர் பொறுக்கவென்று
அறியாமல் நீ எரித்ததினால் அமங்கிலியானேனின்று
என்று சாஷ்டாங்கமாய் பணிந்தாள் சங்கரனை துதித்தாள்
காக்ஷியாய் மாங்கல்யபிச்சை கடவுளே தாருமென்றாள்
சன்மார்க்க மாரதி தையல் வருந்துவதை
கண்திறந்து பார்த்தாரே கடவுள் கடத்தாரே

## பரமன் இரதிதேவிக்கு தேறுதலுரைக்கும் ஒப்பாரி

என் மகளே ரதியே இளங்கொடி புண்யவதியே
உன் நாதனின் சதியே உலகில் சேர்ந்தது பழியே
இழிவான காரியத்தை எவனொருவன் செய்தாலும்
பழிவாங்காது விடுத்தல் பாவமெல்லா மேன்மேலும
என் தபசைக்கெடுக்க இடுக்கணென்ன யான் புரிந்தேன்
கண்மணியே மகளே கலங்கி புலம்புவதேன்
எத்தனிடகோபம் இடர் வருமென்றறிந்திருந்தும்
மன்மதன் மலர்கணையை மகிழ்ந்தெய்தானே தெரிந்தும்
இறந்தவர்கள் எழுந்தால் இப்பூமி இடந்தருமோ
மறந்துவிடு அவனாசைமனம் வருந்திடத்தகுமோ
இவன் குறும்பை என்னிடத்தில் எட்டவிட்டு பார்த்ததினால்
குவலயத்தில் எரிந்தான் கோபக்கனலதனால்
யான் செய்யும் யோகத்தினால் என்ன இடர் மன்மதற்கு
தேன்மொழியே ஏதுசெய்வேன் தீர்த்தச்செயலதற்கு
இனி நீ வருந்துவதி லேதுபயனுண்டம்மா
தணிந்து துயர் விடுத்து தனித்து நீ வாழ்வாயம்மா

## பரமன் இரதிதேவிக்குத் தேருதல் கூற அச்சமயம், தேவர்களெல்லாம் பரமசிவனிடம் வந்து பரமனை வணங்கும் ஒப்பாரி

பரமன் விழியாலே படைமாரன் எரிந்தவுடன்
தரணிதனிலே காம தத்துவங்கள் அற்றதுகாண்

உரமான தேவரெல்லாம் உகந்துமனம் வாடி
புரமூன்றெரித்தோனிடம் பரிந்தே வந்தார் நாடி
ஐயனே சற்குருவே அம்பலான தேவா
வையவுலகமெல்லாம் பாழடைந்து போகுதையா
மன்மதனில்லாமல் மானிலத்தினிலின்பமுண்டோ
நன்மையோ தங்களுக்கு நாதனை சொல்லுமகளித்து
என்றுமே தேவரெல்லாம் ஈசனை போற்றி செய்ய
கண்மூன்றுடைய சிவன் கடவுளும் ஏதுரைப்பார்
உண்மைதான தேவர்களே ஒருவார்த்தை கேட்டுவீர்
என்னை பகைத்தவர்கள் வேறு மார்க்கமுண்டோ
இவனுக்காக பரிந்து இமையவரே வாராதீர்
என் தவமகிமையைப் பார்த்தான் கனலாய் எரிந்தான்காண்
யார் வந்தெதிர்த்தாலும் அவனுயிர் மீளாது
பார்மீதிலெந்தன் கோபம் பகர்ந்தேன் வீண்போகாது

## இரதிதேவி மறுபடியும் ஈசனிடம் வருந்தி மாங்கல்ய பிச்சை கேட்கும் ஒப்பாரி

கருணாகரப்பொருளே காதகிக்கோர் நல்லருளே
சிறு பிழையை பொருத்தருளே சித்தம் வைத்து காத்தருளே
கணவனை நானிழந்து கட்டிய தாலியிழந்து
தனியே இருப்பதற்கு தகுமோ நீர் சொல்லுகந்து
கண்மூன்றுடையபிதா கடவுளே நீரிருந்தும்
முண்டையென்று சொல்வதற்கு மேதினியில் நியாயமுண்டோ
கர்த்தனே என் மன்னவனை கனலாலெரித்ததுபோல்
வித்தகரேஎனையெரித்தால் வேணு புண்யம்உண்டிதிலே
கொஞ்சும் பிராயத்திலே நான்கொழுந்து விடும்காலத்திலே
பஞ்சணையில் விளையாடும் பாலிய பருவத்திலே
கன்னி சரடிழந்து கனகுங்கும மலரிழந்து
மண்ணுலகில் யான் வருந்த மகிபரே செய்தாய் சிறந்து
கணவனுயிர் பெற்றிடவே கர்த்தனே கண்பாருமையா
வினையமாய்நினைத்துவிடில் இந்தவித்தகியே சொல்லுமையா

## மதனை பரமன் அருபியாக எழுப்புதல் ஒப்பாரி

திருப்பாற் கடல்தனிலே — தினகரன் போலுதித்தவனே
பொருத்தமுள்ள என்மகனே — புண்ணியவதியானே
தென்றற்றேருள்ள மதன் — செய்த குறும்பதனால்
பின்னமடைந்துமவன் — பற்றி எரிந்ததினால்
தீய்ந்துமவன் பஸ்பமானான் தேன்மொழியே ஏது செய்வேன்
மாய்ந்தவரை எழுப்ப — மானாது காணுமிப்போ
தெய்விக மெய்ரதியே — தீரவுன் கவலையென்றால்
வையகத்திலவனை அருபியா — எழுப்பி தாரேன்
தேனே உனக்குமட்டும் — தெரிந்திடும் மதனுருவம்
காணார்கள் மற்றொருவர் — காமனிட உருவம்
தீங்கிழைத்த அங்கஜற்கு — தீர்த்த கடமையிது
பாங்குடன் வேணுமென்றால் — பாருமிதோ பிரேமையிது
என்று திருநீரதை எடுத்து — சாம்பலின் மேல் தூவினாரே
அருபியாய் அங்கஜனும் — ஆர்ப்பரித்தெழுந்தானே
தீயெரிந்து மதன் — திட்டென் றெழுந்திருக்க
மாதுரதி பார்த்து — மலரடி பணிந்தானே
திகம்பரனின் பக்கத்தில் — தேவிரதியுடனே
பசுபதி மருகன் — மதன் மலரடி பணிந்தானே
தேவனே க்ருபா நிதியே — தெரியாமற் செய்த பிழை
பூவினில் பொருந்திடவே — பணிந்தேனையா ஏழை
என்று—தோத்தரித்த மன்மதனை — சிவபெருமான் கண்டாரே
ஆர்த்து மனமகிழ்ந்து — அன்புகொண்டுரைப்பாரே
தெரிவிப்பேன் கேள் மருகா — தேர்விஜய அங்கஜனே
பொருத்தமில்லா காரியத்தை — பூமியிலே செய்யாதே
தாரணியில் மானிடர்கள் — தழைத்திடவே இல்லறத்தில்
மாராமல் வாழ்ந்திருக்க — மனுநீதி யாயுலகில்
சதிபதிகள் உறவாய் — சையோக காதல் புரிந்து
மதித்திடவே வாழ்ந்திடுவாய் — மாரோக்ய புரியிருந்து
திருநேத்ரதாரி சொன்ன — திருவாக்கே கொண்டுள்ளமே
பொருத்தமாய் ரதியுடனே — மோனாரோக்கியபுரமே

மூப்பது முக்கோடி முனிவரும் தேவர்களும்
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் தபோதனரும்
பூமாரியே பொழிந்து புகழாய் நிறைந்திருந்தார்
காமதகனனென்று கர்த்தருக்கு பேரான்சு
கல்வியிலுயர்ந்தோரும் கவியெழுதும் பாவலரும்
தொல்புவியிலிச்சிறுவன் தொடுத்த கவியதனில்
ஏதுகைமோனை தவறி இதிகாசம் மாறிடினும்
நீதியுடன் பிழையனைத்தும் நீணிலத்தில் பொருப்பீர்
ஆதிசிவன் வாழி அரி பிரமன் வாழி
ஜோதியுமை வாழி சரஸ்வதி லக்ஷிமி வாழி
பாவலரும் நாவலரும் பாருலகில் வாழி
ஆவலாயிதை படிக்கும் அன்பர்களும் வாழி
இதிகாசவின் நூலை இன்பமாய் பதிப்புசெய்த
மதுரை முதலியாரும் வாழி
சந்தச்சரபக்கவி தாரணிதனில் வாழி
செந்தமிழ் தியாகராஜன் செழித்துமிக வாழி
பாலன் ராஜேந்திரன்யான் பாடியகவி வாழி
ஞானமேல் படித்தோர் தன்மையுடன் வாழி
ஆழிசூலகினிலே அன்புடையோர் வாழியென்று
வாழி வாழியென்று வர்மளித்தார் ஈஸ்வரனார்

இரதி மதன ஒப்பாரி முடிவு பெற்றது.

உ

வேலும் மயிலும் துணை

சென்னை முத்தியாலுபேட்டை

சந்தச் சரபக்கவி

V. A. தியாகராஜ செட்டியார் அவர்களின்

# அருட்கவி பி. ஷண்முகவேல் பிள்ளை

அவர்கள் பாடிய

# விறலிவிடை சிந்தகஷ்டி லாவணி

## கடவுள் துதி விருத்தம்

ஆதியெனும் பராபரத்தின் வஸ்துவாகி
அருள்வடிவாய் பரவெளியே மௌனியாகி
தீதின்றி தேவர்க்கெல்லாம் தெய்வமாகி
தியான நிஷ்டை யோககலை தியானியாகி
சோதியே யறுபத்து நான்கு கலைக்கியானமாகி
சொல்வதே சாஸ்திரத்தின் சுருதியாகி
நீதியுள்ள ப்ரணவத்தின் சுருதியாகி
நிஷ்களானந்தனை நாம் நிகழ்த்துவோமே.

## லாவணி பாட்டு

துங்கசதங்கை கொஞ்சும் ஐங்கரனே மூஷிக
உன் கழல் தனை போற்றி
உகந்து ஏற்றி
மலரை சாற்றி துதிபுரிவேன்
சங்கரனார் மகனே மங்கள குணாகரனே
துணை புரிவாய் காப்பாற்றி
அங்கஜனுண்டு யென்று வம்பர்கள் சிலரிங்கு
சிங்கம் போல் துடிதுடித்து
பேய்பை பிடித்து
பேமரி யடித்து ஜாயுடனே
அங்கத்தினரைக் கொண்டு பங்கமடைய வந்தார்
மான வெட்கத்தை விடுத்து

உத்தார்

இவர்க்கு—புத்தியுரைக்க வருவாயே—பாழும்
புரட்டை வெளிப் படுத்துவாயே—இந்த
சத்துருக்கள் ஒழிய அத்திமுகத்தோனே யுன்
அடிமலர் தனைப்போற்றி. (உகந்து)

பாட்டு

ஈசன் விழியால் மாரன் எரிந்திடவில்லை யென்றுல்
இதிகாச நூல்கள் செப்புமா
ஜனங்கள் ஒப்புமா
ஆமக் சட்டமா எங்களின் ஜேக
தீசன் கோபக் கனலில் மன்மதனின்
தேகமழியால் தப்புமா
தேவர்கட்கு பரிந்து நாதன் தபசழிக்க
தீங்கிழைத்தானே பாவி
மலரைத் தூவி
மடிந்தான் ஆவி அவன்
மனைவியுமான ரதியாள் கூவி புலம்பி வந்து
தேவி மீட்டாள் உயிரை மேவி

உத்தார்

வேதநூல்களின்படி யுரைக்க அது—நீங்கள்
வோதாவந்தீரே மனந் துடிக்க—இந்த
சாதனைக்காரர்களை நீதானழிக்க வேணும்
ஸ்ரீதரன் மருகா போற்றி (உகந்து)

பாட்டு

கலையிதிகாசங்களை கருத்திலுணராமலே
கயிர் திரிக்க வந்தீரே
கவி வல்லோரே
கவனிப்பாரே இங்கே

கரடுமுரடாகவே உளறி திரியவேண்டாம்
கதையை கட்டிக்கொள்வீரே
சந்தச்சரபக்கவி எந்த திக்கிலும் கமழ்
செந்தமிழ் கவி ராஜன்
தியாக ராஜன்
அவரின் சீஷன் —[illegible]டும்
செந்தமிழ் ஷண்முகவேல் ஜெகதலமீதினிலே
செப்பும் கவி புல்லாசன்

## உத்தார்

மகிலதமீதிலென் பேரர் சிறக்க எனை
பகைத்த பாதகர் பஞ்சாய் பறக்க—நல்ல
அகிலலோகேஸ்வரியாள் மகனே கஜமுகனே
அடியேனுன் கழல் போற்றி (உகந்து)

## கேள்வி விருத்தம்

எந்தவிடம் மதன் பிறந்தானின்றோர் யாரே
இனியதொரு கடல்முரசு மீந்தோர் யாரோ
தென்றறிதேர் கிளியானை தந்ததாரோ
தேன்மொழிமார் படையிவனுக் கமைத்ததாரோ
அந்தமதன் வசித்திருக்கும் மிடந்தான் யேதோ
அன்னரதி அவதரித்த மார்க்கமேதோ
ஐந்துவித மலர்கணைகள் அமைந்ததேதோ
அதனையிந்த சபையிலெடுத் தரைவீர் மாதோ

## லாவணி மெட்டு

அண்ரண்ட மதிர செண்டு போல் கிளம்பி இங்கு
அண்ணே நீர் திருப்பவேண்டாம் முண்டாமுண்டா உங்கள்
அங்கஜன் அரன்விழியால் அனலாக வில்லையெனும்
அசட்டு புராணங்களை கொண்டா கொண்டா (அ)
எரித்து உண்மையென்று இதிகாச புராணமெல்லாம்
எடுத்து உரைப்பதெல்லாம் பொய்யா—பொய்யா—நீங்கள்

எத்தனைபேர் வந்திரோ சித்தஜனின் தொண்டர்கள்
எத்தனை ஏய்ந்துப்போக ஐயா—ஐ ா (அ)
ஆதாரமற்ற பலை சோதரக் கவிகளெல்லாம்
ஒதாதே இங்கெடுத்து அண்ணை அண்ணை மதன்
மாதா வயிற்றினிலே மைந்தனும் பிறந்தாரு
மாய்கையாவுதி த்தாரு சொல் இண்ணை இண்ணை (அ)
எந்த யுகந்தனிலே உங்கள் மதன் பிறந்தான்
இயபுவிர் வருஷத்தின் பேரு பேரு—இன்னும்
சந்தேகந் தெளித்திட மாதம் தேதிக்கிழமை
சகலமும் இங்கெடுத்து கூறு கூறு (அ)
தென்றத்தேர் கன்னிப்பட மின்னும் கடல் முரசு
தங்கும் வட்டக்குடையும் ஏது ஏது—மற்றும்
அன்னக்கினி வாகனம் இருள் யானையோடு வைத்த
அரும்புவனை வந்ததெப்போது ஓது ஓது (அ)
ஆரோக்ய புரத்தில் அவன் அரசாண்டதெப்போ
அதனை நீ தேரிலே பார்த்ததுண்டா உண்டோ நல்ல
சீரோங்கும் மங்கைரதி சிகப்போ கருப்போ நிறம்
செப்பிடுவீரெனக்கு துண்டா துண்டா (அ)
இரதியென்னும பெண்மணியை வினிதாக ஈன்றவர் யார்
இதற்கு பதிலுத்தாரும் தாரும் பின்னும்
குறைவின்றி நல்முகூர்த்தம் நடந்ததின் விபரத்தை
கூசாமல் எடுத்து கூறும் கூறும் (அ)
எந்த இடந்தனிலே இவர்க்கு திருமணமே
இனிதாய் நடந்ததையா சொல்லும் சொல்லும் இவர்க்கு
சொந்த பந்துக்களிலே யார் யார் அருகிருந்த
சுருதி முறைப்படியே விள்ளும் விள்ளும் (அ)
மாரன் ரதி இவர்க்கு மைந்தர்களுண்டோ காணும்
மர்மமிதற்குப் பதிலென்று என்றுயிந்த
பார்தனிலே யிவனின் பஞ்சபாண விபரம்
பகர்வாய் எடுத்து இங்கு மன்று ன்று (அ
சென்னல் செழித்துவளர் சென்னை நகரில் வாழும
ஷண்முகவேலன் தமிழ் சீறு இதின்
தன்மையறிந்து பதில் தத்துவ முறைப்படி
தக்கபடி எனக்கு கூறு கூறு (அ)

## விருத்தம்

விடைமாரன் கதைபாட பக்சபையில் வந்திடில்
பற்பல நூல் பார்க்கவேண்டும்
விடையது தகுந்தபடி வினாவிற்கு அளித்திட
விதிப்படி கற்கவேண்டும்
தடைமுறையிவிதினின் சூக்ஷம் நன்குணர்ந்தே யுலகில்
நவின்றிட திறமை வேண்டும்
தடையுடன் இதையுணரா தத்துவ மற்றபேர்
தர்க்கிக்க வருவதாமோ

## லாவணி வேறு மெட்டு

அண்டபுவனமெல்லாம சண்டப்ரசண்டம் போல
அதிர்ந்து வருகுது லண்டோரோ—உங்கள்
வண்டவாளமெல்லாம் ரயில் தண்டவாளமேல் ஓட
உரைப்பேனின்னும் கேள் நீ உஷாரா [அ]
பண்டை புராணங்களை பழித்து மிழித்துமிங்கே
பாடிட கற்றுத்தந்தவர் யாரு—சபாஷ்
கண்டு மிரண்டு எந்த காட்டிலேயிருந்து வந்தீர்
கல்விக்களஞ்சியமே கூறு [அ]
காமனில்லாது போனால் கருவு தரித்திடுமோ
கருத்தை யறிந்து பதில் சொல்லும்—உங்கள்
கோமள வல்லிபருடன் கூடியிக கவினிய
காரத்த செயலிதானு வின்னும் [அ]
அன்ன ஆகாரமின்றி அகிலத்தில் வசிப்பவர்க்கு
அங்கஜனின் காமக்கலை ஏது ஐயா
ஆகாரமில்லாவிடிலே மோகமில்லை காமனில்லை
அண்ணே ஏனின்னும் வாது [அ]
மாரனின் மகிமையால் மைந்தர் பிறப்பதென்றால்
மலட்டிற்கு காரணம் என்ன—உங்கள்
வீரனால் மலடென்றும் வியாதி நீங்கவில்லையே
வித்தியாசமென்ன சொல்லும் மன்னா [அ]

கல்லுக்குள்ளே இருக்கும் கனத்ததேரை தனக்கு
காமனெங்குண்டு அதைக் கூறும்—அது
வல்லாமல் பலஜீவ ஐந்துக்கள் சாதவிக்கு
உற்சத்தியாவதென்று பாரும் (அ)
முப்புரத்தை எரித்த கர்த்தனுகிய புருமன்
முக்தியளிக்கும் தெய்வகாச்சே—இது
கற்பனையல்லகாணும் எப்புராணத்திலுமுண்டு
காணுதிருந்தால் மானம் போச்சே (அ)
அற்புதமுடனே கவி சொற்பொழிவும் ஷண்முகவேல்
நற்றமிழைக்கண்டு மிரளாதே

விருத்தம்

எங்களிடபரமனுல் முத்திபெற்ருேர்
எவ்வளவோ பக்தர்களிவ்வுலகிலுண்டு
உங்களுக்கு சந்தேகமாயிருந்தால்
உரைத்திடுவேன் புராணங்கள் வேணதுண்டு
அங்கஜனை எரிந்த சிவன் அற்பமென்றீர்
அசடான புராணங்களை வைத்துக்கொண்டு
சங்கரனின் பெருமையெல்லாம் உங்களுக்கு
சாற்றிடுவேன் செவி சாய்த்து கேட்பீர் மாதே

(லாவணி அடுக்கு மெட்டு)

வல்லவரான சிவன் பொல்லாத சாபத்தினுல்
வல்லுயிர் மடிந்தவரும் உண்டு
வெகுபேருண்டு—இன்னும்
தொல்லுலகில் பரமனுல் நல்லவரம் பேரு பெற்று
தெய்வீக பதவிபெற்ருேர் உண்டு
புகழ் கொண்டு (வ)
வள்ளாளனுக்கு அன்று பிள்ளையாக பிறந்தார்
வருடா வருடம் கருமம் செய்தார்

தொண்டு செய்தார் கையில்
வில்லேந்தும் வேட நெஞ்சில் கள்ளமில்லாமல் புசித்து
விண்ணுலகில் காஷிதந்து மெய்தார்
அருள் செய்தார் (வ)

## உத்தார்

பூதநாதனின் புகழிப்போது இப்போது—சொல்ல
புத்தக ஏடு இடந்தராது ஏனோ வாது—உங்கள்
சாதனை குப்பைகளை சாதிக்க வேண்டாங்காணும்
சாம்பசிவனிக தொண்டு (வெகு)

## பாட்டு

இனிய மார்க்கண்டனுக்கு என்றும் பதினாறென்று
எமனை எட்டியன்று உரைத்தார்
மனது துடித்தார்—ஒரு
கனிக்காக பிள்ளைகளின் திறமையைக் காணவென்று
கருணாசரன் மனதில் பதித்தார்
கனி (யளித்தார்)
இராவணனின் வரத்தை தானேயழிப்பதற்கு
வானர அனுமானாக பிறந்தாரே
கடலில் பறந்தாரே லங்கை
கோர அரக்கர்களை கொன்று அதம் புரிந்து
கோதண்டனுக்கு துணை இருந்தாரே
தொண்டு புரிந்தாரே

## பாட்டு

ஆகம சாஸ்திரம் பொய்யடா
பொய்யாமா—உங்கள்
அங்கஜனை தெய்வமென்னலாமா
புகழலாமா
யோகபரமனை நீர் தியானமது புரிந்தால்
தியாக பலன்களது உண்டு

பாட்டு

பிட்டுக்கு மண் சுமந்தார் பிரம்பாலடிபட்டார்
பாருமுன் முதுகிலந்த அடையாளம்
செய்யாதே ஜெகஜாலம்—உங்கள்
கட்டுகவிகளெல்லாம் போட்டு மதித்திடுவீர்
விட்டு வெளியில் சொன்னால் அவமானம்
ஏனோ மதியீனம் (வ)
பிள்ளைக்கறியும் சோறும் உள்ளங்களிக்கக் கேட்டு
நல்சிறுதொண்டன் மனம் சோதித்தார்
அவனை வாதித்தார்-பிறகு
நல்லதொரு வேடமவன் பிள்ளை தனை யறுக்க
சொல்லாமல் ஓடியவர் தான் மறைந்தார்
பதவி தனை கொடுத்தார் [வ)

உத்தார்

பிரட்டியுருட்டி பாருங்களேனும்
உண்மைதோணும்— அதை
பெரிதும் ஆராய்ந்து பார்க்கவேணும்
உணரவேணும் தாங்கள்

பாட்டு

அரட்டைத்தனமாய் தாங்கள் கவி உருட்டிப் பாடியபோதும்
அதற்கு அஞ்சிடோம் கண்டு (வெகு
அறுபத்து மூன்று திருவிளையாடல்
அரும் மதுரை யிலன்று
பலரை வென்று—ஈசன்
கரும நெறியுடனே தந்தார் அவர்க்கு வரம்
தயங்கிட வேண்டாமையா இன்னும் (வ)
செந்தமிழையுரைத்தேன் மைந்தன் ஷண்முகவேலன்
ஜெகத்திலெதிர்த்து வந்தாரோ

கேட்பீர் சீரே—இதை
சிந்தைதனிலுணர்ந்து இதை சபை தனக்கு.

தெண்டனிட்டு எழுந்து நடப்பீரே
துயர் விடுப்பீரே (வ)

## எரிந்த கக்ஷி லாவணி முற்றிற்று.

## எரியாத கக்ஷியார் பாடி வரும் கேள்வி விடைவிடை லாவணி விருத்தம்

எவ்வுயிர்க்கும் இன்பத்தை யளிக்கும் தெய்வம்
இகமதிலே பிறப்புரிமை கொடுக்கும் தெய்வம்
செவ்வையுடன் சிவன் தபசையழித்த தெய்வம்
சித்தர்களும் முத்தர்களும் மயங்கும் தெய்வம்
ஒவ்விய தபோபலத்தையழிக்கும் தெய்வம்
ஊர்வசியால் கௌசிகனை கெடுத்த தெய்வம்
இவ்வளவும் செய்யவல்ல எங்கள் தெய்வம்
எழில்மதனை உங்கள் சிவன் எரிக்க போமோ

## லாவணி மெட்டு

சிங்கம் போல் பாய்ந்துவந்து தங்க மெடல் மாட்டி னில்
பங்கப்பட வந்த புலவா
சபாஷ் பாடிவா
சங்கதி கேட்டுவா மதுரை
சங்கப்புலவர் போலே இங்கிர் தமாக
சாற்ற வந்திட்டீர் புலவா
அண்டமதிலே உங்கள் பண்டாரமான சிவன்
அசட்டுதனத்தின் வெளிச்சம்
அதனின் சூக்ஷும்
உரைக்க மோசம்-அவனை

கண்டோர் கேலிபுரிய களித்து செய்தானை | தெண்டாட்டமாய்சுடலை வசம்

## உத்தார்

உங்கள் பரமன் சகவாசம்
சகவாசம் அவன்
சங்கதி எல்லாம் வெளிவேஷம்
வெளிவேஷம் நீங்கள்
அங்கத்திமிர் கொள்ளாமல் இங்ஙனமே யமர்த்து
ஆன்சர் எனக்களித்து வா

## பாட்டு

பொற்கொடி அனுசூயையின் பரமன் மாலையனும் அவனை ஓமென்று | கற்பை கெடுத்திட உங்கள் கூடி நாடி பாடி தேவர்
சிற்றடிகளைப்போல் பிச்சை யென்றார் சன்யாசிகளைக்கண்டு சதியனுசூயை | அற்பர்களிருவர் சென்று முன்னாடி. சாஷ்டாங்கமாய் பணிய மாது
தையலைப் தரணி கண்ட மூவர்களும் சொன்ன வார்த் | போது மீது அதை பெண்பாளிவளைக் கண்டு தையா நீது

## உத்தார்

பரிமாறினலிப்படி தாயே
எங்கள் தாயே அன்னம்
புசித்திடோம் நாங்களறிவாயே
அறிவாயே—நீதான்,
நிர்வாணமாக நின்று நிதானமில்லாத | பரிமாறு மமுதென்றார் புலவா (சபாஷ்)

பாட்டு

சொன்னதைக் கேட்டவுடன் கண்கள் பொறிபறக்க
காந்தாள கோபங் கொண்டாள்
சண்டாளன் னென்றுள்
சபிக்க விண்டாள் — சீச்சீ
துர்மார்க்க பாதகரே சிறுகுழந்தையாய்ப்போக
ஜபித்தேன் ஜபித்தேனென்றுள்
மூர்க்கமுடன் ஜபிக்க மூவரும் குழந்தையாய்
மேதினி தன்னில் தவிழ
கன்னிகை மகிழ
நாரதர் வருக — இந்த
போக்கைகண்டு மூவரின் பத்தியர்களிடம்
வந்து சேதியை யுரைக்க

உத்தார்

செய்திகேட்டு மாதவர்கள் புலம்பி
பெண்கள் புலம்பி — அந்த
சேயிழைமாது தன்னை வணங்கி
அவளை வணங்கி — இப்போ
மேவியே எங்களுக்கு மாங்கல்ய பிச்சைதாரும்
மாதாவே என்றுர் புலவர் (சபாஷ்)

பாட்டு

மூவர் புலம்புவதை சேயிழையாளும்
மனது விகவு மிறங்கு
எழுப்ப துடங்கி
அருகில் நெருங்கி — அவள்
முன்போல் எழுந்திருக்க பொன்மொழியாலே கூற
மூவர் எழுந்தார் வணங்கி
இன்னும் பலவிதமாய் துன்மார்க்கத்தனம் செய்த
ஈசனை தெய்வ மென்றீர்

வணங்கி நின் றீர்
புகழ்ந்து சொன்னீர்.—எங்கள்
மன்மதனைத் தொழுதால் இன்பமனுபவிப்பீர்
இனியேனும் சொல்லை கேட்பீர்

## விருத்தம்

மன்மதனை எரித்தாய் நீங்கள் நம்பி
மாசிதிங்கள் பிறைதனிலே மகிழ்வாய் கூறி
உன்னதமாய் கம்பமொன்று நாட்டி வைத்து
உகந்ததற்கு வைக்கோலின் பிரியைசுற்றி
தன்மையுடன் மொச்சை பவல் கடலைவைத்து
தாலியறுக்கும் முண்டைகள் போல் மாரடித்து
உன்னதமாய் விங்கமொன்று அதன்கீழ் வைத்து
உள்ளபடி தொளுந்துவேன் உரைப்பீர் மாதே

(கா......கா......பராசக்தி மெட்டு)

### பல்லவி

கேள்...கேள்...கேள்

### அநுபல்லவி

வில்லாளியான நல்மாரன் தன்னை
கொன்றதாகவே நீங்க—எந்த
காலமும் தேம்பி புலம்ப-மற்றும்
தோல்மாசி மாதம் எல்லோருங்கூடி
கொம்பொன்று நாட்டிரீங்க அதற்கு வைக்கோல்
பிரிதன்னை சுத்துரீங்க—ஏங்க கேள்

### சரணங்கள்

நாட்டையும் கொட்டை வைக்குரிங்க—அங்கே
நட்ட கம்பத்தில் கொடி குட்டுரீங்க மொச்சை

கொட்டை அவல்கடலை ஏதுங்க இன்னும்
பக்கத்தில் லிங்கம் ஒன்று தானுங்க-தீயை
காட்டிகொளுத்தியே கதறிப்புலம்புநீர்
வாட்டமுடனே அது ஏனுங்க—பதில் கூறுங்க (கேள்)

சம்பத்தை சுட்டதால் கீழேயிருக்கும் லிங்கம்
கனலா எரிந்துமது போகுதே
எரிந்தது பரமனு மடிந்தது மாரனு
இதனை நினைக்க வெட்கமாகுதே

வம்பு வளர்த்த நீங்கள்—இந்த
வையகத்தில் ஏனோ பிறந்திட்டீங்க
விபர்த்தை சொல்லுங்க ஓடாமல் நில்லுங்க
வெற்றிக்கொடி நாட்டுங்க—பதில் தேடுங்க (கேள்)

நவரத்தின ஒப்பாரி

கேள்வி லாவணி முற்றிற்று.

சுபம்!

சீனிவாச அச்சகம், சூளை, சென்னை-7

## ஹிப்நாடிஸ மெஸ்மெரிசமெனும் வசிய மனோவசிய சாஸ்திரம்

இந்த நூலில் மனோவசியத்தைப் பற்றியும் அதை அப்யசிக்க வேண்டிய வழிகளைப் பற்றியும் எழுதப் பட்டிருப்பதுடன் உடலைவிட்டு பிறர் கண்களுக்குத் தெரியாமல் உலாவும் வழியைப்பற்றியும் இறந்த பெரியோர்களுடன் எப்படி பேசுதுவ என்பதைப்பற்றியும் நன்கு எழுதப்பட்டிருக்கின்றன, சபைதனில் விரலைக்காட்டி மற்றவர்களை தூங்கவைக்கும் வழிகளைப் பற்றியும் மனோவசிய சக்தியினால் நாம் உலகிற்கு செய்ய வேண்டிய நன்மை, செல்வாக்குடன் இருக்க விரும்புகின்றவர்களும் இந்நூல் அமிர்தம் போன்றதாகும். (சித்திரப் படங்களுடன் அடங்கியது)

இதன் விலை ரூ. 4

## தேவேந்திரநாத் மாயாஜால விநோதம்

வாரிசூழுலகின் சண்வசிக்குமா ஆரிய நண்பர்காள் இங்கிலீஸ் கைபுரட்டு வித்தைகள், மலையாள வித்தைகள் பீதம்பர வித்தைகள் பிரின்சி வித்தைகள் மூலிகை சல்லிய வித்தைகள் கண்கட்டு வித்தைகள் அஸ்டமாசித்திகள் செய்யலாம் வசியவகைகள் செய்யலாம் மணலைக்கிளரி விநாயகர் காட்டலாம் மகேந்திரஜாலம்செய்யலாம்; இந்திரஜாலம்,கோகர்ண வித்தை பாதாள அஞ்சனம் செய்தல்! பச்சைபாம்பு மேய்தல், பேயாட்டுதல், மரஞ்செடி முளைத்தல் மோடிவைக்கும் வித்தை இதைபோன்ற அற்புதஜாலங்கள் 2000 சேர்ந்தவை செழுமணவைசித்திரக்கவி தேவேந்திரநாத்பண்டிதர் அவர்கள் தான் சொந்தமாய் செய்து காண்பித்தஜாலங்களை இதில் தெளிவுற காணலாம்.

இதன்விலை ரு 4

## கொக்கோகம் அல்லது இரதி மன்மதன் திருவிளையாடல்

மர்ம விஷயங்கள் பச்சையாக விளக்கப்பட்டுள்ள கொக்கோக சாஸ்திரம் இதில் காம உற்பத்தி ஆண் பெண் சரீர அமைப்பு நான்கு வகை பெண்களுடைய லக்ஷணம் சம்போகம் செய்யவேண்டியமுறை அமுர்தநிலை ஆலிங்கன வகைகள், பெண்களை வசீகரப் படுத்தும் மார்க்கம் மர்மமான லீலா சாஸ்திரத்துக்குறிய படமும் இரதி மன்மதனுடைய உருவப் படமும் மதன சக்கரப் படமும் [பூஜாவிதானத்தோடு] அமிர்தநிலை சக்கரம் ஸ்ரீ பஞ்சாக்ஷர மனோவசீகர சக்கரம் முதலியவை அடங்கியது

விலை ரூ. 5

# புதிய புத்தக விளம்பரம்

—(0)—

| | |
|---|---|
| தேவேந்திரநாத் பண்டிதர் மனோவசிய சாஸ்திரம் | 5 00 |
| தேவேந்திரநாத் மாயாஜால விநோதம் | 5 00 |
| பிழைக்கும் வழி என்னும் அனுபவ கைத்தொழில் | 5 00 |
| மலையாள மாந்திரீக ரத்தினம் | 3 00 |
| சர்வ சொப்பன பலன் என்னும் கனவு சாஸ்திரம் | 4 00 |
| மலையாள மாந்திரீக போதனம் | 2 00 |
| வராகிமாலை சக்கரத்துடன் | 2 50 |
| கைத்தொழில் ரகசியம் | 2 00 |
| கொக்கோகம் இரதிமன்மதன் திருவிளையாடல் | 6 00 |
| சதிபதிகளின்மாமம் (அல்லது) மானிடரகசியசாஸ்திரம் | 4 00 |
| கொக்கோக நுட்பம் | 3 50 |
| கொக்கோக ரகசியம் | 3 00 |
| சோதிட ஆசான் 4-பாக கட்டடம் | 8 00 |
| அனுபவ சுந்தர சேகரம் 2-பாக கட்டடம் | 6 00 |
| ஆருட கொத்து | 8 00 |
| சோதிட மர்மம் | 6 00 |
| குருசிஷ்ய சம்வாத ஹஸ்த ரேகை | 4 00 |
| மணிகண்ட கேரள சோதிடம் | 5 00 |
| காக்கையர் சிற்பம் | 4 00 |
| சோதிட அரிச்சுவடி (நான்கு பாகங்கள்) | 4 00 |
| ஆதி சாமுத்திரிகம் என்னும் அவயலக்ஷண சாஸ்திரம் | 2 00 |
| அகஸ்தியர் ஆருடம் 2-பாக கட்டடம் | 3 00 |
| சித்த வைத்திய திரட்டு | 6 00 |
| நம் நாட்டு வைத்தியம் | 6 00 |
| தமிழ் நாட்டு இலகு வைத்தியம் | 3 00 |
| தமிழ் நாட்டு பச்சிலை வைத்தியம் | 2 00 |
| அறுசக்தி மருந்துகள் | 2 00 |
| அகஸ்தியர் வைத்திய ரத்தின சுருக்கம் (மூ-உ) | 3 00 |
| அகஸ்தியர் பரிபூரணம் 400 (மூலமும்-உரையும்) | 3 00 |
| நவீன பாக சாஸ்திரம் | 1 50 |
| இங்கிலீஷ் தமிழ் அரிச்சுவடி | 2 00 |
| கமலமுனிவர் அருளிய முககால ரேகை சாஸ்திரம் | 2 00 |
| சோதிட கன்ம காண்டம் | 2 00 |
| துலாகாவேரி புராணம் | 3 00 |
| அருணாசல புராணம் | 3 00 |

ஷண்முகானந்த புத்தகசாலை,
48, நைனியப்ப நாய்க்கன் தெரு,
பார்க் டவுன், சென்னை 600003.


ரதி மதன
K.A. மதுரை முதலியார்
ஷண்முகானந்த புத்தகசாலை

உ

ஸ்ரீ ஜோதிமயம்

இரதி மதன நவீன

# நவரத்தின ஒப்பாரி



இவை

சென்னை, V. A. T. ராஜனின்

மாணவரும் குமாரருமாகிய

V. T இராஜேந்திரன் அவர்களால்

மிகத்தெளிவுடன் எழுதப்பெற்றதை

**K. A. மதுரை முதலியார் அவர்களது**

ஸ்ரீனிவாச அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது

காபிரைட்) (விலை ரூ. 1[illegible]

# ரிஜிஸ்டர் அறிக்கை:-

இதனால் உலகில் பலபுத்தகவியாபாரிகளுக்கும், மற்றும் கல்வியிற் சிறந்த கவிவாணர்களுக்கும் அடியிற்கண்டுள்ள யான் தெரிவித்துக்கொள்ளுவது யாதெனில், சென்னை V. T. ராஜேந்திரன் என்பவரால்எழுதப் பெற்றஇரதிமதன ஒப்பாரி என்னும் நவீன நவரத்தின் ஒப்பாரியை அடியிற் கண்டுள்ள யான் 1866-ம்வருஷத்திய 20-வது ஆக்ட், 20-வது பிரிவு, 6-வது விதியின் பிரகாரம், கனம் தங்கிய கவர்மெண்டில் (ரிஜிஸடர் காபிரைட்) செய்யப் பெற்றிருப்பதால் இதை பதிப்பிக்கவோ பிரட்டி எழுதவோ முயற்சிப்பரேல் இதனாலுண்டாகும் சகல நஷ்டங்களுக்கும் பாத்திரராவார்கள் என்பதைஇதனால் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

**கே. ஏ. மதுரை முதலியார்**

ஷண்முகானந்த புத்தகசாலை,

பார்க்டவுன், சென்னை-3.

ஜோதிமயம்.

இரதி மதன நவீன

# நவரத்தின ஒப்பாரி

## விநாயகர் காப்பு வெண்பா.

சிற்பரன் தபசிருக்க சிலைமாரன் கணை தூவ
நெற்றிவிழியால் மதனும்—பற்றியதை
ஒப்பாரியாக ஓதுதற்கு ஐங்கரனே
தப்பா தருளெனக்குத் தா.

## (ஐங்கரன் வணக்கம்.)

இராகம் வெண்செந்துரை

ஆதிகையிலாயமதி — லம்பிகை யருகமர்த்தி
பாதிமதியைப் பொருத்தி — பாம்பாபரண முடுத்தி
ஆழிதுயின் றோனயனும் — அருகினிலே நின்றிடவும்
வாழியென் றமரரெல்லாம் — வாயார வாழ்த்திடவும்
ஆரவார சூலமுடன் — கபாலமும் நல்மான்மழுவும்
நாரதர் வீணைமீட்டவும் — நந்தி நம்பனமர்ந்திடவும்
பொல்லாத சூரபத்மன் — போக்கிரியா யவதரித்து
சொல்லொணு துன்பமதை — சூரன் செய்தானுர்கரித்து
ஆக்ரமித்து சூரபத்மன் — அமரர்களை கொடுமைசெய்தான்
சீக்கிரமாய் தேவரெல்லாம் — ஜெகத்பரனருகில்வந்தார்

ஆண்டவனமரர் குறை அறிந்தே மனம்பதற
தாண்டவனும் நெற்றிவிழி தன்னை திறந்தார் சிதற
ஆறுபொறியவ்வழியில் அக்கினிபோலே புவியில்
சீரியே சரவணையில் சிதறிவிழ அப்பொறியில்

ஆறு குழந்தை யந்த அரும்பொய்கை தனில்நீந்த
சீருடனதை யறிந்த சத்திபாதத்தைப் பணிந்தே
ஆனந்தங்கொண்டோடிவந்து ஆறுமைந்தரை யணைத்து
தோணவே வாரியெடுக்க தேகமொன்றுயாகக் கண்டு

அரன் விழியால் சரவணையில் அவதரித்த மைந்தருக்கு
சரவண பவனெனவே ஷண்முகர்க்கு பெயரமைத்து
ஆராட்டி சீராட்டி அம்பிகையாள் பாலூட்டி
சோராதமுதூட்டி வளர்த்தனரே பாராட்டி

அமுதவல்லி யெனும்மாது அமரேசனு மப்பொழுது
கமழ்தெய்வானையாய்ப் பிறந்து கார்த்திகேயனை மணந்து
அசுரரைக் கருவறுக்க அம்பிகையாள் வேல்கொடுக்க
நசுக்கியே உயிர்மடிக்க நான்மறைகளும் துதிக்க

அமரர் குறைபோக்கி அசுரனை மயிலாக்கி
கமழும் கழுகா ஜலத்தில் கந்த னமர்வாகி
அழகுவேல் கைஜொலிக்க அறுமுகவன் வீற்றிருக்க
தொழுதுவர்னமயில் நடிக்க துந்துமி நாரதர் வணங்க

அயன்மகன் நாரதரும் அவன் வந்த செய்தியையும்
நயமுடன் வள்ளியென்னும் நங்கைதனைக்கண்டதுவும்
அதிருபலாவண்யமும் அருங்கிளியின் வரலாறும்
கதிரேசனு குறைக்க கானவேடன்போல் நடிக்க

ஆரணங்கு வள்ளிதனை அணுகியே ஓர்மானை
யாரடி பிடித்தாரதனை என்று அதட்டியே காதலுடனே
அரிவை வள்ளி மாதுடனே ஆசைவார்த்தை பேசிடவே
பரிவேடர் வந்திடவே முருகன் வேங்கைமரமாகிடவே

அண்ணன்மார் சென்றிடவே அரிவையங்கு நின்றிடவே
பண்டார கிழவனைப்போல் பரிவேடர்முன்வரவே
ஆண்டிதனைக்கண்டவுடன் அடிபணிந்தார்வேடுவரும்
வேண்டியே தன்தங்கையிடம் விடக்கண்டார் ஜங்கமரும்

அவள் கொடுத்ததேன் தினையை ஆண்டியவர் தின்றிடவே
குவளையி லடைத்தவரும் குக்கலிட்டு கீழ்விழவே
அடவியில் ஜலமருந்த அரிவைவள்ளி கைப்பிடித்தே
தடாகத்தில் தாகம்தணிந்தே அந்தகையலே கேலிபுரிந்தே

அண்ணலே யுனை நினைக்கநீ யானையைப்போல்அங்குநிற்க
கண்ணீர்விட்டு கானவள்ளி கதறி முருகனை யணைக்க
அபயமென்ற வள்ளியரை ஆதரித்தான் வேல்முருகன்
உதவிசெய்த ஐங்கரனே உவந்து வரந்தாஜெகனே

அங்கஜனை பரமசிவன் அனல்கொண்டெரித்ததுவும்
மங்கைரதி வருந்தியதும் மாரனுயிர் மீண்டதுவும்
அருள்மாசி பிறைதனிலே அணங்கனைக் கொண்டாடுவதும்
பொருந்தவே இக்கதையுரைக்க பாலகனை காருமையா

ஆதிகுருதேவர் ஐங்கரனே நீ வாவா
ஜோதிச்சுடரொளியே சுகுணக்கதிர்மணியே
பாலைக்கொண்டு பல்துலக்கி ஓலைக்கொண்டு நாவழித்து
வேலை தவருமல் விக்கினரே யுனைநினைந்து

முழுகி மயிராற்றி முன்குடுமி பின்பொட்டு
வழுவின்றி யான்முழுகி வெந்நீரதை குழைத்து
அரஹரா என்று அணியலுற்றேன் வெந்நீரை
குறைதீர வேயுனக்கு குமிளியில் ஜலமெடுத்து

தோட்டமது திறந்து தொன்னைதைத்து பூவெடுத்து
தேட்டமுடன் மாலைகட்டி தெரிசிக்கவுன் மேல்தொடுத்து
அப்பமதிரசமும் அவல்கடலை தேங்காயும்
முப்பழமுந்தனுக்கு மூஷிகனே யளிப்பேன்

சிவசிவாவென்றுவுனை தெண்டனிட்டேன் கண்பாரும்
அரஹரா என்றுயிப்போ அணிந்தேனுன் திருப்பாதம்
மூஷிக வாகனே முக்கண்ணன் புத்திரனே
காட்சிதரும் காரணனே கற்பக விநாயகனே

உந்தனருளாலே உலகில் சிறுபாலகன்யான்
விந்தையுடன் ஒப்பாரி வேல்மாரன் மேல்பாட
இசைகள் தவருமல் எதுகைமோனைமாராமல்
வசைச்சொற்கள் வாராமல் வந்தெனக் கருள்புரிவாய்

## கலைமகள் வணக்க ஒப்பாரி மெட்டு

வீணையை கரமேந்தும் வேதாந்த வேதியரே
கானகர கீதமதை கரமேந்தும் தாயாரே
நான்முகனின் தேவியரே நல்லகலை வாணியரே
யானிம் மதனின்கவியை அன்னையுன் னருளாலே
பாடவரந் தாருமம்மா பாவணர்கள் தன்சபையில்
நீடவே துணையிருப்பாய் நித்ய கல்யாணியரே
நான் பாடவகையறியேன் பாட்டின் பயனறியேன்
உனைதேட வகைதெரியேன் சிறுகுழந்தைபாலன் யான்
காமன் கதைபாட கல்விக்கரசியரே
தாமதம் செய்யாமல் தாயே துணைவருவாய்

## குரு வணக்க ஒப்பாரி மெட்டு

சகலகலை யேநிதிவைத்த சற்குருவே தஞ்சமையா
பலகலையும் ஓதிவைத்த பக்ஷமுள்ள என்குருவே
ஓரெழுத்தை ஈரெழுத்தாய் ஓதிவைத்த என்குருவே
பத்தெழுத்தையோரெழித்தாய் பதியவைத்தஎன்குருவே
யாரை மறந்தாலும் தாயை மறப்பதில்லை
தாயை மனதில் வைத்தேன் தந்தையை நெஞ்சில்பதித்தேன்
சரபக் கவிபாடும் தன்மையுள்ள என்குருவே
உரமிகுந்த வேல்முருகன் வரக்கவியை பெற்றவரே
வி. ஏ. தியாகராஜனெனும் வித்தகனே என்குருவே
நீயோதிவைத்த கவி நிகழ்த்திடவே அருள்தருவாய்

## தக்கன் வரலாறு அவன் தவத்தின் மகிமையும் ஒப்பாரி மெட்டு

திருமூர்த்தி மூவரிலே திசைமுக பிரமனவன்
தருமநெறியுடனே சத்யலோகம் ஆண்டுவர
பிரம்மனிட வலது பாதமதிலேபிறந்த
வரத்தில் மிகுந்ததொரு வல்லவனும் தக்கனவன்

கரமூன்றி தலைகீழாய் கானகத்தில் ஓர்யுகமாய்
பரமசிவனைநோக்கி பாரதவம் செய்யலுற்றான்
தக்கன் தபத்திற்கிரங்கி சாம்பசிவ மூர்த்தியவர்
அக்கணமருள் புரிந்தே அவனருகில் வந்துநின்று
ஏதுவரம் வேண்டியிங்கு இணங்கி தவம் புரிந்தாய்
ஓதுவாய் பக்தனேநீ உண்மையதனை தெளிவாய்
என்று ஈசனவர்கேட்க இயம்புவான் தக்கனவன்
ஆசையுற்றேனையாவோர் அதிசயத்தை என்மனதில்
உலக முழுவதையும் நான் ஒருவனே ஆளவேண்டும்
துலக்கமுடன்தேவரெல்லாம் எனக்குதொண்டுபுரியவேணும்
எதிர்த்தவரை மாய்க்கவேணும் எதிரின்றிவாழவேண்டும்
சதி என்னசெய்தாலும் நான் சாகாதிருக்கவேண்டும்
உன் பக்கத்தி லமர்ந்திருக்கும் பராசக்தி யெந்தனுக்கு
புத்திரியாய் பிறக்க புரிவீர் அருளெனக்கு
சத்தியந்தமாதுதன்னை சாமி நீர் பிராமணர்போல்
சித்தங்களித்துவந்து செய்வீர் விவாகமன்றேல்
மகேஸ்வரா நீரெனக்கு மருமகனாகவேண்டும்
நிகரில்லா எந்தன்புகழ் உலகில் நீடித்திருக்கவேணும்
என்று தக்கனுரைக்க ஈசனிதை கேட்டு
நன்றென்று அப்படியே நாதன் வரமளித்தார்
வரம்பெற்ற தக்கனவன் வணங்கி பரமேஸ்வரனை
குறைகளெல்லாம் தீர்ந்ததென்று கெம்பீரன் நகரடைந்தான்

(பராசக்தியானவள் தக்கனுடைய யாக குண்டத்தில் தக்கனுக்கு மகளாகப் பிறந்து தாக்ஷாயணியென திருநாமம் புனைந்து வளர்ந்து வருதல்)

## ஒப்பாரி

ஆதிபரமசிவன் அருகிருக்கும் அம்பிகையை
சோதி சொருபனவர் சுந்தரமுடனழைத்து
கோதிலா மங்கையரே கோதிலான் தங்கையரே
நீதியாய் தக்கனுக்கு நானளித்த வரப்படியே

அந்த மன்னனுக்கு மகளாய் மாதே பிறப்பாயடி
என்னுடைய மொழியை எதிர்த்து கூறவேண்டாமடி
கோதில்லாமங்கையரே அங்கே கன்னியாய் நீபிறந்தால்
வேதியர் ரூபத்துடன் விவாகமுனை நான்புரிவேன்
சீக்கிரம் செல்வாயடி சேயிழையே பார்வதியே
யோக்கியமாக தக்கன் யாகாக்கினி தனக்கே
ஈசனுரை கேட்ட ரேணுகையாளப்போது
வாசமுள்ள நாதன்மொழி வழுவாமல்வந்தடைந்தாள்
மகளையடையவென்று மாவீர தக்கனவன்
இகமேலவன் மனைவி வேதவள்ளி மாதவளும்
யாகமது வளர்த்தி அரும்பூசை செய்யலுற்ருர்
ஏகமாய் தேவரெல்லாம் யாகத்தைசுற்றியே யமர்ந்தார்
அந்த சமயத்திலே அம்பிகையாள் ஏது செய்தால்
விந்தையுற அக்கினியில் விகசிரமாய் தோன்றிநின்ருள்
அக்கினியில் வந்துதித்த ஆரணங்கை கண்டவுடன்
மிக்க மகிழ்வடைந்தான் மீசுரமாய்மன்னனவன்
தக்ஷனிடயாகத்திலே தையலுதித்ததினுல்
தாக்ஷாயணி யெனவே திருநாமம் சூட்டலுற்ரும்
அதிக செல்வாக்குடனே அம்பிகையாள் வளர்ந்திடவும்
தாதிகளும் தோழிகளும் தகுந்தபணி செய்திடவும்
வாலை பருவமென்னும் வயது பனிரெண்டாச்சு
மாலை சூடும் நேரம் மங்கையர்க் குறித்தாச்சு

தக்கனிடம் வளர்ந்து வரும் தாக்ஷாயணியை
பரமசிவன் வேதியர் ரூபத்துடன் வந்து
மாங்கல்யம் தரித்து மாயமாய் சொல்லும் ஒப்பாரி

வெண்நிலாவைச் சூடும் வேதாந்தனிதை யறிந்தே
கன்னிகைதாக்ஷாயணியை கல்யாணம் செய்வதென்றே
எண்ணி மனதினிலே ஈசனெழுந்தாரே
தன்னுடைய ரூபத்தை தான் மாற்ற துணிந்தாரே
வாவென்றழைத்தாராம் வருகுது மறுவேடம்
மாமனுரை யோதுமொரு மலையவர் போலாக
கைதனிலே பஞ்சாங்கம் கடவுள் தர்பை பிடித்தாச்
செய்தவம் பலித்ததென்று சீக்கிரமாய்வாராராம்

தக்ஷன் அரன்மனைக்கு
தாக்ஷாயணியருகே
தானொருவர் காணாமல்
தற்பரனும் வந்து நின்றார்

வேதியரை கண்டவுடன்
கேதில்லா மனதுடனே
வேதாந்த ரூபியவள்
கும்பிட்டு வணங்கலுற்றாள்

வணங்கின மாதரசை
பிணக்கமாய் மாதவனும்
வாழ்த்தினார் ஈஸ்வரனும்
மூர்ச்சித்து கீழ்விழவும்

இதுதான் சமயமென்று
புதுமையுடன் கழுத்தில்
எடுத்தாரே மாங்கல்யம்
பூதனுதனும் தரித்தார்

மாங்கல்யம் தரித்து
தேங்குயில் கன்னிகையும்
மறைந்தார் மகேஸ்வரனும்
திடுக்கிட்டு விழிக்கலானாள்

கழுத்தினிலே மாங்கல்யம்
வழுத்திடவே தந்தையரை
கண்டாள் தாக்ஷாயணியும்
வரவழைத்தாள் மாதுமையும்

தக்ஷனவன் வந்தானே
அக்ஷணம் துயரங்கொண்டு
தையலரைக் கண்டானே
அரனை நினைத்தானே

கலங்கிய தக்ஷனுக்கு
இலங்கவே உண்மைதனை
காட்சி தந்து ஈஸ்வரனார்
இயம்ப சந்தோஷமானார்

மனதுகளித்து தக்கன்
தனது மகளைக்கூட்டி
மருமகன் மகேசனுடன்
தயங்கா தனுப்பலுற்றான்

தாக்ஷாயணி தற்பரனும்
அக்ஷணமேயகன்றார்
தக்கன்விடை தன்னை பெற்று
அருள்வெள்ளி மலைதனக்கே

## மதுவேள் உற்பத்தி ஒப்பாரி

மலையை குடையாய் பிடித்த
நிலைகுலைந்து லக்ஷிமியுடன்
மண்ணளந்த மாயவனார்
நிமலன்தனை நோக்கி

பாலன் வரம் பெறவே
காலகாலனவரும்
பரந்தாமன் தவமிருந்தார்
காகுத்தன் தவத்திற் கிறங்கி

சூலமும் கபாலமுடன்
ஆலகாலத்தை யுண்ட
ஸ்யாமளன் எதிர் தோன்றி
அம்பலவாணன் கேட்பார்

யாது குறை கொண்டு
ஓதுவீர் மைத்துனரே
என்னை நினைந்து நின்றீர்
ஒன்றுக்கு மஞ்சாதீர்

பரமன் மொழிகேட்டு
வரமொன்றுபெற்றிடவே
பாரளந்தோன் கூறுகிறார்
வரவழைத்தோமும்மையென்றார்

காதலளிப்பதற்கும் கன்னிகையை மணப்பதற்கும்
ஆதரவில்லாததினல் அகிலமதில் மானிடர்கள்
பிறப்புரிமை இல்லாமல் பரதவித்து மாளுகிருர்
சிறப்புடனே சிற்றின்ப சேர்க்கைக்கு வழி பெறவே

மகனென்று எனக்களித்தால் மாசிலாமணியீசா
மிகவும் பெருமையுண்டு மேதினியில் சர்வேசா

என்றமொழிகேட்டு ஈசன் மனமகிழ்ந்தார்
நன்றென்று மகன் வரமே நாரயணற் களித்தார்

வரம்பெற்று தந்தாரே வாமனனும் லக்ஷிமியும்
ஒருபத்து மாதம் சென்று உலகில் மதன் பிறந்தான்
ஒருவயது இருவயது ஓரிரண்டும் மூன்ருச்சு
பருவம் பதினறு படைமாரனுக்காச்சு

## இரதி உற்பத்தி ஒபபாரி

இமயவ ரசுரர் முதல் இருந்து திருப்பாற்கடலில்
அமிர்தங் கடைந்திடவே ஆவல்கொண்டநன்னளில்

இன்பமாய் மந்த்ர கிரியை இவர்கள் ஒரு மத்தாக்கி
அண்டம் புகழ் சேடனையே அணைக்கும் கயிராக்கி

இராக்கதர் ஒரு புறமும் இமையவர் ஒருபுறமும்
தாராளமாயமிர்தம் தான்கடைய வச்சமயம்

இளம்பருவமான மங்கை அலைகடலிலெழுந்திருக்க
கலக்கமுற்று தேவரெல்லாம் கண்டு மனந்திகைக்க

இரதியென திருநாமம் இசைந்தளித்து மங்கையரை
பரமபதி தன்மகளாய் பக்ஷமாய் வளர்த்தனரே

## தேவர்கள் மதன் ரதிக்கு திருமணம் நடத்த யோசித்தல் ஒப்பாரி

கல்வி தொழில்தனையே கலைமாரனுமியற்ற
நிலவு மமரர்களும் நினைந்து பரமனிடம்

இலக்ஷிமியின் சமேதன் எம்பெருமான் மைந்தன் மதன்
திலகம்போல் வடிவுடையோன்திடகாத்திரம்படைத்தோன்.

இருவருக்கும் பொருத்தம் இருந்திடவே திருத்தம்
கருத்துடனவர் நிமித்தம்கணித்தனரேநாள்முகூர்த்தம்
இனிதாய் மன்மதவாண்டு இராசியோ மீனமென்று
கனிவாயாடி திங்கள் கண்டு காலைஏழரைநாழியென்று
இன்பமாய் குருவாரம் இவர்கள முகூர்த்தம் நேரம்
கண்மூன் றுடையோனும் காகுத்தன் தேவர்களும்
இசைந்து இவர் பந்தலினை இணைக்க விஸ்வகர்மாவை
திசைபுகழ் வலங்கரிக்க சீக்கிரம் மழைத்தவரை

## (மதன்ரதி மணப்பந்தலின் சிறப்பு ஒப்பாரி)

உம்பர்புகழ் பைங்கிளியாள் உயிர் ஞான செல்வதியாள்
கும்பமுலை ரதியாள் கோபாலன்மருமகியாள்
உத்தமியாள் ரதிக்கும் சித்தஜ வேள் துரைக்கும்
நித்திய மங்களமாய் நிகழ்த்தி பந்தலழகும்
உச்சித கம்பம் நாட்டி உகந்த கலசம் பூட்டி
கச்சித கொடியேற்றி கனவிருந்து டால்மாட்டி
உத்ராக்ஷ மாலைகளால் உயர்ந்ததொரு பந்தலின்மேல்
பத்ராக்ஷிகோர்வைமிட்டார் பக்கமெல்லாம் சுங்குவிட்டார்
ஒவ்வொருகம்பத்திற்கும் ஒழுங்கொழுங்காய்பதுமைநிற்கும்
வெவ்வேருய் வெளிப்புரத்தில் வார்படகேட்டிருக்கும்
வாழை கமுகு குலையாம் வாகான தென்னங்குலையாம்
மாழைமணி மண்டபத்தில் மற்றபுறம்
உள்பறம் விதுமைகளால் உயர்லஸ்தர் குலோப்பக்கலாம்
கல்லிழைத்த கோரட்ஸ்களாம் கனகபொம்மைகற்சேரியாம்
உக்கமிட்டு ஊஞ்சலாடும் வானம்பாடி புல்புல்களும்
சொக்கிட நடனமிடும் ஜோடிபுரு நாட்டமிடும்
உரிக்கட்டும் தூக்கனத்தான் வரிக்குருவிமைனுவாம்
கரிச்சிட்டு கவுதாரி சகனத்தில் வாழ்பயிரி
உயர்தெரு பாண்டுகளாம் ஓலமிடும் கிளார்நெட்டுவாம்
நயமான நாகசுரம் நாகரீக புளுட்சாரம்
உகந்ததம்பூர் மோர்சிங் கடம் வீணைபுல்புல்தாராதிடம்
அகமகிழ் சுரவீணை அமரர்கள் மிகசேனை

உலகளந்தோன் மகனை யலங்கரித்தாரே மதனை
கலக்கமின்றி பந்தலிலே கம்பீரமாய் அமர்ந்திடவே
உல்லாச ரதியை கூட்டி உத்தமிமார் முழுக்காட்டி
மல்லால் கூந்தல் துவட்டி மயிலெண்ணை தான்தடவி
உலர்த்தியே கூந்தலதை உத்தமிமார்சிக்கருத்து
நலமிருக்க ஜடையுமிட்டு நாகரீகமலர்சூட்டி
உலகம் விலைமதிக்கும் ருத்ராக்ஷ சேலைகட்டி
கலக்கமின்றி மையுமிட்டு கர்னட்பூ கொப்புமிட்டு
ஒட்டியாணம் பாடகமாம் உகந்தமுத்து சரப்பளியாம்
மெட்டெடன பொட்டுகளாம் மோதிரம் காப்பு வளையல்
உச்சியில்லே மயிர்மாட்டி வைரக்கம்மல் காதில்பூட்டி
கச்சித ஜிமிக்கி சூட்டி காலில் செயின் கொலுசுமாட்டி
உத்தமியை அலங்கரித்து உயர்ந்த திலகமிட்டு
நெற்றியிலே கட்டிகட்டி நீலவர்ண சாந்துமிட்டு
உமையவளும் லக்ஷ்மியும் உகந்த கலைவாணியரும்
கமழுந்தாய்மாமன் கண்ணன் கன்னியரையழைத்து வந்தார்
அப்போ வேளை தவறாமல் விருது மழுங்காமல்
நாள் முகூர்த்தப்படியே நாராயணன் மருமகட்கு
உத்தம குணமாரன் உலகோர் புகழ்தீரன்
பத்தினிரதியினை தான் பதிமாலையே தரித்தான்
உம்பர்கள் வாழ்ந்திடவும் உகந்தாசி கூறிடவும்
அம்பிகை சமேதனுடன் அரியயனும் வாழ்ந்திடவும்
உயர்வுடனே சேஷையிட்டார் உற்றபந்து மொய்யுமிட்டார்
நயமுடன் விருந்தருந்தி நடந்தார் விடுதி
ஊக்கமுடன் மாரன் உத்தமி ரதியுடனே
ஆரோக்கிய நகர்தனிலே அரசுரிமை செய்தனனே

## தற்பரனின் மாமனுரான தக்கன் ஒருநாள் தன் மகளையும் மருமகனையும் பார்த்து போக வெள்ளியங்கிரிக்கு வருகிறன் ஒப்பாரி மெட்டு

தபமகிமைச் சிறந்த தக்கனவனும் ஒருநாள்
உபசரிப்பாய் மருமகனையும் உத்தமி தன் புத்ரியையும்

காணவென நினைந்து கடுகநடந்தானே
வேணதூரம் தாண்டி வேகமாய் வந்தானே
ஆனைபரி சேனையுடன் ஆர்ப்பாட்டமாக வந்தான்
மானை கரமேந்தும் மகேஸ்வரனுனவர்தான்
கஞ்சா வெறியன் கனவெறியன் மாயாண்டி
அவர் மிஞ்சியமயக்கத்தினுல் மயங்கியமர்ந்திருந்தார்
மாமனுன தக்கனவன் மாசபைக்கு வந்ததனை
சோமசுந்தரன் காணவில்லை சூரனறிந்தேயிதனை
மதியாதமர்ந்திருக்கும் மருமகனைக் கண்டானே
குதித்தெழும்பி தக்கனவன் கண்கள் சிவந்தானே
கண்கள் சிவந்தானே காந்தாளம் கொண்டானே
எண்ணம் பலகொண்டு எரிபறந்து நின்ருனே
கடவுளெனும் பெயரை ஓடபடவனின் கொண்டதினுல்
அடமாய் நமைமதியா திருக்க மனம் துணிந்தான்
கர்வமொழியவேணும் நம்மை கண்டாலே மதிக்கவேணும்
தற்பரனுமிவனும் நமக்கு தாழ்ந்தவனுக வேணும்
என்றுமே கோபமுடன் ஏகினுன் தக்கனவன்
பின்னமே புரியவென்று பாவியாகம் செய்யலுற்ருன்

## தக்கன் யாகம் செய்வதை கேள்வியுற்ற தாக்ஷாயணி தனது நாதனிடம் விடைபெற்றுச் செல்லும் ஒப்பாரி

யாகக்குழியொன்று அகலமாய் வெட்ட செய்தான்
நாகலோகத்தாரும் நன்மதியும் சூரியரும்
பதினெரு ருத்திரரும் பரமன் விஷ்ணு தேவர்களும்
அதிமதுர லக்ஷிமியும் அஷ்டதிக்கு பாலகரும்
கின்னரர் கிம்புருடர் கருட காந்தர்வருடன்
எண்ணில்லா பேர்குழ யாகமதை செய்யலுற்ருன்
தந்தை செய்யும் யாகமதை தாக்ஷாயணி கேள்வியுற்று
அந்தமுள்ள நாதனெதிர் அம்பிகையாள் வந்துநின்று
பெற்றெடுத்த எந்தன்பிதா விற்பனரின் யாகமதை
இக்ஷணமே கண்டுவர எனக்கு விடை தாருமையா

கன்னிமொழி கேட்டசிவன் கலகலவென்று நகைத்து
அன்னம்போல் அருகிருக்கும்அறிவையர்க்கு கூறுகிறார்
என்னை ஜெயிப்பதற்கும் எனக்கு மேலா வதற்கும்
உன் தந்தை யாகமதை ஊக்கமுடனேயியற்ற
அன்னமேநீ அங்கு சென்றால் அவமதித்து பேசிடுவான்
நன்றல்ல செல்லுவது நாயகியே இங்கிருப்பாய்
ஈசனுறை மொழிக்கு இணங்காமல் ஈஸ்வரியாள்
அவசியம் போகவேணும் ஐயனே என்றுரைத்தாள்
அப்படியானால் பெண்ணே அரிவையரே சென்றிடுவாய்
தப்பிதம் நேர்ந்ததானால் முகம் தன்னில் விழிக்காதே
அவமானப்பட்டு இங்கு ஆரணங்கே வாராதே
கவனத்தில் வைத்து இதை கடுகவே செல்மாதே

பிறகு தாக்ஷாயணி பரமனிடம் விடைபெற்று
தக்கனிடம்வர. தக்கன் மகளை தூஷித்து யேசவும்
உடனே அவர் தனது சரீரத்தை யாகத்தில் உதறி
விட்டு பருவதராஜனின் மகளாக ஜெனிக்கிறாள்
தக்கன், பரமனால் உண்டாக்கப்பட்ட
வீரபத்திரரால் மடிக்கப்படுகிறான்
பரமன் பிறகு நிஷ்டையில் அமர்ந்து விடவும். சாம்ப
சிவன் செய்ததவத்தின் மகிமையானது தேவர்களுக்
கெல்லாம் அனல் கொண்டு வீச அத்தபசை
யழிப்பதற்கு இந்திரன் மதனுக்கு
அழைப்போலை அனுப்பிய ஒப்பாரி

ஏந்திழை பெண்ணேரதியே எம்பெருமான் மருமகனே
காந்த வதனியரே கனமுள்ள மாதரசே
எந்தனுக்கு இந்திரனார் இணக்கமுடனனுப்பியதோர்
செந்தமிழ் வாசகத்தை செப்பிடுவேன் கேளுமதை
எழிலுள்ள தேவர்கட்கு இடையூறு நேர்ந்ததற்கு
பழிவத்து சேர்ந்துவிடும் பாதுகாக்க விடையளியும்

ஏகம்பன் உனது தந்தை இருந்திடுமோர்பதத்தை
தோகையை கலைக்காவிடில் தொந்திரவு நேரும்டி
எல்லோர்க்கு வல்லவனடி இறையவர்க்கரசனடி அவனுக்கு
பொல்லாங்கு நேராமல் போய்பார்த்து,வாரேனடி
ஈசன் தபசழித்து இடையூரை நானொழித்து
ஆசை விசுவாசியரே அதிவிரைவில் யான்வாரேன்
ஏகபோகமுடனே இணங்கிஜனகாதியர்க்காய்
பாகன் காலடியில் பரமநிஷ்டையமர்ந்தார்
எதிரிலாயோகத்தினால் இமையவருலகமெல்லாம்
கதிரோங்கி தீக்ஷண்யமாய் கனல்கொண்டு வீசுவதால்
ஏங்கியே இந்திரனும் ஏந்திழையே இவ்வோலை
பாங்கியே அனுப்பியதாய் பராமரிப்பாய் யானிருந்தால்
எந்தனையே ஏசிடுவார் இழிவாகக் கூறிடுவார்
உந்தனிட தந்தை செய்யும் யோகத்தாலழிந்திடுவார்
எவ்வளவோ தொண்டர்குறை என் தந்தை தீர்த்திருக்க
அவர்மைந்தனெனக்கு ஆபத்துக்கள் நேராதடி
இப்போதே அப்பரமன் யோகம் செய்யுமிடத்தே
தப்பாமல் சென்றழித்து தையலரே வாரேனடி
ஏகிட விடைகொடடி இனியமொழி பூங்கொடியே
தோகை இளங்கொடியே தயங்காதே இத்ததியே

## அங்கஜன் வார்த்தையைக் கேட்ட இரதிமாது பிரிவாற்றுமையினால் புலம்பும் ஒப்பாரி

காதலரே என் கணவா கரும்புவில் மன்மதரே
பாதகியாளென்னைவிட்டு பாவி இந்திரன் சொற்கேட்டு
காலாகாலனிடமே கண்ணாளா சென்றாலே—நீ
மாளுவது திண்ணமையா மாதுமொழி கேளுமையா
கண்ணாளா நாமிருவர் கனம்பெருகவாழுவது
மண்ணுளும் இந்திருக்கு மனதுதாளாதற்கு
கபடம் வைத்துதேவேந்திரன்கடவுளைப் பகைக்கவைத்தான்
விமலன் தபசழிக்க வில்மாரா போகாதீர்

கன்னியென் குடிகெடுக்க காதகனும் காத்திருந்தான்
மன்னுஅவன்மொழியை மறுத்தடைவோம்நல்வழியை
கவலையின்றி இந்திரனும் கடவுளிடம் போகொண்ணுதா
அவன் மனைவி தாவிதன்னை அறுத்தெறியக்கூடாதா
கர்த்தன்தனை எதிர்த்து காசினியில் மாண்டவர்கள்
எத்தனையோ கோடியுண்டு என்கணவா கேளுமின்றி
காதகரை யழிப்பார் கடுமையுள்ளோரை வதைத்தார்
பாதம் பணிபவர்க்கும் பரசுபாணி வரமளிப்பார்
கண்மூன் றுடையசிவன் கங்காளனை எதிர்த்தால்
மண்ணோடு மண்ணாவீர் மன்மதரே யறிவீர்
கல்லுக்குள் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும்
பல்லாயிர ஜீவனுக்கும் படியளக்கும் கர்த்தனிடம்
உன் கரும்புவில் செல்லாது கன்னிபடை நில்லாது
அரும்புகணை வெல்லாது அரன் தபசு பொல்லாது
அவர்கண் திறந்து பார்த்தாலே அனலா எரிந்திடுவீர்
அண்டமதில் உனைப்பிரிந்து அவனியில வாழேன்துணிந்து
கருத்துள்ள என்மொழியை கைக்கொள்வீர் கண்ணாளா
வருத்தமகற்றி இனி வாழ்வாய் மணவாளா

## (போக வேண்டாமென்று மறுத்த இரதிக்கு மதன் சொல்லும் ஒப்பாரி)

போதுமடி மாதரசே நீ புத்திமதி சொன்னதெல்லாம்
மாதுந்தன்சொல்கேட்டால் என்மானம்வெட்கம்போமதனுல்
புரந்தரன் எனைமதித்து பூதனுதனை எதிர்த்து
நிரந்தரமாய் லிகிதம் நிருபித்தா ரிச்சமயம்
நான்போகாதிருந்தேனுனல்இப்பூவுலகோர்என்னைகண்டால்
தோகையே ஏசிடுவார் தூஷணித்து பேசிடுவார்
போகாத வெறியனுக்கு புகழ்மாரனும் பயந்து
ஒருபேதையிடசொல்கேட்டு பதுக்கமுற்றுனென்பார்கள்
பூவையே அபயமென்றல் புகழளித்துகார்க்கவேணும்
பூதனுதனலெனக்கு பொல்லாங்கு நேராது
ஆதலினலிப்போது அருள்வாய் விடை தப்பாது
பரமனுல் எனைஜெயிக்க பாவையே யாகுமோடி

அவன் விரதமதை கெடுத்து வருவேன் புகழ் தொடுத்து
புரியம் யோகத்தாலே பொன்னுலகம் நடுங்குதடி
அரிவையே அதை யழித்தால் அன்னமே புண்யமடி
பயங்கொள்ளியாம் பரமன் என் பாணத்தை கண்டாலவன்
அபயமிட்டு தபங்குலைந்து அலைந்தோடுவானெழுந்து
பங்கமொன்று எந்தனுக்கு பாவையரே வாராது
அங்கஜன் கொடுத்த கணை அன்னமே வீண்போகாது
பதரி துடிக்காதே நீ பயந்து மனம் சோராதே
குதர்க்கம் விளைத்து வாரேன் கோபாலன் மருமகளே
போவதற்கு பயந்து ஆவல் கொண்டுளை யணைந்து
காதலிலே யானிருந்தால் கலியுகமெல்லா மிகழ்ந்து
பஞ்சபாணந்தனையே பரசுபாணிமீதனிலே
வஞ்சியரே விடுத்தான் வையகத்தில் கியாதியுண்டு
பதட்டமுடனோட பகவானெதிராகி
பிதற்றன் தபங்கலைத்து வாரேன் புகழ் வகித்து
எனக்கு போகவிடைகொடடி பொழுதேறி போகுதடி
உன் சோகந் தணிந்திடவே சரசிமுத்தமிடடி
என்போக சவுந்தரியே பொக்கிஷ காதற்கிளியே
ஆகம இளங்கொடியே ஆரணங்கே மெய்ரதியே
ஏக விடைகொட்டி இணக்கமுள்ள பைங்கொடியே

## இரதிதேவி விஷ்ணுவை இகழ்ந்துரைக்கும் ஒப்பாரி

மன்மதனே என் துரையே மனதினிக்கும் சர்க்கரையே
உன் தந்தையின் பலத்தால்உம்பாபிரானை பகைத்தால்
மண்ணோடு மண்ணாவீர் மகேஸ்வரன் மனதுவைத்தால்
சண்டாள இந்திரனால் சதிக்குள்ளாவீர் புவிமேல்
மாக்ஷிமையுள்ள உனது தந்தை மன்னவரேயவர் நடத்தை
சாக்ஷி ருசுவுடனே சாற்றுவேன் என் கருத்தை
மந்தையிலே மாடு மேய்த்தான் மாமனை யன்று மடித்தான்
நந்தகோபனிடம் வளர்ந்தான் நடுக்கடலில் போய்படுத்தான்

மாதர்களை ஏமாற்றி மகிழ்வெண்ணை தன்னைப்பற்றி
காதகன் திருடியுண்டான் கன்னிகள்சேலை யொளித்தான்
மண்ணை வாரியுண்டானே மத்தாலடிபட்டானே
குன்றைகுடையாய்பிடித்தான் கோகுலர்வீட்டில்வளர்ந்தான்
மடுவினிலே குதித்தான் மலைப்பாம்பு மேல் நடந்தான்
கொடுமையாய் பூதகியின் கொங்கையிட பால் குடித்தான்
மச்சமதை கொத்தி தின்னும் மகிழ்கருடன் மேல் தினமும்
அச்சமின்றி சுற்றிடுவான் அலைந்து திரிந்திடுவான்
பங்காளிகள் சண்டையிட்டால் பதுங்கிருந்து பாரதத்தில்
சங்கையின்றிதுரியன் படை சாகச்செய்தான் படுகளத்தில்
மாது குந்திதேவி பெற்ற மாக்ஷிமையோ கர்ணனைத்தான்
யாது மறியாதவன்போல் அமர்களத்திலே மடித்தான்
மதியென்னும் சந்திரனை மாதாக்கினைந்தானே
அதனால் அரிச்சந்திரன் அவனியில் பிறந்தானே
மாதர்களை கற்பழித்தான் மணிக்கணையால் வேலனிடம்
பாதகன் பெருவிரலால் பாணந்தைத்து மாண்டானே
மண்ணளந்தான் மம்மதையால் மாபலியை அன்றொருநாள்
என் தகப்பனரிடம் போனால் எரிந்திடுவீர் நெற்றிக்கண்ணால்
மங்கையென் சொல் மீறாமல் பங்கமொன்று வாராமல்
அங்கபங்கம் நேராமல் அகங்களித்துய்வோம் புவியில்

## மதன் சிவனை இகழ்ந்துபாடும் ஒப்பாரி

கற்பினுக் கருங்கலமே சிற்பரன் தபோபலமே
நற்றாமரை முகத்தாளே நாராயணன் மருமகனே
கஞ்சா வெறியனடி கனவெறியன் மாயாண்டி
நெஞ்சிரக்கமில்லாத நிஷ்டூரன் உன் தகப்பன்
காயமெடுத்த கதை காசினியில் கேட்டாயோ அவனுக்கு
தாயேது தந்தையேது தமையன் தம்பிதானேது
கல்லாலடியும் பட்டான் கண்ணப்பனின் எச்சலுண்டான்
வில்லாலடி பட்டொருநாள் விஜயனுக்கு வரமளித்தான்
கங்கையெனும் பெண்மணியை கனஜடையில் மறைத்தான்
அம்மங்கைமாதவிடாய்போதுமகிழ்ந்துதிரம்வழிந்தெரிந்தான்

கடலில் வலைபோட்டு கந்தனையோர் மீனுக்கி
திடமாய் மீனைப்பிடித்த உமையை மணம் புரிந்தான்
காட்டில் பத்மாசூரனுக்கு கபடமின்றி வரமளித்து
ஓட்டம் பிடித்தாண்டி உன் தந்தை மாயாண்டி
காகுத்தன் எந்தன் பிதா கர்த்தனிட சேதிகண்டு
தோகையரைப்போல் நடித்து அங்கு சூரனைஎரிக்கலையா
கபடனந்த ராவணனின் கீதாமிர்தம் கேட்டு
உமையவளை யளித்து ஓட்டாண்டியாக நின்றாண்டி
கலங்கி சிவன் நிற்பதனை கண்டு எந்தன் தந்தையவர்
இலங்கைக்கரசன் தன்னை ஏமாற்றி மீட்கலையா
காவியுடுத்தியன்று கனத்த சிறுதொண்டன் தனை
பாவியவன் ஏமாற்றி பிள்ளைகறி சோறு தின்றான்
கனமுடன் முன்பிறந்த கணபதிக்கு மணமுடிக்க
பண்பின்றி முழித்துகொண்டு பாதையிலே குந்தவைத்தான்
கந்தனெனும் இளையமகன் காளையாய் திரிந்து கொண்டு
செந்தில்வாழ் குறத்தியரை சேர்த்து கொள்ளசெய்ததுண்டு
காளையென்னும் மாடேறி காசினியைசுற்றி வந்தான்
மானை புலித்தோலை ஆடையாயுடுத்தி கொண்டான்
காம்பீரமாய் மேனியெல்லாம் சாம்பல் பூசிதிரிந்தானே
பாம்புகளை உடல் முழுதும் அணியணியாயணிந்தானே
பிணங்களை யுறவாக்கிசுடு காடுதனில் அலைந்தாண்டி
பிணங்களை பிடுங்கி தின்று பேய்போலலைந்தாண்டி
கட்டுக்கடங்காத காதகம் புரிந்தாண்டி
பிட்டுக்கு மண்சுமந்து பிறம்பாலடிப்பட்டாண்டி
கனகமுலையாளே என் 'காமக்களஞ்சியமே
எனையாரென்று மதித்து எதிர்த்தாய் மனங்கொதித்து
கரும்புவில் தானிருக்க அரும்பு கணையிருக்க அவன்
துரும்புக்கு சமானமடி நீ துணிந்து விடை கொடடி

## இரதிதேவி சிவனைப் புகழ்ந்து விஷ்ணுவை இகழும் ஒப்பாரி

தென்றல் தேர் மன்மதரே தெய்வீக நாயகரே
கன்னிப்படை காதலரே கரும்புவில் அங்கஜரே

திருநேத்ர தாரியென்னும் திகம்பரனுர் என் தகப்பன்
பெருமையறியாமல் பேசுகிறீரெந்தனுடன்

சிரித்து புரமெரித்தார் தேவர்களை யாதரித்தார்
துதித்தோர்க் கருளளித்தார் தொண்டற்கு காக்ஷி தந்தார்

தீரன் வல்லாளனுக்கு தேவன் மகனுனர்
சீருடன் அன்னவர்க்கு சித்தியுடன்முத்திதந்தார்

சிறுவன் மார்க்கண்டனுக்கு சிறப்புடன் மனங்களித்தே
மரலியை யுதைத்துவரம் மகிழ்ந்தளித்தார் வையகத்தே

திருநாளை போவார்க்கு சிதம்பரத்தில் முத்தி தந்தார்
அருங்காளி நாணமுற அம்பலத்திலாடி நின்ருர்

தக்கனிட மமதையை தானொழித்த உமையவளை
பக்குவமாய் பருவதனின் புத்திரியாய் பிறக்கவைத்தார்

திக்குபுகழ் நான்முகனின் தீரமதை போக்கிடவே
கொக்கரித்து ஓர் சிரத்தை கிள்ளினுர் புகழுறவே

திருநீலகண்டரிடம் தீவிர பகை போக்க
திருவோடளித் தொளித்து தரிசனந்தந்தாவர்க்கு

தேர் விஜயன் பாரதத்தில் போர் புரிந்து தேர்ச்சிபெற்ற
பரசுபதாஸ்திர மளித்தார் பகையாளி தோல்வியுற

திகம்பரனை இழந்து தேவேந்திரன் சொல்கேட்டு
சுகபோகத்தை வெறுத்து சொல்லாதீரெனை விடுத்து

உன்திரமெங்கு செல்லாது தேவன் கோபம் பொல்லாது
பாரளந்தோன் உனது தந்தை பக்குவங்கள் வெல்லாது

தன்மையுள்ள என் ராஜா தற்பரனிடம் போனுல் அவர்
கண்திறந்து பார்த்தாலே கனல் கொண்டெரிவீரே

உன் தந்தையை பெருமதிப்பாய் தானிணைந்து சொல்லாதீர்
அந்தமாயன் புரிந்த அந்நீதியைக் கேட்டிடுவீர்

தங்கபணியணிகள் தானணிய சக்தியற்று
சங்கையின்றி துளபமாலை தேகமதி லணிந்து

தன் மார்பில் பெண்ணை வைத்து திருநாமத்தை யணிந்து
அன்ருேர் கருடன் மீது ஆரோகணித்தான் சிறந்து

திருப்பதி மலைமேலே துடுக்கர் பெண்ணைவைத்துக்கொண்டு
கருத்து கலங்கி நிற்கும் கோவிந்தனை புகழ்ந்தீரென்று

தீவிரமாய் மாபலியை பாவியவன் ஏமாற்றி
மூவடிமண் தானங்கேட்டு மோசம் புரிந்தான் பகட்டு
தாட்டிகமாய் அண்ணன் தனை தான் வஞ்சித்து தங்கைதனை
கூட்டிக்கொடுத்தானே கோபாலன் அர்ச்சுனருக்கு
சிறுவர் போல் விளையாடி தனஞ்செயனுட னுலகில்
பருவமாதரை சேர்த்து பாதகன் வைத்ததுண்டு
உன் தந்தை கோமாளியெனும் தன்மையதை சொன்னாலே
இந்த உலகம் சிரிக்கும் ஏழுலகமும் நகைக்கும்
திரிபுரதகனிடம் திடங்கொண்டு நீ போனால் உன்
விரதம் பலிக்காது வெற்றி பெற முடியாது
தேவேந்திரன் மொழியால் தீங்கு வரும் உந்தனுக்கு
கோவே யென் மொழிகேட்டு கூடியிருப்பீரிங்கு
தங்கமய பஞ்சணையில் தத்துவமாய் நாமிருந்து
பொங்கமுடனே சுகித்து போகித்திட யோகமுண்டு

## அங்கஜன் தனது தந்தையின் பராக்கிரமத்தை கூறும் ஒப்பாரி

சரசக்கிளியே ரதியே சந்திரமுக ஒளியே
விரகதாபக்கிளியே விண்ணவர் புகழ் மதியே
சங்குசக்ராயுதனை செங்கருட வாகனனை
மங்கையரே தூஷித்தாய் மகிமை யறியாமல்
சஞ்சலமே நீக்கிடுவார் . தாசர் துயர் போக்கிடுவார்
பஞ்சமுற வஞ்சகரை பகைத்து வதைத்திடுவார்
சத்திய நாராயணனால் சங்கரித்த பேர்களையும்
முத்திபெற்ற தொண்டரையும் சித்தினியே கேள் நீயும்
தசக்கிரீன் வரமழித்தார் தக்க வக்ரனை வதைத்தார்
சிசுபாலனை சிரத்துணிந்தார் திரௌபதிக்கு துயிலளித்தார்
சாகாவரம் பெற்ற யோகசாலி இரணியனை அவன்
ஏகபோகம் தவிர்த்து இருபிளவாய் கிழித்தெறிந்தார்
சரணமென்றே பிரகலாதன் ஜெகத்திலேபுகழுறவே
உரமுறவே கார்த்தாரடி உண்மையிது காணுமடி
சகஜமாய் முதலைதனை சக்கரத்தால் வதைத்ததனை
கஜேந்திரர்க்குகாக்ஷிதந்தார் கார்வண்ணன்எனதுபிதா

சதுர்முகனையடித்த சார்ந்த வேதத்தை கவர்ந்துப்
பதுங்கிய சாமுகனை பரந்தாமனு மவனை
சமுத்திரத்தில் போர்புரிந்து சோமுகனைவதைத்தெரிந்து
கமழும் வேதத்தையளித்தார் கடுந்துயரமேயொழித்தார்
சோமுகனொழிந்த பின்பு சூரன் இரண்யாக்ஷனும்
பூமிதனைப் பாயாக பாவியும் கவர்ந்தேக
ஸ்யாமளனவர் பறந்தே சமுத்திரனுட் புகுந்து
கியாதயுற்றஇரண்யாக்ஷதனைகொன்றார் கூர்மமாய்துணிந்தே
துருவனையே ஆதரித்தார் துளசிங்கன் காக்ஷிதந்தார்
வறுமையுற்ற குசேலருக்குவையகத்தில்செல்வந்தந்தார்
சங்கரிக்கு பயந்து கங்கையை ஜடையில் வைத்து
திங்களணிந்தவனை தேவிபுகழும் சிவனை
ஜெகமலா மிகழுதடி சித்து வித்தை காரனடி
புகையும் சுடுகாடதிலே புரண்டு திரிவான்மயிலே
சப்தரிஷி சாபத்திலே தாருகாவனமதிலே
ஒப்பும் பெண்கள் காதலிலே யோனி இழந்தான்புவிமேல்
சந்திரனை பெண்ணாக்கி சேர்ந்து சுகித்ததினால்
சந்திரமதியைப் பெற்று சங்கரன் காட்டில் விட்டான்
சாம்பலைபூசிக்கொள்வான் சரபங்கனையணிந்துக்கொள்வான்
கம்பீரமாய் காளையேறி காசினியை சுற்றிடுவான்
செஞ்சடை சித்தனடி சிவகணத்தின் முத்தனடி
கெஞ்சாவெறியனடி கபாலமேந்தும் பித்தனடி
என் செங்கையில் வில்லிருக்க சித்ரவட்டகுடையிருக்க
மங்கை படையிருக்க மலர்கணை கையிலிருக்க
சங்கரன் தபசழிக்க சரசியரே யானிருக்க
அங்கபங்கம்நேருமோடி அன்னமே விடைகொடடி
நான் சத்திசிவன் விழியால் தணல் பற்றி மாண்டாலும்
இத்தரையே புகழும் என்பெயர் எங்கும் ஜொலிக்கும்
சரியொத்த தேவர்குறை தவிர்க்காதிருப்பேனானால் என்னை
பெரிதும் நகைத்திடுவார் கலியுகத்தோர் ரேசிடுவார்
கண்டோர் நகைத்திடுவர் கலியுகத்தோர் ரேசிடுவார்
அண்டமதில்உள்ளவர்கள் என்னை அபலையென்றுகூறிடுவார்
சத்தியத்தை நான் மறவேன் சரசியே விடைகொடடி
முத்தமிழ் ராஜேந்திரனின் சொற்படியே சென்றுவாரேன்

## இரதிதேவி பரமேஸ்வரரின் பராக்கிரமத்தை புகழ்ந்துரைக்கும் ஒப்பாரி

சங்கரன் மருமகரே ஷண்முகனின் மைத்துனரே
மங்கள குணகாரே என் மையலுக்குகந்தவரே
சத்திசிவன் பெருமை ஜகதலத்தில் கூறவென்றால்
எத்தனையோ கோடியுண்டு ஏடுமிடங்கொள்ளாது
சரசனே முன்னொருநாள் சந்திர சேகரனார்
திருவண்ணமலை தனிலே திருவவதாரம் செய்த
சேதியினை கூறுகிறேன் சித்தஜரே கேட்டிடுவீர்
ஆதி அக்கினிகுலத்தில் அவதரித்த வல்லாளன்
சல்லமா தேவியுடன் சதிபதியாய் வாழ்ந்திருந்தார்
அல்லாமல் வெகுநாளாய் அவர்மனக் குறைகேளாய்
சேயனென்று இல்லாமல் சித்த மெலிந்திருந்தார்
கியாதியுள்ள வல்லாளன் குவலயத்தில் தானம் செய்தார்
தானதர்மம் செய்தானே தவமிருந்து பார்த்தானே
காணாத கோவில்களுக்கு கட்டணங்கொடுத்தானே
சல்லாப மன்மதரே சத்தி சிவனுமொருநாள்
வல்லாளன் மனதரியவந்தார் சன்னியாசியைப்போல்
தன்னுடைய பூதங்களை சன்னியாசி யுருவமுட்டன்
அன்னாட்டின் தாசிகள்வாழ் அரண்மனைக்கனுப்பிவைத்தார்
தாசிவீடு முற்றிலுமே சன்யாசிகள் புகுந்தார்
ஈசன்மட்டும் மன்னனிடம் இனிதுடனே வந்துநின்றார்
சுவாமியார் வருகிறதை தானறிந்து வல்லாளன்
விவாதமின்றியே பணிந்து வேண்டியதை கேளுமென்றான்
சன்யாசி வாய்திறந்து சாற்றிடுவார் மன்னனிடம்
இன்னாள் நான் காதலெனும் இச்சையுற்று வந்தேனென்றார்
தாசிவீட்டில் போகவென்றால் காசு இல்லை என்னிடத்தில்
ஆசையது தீர்ந்திடவே தாசியை யளிப்பீரென்றார்
சற்றுநேரம் என்னுடனே சரசம்செய்தால் போதுமன்னா
அற்றுவிடும் என்னாசை ஆதரிக்க வேணுமின்னாள்
சங்காரர் சொன்னமொழியை சிரமேற்கொண்டு அரசன்
அக்ஷணமேதாசியில்லம் அடைந்தேஎங்குந்திரிந்தான்

தாசிகள் வீடுமுற்றும் சன்யாசிகள் தானிருக்க
மோசமென வருமோவென்றுமெய்மறந்து மன்னர்திகைக்க
சாமிக்குறைத்மொழி தவராதிருந்திடவே
தாமதமில்லாமல் தன்மனைக்கு வந்திடவே
சல்லாமாதேவியரும் தயங்கிவந்த நாயகனை
நல்ல மொழிபேசி நங்கையாம் மன்னவனை
சங்கதியை கேட்டுமங்கை சரசனின் மனப்படியே
இங்கிர்த முடனேற்க இசைந்தாள் இளங்கொடியும்
சரசனே என்மணாளா தயங்காதீ ரினிமீது
பரதேசியின் விரதம் தணிப்பேன்யான் தப்பாது
என்று சம்மதிக்க பூவையரும் சந்தோஷம் கொண்டானே
உம்பர் பிரானிடமே ஓடோடி வந்தானே
சாஷ்டாங்கமாய் பணிந்தான் ஸ்வாமி நீர் வாருமென்றான்
மாக்ஷியாய்மனைவியிடம் உன்மனம் போல் நடவுமென்றார்
சொல்லிய சங்கமரை ஜோபித முடனனுப்ப
சல்லமா தேவியரும் சன்யாசியைப்பணிய
சதிபதிகள் தன்நிலையை சங்கரனறிந்தாரே
அதிபதியாம் அச்சமயம் அன்பாய் மறந்தாரே
சரசம் புரியாது சன்யாசியும் மறைந்தார்
ரிஷிபிண்டம்போலவள் வயிற்றில் நிமலன் சுதனுயுதித்தார்
சங்கதியறிந்த மன்னன் தனயனை வாரியணைக்க
மங்களமானமைந்தன் மாயமாகவே மறைய
சஞ்சலங்கொண்டு மன்னன் தனித்து புலம்பி நிற்க
அஞ்சாதே என்று சிவன் அரசனெதிர் வந்து நிற்க
தயங்காதே மன்னவனே உன் தத்துவத்தை கண்டறிந்தே
மயங்காமல் உந்தனுக்கு மைந்தனகவே பிறந்தேன்
சந்ததிக்கு பதிலாக தப்பா திருந்திடுவேன்
எந்த யுகத்தினிலும் உனக்கு ஈமக்கடன் தருவேன்
நீ சாயுச்ய பதவிபெற தனித்து கருமம் செய்வேன் என்று
மாயமாய் மறைந்தாரே மதிசூடிய பரமன்
சங்கரனை நீரெதிர்த்தால் பங்கமடைந்தே மடிவீர்
மங்கையுறையை மறுத்தால் மண்ணோடு மறைந்திடுவீர்
சதிசெய்து என்னைவிட்டு சண்டாளன் மொழிகேட்டு
பதியேநீர் போகாதீர் பஞ்சபாணத்தை தொட்டு

## மன்மதன் பரமனின் செய்கைகளை ரதிக்கு உரைக்கும் ஒப்பாரி

பேசும்புகழ்ரஞ்சிதமே என் பேரின்ப பொக்கிஷமே உங்கள்
ஈசனின் சிலாக்கியமே இயம்பிடக்கேள் ரத்தினமே

பிட்டுக்கு மண்சுமந்தான் பிரம்படியைபட்டு நொந்தான்
கட்டழகி கங்கையைத்தான் கபடன் ஜடையில்வைத்தான்

பேய்கணத்தையுறவாக்கி போய் திரிவான் சுடலையிலே
மாய்ந்த பிணத்தையெல்லாம்மகிழ்ந்து புசிப்பான்மலையிலே

பத்ரகாளி தன்னுடனே பரமனன்று தில்லையிலே
நிர்த்தனித்து தோற்ருனே நியாயமது பூங்குயிலே

பக்தர்களை வஞ்சித்தான் பாவிகட்கு வரமளித்தான்
பித்தனிவன் செய்வதெல்லாம் பேதைகுணமாகுமோதான்

பார்வதியின் சொல்கேட்டு பிரமனின் சிரமறுத்து
சீர்கெட்டு சித்தம் நொந்து திரிந்தானேபித்தங்கொண்டு

பதியிழந்து நாடிழந்து பரதேசி கோலங்கொண்டு
கதியிழந்து மலைமீது அந்த கங்காளன் வீற்றிருப்பான்

பிச்சையென்று அன்ருெருநாள் பிள்ளைக்கறிசோறு தின்ருன்
கொச்சை தனம்புரிந்தான் கோதைக்குடல்பாதிதந்தான்

பரிவேடன் எச்சல் தின்ருன் பாதத்தாலுதையும் பட்டான்
கரிமுகர்க்கு மணமுடிக்க காசில்லாமல் விழித்தான்

பாலமிர்த மிருக்க பரமனுமுண்ணாமல்
ஆலகாலத்தையுண்டான்ஆண்டிபோல்கோலங்கொண்டான்

பதினாறு வயதெனவே பகர்ந்தமொழியை மறந்து
வாதித்தன்று எமன்தனை எட்டியுதைத்தான் சிந்து

பொய்சொல்லும் பித்தனடி போதை வெறியனடி
மெய்மறந்து வரமளித்து முழித்து விழிப்பாண்டி

அவனை பெற்றெடுத்தபேர்யாரு பேர்தெரிந்தால் நீ கூறு
உலகில்-சொற்புத்தி கேட்டுமவன் சோங்கி விழிப்பான் பாரு

பாதகங்கள் நேராது பழியெனக்கு சேராது
ஆதரிக்க போமெனக்கு ஆபத்துக்கள் வராது

பெண்ணே உன் தந்தையர்க்காய் பரிந்து நீ பேசாதே
அண்டர் முனிவரெல்லாம் அபயமென்றார் பார்மீதே
பரமன் திருவிழியால் பாவையே நான் மாண்டாலும் இந்த
திரிலோகமும் புகழும் என் தீவிரபெயர் விளங்கும்
நான் போகவிடை கொடடி பொழுதேறி போகுதடி
நாகபாணியோகமதை நான்கலைத்து வாரேனடி

---

## இரதிதேவி மன்மதனுக்கு தாரையால் சந்திரனுக்கு சாபம் நேரிட்டதை கூறும் ஒப்பாரி

தேம்பல் பிறையழகா திகட்டாத செல்லழகா
சாம்பசிவன் மருகா சரசனே என் வடிவழகா
யோசனை யில்லாமல் மோசம்போனேர் வேணகண்டு
நேசரே அக்கதையில் நிகழ்த்துவே னுனக்குஒன்று
பிரகஸ்பதியென்னும் பக்ஷமுள்ள குருவிடத்தில்
திறமுள்ள சந்திரனும் தேவதேவ மைந்தர்களும்
ஆயுத வித்தைகற்க-அவ றடைக்கலமாகிடவே
தேய்பிறைச் சந்திரனின் தேஜசும் துலங்கிடவே

பிரகஸ்பதி மனைவி பாவையவள் தாரையெனும்
சரசசல்லாபமாது சந்திரன்மேல் காதலென்னும்
விரகமே கொண்டாளே வித்தகியாள் தாரையரும்
பிறந்தான் அச்சமயம் பிரகஸ்பதிக்கே விகிதம்

யாகமது செய்வதற்கு அழைத்தான் குருவிவரை
போகமனது கொள்ள பூங்கொடி விடையும் தர
குருபிரான் போனபின்பு குணமுள்ள சந்திரனும்
தருமநெறியுடனே தாய்போல் நினைத்தவனும்
குருபத்தினி தனக்கு கோமானும் காவலானல்
பொருத்தமுள்ள தாரையவள் பாலகன்மேல் காதலானல்
நாளேர நாளேர நாயகியாள் காதலுற
பாலனை தான்மயக்கி பகர்வாள் மனதார

மோகமானே னுன்மீது மகிழ்ந்துகரக்குள் வாருமடா
தோகை எனது மையல் தீர்த்தணைத்து சேருமடா
யாருமறியாமல் அறைக்குள்ளே போவோமடா
சீருஞ் சித்தஜன்கணை சிதைந்தோட பாருமடா
சாரையும் சர்ப்பம்போல் தழுவி யணைந்தாலே
யாரும் நமக்கெதிரோ அன்பாய் புரிவோம் லீலை
பருவமான நம்வயது போனால்வருமோடா
பொருத்தங்கொண்டுவெகுநாள் பூவைஎதிர் பார்த்தேனடா
சொல்மொழியை கேட்டானே சிறுவனந்த சந்திரனும்
கல்போல நின்றவனும் கலங்கியே சொல்வானவனும்
அருமையாய் எனைவளர்த்த அன்புள்ள மாதாவே
குருபத்தினியான குலதெய்வமே தாயாரே
பொருந்தாது நம்காதல் பாவம் வந்து நேருமம்மா
வருந்துவார் குருவந்தால் வஞ்சமிகதாகுமம்மா
எந்தன்மீது காதல்கொள்ள ஏற்காது உந்தனுக்கு
துன்பமுறவே நகரம் துணையாகுமே நமக்கு
பார்த்தாளே தாரையவள் பாலன் சொல்லும் மர்மக்கதை
அந்த நமது யெண்ணம் அனுவும் பலிக்காதே
என்று சமாளித்து தாரையரும் சந்திரனைப் பார்த்து
காழும் உன் மனக்கருத்தை கண்டு மகிழ்ந்தேனென்றான்
பாருலகில் உந்தனைப்போல் பாலகனை கண்டதில்லை
வேறுவிதமான எண்ணம் வேந்தனே உன்மனதினிலில்லை
என்றுரைத்த ஏந்திழையாள் இருந்துவிட்டாள் அன்றுதினம்
நன்றென நாள்பார்த்து நாயகிதணிந்தாள் மனம்
தனியாக காதல் கொண்ட தாரையவள் ஒருநாள்
சனிவாரமன்று சிறு சந்திரனைப் பார்த்துரைப்பாள்
கண்ணே என் தெள்ளமுதே கல்வியில் சிறந்தவனே
எண்ணையினால் ஸ்நானம் செய்ய எழுந்திருந்துவாசுதனே
என்றவனை கைபிடித்து இழுத்து சென்றாள் தனியறைக்கே
ஒன்றுமே தோன்றாமல் உத்தமன் போனான் பிறகே
சப்ரமஞ்சபீடத்தின்மேல் சந்திர னமர்ந்திருக்க
ஒப்பில்லா கோதையரும் உகந்து எண்ணை தேய்க்க
கண்களை மூடியிருக்க கண்டாளே காதகியாள் அவள்
தன் ஆடையை யகற்றி நிர்வாணமாக நின்றாள்.

கண் திறந்து பாருமடா காந்தாமணி யெந்தனே
உன் மையல் தீர்த்திடுமோர் உகந்த மதியதனே
இனிசெல்லாதுன் நீதிநெறி சேயிழை எனையழைத்தே
துல்லிதமாய் லீலைசெய்ய துணையிருப்பா யகத்தே
என்று கட்டியணைத்தாளே கனிவாயை முத்தமிட்டாள்
மட்டிலா காதலினால் மயங்கியவள் மேலே விழுந்தாள்
புத்தி தடுமாறி பொன்மொழி சந்திரனும் அந்த
சித்தினி பெண்மயிலே சேர்த்தணைத்தே அத்தருணம்
முன் சொன்ன நீதிநெறி முழுதும் மறந்தானே
அன்னகிளி தாரையரின் ஆனந்தத்தி லாழ்ந்தானே
எக்களிப்பாக இவர் கொக்கோ லீலை செய்து
மிக்க களிப்புடனே மகிழ்ந்திருக்கும்போது
தெய்வலோகம் போன தெய்வீக குருநாதன்
செய்தயாகம் முடித்து திரும்பினரே போதன்
ஆசிரமத்துள் நுழைந்தார் யாரையும் காணவில்லை
யோசித் துணர்ந்தாரே யோகஞான திருஷ்டியிலே
பள்ளியறைக்குட்புகுந்து பார்த்தாரிருவர்களை
சொல்லொணு கோபங்கொண்டு சொல்வாரொருவார்த்தை
சண்டாளி தாரையரே சதிமோசம் செய்தானே
என்னை இவ்வஞ்சனைகள் எத்தனைநாள் செய்தாயோ
என்று கண்கள் பொறிபறக்க காந்தாளகோபங்கொண்டார்
முண்டை நீ இப்பொழுது பிடியடிசாபமென்றூர்
கல்லாக மண்ணுகை காதகி நீ போகவென்றூர்
தொல்லையுற்றே யொளிந்த சந்திரனை இழுத்துவந்தார்
குருத்துரோகமே புரிந்த குலத்துரோகி சண்டாளா
குருபத்தினி தனக்கு குழந்தை நீயல்லவோடா
சதியான காரியத்தை செய்ததால் சந்திரனே
பதினைந்துநாள் வரையில் தேகம்குறையும்சொன்னேன்
அமாவாசையன்று முதல் வளர்வாய் பதினைந்து தினம்
கமழும் பௌர்ணமிமுதல் கறைந்துபோ முனதுஜடம்
இதுபோல முன்பின் யோசியாமல் முழிக்காதே அங்கஜரே
சந்திரன் போல் பங்கம் வரும் சாற்றுவேன்கேள் மன்மதரே
சங்கரனை பகைத்தால் சாவது நீ உண்மையையா
இங்கிர்தமாய் நாம் சுகித்து இணங்கி இருப்போமையா

மண்குதிரை யுன்தந்தை அவரை மதித்தாற்றி லிறங்காதே
அன்னவரின் சேதியெல்லாம் அறிவிப்பேனிப்போதே

## இரதிதேவி விஷ்ணுவின் திருவிளையாடல்களை இகழ்ந்துரைக்கும் ஒப்பாரி

கரும்புவில் கையேந்தும் அரும்புகணை அங்கஜரே
குரும்பனென்றீரென்தகப்பன் கோதைமொழி கேளுமையா
மண்ணளா உந்தன்பிதா கமலகண்ணன் சேதியதால்
மண்ணும் விண்ணுமே நகைக்கும்மகிதலமெல்லாம்பழிக்கும்
கஞ்சனெனும் மாமன்தனை வஞ்சனையாய் கொன்றுனே
துஞ்சாமல் கோபிகளின் சேலையை யொளித்தானே
கட்டியுரலிலே கன்னியரெல்லா மடிக்க
கொட்டமடங்கா துன்தந்தை கோவென்றழுதானே
காட்டில் மாடு மேய்த்தானே கம்பைகளி தின்றுனே
கூட்டித்தர அர்ச்சுனன்பின் கூலிவாங்கி திரிந்தானே
கானகக் குரங்குகளை கபடனுறவாக்கி
ஆணவங்கொண்டு திரிந்தான் அன்னைதந்தையை மறந்தான்
காட்டகத்தில் சுக்ரீவன் கனத்தமொழிக்காய் மறைந்து
வாட்டி வதைத்தானே வாலிதன்னையே துணிந்து
கூனியின் முதுகினிலே குண்டதை எரிந்ததாலே
காணியை விடுத்துகாட்டில் கணிந்து சென்றன்கேளே
கட்டழகி சீதைதனை காட்டில் பறிகொடுத்து
பட்டினியாய் கிடந்து பரதவித்தான் துடித்து
கண்ணயர்ந்து உறங்க கலைத்தமனை யில்லாமல்
அன்னவன் பள்ளிகொண்டா ஆனந்தமா அரவத்தின்மேல்
கபடுவைத்து துரியனையே காதகனும் கொல்லவென்று
துடைதட்டி சைகைசெய்தான் சூதுடனே வீமனுக்கு
கனத்ததொரு பாரதத்தில் காண்டிபர்க்கு சாரதியாய்
துணைக்கூலியாளானுன் துரோகியென பெயரெடுத்தான்
கண்ணாளஎன்தகப்பன் அவர்கண்ணெடுத்துப்பார்த்தாலே
மண்ணோடு மண்ணுவீர் மன்மதரே நாயகரே
கங்காளனை பகைக்க காதலரே போகாமல்
இங்கே நீ ரெந்தனுடன் இன்புறுவீர் சோராமல்

## இரதிமாது பரமனிடம் போகவேண்டாம் என்று தடுக்கும் தர்க்கப்பாடல்
### இரதி சொல்

## இந்தா ஒரு சேதி என்ற மெட்டு

பல்லவி

போகாதே நாதா போகாதே நாதா
பூவைசொல் கேள் விநோதா (போ)

அநுபல்லவி

ஏகபோகமுடைய இல்வாழ்வை விடுத்து
இந்திரனின் மொழியை இன்பமே எடுத்து
தோகையுரைக்கும் மொழி தன்னை நீர் தடுத்து
செல்லவேண்டாம் துரையே மலர்கணை பிடித்து

## மதன் சொல்லும் மெற்படி மெட்டு

தடுக்காதே மானே தருணம் நீதானே
தையல் ரதியே தேனே (தடு)

அநுபல்லவி

அடுக்குமோடி யுன் தந்தை அருந்தவம் புரிய
அனல்கொண்டமரர் லோகம் அவர் கண்ணீர்சொரிய
துடிக்கும் தேவர்கள் துயர் தேனே நாமறிய
தெரிந்தும் போகாதிருந்தால் தகுமோடியானே (தடு)

## இரதிசொல் அநுபல்லவித் தொடர்

நமது வாழ்வு தாளாமல் நாதா வஞ்சகமே
நாடியுரைத்தா னிந்ரன் நம்பாதீரிதனை
உமைபாகனை பகைத்தால் விகர்ப்பம் நேரிடும்
உத்தமரே உமக்கு உரைத்தேன் அஞ்சுகமே (போ)

## மதன் சொல் அநுபல்லவி

முனிவர் தேவர்களெல்லாம் மலர்கணையாலே
மெய்மறந்தே யோகத்தை விடுத்தார் பெண்பாலே
கனித்த பரமனிட கடுந்தபத்தாலே
கஷ்டம் வருமிதனை கவனிப்பாய் மயிலே (தடு)

## இரதி சொல் அநுபல்லவி

கஷ்டம் வந்தால் நமது காதல் வீண்போமா
காருலகில் மன்மத வாழ்க்கைக் கீடாமா
இஷ்டரதியாளிங்கு ஏங்கிடலாமா
ஏகிடில் எந்தனுயிர் இனி இருந்திடுமா (போ)

## மதன் சொல் அநுபல்லவி

பங்கம் ஒன்றும் நேராது பரமனின்னாலே
பாவையே மடிந்தாலும் பார்புவிமேலே
எங்கும் புகழ்ஜொலிக்கும் ஈசன் விழியாலே
எரிந்தான் மதனென்றுலே இரதிமயிலாளே (தடு)

## பொன்னுலவு சென்னிகுள என்ற மெட்டு

### இரதி சொல் கண்ணி

மங்களகுணாகரனே இங்கித மனோகரனே
சங்கரனை வெல்ல உம்மாலாகுமா—உமை
பங்கனிட கோபம் வீணில் போகுமா
மங்கையாள் மொழி யங்கீகரித்து நீர்
செங்கையாலெனை இங்கிதமுடன்
அங்கஜரே சேர மனஸ்தாபமா—பாத
பங்கயன் மகனே என்மேல் கோபமா

## மதன் சொல் மேற்படி மெட்டு

பித்தனை மிகசிறந்து இத்ததி மனந்துணிந்து
சித்தினியென்னை தடுத்தல் நீதியா—தேவர்
நத்தியதை கைவிடுதல் கியாதியா—அந்த
அத்தனின் தபம் சத்தியலோகம்
பற்றி எரிவதால் சித்தங் கலங்குது
சித்த சுத்தனெந்தனுக்கு வாதியா—அவன்
நித்தியானந்த சொரூப ஜோதியே (பித்)

## இரதி சொல் மேற்படி மெட்டு

வாதியாகிய பரமன் சேதியையறிந்திடாமல்
கியாதியாய் மலர்கணையை தாங்கியே—ஜெக
ஜோதியிடம் போரேனென்றீர் தேங்கியே—இது
நீதியோ ரதி மாது யெந்தனை
அநாதியாக்கி நீர் பாதிமதியோனை
கோதிலா தடைந்து சென்றால் பாங்கியே—பூவில்
ஏது செய்வேன் ஓதுவீர் நீரோங்கியே

## மதன் சொல் மேற்படி மெட்டு

சோங்கியே மனம் கலங்கி பாங்கியே புலம்பிடாதே
ஆங்கெனக்கு தீது ஒன்றும் நேராதே—மன
தேங்கியே தடங்கலொன்றுங் கூராதே—புக
ழோங்கிடகணை தாங்கி இதுததி
மூங்கிலோன் தபம் சாங்கியமுடன்
பூங்கொடி யழிப்பேன் மொழி மீராதே—துயர்
தாங்கியே தேவேந்திரனை சீராதே (பித்)

## மன்மதன் மஹா பாரதத்தின் கதையை இரதிக்குச் சொல்லுப ஒப்பாரி

கும்பமுலேயாளே கோவைவயிதழ் கனியே
நம் பரமனின் அருள்மகளே நல்லமுதே மணியே
உன் தந்தைதனை எதிர்த்து தனூர்மாரன்போரேனென்று
இந்திராதி தேவர்களே இழித்தே பழித்தாயின்று
அற்பமாக எண்ணுதே அன்னமே என் தந்தைதனை
பற்குணனின் மைத்துனனை பாரளந்த மாயவனை
என் தந்தை மனது வைத்தால் தற்பரனின் நெற்றிவிழி
ஒன்றுமே செய்யாது உலகத்திலாகும் பழி
மாயனிட சூக்ஷியெல்லாம் மாநேயறிந்திருந்தால்
நியாயந்தவறி என்னை நில்லென்று சொல்வாயோ
ஆனாலும் கேளுமடி ஆயனிட வீரமெல்லாம்
உபாயமுடனுறைப்பேன் ஊக்கமுடன் கேளுமின்னுள்
குருநாடாம் குருகுலமாம் குந்திமக்கள் ஐவர்களாம்
பெருமையுள்ள பாண்டுவிற்கு பிறந்ததொரு மைந்தர்களாம்
தூருவாசர் மந்திரத்தால் தோகை குந்தியாள் வயிற்றில்
அருமையுடன் பிறந்தார் அவனியை யாள்புவியில்
தருமருடன் வீமன் தனஞ்செயன் நகுலனுடன்
சிறுவன் சகாதேவன் சேயராய் பிறந்தவுடன்
பங்காளி பிள்ளைகளாம் பக்ஷமுள்ள துரியனவன்
எங்கும் புகழ் ஜொலிக்க இசைந்தரசு செய்துவந்தான்
அஸ்திணுபுரியதனை அவர் அரவக்கொடியேந்தி
கீர்த்தியுடன் பகுதி பெற்று கிருபையுடன் ஆண்டுவந்தார்
இந்திர பிரஸ்தமதில் இன்பமுள்ள ஐவர்களும்
சித்தை களித்தே இருந்தார் தேனே இன்னும் கேளும்
இந்த கதையிருக்க இன்னொன்று கேளுமடி
அந்தமுள்ள பாஞ்சால அரசன்மனம் வாடி
தன் புத்திரியை மணக்க புகழுள்ள சீமான்கள்
இத்தரணியில் இல்லையென்று ஏங்கியிருக்கையிலே

அமைச்சரும் ப்ரதானிகளும் அரசனின் குறையறிந்து
நிமைக்குள் ஓர் யோசனையை நிகழ்த்திடுவார் துணிந்து
தங்களிட புத்திரிக்கு தக்கவரன் வேண்டுமென்றார்
மங்கள குணுகரனே மர்மமொன்று கூறுவோம்
உன் மகளுடனே பிறந்த மகேந்திர வில்லை யெடுத்து
அக மகிழவே நிறுத்தி அரும்விகிதமே விடுத்து
வில்லைவளைப்போர்க்கு வேல்விழியை தாரேனென்றார்
எல்லோரும் ஆசைகொண்டு இங்ஙனமே வந்திடுவார்
என்றுரைத்த மந்திரியின் யோசனையை நம்பி மன்னன்
நன்றெனவே நாள் பார்த்து நாட்டில் விகிதம் விடுத்தான்
ஐம்பத்தாறு தேச அரசர் களும் கண்டறிய
தெம்புடனே ஓலை தெரிவித்தான் மணம் புரிய
ஓலை கண்ட மன்னரெல்லாம் வந்தார் பாஞ்சாலதேசம்
ஞானமுடன் வில்வளைத்து நாணமடைந்தார் மோசம்
கடைசியில் அர்ச்சுனனும் ஓர்கிழவன்போல் ரூபங்கொண்டு
விடைபெற்று வந்தானே வேந்தனவன் துணிந்து
கண்டு கிழவன்தனை கைகொட்டி நகைத்தாரே
என்ன இவனால் முடியு மென்று இருந்தாரே
தொண்டு கிழவனவன் துடைதட்டி எழுந்திருந்தான்
கண்டவுடன் வில்லதனை கரத்தில் தூக்கிபிடித்தான்
மச்சக்கொடியறுத்தான் மகேந்திர வில்லை யொடித்தான்
மெச்சவே ராஜரெல்லாம் மீசுரமாகவே கர்ஜித்தான்
பக்கத்தில் சீடனைப்போல் பச்சைவண்ணன் நின்றிருக்க
கெக்கலிக்கொட்டி கிழவன் கேலிசெய்தே நகைக்க
இன்னும் என்ன தாமதமோ என்னை மணப்பதற்கு
சென்று நீ கேட்டுவாராய் சீடனே என்றதற்கு
மைவிழியாள் பாஞ்சாலி மாலையை கரமேந்தி
சையோக நாயகியாள் தலைசாய்ந்துமே வணங்கி
மாலை தரித்தாளே மாவீரன் அர்ச்சுனனை
சோலைப் பசுங்கிளியாள் தோத்தரித்தே மாயவனை
வீராதிவீரரெல்லாம் வெட்கி தலைகுனிந்தார்
தீரன் துரியோதனனும் தீராத கோபங்கொண்டான்

பங்காளி தத்துவத்தை பஞ்சவர்மேல் காட்டிடவே
ஆங்காரக்காரனவன் ஐவரை மடித்திடவே
மாமன் சகுனியுடன் மர்மமாக யோசித்திட
பூமன் சகுனியவன் படுகுழி மார்க்கம்தேட
சகுனியின் யோசனையால் சண்டாளன் துரியனவன்
சொகுசுடன் ஐவர்களை சூது செய்ய எத்தனித்தான்
அரக்குமா மாளிகையில் ஐவர்களை தங்க வைத்து
இறக்கவே அம்மாளிகையை எரியவிட்டான் துணிந்து
என்-தந்தையிட தந்திரத்தால் தயங்காமல் வீமனவன்
ஐந்துபேர் தனைத்தூக்கிஅர்த்த ராத்திரியில் நடந்தான்
மற்றுமொரு தந்திரத்தால் மாபாவி துரியனவன்
குற்றம் புரிந்தானே குடிகேடன் சகுனியுடன்
படுத்திருந்த பாய்தனிலே பாம்புகளை ஏவி விட்டான்
தொகுத்த யென் தந்தையிட துணையால் பிழைத்தாரே
குளத்தில குளிக்கச் செய்து கூருசி நாட்டி வைத்தான்
களங்கமற்ற எந்தன் பிதா காப்பாற்றி பிழைக்க வைத்தார்
அருந்திடும் சாதமதில் ஆலகால நஞ்சையிட்டான்
பொருந்தாது சாதமெல்லாம் பீமன் புசித்து விட்டான்
நஞ்சுண்டபீமனவன் மதிமயங்கி தரையில் விழ
தஞ்சமென்று தர்மர்முதல் தவித்துப்புரண்டு அழ
பஞ்சவர் படுந்துயரம் பாரளந்தோன் தானறிந்தார்
சஞ்சலமகற்றிடவே-ஓர் ஜோகிபோல் வேடங்கொண்டார்
ஆயாசம் கொண்டிருக்கும் ஐவரிடம் வந்தாரே
மாயமூலிகையாலே மன்னனை எழுப்பினரே
அலண்டு எழுந்தானே ஆவேசமாய் பீமன்
கலங்கின ஐவர்களை களிக்கச் செய்தார் மாயன்
இன்னும் சிலநாள் சென்று இடும்பன் துரியனவன்
சண்டாள சகுனியிட சதியோசனையாலே
மன்னர் பஞ்சபாண்டவரை மாசபைக்கழைத்து வந்து
நன்மையுடன் பேசி நாசகாலனும் துணிந்து
சகுனியின் சூழ்ச்சியால் சதுரங்கம் ஆடிடவே
தொகுத்து சூதாடியதால் தோற்கசெய்தான் பாரினிலே
நாடிழந்தார் நகரிழந்தார் நல்லபணி தானிழந்தார்
வீடிழந்தார் பொருளிழந்தார் வீரமுடி தானிழந்தார்

தானும் அடிமையானார் தலைசாய்ந்தமரலானார்
வேணுமென்று சகுனி விகர்ப்பமொன்று செய்யலானான்
பத்தினி துரோபதையை பகடையில் வைத்தாடிடவே
மெத்தவே தர்மருக்கு மீசுரமாய் கூறிடவே
சரியென்று சம்மதித்தார் சொக்கட்டான் ஆடலுற்றார்
அரியவே தோற்றாரே அமைதியாய் அமர்ந்து விட்டார்
கர்ஜ்ஜித்தே துர்ச்சாதனன் கடுங்கோபமாக வந்தான்
பத்தினி துரோபதையை பார்ச்சபைக் கழைத்து வர
அரசர் சபைநடுவே ஆரணங்கை கொண்டுவந்தான்
சிரங்குனிந்து ஐவர்களும் சித்திரம் போலேஇருந்தார்
கலகலவென்று நகைத்த கபடன் துரியோதனனும்
மலைபோல் சிம்மாதனத்தில் மம்மதையாய் யமர்ந்தவனும்
உரியடா துர்ச்சாதனா-இந்த உத்தமியாள் சேலைதனை
பரிகாசமாகவன்று நம்மை பார்த்து நகைத்தவளை
என்று துரியனுரைத்திடவே துர்ச்சாதனன் கோபமுற்று
சிறிதுமே அஞ்சாமல் சீறியவன் பற்கடித்து
கரகரவென்றே சுழன்று கரத்தால் சேலையை இழுத்து
பரபரப்புடன் வலித்தான் பாதகன் மிகதுடித்து
அந்த சமயத்திலே அலறியே துரோபதையாள்
நின்று சபைதனிலே நாராயணனை துதித்தாள்
அறிந்தாரே எனது தந்தை ஆதிமூலன் அவள் துயரை
மறைந்திருந்து துரோபதைக்கு மாளா துயில் வளர
கணக்கற்ற சேலைகளை காருத்தானளித்தாரே
மனங்கலங்கி மன்னரெல்லாம் மனப்ரம்மை கொண்டாரே
கைசோர்ந்து கால்சோர்ந்து கனத்தமுடி சோர்ந்து
மெய்சோர்ந்து துர்ச்சாதனன் மண்ணின்மீதில் விழுந்து
மடிந்தவன் போலானான் மாயன் தயவாலே
துடித்து துரியனவன் துரைமன்னர் முன்னாலே
பன்னிரண்டு வருடம் பாண்டவர் வன்ம்போக
இன்னுமோராண்டுமவர் இருந்து மறைவார்
திறன்காம் வருடத்திலே பரிந்து இவர் நாடடைந்தால்
நீதியுடன் பாதிநாடு நிச்சயமளிப்பே னென்றார்
நல்லதென்று ஐவர்களும் நாயகியாள் துரோபதையும்
பொல்லாத சபதம் செய்து போனார் வனவாசம்

என்னை பெற்ருேன் கருணையினுல் பதிமூன்று நல்வருடம்
வற்ருத பொய்கையை போல் வாழ்ந்த வைரவர்களும்

ஆண்டு பதினுன்கு ஐவர்களும் கழித்தே
தூண்டினுர் என் தந்தைதனை தூதுக்கு அவனிடத்தே

தூதுசென்ற மாயனையும் துணிகரமாய் கொல்லவென்று
சூதுடன் சிம்மாசனமும் ஜோடித்தான் துரியனன்று

நாடு கொடுத்திடவே நம்மால் முடியாதென்ருன்
ஜோடியாய் சமர்புரிந்து சேகரித்து கொள்ளுமென்ருன்

சரியென்று படுகளத்தில் சமர்புரிந்தார்கௌரவர்களால்
துரியனுடன் பிறந்த தொண்ணூற்ருென்பது பேர்கள்

அனைவரையும் வென்ருரே ஆயன் சகாயத்தில்
துணைகொண்டு துரோபதையாள் செய்தசபதம் முடித்தாள்

அவர் பாண்டவர் சகாயனடி பக்தர்களின் நேயனடி
பாண்டவர்க்கும் மைத்துனண்டி உன் தந்தை ஜம்பம்
[பலியாதடி

நான் மாண்டுமடிவேனென்று மாதே வருந்தாதே
செண்டு தனத்தாளே சித்திரப் பூங்கோதே

நாழிகையாகுதடி நான்போகவேணுமடி
தோழியரே எந்தனை நீ தொந்தரவு செய்யாதேயடி

## மன்மதன் கூறியதைக் கேட்ட இரதிதேவி

### மன்மதனுக்கு அரிச்சந்திரனின் திவ்விய சரித்திரத்தை கூறும் ஒப்பாரி

கரும்புவில் மன்மதனே கங்காளன் மருமகனே
அரும்புவில் லேந்தும் கரனே அருங்கிளி வாகனனே

துரும்பையா ஈசனுக்கு துணிந்தெதிர்க்கப் போகாது
குரும்பு புரிந்தோர்க்கு அவர் கோபமது பொல்லாது

கனிந்தவரை யாதரிப்பார் பணிந்தவர்களுக்கு வரமளிப்பார்
துணிந்தவரை ஜெயிப்பார் தொண்டர்க்கருள் புரிவார்

என் தந்தை பெருமைதனை தானுரைப்பேன் கேளுமையா
அந்தமுள்ள மன்மதரே அன்புடைய அங்கஜரே

அயோத்தி நகராண்ட அரிச்சந்திர னென்றொருவர்
தியாக மிக புரிந்து திகழ்நீதியாய் இருந்தான்
நீதிதவருதான் நெரியும் பிசகாதான்
பாதிமதியோனே படுக்கையிலும் மறவான்
சத்தியம் தவருமல் தவநிலே மாருமல்
அனித்தியமில்லாமல் அயோத்திநகரை ஆண்டுவந்தான்
இவன் சத்தியத்தை யழிக்க தேவர்கள் ஒன்ருய் சேர்ந்தார்
நித்ய விஸ்வாமித்திரரும் நெருங்கியுவ்ன் பாலடைந்தார்
தபசு புரிவதற்கு தரவேணும் தானமென்ருர்
உச்சரித்து அரிச்சந்திரன் உச்சிதமாய் பொன்னளித்தார்
நல்லது மன்னவனே நமக்குக் கொடுத்த பொன்னே
இல்லையென்று சொல்லாமல் இன்பரே வைத்திருப்பீர்
என்று சொல்லி நடந்தே இன்னும் சிலநாள் கழித்தே
கன்னியர்களே யனுப்பி கபடம் புரிய வைத்தே
நாடுமுழுவதையும் நாட்டமுடனே பரித்தார்
பாடுபடவஞ்சித்து பதட்டமுடனே யுரைப்பார்
முன்னேயான் வைத்த பொன்னே தாமதம் செய்யாமலின்று
தந்திடுவா யெனக்கு தக்ஷணமே என்று
என்ற உரைகேட்ட எழில் மிகுந்த மன்னவனும்
ஒன்ருக செல்வமெல்லாம் உத்தமரே உனக்களித்தேன்
ஆயினும் முப்பது நாள் ஆனதோர் தவணேதனில்
நேயமுடனளிப்பேன் நிஷ்டூரம் ஏனோ என்மேல்
என்று மனேவியாள் சந்திரமதி மகன் லோகிதாசனுடன்
மனது கலங்காத மந்திரி சத்திய மூர்த்தியுடன்
நகரைவிட்டு நடந்தார் நக்ஷத்ரகனுடன்
சுகமனேத்தையும் துறந்து துன்பமிகவும் கடன்
தீர்க்கவே காசிநகர் தீவிரமாய் வந்தாரே
பார்ப்பனராம் காலகண்ட அய்யரில்ல மடைந்தாரே
பத்தினியும் பாலனேயும் பார்ப்பனர்க் கடிமையாக்கி
சித்தமகிழ கடனே சேர்த்தே முனிவருக்கு
நக்ஷத்ரகனிட நற்கூலி தன்னேத்தர
இச்சையுற்று வேறுகதி இல்லாமலே பதர
தோட்டி கடுமைபட்டான் சுடலையில் மாடறுத்தான்
வாட்டி பிணத்தை சுட்டால் வாய்க்கரிசி வாங்கியுண்டான்

வெட்டியான்போல்கோலேந்திவரும் பிணத்தைஎதிர்பார்த்து
கட்டை முட்டையடிக்கி காஷ்டமிட்டான் களித்து
இப்படி இவனிருக்க ஏவல் கொண்ட வேதியர்
தற்பை யறுத்துவர தேவதாசன் காடடைய
காட்டிலே தேவதாசன் காலமது தீண்டி
மாண்டு மடிந்துவிட மகன்சேதியைக் கேட்டு
அடிமைகொண்ட அய்யரிடம் ஆரணங்கு விடையும் பெற்று
கொடுமையுள்ள காடடைந்து கோரமாய் மகனைக்கண்டு
தோகைமிகப் புலம்பி சுடலை கரைக்கேறி
வாகுடனே கட்டைமுட்டை வல்லமையுடன் பொருக்கி
காஷ்டமது அடுக்கி கலங்கி மிக புலம்பு
வேஷ்டையுடன் மகனை வளத்தினுளே தீயில்
அனல் பற்று எரிந்திடவும் அரிச்சந்திரன் கண்டிடவும்
மனக்கொதிப்புகொண்டுமவன் மகாகோபம்கொண்டிடவும்
ஆர்க்கரித்து பற்கடித்து ஆரணங்கெதிரில் வந்தான்
யாரடி லள்ளியென்று அதட்டியவன் கேட்கலுற்ருன்
விபரமறிந்தானே வெந்தமகன் தன்னுடைய
சவத்தைச் சுடக்கூலி தந்திடவேணுமென்று
காற்பணம் முழத்துண்டு கட்டாயம் தரவேணும்
நேர்மையது பிசகாமல் நேரிழையேசெல்லவேணும்
அடிமை கொண்ட அய்யரிடம் ஆரணங்கே வாங்கிவாராய்
சடுதியில் வருவாயென சந்திரமதி சம்மதித்து
புருஷன் சொல்தவருமல் பூவை இளங்கொடியாள்
துருசாகசென்ருளே சேயிழை மாதுமவள்
திரும்பி வருகையிலே திக்விஜய காசிமன்னன்
அருங்குழந்தை தன்னை எவனோ கொன்று எரிந்தான்
அந்த குழந்தை தன்னை அருஞ் சந்திரமதி யறிந்தாள்
தன்னுடைய மைந்தனென்று தாவியவளெடுத்தாள்
கள்ளியென்று அன்னவளை காசிராஜன் நிச்சயித்து
துள்ளவே வெட்டும்படி தோட்டியிடம் கொடுத்து
தோட்டியவன் அழைத்துவந்துதுணைவன் அரிச்சந்திரனிடம்
வெட்டி புரியும்படி விட்டுச்சென்ருன் அத்தருணம்

நல்லதென்று அரிச்சந்திரன் நாயகியை கண்டானே
அல்லெல்லா மறிந்து அங்கம் துடித்தானே
மனைவியை வெட்டுதற்கு மனது துணிந்தானே
குணமுடன் பரமனடியை கும்பிட்டு பணிந்தானே
ஓங்கியே வெட்டுகையில் ஓடிவந்தார் கௌசிகரும்
சோங்கவே அரிச்சந்திரனை துணிக்காதே என்றவரும்
சொல்லவே கேட்டானே சோகமிக கொண்டானே
தொல்லையுற்று கௌசிகனை தூக்ஷணித்து நின்றானே
துணிந்தவன் மறுபடியும் தோகையரைவெட்டலுற்றான்
கனிந்த எனது தந்தை கங்காளன் எதிரில் வந்தார்
மடிந்த மகனை எழுப்பி மகாதேவன் தந்தாரே
படிமீது ராஜ்யத்தை பழமையா யமைத்தாரே
லோகிதாசனுக்கு பட்டம் நூதனமுடனளித்து
யோகி எனது தந்தை யுள்ள மிககளித்து
மங்களமாய் வாழச் செய்தார் மன்னுதி மன்னவனை
அங்கஜனே கேட்டீரோ அம்பலவன் சேதி தன்னை
இன்யாகிலும் எனது இனிய மொழி மீறாமல்
கனிந்த எனது முகம் காதலரே சோராமல்
பட்டியணைந்தினி நாம் கட்டிலி லாரோகணித்து
திட்டமுடன் வாழ்ந்திடுவோம் தெய்வீக சரந்தொடுத்து

## இரதிதேவி யுரைத்ததைகேட்ட மன்மதன் கோபித்து மார்க்கண்டேயர் சரித்திரத்தை ரதிதேவிக்கு கூறும் ஒப்பாரி

ஏதடி மாமயிலே இனிய பசுந்தேனே
சூதனுன் தந்தைதனை சூரனென்றாய் மானே
பித்தன் புளுகனடி பேயாட்டக்காரனடி
சித்தமது சுத்தமில்லா ஜெகஜாலக்கள்ளனடி
முன்னென்று பேசிடுவான் முழித்து திகைத்திடுவான்
ஒன்று மறியாதவன் போல் உலகில் பிதற்றிடுவான்
அவனுடைய சேதிதனை ஆரணங்கே கூறுகிறேன்
கவலையின்றி மாமயிலே கதையதனை நீ கேளேன்

தவத்திற் சிறந்தவராம் தவயோகிவானவராம்
குவலயமெல்லாம் புகழும் மிருகண்டுமகரிஷியாம்
மனைவியாள் மருத்துவதி மாதுடனே யிருந்து
துணைவியுடன் இல்லறத்தில் தானிருந்தார் சிறந்து
மைந்தனில்லா குறையால் மனது நொலிந்துமவர்
இருந்திடும் நாளினிலே இந்திரப்பதிப் போனார்
மைந்தனில்லை என்றிவரை மாசபையில் சேர்க்காமல்
தொந்தரை புரிந்து தேவர் துறத்தினார் பூலோகமதில்
மிருகண்டு மகாமுனிவர் மாளா துயரமுற்று
பெருமான் பரமன் தனை பரிந்து தபம் புரிந்து
ஆளனும் தேவியுமாய் அகோர தவம் புரிந்தார்
நீலகண்ட முனிவர்முன் நிமலனார் வந்து நின்றார்
ஏதுவரம் வேண்டி என்னை துதிக்கிரீரென்றார்
கோதுடைய மைந்தன்வரம் கொடுத்தருளும் தேவர்என்றார்
முனிவரை கேட்டு முக்கண்ணன் கூறுகிறார்
புனிதரே உங்களுக்கு பிள்ளைவர மில்லையென்றார்
இல்லையென்று பிள்ளைவரம் இடதுடனளித்தாலும்
வல்லவன் மடிந்திடுவான் வாழ் பதினாறுவயதில்
பதினாறு வயதுவரை பாலன் வளர்ந்திருப்பான்
அதற்குப்பின் எமனவன் அவன்உயிரைப்பற்றி போவான்
சம்மதமோ உங்களுக்கு சாற்றிடுவீ ரித்தருணம்
என்றுரைக்க மாமுனிவர் ஈசனே தாருமென்றார்

## பிறகுமிருகண்டிற்கு மகனான மார்க்கண்டேயன் பிறந்து நமனை வென்ற ஒப்பாரி

ஐரெண்டு திங்கள் சென்று அருங்குழலாள் மருத்துவதி
நொய்யவே மெய்வருந்தி மகனை பெற்றாள் தினத்தில்
மார்க்கண்டனென்று பெயர் மகனுக்கமைத்தாரே
சீர்த்தியாய் சிறுவன் தனை செல்லமாய் வளர்த்தாரே
அரியகலை ஞானமெல்லாம் அறிந்தானே மார்க்கண்டனும்
நெறியுடன் தெய்வபக் நிதித்தமும்கொண்டானவனும்

பதினாறு வயதினிலே சதமாக மாள்வதென
விதி தன்னை மதியாலே வெல்லத் துணிந்தானே
தன்னையீன்றோரிடத்தில் தனையன் விடை பெற்றானே
எண்ணிலா க்ஷேத்ரமெல்லாம் ஏகி நடந்தானே
இவனுக்கு ஆயுள் பதினாறு ஆனது பாரப்போது
காயமழிப்பதற்கு காலன் வரும் வேளையது
ஆற்று மணலெடுத்தான் ஆவிடை லிங்கம் செய்தான்
போற்றியே ஈஸ்வரனை பூசை புரிந்துவந்தான்
கணக்கு சரியாச்சி காலன் எதிரில் வந்தான்
பிணக்கமுள்ள பாலகன்போல் பாசக்கயிரெறிந்தான்
பாசக்கயிர் விழவே—உங்கள் பரமன் எதிரில் வந்து
மோசமாய் மரலிதனை மோதிவிழ உதைத்து
ஒரு சிறுவனுக்காய் பரிந்து சித்து வித்தை செய்தானே
பெருமையுள்ள எமன்தனை பூவில் உதைத்தானே
என்றும்பதினாறுஆயுள் அளித்தானே மார்க்கண்டனுக்கு
சந்நியாசி உன் தகப்பன் தத்துவமிதோ மிகுத்து
இத்தகைய புத்தகனை யியம்பினாய் பெருமையுடன்
மெத்த பகட்டுடைய மேன்மை மிக வுள்ளசிவன்
அவனாலே எந்தனுக்கு அழிவு வந்து நேருமென்று
கவனமதில் எண்ணாதே காதற்கிளியாளே
நான்—போக விடை கொடடி போய் வாரேன் பரமனிடம்
அவன் யோகந்தனை யழித்து உடன் வருவேன்களித்து

## மறுபடியும் மதன் இரதி தேவிக்கு தேருதல் கூறும் ஒப்பாரி

ஆசையினால் மயிலே —துயர்— அணுகாது பூங்குயிலே
போக விடை தந்தாலே புகழ் பெறுவேன் தரணியிலே
அபயமென்றடைந்தவரை அலையவிடலாகாது
விமலனுக்கு நாம் பயந்து நின்று விடப்போகாது
அரனுக்கு பயந்து நின்றால் அவனியோ ரென்னை கண்டால்
புறமுதுகிட்டேனென்று புறம்பேசி ரேசிடுவார்
அஞ்சாத ஆரணங்கே அரன் பெரிதல்ல எனக்கே
செஞ்சடை சித்தன் தவத்தை சீர்குலைப்பேன் யோகமதை

அங்கையினில் வில்லிருக்க அரும்பு கணையிருக்க
மங்கையர் படையிருக்க மணிவட்டகுடையிருக்க
அருங்கிளி வாகனமிருக்க அமைத்ததென்றல் தேரிருக்க
இருள்யானை எனக்கிருக்க ஈசனை கண்டு திகைக்க
அதிவிரைவில்சென்றிடுவேன் அரன்நிலையைக்கண்டிடுவேன்
சதிசெய்து வென்றிடுவேன் ஜெயம் புரிந்து வந்திடுவேன்

அன்னமே என் தந்தையிட அனுக்கிரஹமிருக்க
பின்னமொன்று நேராது பித்தனின் தபழிக்க

அமரர்களுக்காய் பரிந்து அங்கஜன் கணை தொடுத்து
விமலனிடம் மாண்டாலும் விண்ணுலகில் கியாதியுண்டு

ஆவியை துறந்தேனும் அமரரிடர் தீர்க்கவேணும்
தேவிரதியே யானும் தீவிரமாய் போகவேணும்

ஆரணங்கே தேனே அன்ன ரதிமானே
சீராய் விடைதானே சீக்கிரம்தா செந்தேனே

அங்கஜனுரை மொழியே ஆரணங்காள் கேட்டாளே
மங்கையறும் மாரனுக்கு மகிழ்ந்து மொழி கூறுவாளே

## மன்மதன் சொன்னதை கேட்டு மனது திடுக்கிட்டு இரதி மறுத்துக் கூறும் ஒப்பாரி

ஏந்தலரே என்ராஜா எனக்கிசைந்த காதலரே
வேந்தரே யானுனக்கு வேம்பானேன் அங்கஜரே

அண்டமதிலே நாம் ஆனந்தமாய் வாழுதற்கு
சண்டாள தேவரெல்லாம் சத்ராதியாயிருந்தார்

கொங்கையிதழ் விம்முதையா கோதைமனங்குன்னுதையா
செங்கையா லெனை தழுவ சித்தமெதிர் பார்க்குதையா

கொள்ளி வைக்கபிள்ளையில்லை குடமுடைக்க மைந்தனில்லை
அள்ளி அரிசியிட ஆண்டு திதிக்காளுமில்லை

நாம் பாலப் பிராமையா பக்கமெல்லாம் பூபூர்க்கும்
கோலக் குழலாளின் கொஞ்சிமொழியார்பரிக்கும்

எந்தன் சொல் தட்டிடாதே எனக்கிசைந்த புண்ணியரே
உந்தனை விட்டரை நாழி உலகில் வாழேன்கண்ணியரே

தேவர் துயராளுலென்ன தெய்வலோகம் அழிந்தாலென்ன
யார்தாலொழிந்தாலென்ன அதனல் நமக்காவதென்ன

சிரித்து விளையாடும் சின்னஞ்சிறு பெண்ணுச்சே
என்னை வெறுத்து தானியாக்கி வில்மாரா போகலாச்சே
என் வார்த்தை மீராதீர் இந்திரன் சொல்கேளாதீர்
கண் மூன்றுடையசிவன் கோபத்திற் காளாகாதீர்

## இதைக் கேட்ட மதன் மறுபடியும் இரதிதேவிக்கு தேருதல் கூறும் ஒப்பாரி

மாமயிலே இரத்தினமே என் மனதுக்கிசைந்தவளே
கோமள வல்லியரே கொஞ்சும் மொழியாளே
ஆண்டிக்கு நாம்பயந்து அமரர்களை துரோகம் செய்தால்
வேண்டியபழிநேரும் வித்தகிபோகாதிருந்தால்
பங்கம் ஒன்றும் நேராது பாவையே நீ அஞ்சாதே
மங்களமுடன் வருவேன் மயிலினமே துஞ்சாதே
நல்வாக்கு நீ கொடடி நானும் தபசழிக்க
அல்லலை நீ விட்டிடடி அங்கஜன் பெயர் செழிக்க
வாடி வருந்தாதே வண்ணமுகஞ் சோராதே
ஓடிஒரு நொடியில் வந்திடுவேன் தப்பாதே
பாங்கியர் சூழ்ந்திருக்க பவளப் பசுங்கிளியே
ஊஞ்சலில் நீயாடி உகந்திருப்பாய் மெய்ரதியே
போகும் பயணமதை பூவையே மறுக்காதே
ஏகம்பவாணனிஞல் இடைஞ்சலொன்றும்நேராதே
அப்படி எந்தனை அரனுரெதிர்த்தாலும்
தப்பாமல் தேவரெல்லாம் எனக்கு தனித்துணை வருவார்கள்
என்னை எதிர்த்த சேதி எந்தன் பிதா கேட்டாலே
கண் மூன்றுடையோனென்று கார்வண்ணன் பாராமல்
பழிக்குபழி வாங்க பரந்தாமன் சக்கரத்தால்
ஈசனின்கழுத்தையறுத்திடுவார்காந்தாளகோபத்திஞல்
பச்சைநிறத்தோனிடம்—உங்கள் பரமன் ஜெயம் செல்லாது
அச்சுதனின் மைந்தனெந்தன் அரும்புகணைபொல்லாது
பரமன் தபசழித்தாலே பாருலகில் கியாதியுண்டு
அபயமென்றதேவர்களால் எனக்கனுக்கிரகம்மெத்தவுண்டு
தனுவேந்தி சென்றுவர தயங்காமல் விடைகொடடி
மனுநீதி தவருத மார்க்கமிதுதாண்டி

## மதனுரைத்ததைக் கேட்ட இரதி மாது கதறிப் புலம்பும் ஒப்பாரி

ஐயையோ என் கணவா
அங்கஜவேள் சிங்கார
மெய்மறந்து பேசுகின்றீர்
மதனுகமனுரே
பொடிமருந்து போட்டானே
பொல்லாத இந்திரனும்
அடிமைபோல் போரேனென்றீர்
அரன்பதிக்கே நீர்தானும்
சாரையும் சர்ப்பம்போல்
சரசமுடன் நாம்வாழ
பேராசை கொண்டானு
பொல்லாத படுபாவி
நிமிஷம் பிறிந்தறியேன்
நிரந்தரனே உன்னை விட்டு
கமழும் நம் பாசபந்தம்
கட்டர செய்தான் பகட்டு
போகாதே போகாதே
பூவை என் சொல் மீருதே
ஆகாதே ஆகாதே
என் சொல் அலட்சியமாய் பாராதே
கலந்து சுகித்து இங்கு
காலத்தை கழித்திடலாம்
நலந்தவரி பரமனிடம்
நாதனே போகவேண்டாம்

## மேல்விழுந்து புலம்பும் ரதியை தேருதல் படுத்தி மாரவேள் மறுபடியும் கூறும் ஒப்பாரி

வேல்விழி மாதரசே
விண்ணவர் புகழுமுதே

வாலே வயதுடைய
வாலிப பெண்ணணங்கே
சின்னஞ்சிறு வயதில்
சித்தினியே உனை விடுத்து
தன்மையுள்ள காரணத்தால்
தவித்து புலம்புகின்ருய்
என் வார்த்தை மீருதே
ஏலக் கருங்குழலே
கண்மூன் றுடையவனின்
கடுந்தபசை யானழித்து
சீக்கிரத்தில் வந்திடுவேன்
உன்—சித்தம் கலங்காதே
பாக்கிய பூஷணமே
பவழ ரதிக்கிளியே

## முடிவில் ரதிதேவி மன்மதனுக்கு விடையளிக்கும் ஒப்பாரி

அணங்கனுரை மொழியை
அன்னரதி கேட்டாளே
பிணங்காமல் மனது
பின்னும் யோசித்தாளே
பிடிவாதங் கொண்டாரே
பிராணகாந்தன் என் கணவர்
முடியா தினிமீது
மன்மதரை யான்தடுக்க
என்று மனந்துணிந்து
இளமாரனைப் பார்த்து
பொன்போன்ற நன்மொழியால்
பூவை மனங்களித்து
கன்னிரதி கிளியாள்
கண்ணாளனுக் குரைப்பாள்
மன்மதரே இந்தாரும்
என்று மகிழ்ந்து தாம்பூலமளித்தாள்

## மன்மதன் பரமனின் தபசழிப்பதற்கு புறப்படும் ஒப்பாரி

ஈசன் தபசழிக்
இந்திரனின் சொற்பளிக்க
வாசன் மகன்போக
வஞ்சிரதி விடையளிக்க
இயல்புடனே ஸ்நானஞ்செய்து
இந்திரவர்ண பட்டுடித்தி
துயிலாலே நீர் துவட்டி
துய்யனை மனதில்பதித்து
எழுபதுமார் காவிகச்சை
ஏழுசுத்தாய் பிகுவெடுத்து
கழுத்தில் ருத்ராக்ஷமணிந்து
கையில்காப்பு கொலுசணிந்து
இருகாதில் குண்டலமாம்
இனிய பச்சைமேல் முருகாம்
பருவமதன் மார்தனிலே
பகட்டான பதக்கங்களாம்
இனியதொரு நெற்றியிலே
எழிலுடன் திலகமிட்டான்
கனிவுடன் கரும்புவில்லை
கரமது பிடித்து நின்றான்
ஏருங்கிளி வாகனத்தை
இயல்புடனலங்கரித்து
சீருடனமர்ந்தானே
சிவன் தபசழிக்க வென்றே
இருள் யானை கன்னிப்படை
இவன் பின்னணிவகுக்க
கருத்தால் தென்றல் தேரேறி
காமனும்வீற்றிருக்க
இணையில்லா வட்டகுடை
எதிரே நிழல் கொடுக்க
துணைவிரதி எதிரில் நிற்க
தோகையர் ஆலாத்தி சுற்ற
ஏகிடவே துணிந்து
ஈசனை மனதில் நினைத்து
மோகச்சிலையை இழுத்து
மலர்கணையை கைபிடித்து
இன்னலிலா திருக்க
இளங்கொடி விடைகொடுக்க
அன்னகிளியும் பறக்க
அங்கஜன் பயணமிட

## மன்மதன் சகுணங்காணுதல் ஒப்பாரி

பூனை குறுக்காச்சு
புதுப்பானை எதிராச்சு
ஏணியும் சாணும்
எதிரில் வரலாச்சு
வாணியன் எண்ணைவிற்று
வாரான் எதிரினிலே
வாழாக் குமரியவள்
மீளா நெருப்பெடுத்தாள்
வலியனிடமாச்சு
வக்கா எதிராச்சு
தாலியறுத்த முண்டை
தனக்கெதிரில் வரலாச்சு
வக்கணை யிட்டொருத்தி
ஒப்பாரி வைத்தழுதாள்
எக்கால வேதியனும்
ஏப்பமிட்டெதிரில் வாரான்

வாய்விட்டு ஆந்தையது வருந்தியலருது பார்
சாய்ந்தது ஆலமரம் சதுராகவே அந்நேரம்
வயிரக்கல் மாளிகைதான் வகையாய் இடிந்துவிழ
கையில் கட்டோலையுடன் கணக்கன் எதிரில்வர
வழுக்கைமொட்டை பிராமணத்தி வாராளெதிரினிலே
கொழுத்த எருமைக்கிடா அப்போ கும்மாளமிட்டு ஓடிவர
வருது சகுனமெல்லாம் வாழ்மாரனெதிரினிலே
பெரிதுமதை பாராமல் பயனமது சோராமல்
வஞ்சியர் படையுடனே வாரான் வேகமுடனே
செஞ்சடையோன் தபத்தை சீராய் கலைத்திடவே
ஒருகாத தூரத்தில் உமைபரமன் யோகத்திலே
அமர்ந்து மிருக்கையில் காமன் எதிர் வருகையில்
வடமாலியோகமதை வாழ்மாரன் கண்டானே
கடவுளே காருமென்று கைதொழுது நின்றானே

## யோகத்திலிருக்கும் பரமனைக்கண்டு மன்மதன் வணங்கும் ஒப்பாரி

அமரேசன் சொற்படிக்கே
அரனார் தபசழிக்க
மனதார மனைவியிடம்
தகுந்த விடை பெற்றுமதன்
அன்னக்கிளி வாகனத்தில்
அங்கஜன் அதிவிரைவில்
கண்மூன் றுடையோனிடம்
கடுகிவந்தா னவ்விடத்தில்
ஆதிபரமன் செய்யும்
அகோரதபம் கண்டானே
சோதிப்பதெவ் விதமெனவே
சோக்கங்கொண்டு நின்றானே
ஆற்றிலிறங்கியவன்
அலறவே ஸ்நானம் செய்தான்

வேற்றுமை தனை தவிர்த்து
விமலனெதிரில் வந்தான்
அருகுதும்பை கொன்றைமலர்
அறுத்துவந்தே அங்கஜனும்
திரிலோகன் பாதமதில்
தூவி சரணம் செய்தான்
அரஹரா பரனேயென்று
அடிமலர் வணங்கி நின்றான்
சிரம் வணங்கி போற்றிசெய்து
சிற்பரனை தெண்டமிட்டான்
ஆதிபரம் பொருளே
அடியேனின் சற்குருவே
நான் நீதியில்லா காரியத்தை
நிகழ்த்தவந்தே னுன்னிடத்தே
ஆயிரக்கண் ணிந்திரர்க்கு
அபயஸ்தம் மளித்ததினால்
வாய்மொழி பிசகாதிருக்க
வந்தேனுனை எதிர்க்க
அடியேன் மனதார
ஆண்டவனே உந்தனுக்கு
கொடுமையொன்றும் செய்யேனே
கொன்றை யணிந்தோனே
என்று அஞ்சி பயந்து நின்றான்
அரன்மீது தியானமானான்
மிஞ்சியே கரும்புவில்லை
மன்மதனும் கைபிடித்தான்
அரும்பு கணைஎடுத்தான்
அத்தனிட பாதம்வைத்தான்
நான் துரும்பையா உந்தனுக்கு
துணைசெய்ய வேணுமென்றான்
முன்னே ரதியிடத்தே
யானுன்னை தூஷணித்தேன்

கண்மூன் றுடையவனே கபடமொன்றும் வைத்தறியேன்
என்று அத்தனை சுத்திவந்தான். அவர்க்கு வலமாகநின்ருன்
சித்தந்திடமே கொண்டான் சித்தஜன் சிலேபிடித்தான்
கரும்புவில் கைபிடித்தான் அரும்புகணை எடுத்தான்
பரம்பொருள் மீதுவிட பஞ்சபாணன் துணிந்தான்
அங்கஜன் விடுத்தகணை அரன்மீது பாய்ந்திடவே
சங்கரன் கண்திறந்தார் தபயோகத்தை மறந்தார்
கண்கள் சிவந்தாராம் காந்தாளம் கொண்டாராம்
மின்னல் விழிபோல மிரள விழித்தாராம்
படபடென்று மீசையது பற்றி துடிக்குதுபார்
விஷமுண்ட ஈசனுக்கு விபரம் புரிந்ததுபார்
ஆற்ருெணு கோபங்கொண்டார் அச்சுதன் மகனைக்கண்டார்
அவர் நெற்றிக்கண்ணைத்திறந்து நீராக்கமனந்துணிந்தார்
அரன் விழியைத்திறக்க அனலானை மன்மதனும்
பரபரப்பாய் தெய்வலோகம் பதருது எரிந்ததினல்

---

## மதன் மடிந்தபிறகு ஆரோக்கியத்திற்கு இரதிதேவி சொற்பனங் கண்டு புலம்பும் ஒப்பாரி

பாவை ரதிமாது பஞ்சணையின் மேல் துயின்று
தேவியவள் கண்ணயர்ந்து நித்திரைசெய்தாளேயன்று
பாதிராத்திரி வேளையிலே பத்தினி கனவுகண்டாள்
மாது மனந்துடிக்க மண்ணில் புரண்டழுதாள்
பக்க மதிலிடிந்து பாரில் விழவும் கண்டாள்
மிக்க காவேரி நதி மேல் வெள்ளம் வரவும் கண்டாள்
பங்கய மலர் கூந்தல் பரிந்து அலேயக் கண்டாள்
மாங்கல்ய மருந்துவிழ மங்கை கனவு கண்டாள்
பின்னலிட்டு வைத்தமலர் பெரிது முனறக்கண்டாள்
மின்னலிளங்கொடிமார் மாரிழகு கொடுக்க கண்டாள்
பரந்தாமன் மைந்தனுக்கு பரிணயமாகக் கண்டாள்
விரகமதன்யானையின் மேல்ஊர்வலம் வரவே கண்டாள்

புறக்கடையின் வைக்காபோர்புதுமையாய் எரியக்கண்டாள்
வாழைக்குலைதள்ளக்கண்டாள் வஸ்திரமும் பற்றக்கண்டாள்

பாண்டத்திலிருக்கும் ஜலம் பொங்கியே வழியக்கண்டாள்
ஆண்டவனாலே மதன் அனலாலெரியக்கண்டாள்

பதைத்து எழுந்திருந்தாள் பாங்கியர்களை அழைத்தாள்
கதறி கண்ணீர் விடுத்து கனவு கண்டதை யுரைத்தாள்

பாங்கிகளே தோழிகளே பரமனிடம் போன
தேங்காத என் கணவன் தீவிரமாய் மாண்டாரடி
பர்த்தாவை பறிகொடுத்த பாவிநானனேனடி
இத்தருணம் யானனுகி அறிந்து வருவேனடி

என்று பைங்கிளியா ளுரைக்க பாங்கியர்கள் விழிக்க
அங்கனமோர் தூதுவனும் அதிவிரைவில் ஓடிவர
பஞ்சபாண்டவர் மடிந்த பழியை யுரைத்து வருந்த
சஞ்சலம் கொண்டு விழுந்தே தையல் மனமெலிந்தே

பதறிப் புலம்புகிருள் பாரில் விழுந்தழுதாள்
பதறிக் கண்ணீர் விடுத்தே கட்டழகிஏதுரைத்தாள்
பாங்கிகளா தோழிகளா என் பர்த்தா மடிந்தாரடி
கூந்தலைலந்து வர கோதை துயில் புரள

சாந்தமதை விடுத்து தகப்பனிடம் வாராளே
செடிக்கொரு கூந்தலாக சிக்குபட்டு வாராளே
மடிந்த கணவனிடம் மாதுரதி வந்தாளே
எழுத்திருக்கும் சாம்பலதை இன்பரதி கண்டாளே

## காமன் எரிந்த சாம்பலருகில் புரண்டு இரதிதேவி புலம்பும் ஒப்பாரி

ஆசையுள்ள என் புருஷா அங்கஜவேள் சிங்கார
என்—நேசம் மறைந்தீரோ—என்னை நடுவீதி விட்டீரோ

போக வேண்டாமென்றேனே பெண்மணியாளென்
ஏகமா மறுத்து எரிந்து நீராகலாமா [மொழியை

வடக்கே மழைபொழிய என்னை தேடிய ராஜாவே
வெள்ளம் வந்து மோதவிட அந்த
வெள்ளத்தை நீந்துவேனே வல்லவனே என்ராஜா
வாழ்க்கைத்துணை மன்னவனே எங்கள்
வள்ளலை தோற்றபாவி இந்த
வையகத்தில் வாழ்வேனே வஞ்சிமனம் தாழ்வேனே (1)
தெற்கே மழை பொழிய என் தெய்வீக ராஜாவே
தென்றல் வந்து மோதவிட என்
தென்றலுக்கு மீள்வேனே தேனே அமுதமே
தித்திக்கும் செங்கரும்பே என்
தேசிகரை தோற்றபாவி இந்த
தேசத்தில் வாழ்வேனே தேங்காதிருப்பேனே (2)
காய்க்கும் பிராயத்திலே என் காமதுரை ராஜாவே
கனிபழுக்கும் நாளையிலே என்
காதல் திருவே கரும்புவில் அங்கஜரே
கரிகால எமனுன்னை கண்டு வைத்தானே என்னை
கண்கலங்க வைத்தானே (3)
பூர்க்கும் பிராயத்திலே என் பூமாரா மன்மதனே
பிஞ்சுவிடும் காலத்திலே எங்கள்
பரமன் மருமகனே பரந்தாமன் நற்சுதனே
படும்பாவி காலனுன்னை பார்த்து வைத்தானே
என்னை பரதவிக்க வைத்தானே (4)
ஐந்துதலை நாகனுக்கு என் அழகு துரை ராஜாவே
அடிநாக்கில் மச்சமுண்டு
கொஞ்சிய பழத்துக்கும் கொஞ்சம் கருப்புண்டு
ஓடுகிற தண்ணீரில் உள்ளே சுழலுமுண்டு
காமதுரையே கலவிக்கிசைந்தவரே—கந்தனிட மைத்துனரே
உன் ரோமம் கருப்பொழிய உந்தன்
தேகமெல்லாம் தங்கநிறம் (5)
மடுவங்கரையோரம் என்மன்மத ராஜாவே ஒரு
மயில்போல் நின்றிருந்தீர் உன்னை
மயிலென்றும் பாராமல் அந்த மரவிபடுபாவி

மாயமாள சண்டாளன் இந்த மாது என்மேல் வஞ்சங்
உன்னை மயக்கம் போட்டு கொன்ருனே [கொண்டு (6)
புன்னைமரம் மேலே என் புண்ணியனே ராஜாவே நாம்
புருவைப்போல் கொஞ்சிருந்தோம் அந்த
பொல்லாத தேவரெல்லாம் நம்மை பார்த்து சகியாமல்
உன்னை பரமனிடம் ஏவவிட்டு அவர்
படுமோசம் செய்யலாமா (7)
உனக்கு கட்டுண்டு காவலுண்டு என் காமதுரை ராஜாவே
நமது கல்லிழைத்த மாடியிலே அந்த
கட்டு கலைந்ததென்று கனியே கனிரசமே
கற்கண்டே சர்க்கரையே கன்னிரதி நாயகரே
உன் காவலது சோர்ந்ததென்று அந்த
காலதூதர் கைதனிலே நீகட்டுண்டுமாண்டதென்று (8)
வெள்ளியால் கொள்ளிபண்ணி என் வேள்மார ராஜாவே
வெண்கலத்தால் தோண்டிபண்ணி
வாழையிலை போட்டு வலதுபக்கம் நூல்மாத்தி
பிண்டம் பிடித்து வைக்க என் பருவ துரையே
பச்சைக்கிளி வாகனனே இந்த
பருவரதிக்கும் உனக்கு ஒரு புத்திரனும் இங்கே இல்லை (9)
பம்பை மயிர் விரித்தேன் என் மன்மத ராஜாவே
பாதிமயிர் உள்ளடக்கி இங்கே என்
பர்த்தாவும் மாண்டதினுல் இந்த பரமன் தபசடியே
ஒரு பறைச்சியைப்போல் நின்றழுதேன் (10)
கோரை மயிர் விரித்தேன் என் கொஞ்சும்கனி அங்கஜனே
குறைமயிரை உள்ளடக்கி இங்கே என்
கணவனும் மாண்டதினுல் இந்த கொடும்பாவி பரமனிடம்
ஒரு குறத்தியைப்போல் நின்றழுதேன் (11)
சம்பங்கிபூ பூர்க்கும் என்சாமி துரைராஜாவே
சந்தனக்கல் மேடையிலே இந்த
தையல்ரதி நின்றழுதால் என்
ஆசைமணவாளா என் அங்கஜவேள் கண்ணுளா
அரும்புவில் கையேந்தும் அதிதீரசிங்கார நம்ம

தெய்வலோகம் கேழ்க்கும் அந்த
தெய்வ சபைதனிலே திருநடனமாடி வரும்
திலோர்த்தமை திடுக்கிடுவா நான்
திக்கில்லாபாவியென்று அவள் தேம்பி புலம்பிடுவாள் (12)

தோட்டத்து மருடம்பூ என்னை தேடிய ராஜாவே
துணையான தாழம்பூ என்
காமவேள் சிங்காரா கரும்பு கிளை மாரா—நான்
தாமை மலரிழந்தேன் தாலிச்சரடிழந்தேன்
தலைக்கெண்ணை சீப்பிழந்தேன் ஜவ்வாது பொட்டிழந்தேன்
இந்த தற்பரன் தபசடியே இங்கே
தரையில் புரண்டழுதேன் (13)

## பிறகு இரதிதேவி யோகத்தில் அமர்ந்திருக்கும் பரமசிவனிடத்தில் வந்து நிந்தித்து. புலம்பும் ஒப்பாரி

சண்டாளா என் தகப்பா சங்கரனே சாம்பசிவனே
உண்டோ இவ்வனியாயம் உம்பர் பெருமானே
சதிசெய்தென் மன்னவனை தனல்கொண்டெரிக்கலாமா
பதியைப் பிரிந்துலகில் பாவி நான் வாழலாமா
சஞ்சலந்தேடி வைத்தாய் என் தாலியை யறுக்க வைத்தாய்
மஞ்சளுங்குங்குமமும் : ஈதென்னை வெறுக்கவைத்தாய்
என்னை சிறுவயதில் வளர்த்து சித்தஜர்க் கெனையமைத்து
இந்த பருவவ்யதினிலே பரதவிக்கச் செய்தீரே
சிலைமாரனுந்தனுக்கு செய்த பிழை என்னவய்யா
புரமூன்றெரிந்தவனே புண்ணியனே கூறுமையா
சிரமுடன் கோபங்கொண்டு மருமகனை நீ வதைத்தால்
உரமுடைய தேவரெல்லர்ம் உந்தனை நகைத்திடுவார்
சிங்கமால் அவர் தகப்பன் இந்த சேதியை அறிந்தாலே
சங்கையில்லா உன் தலையைஅவர்சக்கரத்தாலறுப்பாரே
ஜெகதலமெல்லாம் பழிக்க தபம் செய்ய அமர்ந்தீரோ
பகைத்து என்குடி கெடுக்க பரமனே நினைத்தீரோ

செய்த உபசாரம் தந்தை நீ தாளொணுதோ
வையகத்தோர் உனைபழிக்க வகைபேச செய்குவதோ
சிறியோர்கள் செய்பிழையை பெரியோர் பொறுக்கவென்று
அறியாமல் நீரெரித்ததினுல் அமங்கிலிட யானே நின்று
என்று சாஷ்டாங்கமாய் பணிந்தாள் சங்கரனை துதித்தாள்
காக்ஷியாய் மாங்கல்யபிச்சை கடவுளே தாருமென்ருள்
சன்மார்க்க மானரதி தையல் வருந்துவதை
கண்திறந்து பார்த்தாரே கடவுள் களித்தாரே

## பரமன் இரதிதேவிக்கு தேருதலுறைக்கும் ஒப்பாரி

என் மகளே ரதியே இளங்கொடி புண்யவதியே
உன் நாதனின் சதியே உலகில் நேர்ந்தது பழியே
இழிவான காரியத்தை எவஞெருவன் செய்தாலும்
பழிவாங்காது விடுத்தல் பாவமெல்லா மேன்மேலும்
என்தபசைக்கெடுக்க இடுக்கமென்ன யான் புரிந்தேன்
கண்மணியே மகளே கலங்கி புலம்புவதேன்
எத்தனிடகோபம் இடர் வருமென்றறிந்திருந்தும்
மன்மதன் மலர்கணையை மகிழ்ந்தெய்தானேதெரிந்தும்
இறந்தவர்கள் எழுந்தால் இப்பூமி இடந்தருமோ
மறந்துவிடு அவனுசைமனம் வருந்திடத்தகுமோ
இவன் குறும்பை என்னிடத்தில் எட்டவிட்டுபார்த்ததினுல்
குவலயத்தில் எரிந்தான் கோபக்கனலதனுல்
யான் செய்யும் யோகத்திறல் என்னஇடர் மன்மதர்க்கு
தேன்மொழியே ஏதுசெய்வேன் தீர்த்தச்செயலதற்கு
இனி நீ வருந்துவதி லேதுபயனுண்டம்மா
தணிந்து துயர்விடுத்து தனித்து நீ வாழ்வாயம்மா

## பரமன் இரதிதேவிக்குத் தேருதல் கூற அச்சமயம் தேவர்களெல்லாம் பரமசிவனிடம்வந்து பரமனை வணங்கும் ஒப்பாரி

பரமன் விழியாலே படைமாரன் எரிந்தவுடன்
தரணிதனிலே காம தத்துவங்கள் அற்றதுகாண்

உரமான தேவரெல்லாம் உகந்துமனம் வாடி
புரமூன்றெரித்தோனிடம் பரிந்தே வந்தார் நாடி
ஐயனே சற்குருவே அம்பலவான தேவா
வையவுலகமெல்லாம் பாழடைந்து போகுதையா
மன்மதனில்லாமல் மானிலத்தினிலின்பமுண்டோ
நன்மையோ தங்களுக்கு நாதனே சொல்லும் களித்து
என்றுமே தேவரெல்லாம் ஈசனை போற்றி செய்ய
கண்மூன்றுடைய சிவன் கடவுளும் ஏதுரைப்பார்
உண்மைதான் தேவர்களே ஒருவார்த்தை கேட்டிடுவீர்
என்னை பகைத்தவர்கள் ஈடேற மார்க்கமுண்டோ
இவனுக்காக பரிந்து இமையவரே வாராதீர்
என் தவமகிமையைப் பார்த்தான் தணலாய் எரிந்தான்காண்
யார் வந்தெதிர்த்தாலும் அவனுயிர் மீளாது
பார்மீதிலெந்தன் கோபம் பகர்ந்தேன் வீண்போகாது

## இரதிதேவி மறுபடியும் ஈசனிடம் வருந்தி மாங்கல்ய பிச்சை கேட்கும் ஒப்பாரி

கருணாகரப்பொருளே காதகிக்கோர் நல்லருளே
சிறு பிழையை பொருத்தருளே சித்தம் வைத்து காத்தருளே
கணவனை நானிழந்து கட்டிய தாலியிழந்து
தனியே இருப்பதற்கு தகுமோ நீர் சொல்லுகந்து
கண்மூன்றுடைய பிதா கடவுளே நீரிருந்தும்
முண்டையென்று சொல்வதற்கு மேதினியில் நியாய [முண்டோ
கர்த்தனே என் மன்னவனை கனலாலெரித்ததுபோல்
வித்தகரேஎனையெரித்தால் வேணபுண்யம்உண்டிதிலே
கொஞ்சும் பிராயத்திலே நான்கொழுந்தும்விடும்காலத்திலே
பஞ்சணையில் விளையாடும் பாலிய பருவத்திலே
கன்னி சரடிழந்து கன்குங்கும மலரிழந்து
மண்ணுலகில் யான் வருந்த மகிபரே செய்தாய் சிறந்து
கணவனுயிர் பெற்றிடவே கர்த்தனே கண்பாருமையா
வினையமாய்நினைத்துவிடில் இந்தவித்தகியேசொல்லுமையா

## மதனை பரமன் அருபியாக எழுப்புதல் ஒப்பாரி

திருப்பார் கடல்தனிலே தினகரன் போலுதித்தவளே
பொருத்தமுள்ள என் மகளே புண்ணியவதியாளே
தென்றற்றேருள்ள மதன் செய்த குறும்பதனுல்
பின்னமடைந்துமவன் பற்றி எரிந்ததினுல்
தீய்ந்துமவன் பஸ்பமானுன் தேன்மொழியே ஏது செய்வேன்
மாய்ந்தவரை எழுப்ப மாளாது காணுமிப்போ
தெய்வீக மெய்ரதியே தீரவுன் கவலையென்ருல்
வையகத்திலிவனை அருபியா எழுப்பி தாரேன்
தேனே உனக்குமட்டும் தெரிந்திடும் மதனுருவம்
காணுர்கள் மற்ருெருவர் காமனிட உருவம்
தீங்கிழைத்த அங்கஜர்க்கு தீர்த்த கடமையிது
பாங்குடன் வேணுமென்ருல் பாருமிதோ பிரேமையிது
என்று திருநீரதை எடுத்து சாம்பலின்மேல் தூவினுரே
அருபியாய் அங்கஜனும் ஆர்ப்பரித்தெழுந்தானே
தீயாயெரிந்து மதன் திட்டென் ரெழுந்திருக்க
மாதுரதி பார்த்து மலரடி பணிந்தாளே
திகம்பரனின் பக்கத்தில் தேவிரதியுடனே
பசுபதி மருகன் மதன்மலரடி பணிந்தாளே
தேவனே க்ருபா நிதியே தெரியாமற் செய்த பிழை
பூவினில் பொருந்திடவே பணிந்தேனையா ஏழை
என்று—தோத்தரித்த மன்மதனை சிவபெருமான் கண்டாரே
ஆர்த்து மனமகிழ்ந்து அன்புகொண்டுரைப்பாரே
தெரிவிப்பேன் கேள்மருகா தேர்விஜய அங்கஜனே
பொருத்தமில்லா காரியத்தை பூமியிலே செய்யாதே
தாரணியில் மானிடர்கள் தழைத்திடவே இல்லறத்தில்
மாராமல் வாழ்ந்திருக்க மனுநீதி யாயுலகில்
சதிபதிகள் உறவாய் சையோக காதல் புரிந்து
மதித்திடவே வாழ்ந்திடுவாய் மாரோக்ய புரியிருந்து
திருநேத்ரதாரி சொன்ன திருவாக்கே கொண்டுள்ளமே
பொருத்தமாய் ரதியுடனே போனுரோக்கியபுரமே

8

முப்பது முக்கோடி முனிவரும் தேவர்களும்
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் தபோதனரும்
பூமாரியே பொழிந்து புகழாய் நிறைந்திருந்தான்
காமதகனனென்று கர்த்தருக்கு பேராச்சு
கல்வியிலுயர்ந்தோரும் கவியெழுதும் பாவலரும்
தொல்புவியிலிச்சிறுவன் தொடுத்த கவியதனில்
எதுகைமோனை தவறி இதிகாசம் மாறிடினும்
நீதியுடன் பிழையனைத்தும் நீனிலத்தில் பொருப்பீர்
ஆதிசிவன் வாழி அரிபிரமன் வாழி
சோதியுமை வாழி சரஸ்வதி லக்ஷிமி வாழி
பாவலரும் நாவலரும் பாருலகிலே வாழி
ஆவலாயிதை படிக்கும் அன்பர்களும் வாழி
இதிகாசவின் நூலை இன்பமாய் பதிப்பு செய்த
ம்துரை முதலியாரும் வாழி
சந்தச்சரபக்கவி தாரணிதனில் வாழி
செந்தமிழ் தியாகராஜன் செழித்துமிக வாழி
பாலன் ராஜேந்திரன்யான் பாடியகவி வாழி
ஞானமேல் படித்தோர் நன்மையுடன் வாழி
ஆழிசூழுலகினிலே அன்புடையோர் வாழியென்று
வாழி வாழியென்று வரமளித்தார் ஈஸ்வரனார்

**இரதி மதன ஒப்பாரி முடிவு பெற்றது.**

வேலும் மயிலும் துணை

சென்னை முத்தியாலுபேட்டை
சந்தச் சரபக்கவி

V. A. தியாகராஜ செட்டியார் அவர்களின்

# அருட்கவி பி. ஷண்முகவேல் பிள்ளை

அவர்கள் பாடிய

# வினவிடை எரிந்தகக்ஷி லாவணி

---

## கடவுள் துதி விருத்தம்

ஆதியெனும் பராபரத்தின் வஸ்துவாகி
அருள்வடிவாய் பரவெளியே மௌனியாகி
தீதின்றி தேவர்க்கெல்லாம் தெய்வமாகி
தியான நிஷ்டை யோககலை தியானியாகி
சோதியே யறுபத்து நான்கு கலைக்கியானமாகி
சொல்வதே சாஸ்திரத்தின் சுருதியாகி
நீதியுள்ள ப்ரணவத்தின் சுருதியாகி
நிஷ்களா னந்தனை நாம் நிகழ்த்துவோமே.

## லாவணி பாட்டு

துங்கசதங்கை கொஞ்சும்
உன் கழல் தனை
உகந்து
மலரை
ஐங்கரனே மூஷிகா
போற்றி
ஏற்றி
சாற்றி துதிபுரிவேன்

சங்கரனார் மகனே
துணைபுரிவாய்
அங்கஜனுண்டு யென்று
சிங்கம் போல்
மங்கள குணகரனே
காப்பாற்றி
வம்பர்கள் சிலரிங்கு
துடி துடித்து

டேப்பை
டோமரி
அங்கத்தினரைக் கொண்டு
மான வெட்கத்தை
பிடித்து
யடித்து ஜமாயுடனே
பங்கமடைய வந்தார்
விடுத்து

## உத்தார்

இவர்க்கு—புத்தியுரைக்க வருவாயே—பாழும்
புரட்டை வெளிப் படுத்துவாயே—இந்த
சத்துருக்கள் ஒழிய அத்திமுகத்தோனே யுன்
அடிமலர் தனைப்போற்றி (உகந்து)

## பாட்டு

ஈசன் விழியால் மாரன் எரிந்திடவில்லையென்றால்
இதிகாச நூல்கள் செப்புமா
ஜனங்கள் ஒப்புமா
ஆமக சட்டமா எங்களின் ஜேக

தீசன் கோபக் கனலில் மன்மதனின்
தேகம்ழியால் தப்புமா
தேவர்கட்கு பரிந்து நாதன் தபச்ழிக்க
தீங்கிழைத்தானே பாவி

மலரைத் தூவி
மடிந்தான் ஆவி அவன்
மனைவியுமான ரதியாள் கூவி புலம்பி வந்து
தேவி மீட்டாள் உயிரை மேவி

## உத்தார்

வேதநூல்களின்படி யுரைக்க அது—நீங்கள்
வோதவந்தீரே மனந் துடிக்க—இந்த
சாதனைக்காரர்களை நீதானழிக்க வேணும்
ஸ்ரீதரன் மருகா போற்றி (உகந்து)

## பாட்டு

கலையிதிகாசங்களை கருத்திலுணராமலே
கயிர் திரிக்க வந்தீரே
கவி வல்லோரே
கவனிப்பாரே இங்கே

கரடுமுரடாகவே உளறி திரியவேண்டாம்
கடையை கட்டிக்கொள்வீரே
சக்தச்சர பக்கவி எந்த திக்கிலும் புகழ்
செந்தமிழ் கவி ராஜன்
தியாக ராஜன்
அவரின் சீஷன்—பாடும்
செந்தமிழ் ஷண்முகவேல் ஜெகதலமீதினிலே
செப்பும் கவி யுல்லாசன்

## உத்தார்

மகிதலமீதிலென்போர் சிறக்க எனே
பகைத்த பாதகர் பஞ்சாய் பறக்க—நல்ல
அகிலலோகேஸ்வரியாள் மகனே கஜமுகனே
அடியேனுன் கழல் போற்றி (உகந்து)

## கேள்வி விருத்தம்

எந்தயிடம் மதன் பிறந்தானின்றோர் யாரே
இனியதொரு கடல்முரசு மீந்தோர் யாரோ
தென்றற்தேர் கிளியானை தந்ததாரோ
தேள்மொழிமார் படையிவனுக் கமைத்ததாரோ
அந்தமதன் வசித்திருக்கும் மிடந்தான் யேதோ
அன்னரதி அவதரித்த மார்க்கமேதோ
ஐந்துவித மலர்கணைகள் அமைந்ததேதோ
அதனையிந்த சபையிலெடுத் தரைவீர் மாதோ

## லாவணி மெட்டு

அண்ரண்ட மதிர செண்டு போல் கிளம்பி இங்கு
அண்ணே நீர் திருப்பவேண்டாம் முண்டாமுண்டா உங்கள்
அங்கஜன் அரன் விழியால் அனலாக வில்லையெனும்
அசட்டு புராணங்களை கொண்டா கொண்டா (அ)
எரிந்தது உண்மையென்று இதிகாச புராணமெல்லாம்
எடுத்து உரைப்பதெல்லாம் பொய்யா—பொய்யா—நீங்கள்

எத்தனைபேர் வந்தீரோ சித்தஜனின் தொண்டர்கள்
எத்தனை ஏய்த்துப்போக ஐயா—ஐயா (அ)
ஆதாரமற்ற பல சோதாக் கவிகளெல்லாம்
ஓதாதே இங்கெடுத்து அண்ணே அண்ணே மதன்
மாதா வயிற்றினிலே மைந்தனாய் பிறந்தானா
மாய்கையாயுதித்தானா சொல் இண்ணே இண்ணே (அ)
எந்த யுகந்தனிலே உங்கள் மதன் பிறந்தான்
இயம்புவீர் வருஷத்தின் பேரு பேரு—இன்னும்
சந்தேகந் தெளிந்திட மாதம் தேதிக்கிழமை
சகலமும் இங்கெடுத்து கூறு கூறு (அ)
தென்றத்தேர் கன்னிப்படை மின்னும் கடல் முரசு
தேங்கும் வட்டக்குடையும் ஏது ஏது—மற்றும்
அன்னக்கிளி வாகனம் இருள் யானையோடு வைத்த
அரும்புகணை வந்ததெப்போது ஓது ஓது (அ)
ஆரோக்ய புரத்தில் அவள் அரசாண்டதெப்போ
அதனை நீ நேரிலே பார்த்ததுண்டா உண்டோ நல்ல
சிரோங்கும் மங்கைரதி சிகப்போ கருப்போ நிறம்
செப்பிடுவீரெனக்கு துண்டா துண்டா (அ)
இரதியென்னும் பெண்மணியை வினிதாக ஈன்றவர் யார்
இதற்கு பதிலுத்தாரும் தாரும் பின்னும்
குறைவின்றி நல்முகூர்த்தம் நடந்ததின் விபரத்தை
கூசாமல் எடுத்து கூறும் கூறும் (அ)
எந்த இடந்தனிலே இவர்க்கு திருமணமே
இனிதாய் நடந்ததையா சொல்லும் சொல்லும் இவர்க்கு
சொந்த பந்துக்களிலே யார் யார் அருகிருந்த
சுருதி முறைப்படியே விள்ளும் விள்ளும் (அ)
மாரன் ரதி இவர்க்கு மைந்தர்களுண்டோ காணும்
மர்மமிதற்குப் பதிலென்ன என்னயிந்த
பார்தனிலே யிவனின் பஞ்சபாண விபரம்
பகர்வாய் எடுத்து இங்கு மன்ன மன்ன (அ)
சென்னல் செழித்துவளர் சென்னை நகரில் வாழும்
ஷண்முகவேலன் தமிழ்சீரு இதின்
தன்மையறிந்து பதில் தத்துவ முறைப்படி
தக்கபடி எனக்கு கூறு கூறு (அ)

## விருத்தம்

விடைமாரன் கதைபாட பகர்சபையில் வந்திடில்
பற்பல நூல் பார்க்கவேண்டும்
விடையது தகுந்தபடி வினவிற்கு அளித்திட
விதிப்படி கற்கவேண்டும்
நடைமுறையிலிதினின் சூக்ஷம் நன்குணர்ந்தே யுலகில்
நவின்றிட திறமை வேண்டும்
தடையுடன் இதையுணரா தத்துவ மற்றபேர்
தர்க்கிக்க வருகலாமோ

## லாவணி வேறு மெட்டு

அண்டபுவனமெல்லாம் சண்டப்ரசண்டம் போல
அதிர்ந்து வருகுது லண்டோரோ—உங்கள்
வண்டவாளமெல்லாம் ரயில் தண்டவாளமேல் ஓடிட
உரைப்பேனின்னும் கேள் நீ உஷாரா (அ)
பண்டைய புராணங்களை பழித்து மிழித்துமிங்கே
பாடிட கற்றுத்தந்தவர் யாரு—சபாஷ்
கண்டு மிரண்டு எந்த காட்டிலேயிருந்து வந்தீர்
கல்விக்களஞ்சியமே கூறு (அ)
காமனில்லாது போனால் கருவு தரித்திடுமோ
கருத்தை யறிந்து பதில் சொல்லும்—உங்கள்
கோமள வல்லியருடன் கூடிமிக கமினிய
கனத்த செயலிதானு விள்ளும் (அ)
அன்ன ஆகாரமின்றி அகிலத்தில் வசிப்பவர்க்கு
அங்கஜனின் காமக்கணை ஏது ஐயா
ஆகாரமில்லாவிடிலே மோகமில்லை காமனில்லை
அண்ணே ஏனின்னும் வாது (அ)
மாரனின் மகிமையால் மைந்தா பிறப்பதென்றால்
மலட்டிற்கு காரணம் என்ன—உங்கள்
வீரனால் மலடென்றும் வியாதி நீங்கவில்லையே
வித்தியாசமென்ன சொல்லும் மன்னா (அ)

கல்லுக்குள்ளே இருக்கும் கனத்ததேரை தனக்கு
காமனெங்குண்டு அதைக் கூறும்—அது
வல்லாமல் பலஜீவ ஜந்துக்கள் காதலின்றி
உற்பத்தியாவதென்று பாரும் (அ)
முப்புரத்தை எரித்த கர்த்தனுகிய பரமன்
முக்தியளிக்கும் தெய்வமாச்சே—இது
கற்பனையல்லகாணும் எப்புராணத்திலுமுண்டு
காணுதிருந்தால் மாணம் போச்சே (அ)
அற்புதமுடனே கவி சொற்பொழிவும் ஷண்முகவேல்
நற்றமிழைக்கண்டு மிரளாதே

---

## விருத்தம்

எங்களிட பரமனுல் முத்திபெற்ருேர்
எவ்வளவோ பக்தர்களிவ்வுலகிலுண்டு
உங்களுக்கு சந்தேகமாயிருந்தால்
உரைத்திடுவேன் புராணங்கள் வேணதுண்டு
அங்கஜனை எரித்தசிவன் அற்பமென்றீர்
அசடான புராணங்களை வைத்துக்கொண்டு
சங்கரனின் பெருமையெல்லாம் உங்களுக்கு
சாற்றிடுவேன் செவிசாய்த்து கேட்பீர் மாதே

## (லாவணி அடுக்கு மெட்டு)

வல்லவரான சிவன் பொல்லாத கோபத்திஞல்
வல்லுயிர் மடிந்தவரும் உண்டு
வெகுபே ருண்டு—இன்னும்
தொல்லுலகில் பரமனுல் நல்லவரம் பேருபெற்று
தெய்வீக பதவிபெற்ருேர் உண்டு
புகழ் கொண்டு (வ)
வள்ளாளனுக்கு அன்று பிள்ளையாக பிறந்தார்
வருடா வருடம் கருமம் செய்தார்

தொண்டு செய்தார் கையில்
வில்லேந்தும் வேட நெஞ்சில் கள்ளமில்லாமல் புசித்து
விண்ணுலகில் காக்ஷிதந்து மெய்தார்
அருள் செய்தார் (வ)

## உத்தார்

பூதநாதனின் புகழிப்போது இப்போது—சொல்ல
புத்தக ஏடு இடந்தராது ஏனோ வாது—உங்கள்
சாதனை குப்பைகளை சாதிக்க வேண்டாங்காணும்
சாம்பசிவனின் தொண்டு (வெகு)

## பாட்டு

இனிய மார்க்கண்டனுக்கு என்றும் பதினாறென்று
எமனை எட்டியன்று உரைத்தார்
மனது துடித்தார்— ஒரு
கனிக்காக பிள்ளைகளின் திறமையைக் காணவென்று
கருணாகரன் மன்றில் பதித்தார்
கனி (யளித்தார்)
இராவணனின் வரத்தை தானேயழிப்பதற்கு
வானர அனுமானாக பிறந்தாரே
கடலில் பறந்தாரே லங்கை
சோர அரக்கர்களை கொன்று அதம் புரிந்து
கோதண்டனுக்கு துணை இருந்தாரே
தொண்டு புரிந்தாரே

## உத்தார்

ஆகம சாஸ்திரம் பொய்யடா
பொய்யாமா—உங்கள்
அங்கஜனை தெய்வமென்னலாமா
புகழலாமா
யோகபரமனை நீர் தியானமது புரிந்தால்
தியாக பலன்களது உண்டு (வெ)

## பாட்டு

பிட்டுக்கு மண்சுமர்ந்தார் பிரம்பாலடிபட்டார்
பாருமுன் முதுகிலந்த அடையாளம்
செய்யாதே ஜெகஜாலம்—உங்கள்
கட்டுகவிகளெல்லாம் போட்டு மதித்திடுவீர்
விட்டு வெளியில் சொன்னல் அவமானம்
ஏனே மதியீனம் (வ)
பிள்ளைக்கறியும் சோறும் உள்ளங்களிக்கக் கேட்டு
நல்சிறு தொண்டன் மனம் சோதித்தார்
அவனை வாதித்தார்-பிறகு
நல்லதெனவே யவன் பிள்ளைதனை யறுக்க
சொல்லாமல் ஓடியவர் தான் மறைந்தார்
பதவி தனை கொடுத்தார் (வ)

## உத்தார்

பிரட்டியுருட்டி பாருங்காணும்
உண்மைதோணும்—அதை
பெரிதும் ஆராய்ந்து பார்க்கவேணும்
உணரவேணும் தாங்கள்

## பாட்டு

அரட்டைத்தனமாய் தாங்கள்கவி உருட்டிப்பாடியபோதும்
அதற்கு அஞ்சிடோம் கண்டு (வெகு)
அறுபத்து மூன்று திருவிளையாடல்
அரும் மதுரை யிலன்று
பலரை வென்று—ஈசன்
தரும நெறியுடனே தந்தார் பலர்க்கு வரம்
தயங்கிட வேண்டாமையா இன்னும் (வ)
செந்தமிழையுரைத்தேன் மைந்தன் ஷண்முகவேலன்
ஜெகத்திலெதிர்த்து வந்தாரோ

கேட்பீர் சீரே—இதை
சிந்தைதனிலுணர்ந்து இதை சபை தனக்கு
தெண்டனிட்டு எழுந்து நடப்பீரே
துயர் விடுப்பீரே (வ)

## எரிந்த கக்ஷி லாவணி முற்றிற்று.

---

### எரியாத கக்ஷியார் பாடி வரும்
### கேள்வி வினவிடை லாவணி விருத்தம்

எவ்வுயிர்க்கும் இன்பத்தை யளிக்கும் தெய்வம்
இகமதிலே பிறப்புரிமை கொடுக்கும் தெய்வம்
செவ்வையுடன் சிவன் தபசையழித்த தெய்வம்
சித்தர்களும் முத்தர்களும் மயங்கும் தெய்வம்
ஒவ்விய தபோபலத்தையழிக்கும் தெய்வம்
ஊர்வசியால் கௌசிகனை கெடுத்த தெய்வம்
இவ்வளவும் செய்யவல்ல எங்கள் தெய்வம்
எழில்மதனை உங்கள் சிவன் எரிக்க போமோ.

### லாவணி மெட்டு

சிங்கம் போல் பாய்ந்துவந்து தங்க மெடல் மாட்டி வீணில்
பங்கப்பட வந்த புலவா
சபாஷ் பாடிவா
சங்கதி கேட்டுவா மதுரை
சங்கப்புலவர் போலே இங்கிர்தமாக
சாற்ற வந்திட்டீர் புலவா
அண்டமதிலே உங்கள் பண்டாரமான சிவன்
அசட்டுதனத்தின் வெளிச்சம்
அதனின் சூக்ஷம்
உரைக்க மோசம்-அவனை

கண்டோர் கேலிபுரிய தெண்டாட்டமாய் சுடலை
களித்து செய்தானே வசம்

## உத்தார்

உங்கள் பரமன் சகவாசம்
சகவாசம் அவன்
சங்கதி எல்லாம் வெளிவேஷம்
வெளிவேஷம் நீங்கள்
அங்கத்திமிர் கொள்ளாமல் இங்ஙனமே யமர்ந்து
ஆன்சர் எனக்களித்து வா

## பாட்டு

பொற்கொடி அனுசூயையின் கற்பை கெடுத்திட உங்கள்
பரமன் மாலையனும் கூடி
அவளை நாடி
ஓமென்று பாடி தேவர்
சிற்றடிகளைப்போல் அற்பர்களிருவர் சென்று
பிச்சை யென்றுரர் முன்னாடி
சன்யாசிகளைக்கண்டு சாஷ்டாங்கமாய் பணிய
சதியனுசூயை மாது
தையலப் போது
தரணி மீது அதை
கண்ட மூவர்களும் பெண்பாளிவளைக் கண்டு
சொன்ன வார்த் தையா தீது

## உத்தார்

பரிமாரினுலிப்படி தாயே
எங்கள் தாயே அன்னம்
புசித்திடோம் நாங்களறிவாயே
அறிவாயே—நீதான்.
நிர்வாகமாக நின்று பரிமாறு மமுதென்றுரர்
நிதானமில்லாத புல்வா (சபாஷ்)

## பாட்டு

சொன்னதைக் கேட்டவுடன் கண்கள் பொறிபறக்க
காந்தாள கோபங் கொண்டாள்
சண்டாள னென்ருள்
சபிக்க விண்டாள்—சீச்சீ
துன்மார்க்க பாதகரே சிறுகுழந்தையாய்ப்போக
ஜபித்தேன் ஜபித்தேனென்ருள்
மூர்க்கமுடன் ஜபிக்க மூவரும் குழந்தையாய்
மேதினி தன்னில் தவிழ
கன்னிகை மகிழ
நாரதர் வருக—இந்த
போக்கைகண்டு மூவரின் பத்தினியர்களிடம்
வந்து சேதியை யுரைக்க

## உத்தார்

செய்திகேட்டு மாதவர்கள் புலம்பி
பெண்கள் புலம்பி—அந்த
சேயிழைமாது தன்னை வணங்கி
அவளை வணங்கி—இப்போ
மேவியே எங்களுக்கு மாங்கல்ய பிச்சைதாரும்
மாதாவே என்ருர் புலவர் (சபாஷ்)

## பாட்டு

மூவர் புலம்புவதை சேயிழையாளும்
மனது யிகவு மிறங்கி
எழுப்ப துடங்கி
அருகில் நெருங்கி—அவள்
முன்போல் எழுந்திருக்க பொன்மொழியாலே கூற
மூவர் எழுந்தார் வணங்கி
இன்னும் பலவிதமாய் துன்மார்க்கத்தனம் செய்த
ஈசனை தெய்வ மென்றீர்

வணங்கி
புகழ்ந்து
மன்மதனைத் தொழுதால்
இனியேனும்

நின்றீர்
சொன்னீர்—எங்கள்
இன்பமனுபவிப்பீர்
சொல்லை கேட்பீர்

## விருத்தம்

மன்மதனை எரித்தாய் நீங்கள் நம்பி
மாசிதிங்கள் பிறைதனிலே மகிழ்வாய்கூறி
உன்னதமாய் கம்பமொன்று நாட்டிவைத்து
உகந்ததற்கு வைக்கோலின் பிரியைசுற்றி
தன்மையுடன் மொச்சையவல் கடலைவைத்து
தாவியறுக்கும் முண்டைகள்போல் மாரடித்து
உனனதமாய் லிங்கமொன்று அதன்கீழ் வைத்து
உள்ளபடி கொளுத்துவேன் உரைப்பீர் மாதோ

(கா....கா....பராசக்தி மெட்டு)

### பல்லவி

கேள்... கேள்...கேள்

### அநுபல்லவி

வில்லாளியான நல்மாரன் தன்னை
கொன்றதாகவே நீங்க—எந்த
காலமும் தேம்பி புலம்ப-மற்றும்
தோல்மாசிமாதம் எல்லோருங்கூடி
கொம்பொன்று நாட்டிரீங்க அதற்கு வைக்கோல்
பிரிதன்னை சுத்துரீங்க—ஏங்க கேள்

### சரணங்கள்

நாட்டையும் கொட்டை வைக்குரிங்க—அங்கே
நட்ட கம்பத்தில் கொடி சூட்டுரீங்க மொச்சை

கொட்டை அவல்கடலை ஏதுங்க இன்னும்
பக்கத்தில் லிங்கம் ஒன்று தானுங்க-தீயை
காட்டிகொளுத்தியே கதறிப் புலம்புறீர்
வாட்டமுடனே அது ஏனுங்க—பதில் கூறுங்க (கேள்)

கம்பத்தை சுட்டதால் கீழேயிருக்கும் லிங்கம்
கனலா எரிந்துமது போகுதே
எரிந்தது பரமனு மடிந்தது மாரனு
இதனை நினைக்கவெட்கமாகுதே

வம்பு வளர்த்த நீங்க—இந்த
வையகத்தில் ஏனோபிறந்திட்டீங்க
விபர்த்தை சொல்லுங்க ஓடாமல் நில்லுங்க
வெற்றிக்கொடி நாட்டுங்க—பதில் தேடுங்க (கேள்)

நவரத்தின ஒப்பாரி

கேள்வி லாவணி முற்றிற்று.

சுபம்!

சீனிவாச அச்சகம், சூளை, சென்னை-7.

# சதிபதிகளின் மர்மம் (அல்லது)

# மானிடரகசிய சாஸ்திரம்

இதில் வசந்தனுக்கும் சுலோசனுவுக்கும் வினவிடை தர்க்கங்களாகவே பெண்களைச் சந்தோஷிக்கச் செய்யும் விதமும், சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்கவேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதி பேதங்களும் அவைகளின் லட்சணங்களும் ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும் இன்ன ஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யக்கூடும் என்றவிதமும் போகமசெய்ய வேண்டிய நாளும் நாழிகையும் இன்னவிதமாக சுகிக்க வேணடிய கிரமமும் ஆண் பெணமலடு விவரங்களும் ருது காலங்களும், அவைகளின் பலாபலன்களும் மாதம் ஸ்ரீகளுக்கு அமிர்தநிலை எந்தக் காலங்களில் எவ்விதத்தில் இருக்கும் என்பதையும் அதை எவ்விதமாய் நிலைபெயர்க்க வேண்டு மென்பதையும் பிரகஸ்பதி பகவான் தேவேந்திரனுக்கு அருளிச் செய்த உலோகாயுத சம்மந்தமான விஷயங்களும் அமைந்துள்ளது. இன்னும் அகால சேர்க்கையால் வரும் கெடுதியும் இதைப் போன்ற அரிய பெரிய மர்மங்கள் நமது நூலில் இனிய செந்தமிழ் நடையில் பிரசுரித்திருக்கின்றன கண்களை கவரும் அழகிய சித்திரப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அழகிய முகப்புடன் கூடியது

**இதன் விலை 3-50**

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன் சென்னை-3

## ஸ்ரீநாடிச மெஸ்மரமெனும் வாயுவேக மனோவசியசாஸ்திரம்

இந்த நூலில் மனோவசியத்தைப் பற்றியும் அதை அப்யாசிக்க வேண்டிய முறைகளைப்பற்றியும் எழுதப் பட்டிருப்பதுடன் உலகில் பிறர்கண்களுக்குத் தெரியாமல் உலாவும் வழியைப்பற்றியும் இறந்த பெரியோர்களுடன் எப்படி பேசுவது என்பதைத்பற்றியும்நன்கு எழுதப்பட்டிருக்கின்றன, சபைத நேல் விரலைக்காட்டி மற்றவர்களை தூங்கவைக்கும் வழிகளைப் பற்றியும் மனோவசிய சக்தியினால் நாம் உயர்ந்திருந்த செய்ய வேண்டிய தன்மை, செல்வாக்குடன் இருக்க விரும்புகின்றவர்களும் இந்நூல் தேவாமிர்தம் போன்றதாகும். (சித்திர படங்களுடன் அடங்கியது)

இதன் விலை ரு. 3-50

## தேவேந்திரநாத் மாயாஜால விநோதம்

வாரிசூழுலகின் கண்வசிக்கும் ஆரிய நண்பர்கான் இங்கிலீஸ்கைபுரட்டு வித்தைகள், மலையாள வித்தைகள் பீதாம்பர வித்தைகள் பிரஞ்சி வித்தைகள் மூலிகைசெல்விய வித்தைகள் கண்கட்டு வித்தைகள் அஷ்டமாசித்திகள்செய்யலாம் வசியமைகைகள்செய்யலாம் மணலைக்கிளரி விநாயகர் காட்டலாம் மகேந்திரஜாலம்செய்யலாம், இந்திரஜாலம்,கோகர்ண வித்தை, பாதாள அஞ்சனம் செய்தல், பச்சைபாம்பு மேய்தல் பேயாட்டுதல்• மரஞ்செடிமுளைத்தல் மோடிவைக்கும் வித்தை இதைபோன்ற அற்புதஜாலங்கள் 2000சேர்த்தலைவசெழுமண வைசித்திரக்கவி தேவேந்திரநாத்பண்டிதர் அவர்கள் தாமே சொந்தமாய் செய்துகாண்பித்தஜாலங்களை இதில் தெளிவுறகாணலாம்

இதன்விலை ரு. 4

## கொக்கோகம் அல்லது இரதிமன்மதன் திருவிளையாடல்

மர்ம விஷயங்கள் பச்சையாக விளக்கப்பட்டுள்ள கொக்கோக சாஸ்திரம் இதில் காம உற்பத்தி ஆண் பெண் சரீர அமைப்பு நான்கு வகை பெண்களுடைய லக்ஷணம் சம்போகம் செய்யவேண்டிய முறை அமிர்த நிலை ஆலிங்கன வகைகள், பெண்களை வசீகரப்படுத்தும் மார்க்கம் மர்மமான விலாசசாஸ்திரத்துக்குறிய படமும் இரதி மன்மதனுடைய உருவப் படமும் மதன சக்ரப் படமும் பூஜாவிதானத்தோடு அமிர்தநிலை சக்ரம் ஸ்ரீ பஞ்சாக்ஷர மனோவசிகர சக்ரம் முதலியவை அடங்கியது.

விலை ரு. 5

---

சண்முகானந்த புத்தகசாலை பார்க்டவுன் சென்னை-3.

நவீன நவரத்தின

# மதனரதி ஒப்பாரி



பதிப்பாளர்

... பாலகிருஷ்ண முதலியார்

... கள் பிரஸ்

உ

கடவுள் துணை

திரிசிரபுரம் மங்களதாஸ் அவர்களியற்றிய

நவீன நவரத்தின

# மதனரதி ஒப்பாரி

இவை திருச்சி

டி. ஏ. ஜெயராம் கம்பெனியார்

உத்திரவு பெற்றது


கலைமகள் பதிப்பு

நெ-2, எழுத்துக்காரன் தெரு

காலடிப்பேட்டை :: சென்னை-19


உரிமைபதிப்பு 1968 விலை ரூபா 1

# ஓர் விண்ணப்பம்

**எனது அன்பார்ந்த நண்பர்களே !**

இந்த நவீன நவரத்தின மதன ரதி ஒப்பாரியைப் போல் அனேக போலி புஸ்தகங்கள் வெளிவந்துள்ளன ஆகையால் **நவீன நவரத்தின மதனரதி ஒப்பாரி** வாங்கிவாசித்த நண்பர்களுக்கு இதனுடைய அருமை தெரியும் ஆகையால் தயவுசெய்து புஸ்தகம் வாங்கும் அன்பர்கள் திரிசிரபுரம் அருட்கவி ஸ்ரீமான்: **துரைசாமி நாவலர்** இயற்றிய எரிந்த கட்சி பாடல் இருக்கிறதா என்றும் அப்பா சிதம்பரத்தி என்ற பாடல் முதலில் இருக்கிறதா என்று பார்த்து வாங்கவும் இமிடேஷன் பதிப்பு புஸ்தகங்கள் அனேகம் வெளிவந்துள்ளன நண்பர்களே ஸ்ரீமான்: **திரிசிரபுரம் மங்களதாஸ்** இயற்றிய **நவீன நவரத்தின** மதனரதி ஒப்பாரியா என்று பார்த்து வாங்கவும் ஏமாறவேண்டாம்.

இப்படிக்கு

**T. R. பாலகிருஷ்ண முதலியார்**

நெ-2 எழுத்துக்காரன் தெரு .

காலடிப்பேட்டை—சென்னை -19

உ

கடவுள் துணை

திரிசிரபுரம் மங்களதாஸ் அவர்களியற்றிய

நவீன நவரத்தின

# மதனரதி ஒப்பாரி

## விநாயகர் காப்பு

வஞ்சித்துறை

மதிமுக ரதிமதன் கதை யினிதுரை செய
துதிமிகு சிவகணபதி கழல்பணிவோம்.

## கணபதி வணக்கம்

வெண்செந்துறை

அப்பாசிதம் பரத்தி
வரும்பருக் கெட்டாதசித்தி
ஆதிபரா பரத்தி
சோதி சிரபரத்தி
அக்குமாமணி வடத்தி
முக்கோண சக்கரத்தி
அறுவொரு புரத்தி
பரவம் பாசாங்குசத்தி
அமல சொரூபசத்தி
இமயமலைக் குறத்தி
அகிலநாயகி பாகன்
புகலரிய வைபோகன்

ஆண்டவனு ரப்போது
   நீண்ட கயிலாசமீது
அலங்கார மண்டபத்தில்
   இலங்குமணி பீடத்தில்
ஆச்சரியமாய் சிறக்க
   மாக்ஷிமைசேர் கொலுவிருக்க
அற்புதமாக கூடி
   முப்பத்து முக்கோடி
அண்டர்கள் நமஸ்கரிக்க
   பண்டு மாலயன் துதிக்க
அந்திவண்ணன் மகிழ்ந்து
   விந்தையுறத் தானெழுந்து
அருமையோடு தான் பயந்து
   பெருமைதரவே யிசைந்து
ஆறுமுகவேற் குகனும்
   வீருகஜமாமுகனும்
அண்ணன் தம்பி யிருபேரும்
   நண்ணி யென்னிடம் வாரும்
அலைசேர்கடல் சூழும்
   உலகமதை மென்மேலும்
அரைநொடிக்குள்ளே புகுந்து
   விரைவாய் வலம்புரிந்து
ஆர்வந்தாலுஞ் சரியே
   பார்புகழ் வித்தகியே
அவர்கட்கு கனியொன்று
   உவந்தளிப்பேன் வாருமென்று
ஆலமுண்டோனு ரைக்க
   பாலசண்முகஞ் ஜொலிக்க

அவசரமா மயிலேறி
சிவன் வார்த்தையைக்கோரி
அகிலத்தை சுற்றமுன்பு
குகநாதன் சென்றபின்பு
அந்தசேதியைத் தெரிந்து
தந்தையை வலம் புரிந்து
ஆங்கவர் கரத்திலுற்ற
மாங்கனியதைப் பெற்ற
அத்திமுகப்பூ பதியே
தத்துவகுண நிதியே
அண்ணலே யான் புகழும்
விண்ணப்பம் நீர்கேளும்
அரவணையோன் புத்திரனை
வருடத்துக்கோர் தவணை
ஆசையோடிப் புவியில்
மாசி மூன்றும் பிறையில்
அங்கஜனை யுருவாக்கி
இங்கிதம் பெறநோக்கி
ஆரோக்கியமா நடத்த
சீரோக்கியமே மிகுந்த
அருள்புரிய வேணுமையா
ஆனைமுகப்பிள்ளையாரே

**கணபதி வணக்கம்**

(இதுவுமது) வெண்செந்துறை

சாலமறையோர் புகழும் ஆலமுண்டோன் மகிழும்
சரவணபவானந்த பிரணவப் பொருள் தந்த
சந்ததம் புகழ்சிறந்த கந்தனுக்கு முன்பிறந்த

சத்தியசிவ கணபதியே புத்திதரும் நன்னிதியே
சாற்றுமொரு விண்ணப்பம் கேட்டருள் பரமநுட்பம
தாமோதரானந்த பூமேருவைகுந்த
சரசகோபாலன் பெற்ற உருவிலியா யெங்குமுத்த
சம்பராரி பண்டிகையை இன்பமதனார் கதையை
தாரணியிற் கொண்டாட காரியமுங்கைகூட
தருணமவந் துதவிசெய்ய கருணைபூமாரிபெய்ய
சாமியே யுந்தனுக்குத் தேமிகுந்தே மணக்கும்
சண்பகமந்தாரைபிச்சி தண்கமலமிருவாக்ஷி
தாதவில் செவ்வந்தி வெள்ளை சாதிமல்லிகைமுல்லை
தழைத்த வெட்டிவேர் கதம்பம்செழித்தகதிர்பச்சையின்பறி
தருங்கொன்றை பூந்தேக்கு அருகு தும்பை வெள்ளெருக்கு
சார்ந்தமலர்களைத்தூவி காந்திமிகும் பொற்பாவி
தன்னாலலங்கரித்து பொன்னாபரணந் தரித்து
சந்தனஞ் சவ்வாது பன்னீர் கந்தங்கமழுவெண்ணீர்
சர்வாங்கமும்பூசி பரிவாய் சாமரம் வீசி
சர்க்கரைப் பொங்கலிட்டு மிக்கபதிர்ப்பேணிலட்டு
தட்டுத் தட்டாய்ப் படைத்து மட்டிலாத் தேங்காயுடைத்து
தங்குங் கற்பூரதீபம் பொங்குஞ் சாம்பிராணிதூபம
தாராளமாய்க கொடுத்து ஆராதனைமிகுத்து
தலைவணங்கிதெண்டனிட்டேன் மலரடியைக்கும்பிட்டேன்
சங்கடங்கள் வாராமல் பங்கமொன்றும் நேராமல்
தற்காக்க வேணுமய்யா விக்கின மகற்றுந்துய்யா
தமபிக்குத்தாதுசென்ற தும்பிக்கைப்பிள்ளையாரே

**மதன் ரதி திருக்கலியாண மண்டப அலங்காரம்**

வையகமெல்லாம் புகழும்
ஒய்யார் மாத்திகமும்

மாமதுறைத் தேன்மொழிகள்
    கோமளப் பசுங்கிளியாள்
மங்கைரதி தேவியர்க்கும
    அங்கஜவேல் துரைக்கும்
வாலிப கோலமான
    காலத்திற் கலியாணம்
மண்டபக் கன்காக்ஷி
    கண்டவர்க் கேது தாழ்ச்சி
மகிதலம் படைத்தபிர்மா
    புகழ்பெறும் விஸ்வகர்மா
வாய்த்தவொரு ரவிவர்மா
    சேர்ந்த மூவருஞ் சும்மா
வந்தவர்க ளதிசயிக்க
    சிந்தையிற் களிசிறக்க
மந்தகாச மேவுநல்ல
    பந்தல் சிங்காரஞ் சொல்ல
மட்டகத்த நியூபாஷன்
    கெட்டியாய் பவுண்டேஷன்
மருவிய கட்டிடங்கள்
    ஒருவித சாளரங்கள்
வாயிற்படிகள் வைத்து
    தூயகற்கள் பதித்து
வச்சிர சுண்ணந்தீட்டி
    உச்சிதமாய் சுவரேற்றி
மாணிக்கத் தூண்கள்நட்டு
    ஆணிப்பொன் வட்டமிட்டு
வட்டமாக மேல்வளைவு
    ரெட்டைத்திரணைக் குலவு

வகைவகையான வேலை
புகழும் விச்சித்திரசாலை
மரவுசித மேல்மாடி
மேவுகல் லசஞ்சாடி
மகரதோரணஞ்சூடி
சிகரங் கோடானுகோடி
மத்தியிலே நிறுத்தி
லஸ்த்தர் குளோப்பர் பொருந்தி
மாடத்திலே தளுக்கா
சோடிகுல்தார் ஜீனிலக்கா
வரிக்குருவி நாரைவக்கா
வரிக்குருவிகள் ஷோக்கா
வாழைப் பலாக் கமுகு
தாழை முந்திரி யசோகு
மாங்குலை தென்னங்குலை
ஓங்கு பேரீச் சங்குலை
மரத்தினிற் கருங் குரங்கு
தரித்து பட்டாப் பாங்கு
வஸ்தாது கௌடுத்து
விஸ்தாரமாக நடித்து
மகிள்தரு சிலம்பக்கூடம்
விகசிதமான மாடம்
வார்ப்பட இரும்புக் கேட்டு
நாற்புரங்களும் போட்டு
வரிசையாய் போலீஸ் பீட்டு
பெரியபஜார் மவுண்ரோட்டு
வசந்தமணி மண்டபத்தில்
இசைந்த சப்ரகூடத்தில்

மணவரை யலங்கரித்து
　　கனதனமாய் ஜோடித்து
மாதாதி தேவியிடம்
　　தாதியர்கள் தானெடுத்து
வார்குழலை சிக்கறுத்து
　　சீர்பெறவே பூமுடித்து
வண்ணநறுங் கொண்டையிட்டு
　　கண்ணுக்கு மைபுகட்டி
வைரக்கல் ஜிமிக்கி
　　இருகாதிலு மினுக்க
மாட்டல்குருடு கொப்பு
　　ஆட்டின்கிளாவர் முகப்பு
வைத்தமோதிரங் காப்பு
　　முத்துசரப்பளி பரப்பு
வளையல் கைக்கடகம்சுங்கி
　　விலைபெற்ற முத்தங்கி
மணிமேகலை யணிந்து
　　அணிகலமெல்லாம் புனைந்து
மங்காத சரிகையாலே
　　இங்கிதமா செய்தசேலை
வஞ்சியருக்கே யுடுத்தி
　　ரஞ்சிதமாய்ச் சீர்படுத்தி
வாகுபெற தானமர்த்தி
　　மோகனவேலை திருத்தி
மதன் ரதிக்குமே பொருத்தம்
　　இதமாகிய முகூர்த்தம்
வைத்திடவே பரிந்து
　　எத்திசையோர் மகிழ்ந்து

வருபவர்க்குத் தாம்பூலம்
திருகவே மேளதாளம்
மங்களமாகக் கொடிமுழங்க
அங்கமதன் பேர்விளங்க
வானவர் கீதம்பாட
மேனகை நடனமாட
மாதவராசி கூற
வேதியர்க ளப்போது
மாங்கல்யங் கைகொடுக்க
வாங்கி மன்மதராஜன்
மணமாலை சூட்டியதை
வசனிக்கக்கேள் மாதே

## மதனுக்கு இந்திரன் அனுப்பிய திருமுகமும்

### ஒப்பாரி

பச்சைக் கலாபமயிலே
அச்சுதன் மருமகளே
பாங்கான மாமயிலே
பூங்காவனக் குயிலே
பங்கமிலா மாமணியே
மங்கள சிகாமணியே
பத்தினிப்பெண்ணே ரதியே
புத்தியில் பிரகஸ்பதியே
பகரக்கேள் சங்கதியே
புகழும் சற்குணநிதியே
பார்வேந்தர்கள் மதிக்கும்
தேவேந்தா னென்பதிக்கும்
பரிந்து தூதாளனுப்ப
விரைந்துவந்தவர்கள் செப்ப

படைமதனுஞ் சிந்தையொப்ப
நடந்தருள வேணுமிப்ப
மன்னவர்கோன் அழைப்பித்த
வண்ணமது என்னவென்றால்
பரமசிவனே விமய
கிரியில் சைவசமய
பக்தர் முத்தர்மதிக்கும்
சித்தசன காதியர்க்கும்
மகிழ்கூர் சிவயோக
பகிடையோ னன்பாக
பாவனைக் காட்டுவதாலும்
தேவருக்கு மென்மேலும்
பற்பல துன்பந்தானே
உற்ப வித்திடவுமானே
பண்டாரமா சிவத்தை
அண்டியே அருந்தவத்தை
பங்கஞ் செய்யவேணுமென்று
அங்கஜனுக்கே முயான்று
பாவையே விகிதமொன்று
மேவியே வந்தநின்று
பலவந்த மாயடுத்து
மலர் வாளியைத்தொடுத்து
பாதிமதியைத் தரித்த
ஆதிசிவன் நிஷ்டையதை
பஞ்சுபோல் பறக்கடித்து
வஞ்சியே யுனையடுத்து
பளிச்சென்று வாரேனென்றார்
களிப்புடனே வேள்மதனார்

மதன் பிரிவாற்றுமையால் ரதி சொல்லும் ஒப்பாரி

பூமானே சீமானே
கோமானே மன்மதனே
பூமேவு சந்திரனே
மாமோக சுந்திரனே
போற்றியே நாணியம்பும்
வார்த்தையதை நீர்நம்பும்
பொல்லாங்கு வந்துசூழும் அங்கு
செல்லாதீர்நில்லும் நில்லும்
பொன்னுலகை யரசாளும் முடி
மன்னவனே எந்நாளும்
பொறுமைகொண்டவன் மேலும் இந்த
தராதலமெலாம் புகழும்
புளகிதமா யிந்தவேளை என்
களபமுலையார வீலை
புத்தியகிழ்ந்திட நீடி
சந்தோஷமாக்க் கூடி
பொருந்த இருவரும்நாடி வெகு
சரசமா யிசைபாடி
போகநீர் பிரியாமல் மன
போகமது தீராமல்
புணர்ந்து விளையாடாமல் எனை
யணைந்து சுகந்தேடாமல்
பூதலத்தில்லாத புது
சேதிதனை செப்பவந்தீர்
புகலுமகபதி குறித்து தரும்
விகிதத்தை யேபடித்து

பொறுக்காமல் துடிதுடித்து அதி
சுருக்காய்ப் படையெடுத்து
பொட்டென தாண்டிக்குதித்து
கட்டழகியை விடுத்து
போர்புரியப் போறேனென்று வெகு
வீரியமதாய் புகன்று
போகவேண்டாமென் கணவா ஜெய
ராகவனார் தன் புதல்வா
புராதனமான கர்த்தன் எங்கும்
அருவுருவமான சித்தன்
புவனம்படைத்த நிந்தன் சாம்ப
சிவனே வெகுசமர்த்தன்
புரியுந்தவத்தை யழிக்க அதி
விரைவாய்க்கணை தொடுக்க
போவதுமக் கழகல்ல இனி
ஆவதாகட்டும் நல்ல
பூமஞ்சத்தை விரித்து அதில்
க்ஷேமமுறவே படுத்து
புண்ணியரே யிங்கிருப்பீர் என்று
கண்ணிரதி சொல்லலுற்றாள்

மதன் சொல்லும் ஒப்பாரி

கண்மணி சிரோன்மணியே
பெண்மணி மனோன்மணியே
கட்டழகியே ரதியே
வட்டமதியே நிதியே
கற்பகமே பொற்பவமே
அற்புதமே விற்பனமே
கனமே திரைத்தனமே மலர்
வனமே நவரத்தினமே

காதலியே மெல்லமெல்ல கதை
ஓதவந்திட்டாயே கள்ள'
கடையைக் கட்டடிபெண்ணே
விடையைத் தந்தருள்கண்ணே
கார்புவி வாழ்வைநம்பி உன்னை
சார்பாகவே விரும்பி
கட்டியணைந்து முத்தம் மன
இஷ்டமாக கொடுத்துநித்தம்
கலந்து சையோகம்செய்ய அக
மலர்ந்துரைத்தாயே மைய
கருதும் சையோகலீலை நாம்
புரியத்தகாதிந்த வேளை
கன்னியர்க்கதிபதியே நான்
சொன்னப்படி கேட்பாயே
கங்கையைச் சிரமணிந்து வளர்
சங்கரனுக்கோ பயந்து
காமதுரை நானிருந்தால்
பூமிதனிலே மறைந்தால்
கண்டவரெல்லாஞ் சிரிப்பார்
அண்டர்களவமதிப்பார்
ககனர்களுந் தூஷிப்பார் இந்த
ஜெகதலத்தோர் நகைப்பார்
கட்டாயந் தேவர்துன்பம் நான்
தட்டாமல் தீர்த்தின்பம்
கண்டிதமாய் தரவேண்டும் பெண்ணே
மண்டலத்தில் லாண்டாண்டும்
கருதியே பேர்விளங்கும்
விருதுகட்டியே துலங்கும்

கயல்விழிப்பெண்ணே ரதியே சொல்லை
நயந்து கேளித்ததியே
காரிகையே மனுநீதம்
கூறுகின்ற தனுர்வேதம்
கற்றுணரா மங்கையைப்போல் வகை
சற்றுந் தெரியாதவள்போல்-
கதைபடிக்காதே மானே மனம்
பதை பதைக்காதே தேனே
கங்காளன் முன்புதானே வெகு
வங்கணமாய்ச் சென்றுதானே
கண்ணிப்படையை விடுத்து சிவன்
பண்ணுந் தவத்தையழித்து
கண்ணிமைப் பொழுதுக்குள்ளே இந்த
மண்ணுலகில் வாரேனடி
கலங்காதே யென்றுரைத்தார்
இலங்குதிரு வேள்மதனார்

ரதி சொல்லும் ஒப்பாரி

அப்படியல்ல துரையே
விர்பணமா இத்ததியே
அந்தநற் சங்கதியே உங்கள்
தந்தை வரலாறதையே
அறைந்திடக் கேளுமன்னை
பொருந்தியே மேகவண்ணை
அன்றொரு மச்சமானான்
பன்றி நரசிங்கமானான்
ஆமைப்போல் ஜனித்தான்
வாமனரூபமெடுத்தான்

அரக்கர்குலம் கருவறுக்க
பரசுராமனு யுதித்தான்
ஆயற்குலத்திற் பிறந்தான்
மாயவித்தையிற் சிறந்தான்
அண்ணனைத்தம்பி என்றான்
வெண்ணையைத் திருடியுண்டான்
அகிலசராசர மெங்கும்
புகழ் பிரம்மச்சாரிஎன்று
ஆபரணங்கள் தரித்தான்
கோபியர்களைப் புணர்ந்தான்
அரிவையர் சேலைகவர்ந்தான்
மரமேறியே யொளிந்தான்
அரங்கமா நகரையண்டி
உறங்குதர்க்கோ பாயுமின்றி
அரவணையிலே கிடந்தான்
பறவை மூக்கைப்பிளந்தான்
அருமையாய் மாமன் தந்த
பெரியரதத்தினை மூந்த
அணியாயமா யொடித்தான் விளங்
கனியெடுத்தே புசித்தான்
ஆவின் கன்றைவதைத்தான்
கோவர்தன மெடுத்தான்
அகிலத்தையேமாற்றும்
ஜெகஜாலக்காரன் பெற்ற
அங்கஜரே யிப்போது
தங்கள் கைசெல்லாது

ஆகையினல் சமர்ப்புரியப்
போகவுந் தகாதென்றே
எடுத்துரைக்க லுற்ருள் காண்
அடக்கமுள்ள பெண்ரதியாள்

## சிவ பராக்கிரமத்தை மன்மதன் இகழ்ந்து கூறுதல்

### ஒப்பாரி

சன்ன பின்னற்சடையாளே
சின்னஞ் சிற்றிடையாளே
தையலற்கு நாயகமே
மையல் தருநாயகமே
தடபுடலாய்ப் பேசாதே
மடத்தனமா யேசாதே
தையலையுந்தன் பிதா
வையகமீது சதா
தலையா லிறந்துண்டான்
அலைகடல் நஞ்சைத்தின்ருன்
தட்டுமண்ணைச் சுமந்தான்
ஒட்டனைப்போல் திரிந்தான்
சடையிலொரு பெண்ணைவைத்தான்
இடையிலொரு பெண்ணைவைத்தான்
சையோகத்திற் சிறந்த
அய்யமென் ருெருவன் வந்து
தன்பெண்டீரைக் கேட்க
அன்பனென் றருள்சிரக்க
சந்தோஷமாய் கொடுத்தான்
வந்தியின் பிட்டைப்புசித்தான்

தந்தையர் யாருமற்றான்
மூர்த்தி பிரம்படியும் பட்டான்
ஜாதிமுறை யாவுங்கெட்டான்
புவிமீதுஞ் செருப்படிபட்டான்
தாட்டீகமா வற்புருத்தி
மாட்டுக்காரனைப்பற்றி
ஜம்பமாய் பேசிடாதே
கொப்பனென்று கூறாதே
சங்கதியாவுந் தெரியும்
நங்கையே யருள் புரியும்
தாமோதரா நந்தன்
சீர்மேவு வைகுந்தன்
தயவுதானிருக்கு மட்டும்
பயமெனக்கில்லை சற்றும்
சம்பாரரியை ஜெயிக்க
இன்பமதனைத் தகிக்க
தானே வசப்படாது
தேனே கேளிப்போது
தவசாதனை புரியும்
சிவன்மீது மான் சொரியும்
கண்ணார்பூம்கணை பட்டால்
புண்ணியர் தவங்கெட்டால்
தார்குழல் பார்வதியை
சீர்பெருங் குணநிதியை
சங்கரன் மாலையிட்டு
மங்கைமேற் காதலுற்று
சல்லாப லீலையிலே
உல்லாச வேளையிலே

சத்திவடிவேற் பிறப்பான்
    சித்திபற்பல கொடுப்பான்
தானவர் கருவருப்பான்
    வானவர் சிறைதவிர்ப்பான்
தாரணியிற் கொடிமுழங்கும்
    மாரவேள் பேர்விளங்கும்
சங்கீத சுகுணதீபன்
    மங்களக் கவிப்ரதாபன்
விந்தமிகு செந்தமிழை
    விந்தைமிகு கற்புகழை
சந்தமும் பாராட்டி
    சித்தையெனுஞ் சுதியைமீட்டி
தர்ப்பரனுர் முன்பாக
    அற்புதமா யான்போக
தடையின்றி வாக்களிப்பாய்
    கொடியிடைப்பெண்ணே ரதியே

## சிவ பராக்கிரமத்தை இரதி புகழ்ந்து கூறும்

## ஒப்பாரி

அச்சுதனுர் தன்மகனே
    பச்சைக்கிளி வாகனனே
அரன்மேல் கணைதொடுக்க
    பரமசிவனை ஜெயிக்க
ஆராலு மாகாது
    நேராக இப்போது
ஆண்டவன் சற்குணத்தைப்
    பாண்டுரங்கன் றன்சமர்த்தை
அறிந்தமட்டு நானெடுத்து
    தெரிந்த கதையைத்தொடுத்து

அகமகிழ்ந்திட மேவி
　　பகருகிறேன் ரதிதேவி
அதிசயமாய் கேளுமையா
　　மதராஜ வேள்துரையே
ஆதியிலோர் தொண்டனுக்காய்
　　ஓதுமார்க்கண்டனுக்காய்
அந்தகன் றனையுதைத்தான்
　　சந்திரனை யாதரித்தான்
அன்று புரத்தையெரித்தான்
　　குன்றை வில்லாய்வளைத்தான்
அண்டர்கள் துயரம்போக்க
　　தொண்டர்கள் வினையைத்தீர்க்க
ஆலவிடத்தைப் புசித்தான்
　　பாலன்மே லிச்சைவைத்தான்
ஆரியர்க்கருள் கொடுத்தான்
　　சூரியன் பல்லையுடைத்தான்
அக்குமாமணி வடத்தான்
　　தக்கன் வேள்வியைத்தவிர்த்தான்
ஆணுமல்ல பெண்ணுமல்ல அவன்
　　தோணுஞ் சொரூபமல்ல
ஆதியு மனாதியுமாய்
　　ஜோதிபரஞ்சோதியுமாய்
ஆகாயம் பூமியுமாய்
　　ஏகாந்த சாமியுமாய்
அகிலமுழுதும் படைத்தும்
　　புகழும் சீவரைக்காத்தும்
அப்படியெல்லாம் துடைத்தும்
　　செப்புஞ் சாதகதொழில்நடத்தும்

அரிய பராபரவஸ்து
பெருமைபெரு ஞானவித்து
அந்த சிவனையெதிர்த்தால்
கந்தமலர்க் கணைதொடுத்தால்
அக்கினிக்கண்ணால் தகிப்பான்
மூக்கண் தனலாயெரிப்பான்
அய்யய்யோ போகாதீரென்று
தையல் ரதியாள்மூயன்று
அங்கனை மன்றாடி
மங்களமா சுரம்பாடி
அடிபணிந்து சொல்லலுற்றாள்
அழகான பெண்ரதியாள்

இரணியன் சரிதையை மதன் சொல்லும் ஒப்பாரி

தற்பரானந்தன் பெற்ற
விற்ப விவேகமுள்ள
தையல் ரதிக்கிளியே
மையல் தருமின்னொளியே
தண்டாமரை திருவே
பெண்டுகளின் சற்குருவே
ஜகன் மோகனக்குயிலே
விகசித மாமயிலே
சங்கரன் தபசழித்தால்
பங்கம்வந்து நேருமென்று
சரிசரி புகலுகின்றாய்
அரன் சமர்த்தை சொல்லவந்தாய்
சந்தேகமில்லா விதத்தை
என் தகப்பனார் சமர்த்தை

சாற்றுகின்றேன் நீகேளாய்
தோற்றமொடு பன்னாளாய்
தாரணியிற் பேர்படைத்த
இரணியாக்ஷதன் மிகுந்த
தண்டு தலமுந்துலங்க
அண்டபுவனங் கலங்க
தனக்கு நிகரில்லையென்று
மனக்குறும் பவன்கொண்டு
சராசரமெலாம் மாண்டு
இரணிய நமோவென்று
தன்னாமமே புகலச்
சொன்னான் மனம்மகிழ
தனியரசாண்டு வந்தான்
அனியாயமே புரிந்தான்
தருமந்தழைக்க நன்று
பிரகலாதனென்று
சற்புத்திரன் ஒருவன்
அற்புதமாகப் பிறந்தான்
சதிக்கரா வல்லரக்கன்
மதிபோன்ற பாலகனை
தெள்ளரிய கல்விகற்க
பள்ளிக்கூடத்தில் வைக்க
சாஸ்திரமெலா முணர்ந்து
வாத்தியார் சொல்லித்தந்த
தற்புகழ்ச்சி வாக்கியத்தை
அப்பொழுதச்சிறுவன்
சற்றேனும் வாய்திறந்து
கொற்றவனுஞ் சொல்லாமல்

சதா அரிகரியென்று
நிதானமாக நின்று
சாமி விஷ்ணுவைத் துதிக்க
நேமியான இரணியனும்
தணியாத கோபமுற்று
எனக்கெதிரியா யிருக்கும்
சண்டாள முரகரியை
கண்டவன்போல் பேசுகின்றாய்
சங்கு சக்ராயுதமும்
எங்கிருப்பான் காண்பியென்று
தானுரைக்கவே பரம
ஞானமுள்ளச் சிறுவன்
தயங்கியே கருணைகொண்டு
எங்கினு மிருப்பாரென்று
சாந்தமாக சேயன் சொல்ல
வேந்தனு மனதுதுள்ளி
தைரியமா பதிலுரைத்தான்
உயர்ந்ததொரு கம்பமதில்
தானிருக்க வேணுமென்று அவன்
ஆணுவங்கொண்டே வெகுண்டு
தட்டுகெட்டுத் தடுமாறி
எட்டியுதைத்திட மீறி
தடித்த கற்றாணினின்று
வெடித்துவந்தார் சிங்கமென்று
தருதலையாய் வந்தெதிர்த்த
இரணியன் மார்பைக்கிழித்த
தண்டுளப மாலையணி
கொண்டல்வண்ணன் நற்றுணையே

தமியேனுக்குள்ள மட்டும்
உமையவள் பாகன் சற்றும்
தலையெடுக்கப் போவதில்லை
உயிர்பண்ணுதே தொல்லை
சடைமுடிகளே தரித்து
விடத்தை யுணவாய்ப் புசித்து
சாம்பலைப்பூசி நல்ல
பாம்பணிந்தவனை வெல்ல
சண்டைக்குப் போரேனென்று
மண்டலமீது நின்று
தயங்கியழுகாதே பெண்ணே
மயங்கிவிழுகாதே கண்ணே
தாயைப்போல் மிகவும் தாங்கி
நேயமாய் வளர்த்தப்பாங்கி
தன்னுடன் கலந்துகூடி
உன்னிதமாக நாடி
சந்தனஞ் சவ்வாது பூசி
விந்தையாய்க் கதைகள்பேசி
சஞ்சலமெல்லாம் விடுத்து
பஞ்சணையை நீ யடுத்து
சயனித்து கொண்டிருப்பாய்
பயமின்றியே சிறப்பாய்
சண்டப் பிரசண்டனையான்
கண்டறிந்து வாரேனென்று
சடுதியாய் விடைகேட்டார்
சையோக வேள்மதனர்

## சரபபக்ஷி பிரதாபம் ரதி சொல்லும் ஒப்பாரி

கொன்றுமலை கண்டுமொழி
வண்டுகுழல் கெண்டைவிழி
தெரிவைபடை மன்மதனே
அரிவையர்க் கிசைந்தவனே
செப்பவத்திர் மென்மேலே
சொற்பனங் கண்டதுபோலே
செங்கண்மால் திருவடியும்
பங்கயன் சடாமுடியும்
தேடிக்காணாத கர்த்தன்
ஈடில்லாத பிரசித்தன்
திருவிளையாட லொன்று
அறிவிக்கக் கேளுமையா
தேவர்களை பயமுறுத்தி
பூவுலகையும் வருத்தி
திறமையுடன் புவியிலன்று
இரணிய நமோவென்று
திடமுறவே சொல்லிவந்த
கொடுங்கோல் செலுத்திவந்த
தீய பாதகனான
மாய இரணியன் காண
சிறுபாலனைக் குறித்து
நரகரியுருவெடுத்து
சிறந்த விரணியன் மார்பை
திறந்து திரமேகுடித்த
திருமால்தனை யெதிர்த்து அவன்
பிரமகத்தியாய்ப் பிடிக்க

சீதரனர் வெறிக்கொண்டு
மீதலந் தனிற் சென்று
சித்தாதி தேவர்களை
மெத்த வருத்தியதாலே
திறைகடல் நஞ்சையுண்ட
இறைவனிடத்தில் மருண்ட
வானுலகோர் முறையிடவே அப்போ
தானுவுங்கை யமர்த்தி
செறிபொற்சிறை மிகுந்து
சரப பக்ஷியாய் பிறந்து
திங்கட்சடை யோனிருக்க
கண்கள் பொறிபறக்க
செந்திருமால் சிங்கமென்று
வந்திடவுஞ் சிவபெருமான்
சிரசைப்பிளந்து பங்கம்
புரிந்தகதையே விளங்கும்
ஜெகதீசன் றனைக்கண்டு
ஜெயம்பெற்று வாரேனென்று
தில்லுமுல்லு பேசவந்தீர் தன்னை
வல்லவனென்றே புகழ்ந்தீர்
திங்கட்குடைநான் சுருப்பு
மங்கைப்படை வில்கரும்பு
தென்றல்ரதம் பச்சைக்கிளி
மன்றங்கமழ் மலர்வாளி
சேர்ந்ததொரு கொடிபடைகள் உமக்கு
வாய்ந்தவோ ராயுதங்கள்
சிவனுக்கோர் துரும்பாகும்
அவகீர்த்தி மேலாகும்
செல்லாதீரென் றுரைத்தாள்
சீரிலங்கு பெண்ரதியாள்

## மகா பாரதம் மதன் சொல்லும் ஒப்பாரி

வண்ணப்பசுங்கிளியே
இன்னமே தேன்மொழியே
வண்டமிழ் சரஸ்வதியே
தெண்டனிடும் பார்வதியே
மதுரப் பலாச்சுளையே
மதராஜன் கைசிலையே
மட்டில்லா பொக்கிஷமே
காட்டு மாங்கனிரசமே
மாடப் புறுவனமே
ஈடில்லா ரத்தினமே
மல்லிகை பூங்காவனமே
உல்லாச வங்கனமே
மங்கையே யான்புகழும்
சங்கதியொன்று கேளாய்
வாய்ந்த தராதலத்தை
சார்ந்த அஸ்தினபுரத்தை
வான்முறையாகமுந்து
அரசாக்ஷியே புரிந்து
வந்தசுகுண விலாசன்
அந்தகல் பாண்டுராஜன்
மனைவியே குந்திதேவி
இணைபிரியாமல் மேவி
மகிழ்ச்சியாய் ஐந்துபேரை
புகழ்ச்சியாய் பெற்றெடுத்து
மல்வித்தை வில்வித்தை
கல்விபயிலும் வித்தை
வாத்தியாரிடம் விடுத்து
கீர்த்தியாய் கற்றுகொடுத்து

வரும் வாலிபதிசையில்
பெருமையா யிப்புவியில்
வாஞ்சை யனேகமுற்று
பாஞ்சால ராஜன்பெற்ற
மங்கை தன்னுடன்பிறந்த
எங்கிலும் புகழ்சிறந்த
வளையாத வில்வளைத்து
களிப்புடனே பஞ்சவர்கள்
மாது துரோபதையை
நிதமுடனே யவர்கள்
மங்களமாய் மாலையிட்ட
சங்கதியை கேள்வியுற்று
மன்னன் துரியோதனனும்
அன்னவர்மேல் பகைக்கொண்டு
வகைதெரியாமல் நின்று அவன்
சகுனிமாமனைக்கண்டு
பதிக்கெடவே துணிந்து
சங்கரன் மனமகிழ்ந்து
மந்திரிப்போல் வாய்திறந்து
தந்திரமா யேதுரைத்தான்
மங்களமாய் வாழ்ந்திருக்கும்
மங்காத ஐவருக்கும்
மாக்ஷிமை மிகுந்தபாதி
ராஜ்யம் கொடுக்குஞ்சேதி
மருவிய துரியனுக்கும்
திருதமகா ராஜனுக்கும்
வக்கணையாய் மென்பேனும்
முக்கியமா சொன்னதாலும்

வஞ்சக நெஞ்சம்படைத்து
பஞ்சவரை வரவழைத்து
மாணிக்கக் கற்பதித்த
ஆணிப்பொன்னு லிழைத்த
மாடமாளிகை மீது
ஆடம்பரமாக சூது
மார்க்கமாய் விளையாடி அவர்கள்
தோற்கவே சகுனிநாடி
வாழ்ந்துவரும் பாதிநாடு
சேர்ந்த சட்டிப்பானையோடு
மற்றுமுள்ள நிதியமெல்லாம்
பற்றினதும் போதாமல்
வம்பன் துரியோதனனும் அவன்
தம்பி துர்சாதனனை
மாராட்டமா யனுப்பி
மாசபையோர்கள் நடுவே
வாலாயமாயெடுத்து
சேலையைத் தானவிழ்த்து
மானபங்கமே படுத்த வெகு
நாணமுற்று பத்தினியாள்
மாயவனைத் தோத்தரிக்க
தூயபட்டாடை மிக்க
வளத்தோங்கவே சிறந்து அவள்
மலர்க்கூந்தல் தானவிழ்த்து
மண்ணிற் புரண்டிடவும்
பெண்ணுன் புலம்பிடவும்
மதபீம அர்ச்சுனனும் மனம்
பதறியே வில்லெடுத்து

மாச்சரியமாய்க் கிளம்ப
தீக்ஷண்யமாய்த் தருமர்
வாருங்கள் தம்பியென்று
சீருடனே கையமர்த்த
வணங்கா முடித்துரியன்
இணங்கியே அச்சமயம்
மன்னிய ஐவர்களும்
பன்னிரெண்டு வருடம்வரை
வனவாசஞ் செய்தபின்பு
இனியொரு வருடம்நாட்டில்
மறைவாகத் தானிருந்து
திருங்கரத்தே மகிழ்ந்து
வந்தவுடன் பாதிநாடு
தந்திடுவே னென்றுரைக்க
வருந்தியே பஞ்சவர்கள்
பொருந்தியக் கானகத்தில்
மாலையிட்ட மாதரோடு
நாளைத் தொலைத்ததுமாக
மாயவனைத் தூதனுப்பி
நேயமுடன் அன்னவர்கள்
வாட்டிய சகுனியையும்
பாட்டனென்ற பீஷ்மரையும்
வட்டமிடும் பரிகரியும்
மூட்டிய துரோணரையும்
வந்தெதிர்த்த கர்ணனையும்
பந்துக்கள் யாவரையும்
மாட்டியே துரியனையும்
நூற்றொருவர் பூமுடியும்

வாளுக்கிறை கொடுத்து
    மனமகிழ்ச்சியே மிகுந்து
மாக்ஷிமை சேர் தருமருக்கு
    ராஜ்யந்தனைக் கொடுத்து
மகுடாபிஷேக மதை
    விகசிதமாய் செய்து வைத்து
மாயகோபாலகிருஷ்ணன்
    ஆயர்குல விசுவாசன்
வரங்கொடுக்கும் பரந்தாமன்
    நரசிங்கமான ரூபன்
மாதேவன் துணையிருக்க
    தீதொன்றும் வாராது
வாக்களிக்கவேணு மென்றார்
    மையல் தரும்வேள்மதனார்

## சிறுதொண்ட நாயனர் சரிதையை

## ரதி சொல்லும் ஒப்பாரி

தேனர் குழல்மிகுந்த
    மானர் கல்விக்கிசைந்த
சித்தஜரே என் கணவா
    முத்துலட்சுமி புதல்வா
சிந்தைமிக பட்டு
    அந்தரமா என்னைவிட்டு
தேவர்சபை யிப்போது
    போவதற் குதவாது
திங்களைச் சிரமணிந்த
    சங்கரன் முன் நாள் புரிந்த
திருவிளையாடலொன்று
    தெரிவிக்க கேளுமய்யா

சிறுத்தொண்ட பக்தனென்றும்
திருத்வெங்காட்டு நங்கையென்றும்
சிறந்தவிரு பேர்களுண்டு
அறந்தவறாமல்நன்று
செய்துவந்தார்கள் பண்டு
எய்ததற்கு குழந்தையொன்றும்
சீராளனாய் பிறந்தும்
பேராகத்தான் வளர்ந்து
செல்வத்துடனேயிருக்க
கல்வியிற்றேற்ச்சி மிக்க
தீர்க்கவைராக்ய சித்தன்
யோக்கிய மிகுந்த பக்தன்
தெய்வபக்தியிற் சிறந்த
சைலநடையிற் புகுந்து
சிவனடியார்களுக் கன்னம்
உவந்தளிக்க வேண்டிய முன்னம்
திருவொற்றியூர் சென்னை
தெருவெங்கும் சுற்றிபிள்ளை
திருகூட்டந்தனைத் தேடி
உருக்கமாயோடோடி
தேடிக்காணமலே மனம்
வாடியது பக்தன் முகம்
சிவசிவா வென்றவனும்
கவலை கொண்டிருக்கையிலே
சிரித்து புரத்தை முன்பு
எரித்தருத்ர ஜோதிஜம்பு
சித்தசன்யாசி போலே
பக்தனுக்கு முன்னாலே

ஜெகதீசர் வந்துநிற்க
அகமலர்ந் தன்னவனும்
திருவடியை தெண்டனிட்டு
சிரம்வணங்கிக் கும்பிட்டு
திருவமுது நீர்புசிக்க
சிறுவன் மனங்களிக்க
சீக்கிரம் வாருமென்று பெரும்
பாக்கியமே வந்ததென்று
சிந்தைமகிழ்ந்தே யழைக்க அப்போ
அத்தனும் வாய்த்திறந்து
செப்புவார் தருணம் ஒரு
ஒப்பினையில்லா வசனம்
சேய்கறிக ளல்லாது மரக்
காய்கறி பதார்த்தமெல்லாம்
தின்று நான்பழக்கமில்லை
யென்றதுஞ் சிறுத்தொண்டன்
கரிவிதித்தா னன்னவர்க்கு
பரிவுடனே யப்பொழுது
தேவர் வேண்டியதை
மேவிடத் தாரேனென்று
சீராளனை யருத்து
தாரளமாகச் சமைத்து
திருவாக்கது ருசிக்க
பெரியோர்க் கன்னம்படைக்க
செஞ்சடாதரக் கடவுள்
விஞ்சையாய் யெழுந்தருளி
சேயனில்லாத வீட்டில் நான்
நேயமுடன் பாகமத்

செவ்வையாகப் புசிக்க மனம்
ஒவ்வாதென்றே யுரைக்க
சிறுத்தொண்டன் சிவனுரை
இருமென்றா கையமர்த்த
திடமாக வச்சமயம்
அடியவர்க் கேதுரைத்தான்
சித்திரத்தையே நிரைத்த
புத்திரனொருவனுண்டு
தெள்ளிய வித்தைகற்க
பள்ளிக்குச் சிறுவன்
சென்றவனைகயினல்
உண்டு பசியாருமென்ன
செந்திருமாலயன் போற்றும்
அந்திவண்ண னென்னசெய்தார்
தெருவாயற்படி நின்று
பரமசிவனர் முயன்று
சீராளா வென்றழைக்க
வாரேனென் றவனுறைக்க
திருவெண் காட்டான்மகிக்க
சிறுத்தொண்ட னதிசயிக்க
தெரிசனங்காட்டி மூந்து
பரிசனமா யுகந்து
சின்னமயானந்த முத்தி
தன்மையாய் தந்தசிவன்
சேதி தெரியாமலிந்த
மாதரசி எந்தனிடம்

சிலவுதரவேண்டு மென்று
பலவிதமாயெண்ணங் கொண்டு
செல்லாதீ ரென் றுரைத்தாள்
உல்லாசப் பெண்ரதியாள்

## இரதி மதன் தர்க்கம்

முதல்ஒப்பாரி இரண்டாவது அடி
லாவணி மெட்டாகப்பாடவும்

மாங்குயிலே வொயிலே பூங்கொடியே மாமயிலே
வண்ணப் பசுங்கிளியே அன்னமே தேன்மொழியே

### பாட்டு

வஞ்சிக்கொடி யிடைமானே வெகு
வாஞ்சையா யிந்திரன் றானே இந்த
மகாராஜனை யதிவேகமாய் கிளிவாகன மதிலேறியே
வந்தருளும் படிக்கோனே என்னை
வாகுடன் றனழைத்தானே

### இரதி பாட்டு

மாதர்படை கணவீரா மன
வாதனைசெய்ய வந்தீரா உயர்
வடமேருவை நிகராயிரு புயமேவிய ஜெகன்மோகன
மாரவேள் நீரங்கு செல்லும் நல்ல
காரியந்தன்னையே சொல்லும்

### மதன் பாட்டு

மாவேறு மீசா மென்மேலே யவர்
மாதவஞ் செய்வதினாலே கொஞ்சம்
மடமாதரின் சுகபோகமே அடியோடதுகெடுமேயென
மாசிவ யோகந் தவிர்க்க பெண்ணே
வாவென் றழைத்தான் சிறக்க

### இரதி டை. மாதிரி ஒப்பாரியும் பாட்டும்

கன்னற்சிலை வேள்மதனே என்ன சொன்னீர்
மால்சுதனே
காமியா லும்மை விட்டு பூமிதனில் வேறுபட்டு
கண்ணீர் வடிக்கவும் டாச்சே நான்
எண்ணிய வெண்ணமும் போச்சே எங்கள்
கயிலாசரின் றவமேகெடும் படியேசெல மூறையோ
சொல்லும்
கங்காளன் பொல்லாத கோபி உமை
கண்ணாலெரிப்பானே மேவி

### மதன் பாட்டு

கட்டாயம் நான் போகவேண்டும் கண்ணே
வொண்டாரஞ் செய்யாதே மீண்டும் வளர்
கலைமாமதி அணிமாசிவன் மலைமாமகள் தனைமேவியே
கல்யாணம் செய்திடத்தானே மிக
காமியாதந்து வாரேனே

### இரதி ஒப்பாரியும் பாட்டும்

காமவனக் கிளியால் கோமளப் பெண்ரதியாள்
கண்ட கணவதுபோலே சண்டைக்கு மின்னாலே
கச்சைக்கட்டிப் போகலாமா நல்ல
காரியஞ் செய்திட்டீர் பூமா அரைக்

கணமாகிலுமெனைக்கூடியே சுசலீலைகள் புரியாதும்
காதலனே யங்குசெல்ல ஒரு
போதும் உமக்கழகல்ல

### மதன் ஒப்பாரியும் பாட்டும்

கற்பகமே நன்னிதியே செப்பக்கேள் சங்கதியே
கற்கண்டே சர்க்கரையே சொக்கப் பசுங்கிளியே
கண் கலங்காதடி பெண்ணே புகழ்
காரிகை தேர் முத்துக்கண்ணே சிந்தை
களிக்கூடவும் சகிமாரோடு துணையாகவே விளையாடியே
காட்சியா யிங்கிருப்பாயே சிலைக்
காமன் வரமட்டும் நீயே.

### இரதி ஷை பாட்டு

இங்கிதமாகிய லீலை சகி
யின்புரக்கூடி இவ்வேளை கனி
இதழூரலின் சுவையேதெரிந்திதமா யிருமுலையாரவும்
எந்தனை சேர்ந்தொருசேடி முத்தம்
தந்திடுவாளோ போராடி

### மதன் ஷை பாட்டு

இப்படிநீ எண்ணலாமா பெண்கள்
செப்பிடும் வித்தையும் போமா அந்த
மையோர்களும் வசைக்கூறுவர் இனிதாமதம் புரியாமலே
என்னைப்போல் சித்திரப்படமே தந்து
சென்றுவாரேன் உந்தனிடமே

### இரதி ஒப்பாரியும் பாட்டும்

மரவுசித மாகநாடி பாவைமலர்கள் சூடி
மஞ்சயத்தில் கூடிடுமோ கொஞ்சி விளையாடிடுமோ

மார்க்கமாய் என்னிடம்சொல்ல வந்தீர்
மன்னவனே சரியல்ல புள்ளி
மயில்வாகன குமரகுரு பரனேயென துதி பாடிடும்
மங்களன் செப்பிய கீதம் தன்னை
வாஞ்சையாய் கேட்டருள் நீதம்

## மதன் ஷை பாட்டு

வம்புசெய்யாதடி காமி ஜெய
மங்களமேவிய பூபி புகழ்
மதிசேகரன் மயலாகிட விரிபூங்கணையதை தூவிட
மன்மதன் சென்றுவாரேனே நல்ல
வாக்குக் கொடுத்தருள் மானே

## தர்க்கம்

முதல் ஒப்பாரியாக யெடுத்து மறுபடி வேறு
லாவணி மெட்டாக பாடிக்கொள்ளவும்.

## மதன்

மஞ்சுநிகர் குந்தளமே மிஞ்சுபுகழ் கோகிலமே
வஞ்சிக்கொடியிடைமானே அஞ்சுகமே செந்தேனே சுர்மா
மாறிமாறி வேறு வேறாய் நூறு நூறுதரம்பேசி
வாது செய்தல் நீதியல்ல மங்கையே ஒரு
போதும் விடியாதடி யென் நங்கையே எந்தன்
மனமோகன ரதியே மகபதி யாசகன் சபையேகிட
மாமயிலே தாமதம் செய்யாமலே இந்த
காமனை யனுப்பவேணுந் தையலே

## ஷை ரதி

மங்கையாள்சிந்தைபெரப்ப தர்மசங்கடமா தோணுதிப்போ
வானவர்கோன் தூதனுப்ப தானவர்கள்வந்து செப்பஎந்தன்

மன்னவனுஞ் சிந்தைகெட்டு உன்னதமாய் புறப்பட்டு
வாதிக்க வந்திரே சிலைமன்மதா பெண்ணை
சோதிப்பதுசரியல்ல ரஞ்சிதா தெள்ளு
மணிமேகலை பிணைமாமுலை மடமாதெனைப் பிரிந்தேகிட
மனஸ்தாபம் வந்ததென்ன புல்லுமே சிந்தை
மாறியவ்விதத்தைச் சற்று சொல்லுமே

## ஷை மதன்

சொல்லக்கேளடி மயிலே உல்லாச மாங்குயிலே
சொந்த மாமன்மகளே இந்துமாமுக வொயில்பெண்கள்
சோகமற்று மோகமற்று ராகமற்று பாகமுமற்று
தொல்லையற்று நல்லரவம் பூண்டவன் ஒரு
கல்லாலின் புடையமர்ந்த மாசிவன் பகவத்
தோடரேகிடஜன காதியின் முனிநால்வரும் குயர்மாதவ
சூட்சி தன்னைக் காட்சியாகமேவிட சொல்லுந்
துய்யன்மீது மலர்கணைத்தூவிட

## ஷை ரதி

தூவிட மலர்க்கணையும் தீவினை வந்தேவிளையும்
துன்பம்வந்து சேருமையா இன்பமுறக் கேளுமையா பெரும்
சூதகற்ற வாணவர்கோன் போதனைக்குள்ளாகப்பட்டு
தூண்டியிற் சிக்கிய மீனைப்போலவும் துள்ளி
துடிக்காதீர் துடிக்காதீர் சாலவும் தொண்டர்
துதிகூறிடும் கைலாசரின் தவமேகெட யெனிதேகிட
தோன்கையெந்தன் வாக்கியத்தை கேளுமே அங்கு
போகவேண்டாம் புண்ணியா வெந்நாளுமே

## ஷை மதன்

என்னாளுமிங்கிருந்தால் பண்ணவர்களும் முனிந்தால்
என்ன செய்வேனெந்திழையே வண்ணநறும் பூங்கொடியே
அந்த

ஈசனுக்கு மேபயந்து காசினிக்குளே யொளிந்து
இருப்பது சரியல்ல வஞ்சியே என்றும்
இளக்காரமாகு மபாஞ்சியே மலர்
இடுகாடெனும் சுடுகாடதில் நடமாடிடும் சடையாண்டியை
இப்பொழுதே வென்றுவாரேன் சிங்கமேவிடை
செப்படி பத்தரை மாற்று தங்கமே

ரதி

இப்பொழுதே நீர் வெல்ல செப்பிடு வித்தையல்ல
ஏதுமுடியாது நேமி வாதுசெய்யாதீர் சாமி பாட்டு
இடையருக் கேபுத்தி பிடரியிற் ரூனென்று
இயம்பும் வாசகஞ் சரியாச்சுதே மங்கை
எண்ணிய வெண்ணமும வீணுய்ப்போச்சுதே இந்த
இகபீதினிலே சுகலீலைகள் புரிந்தேயிதம் பெரும் நாளையில்
என்னை விட்டு போக மனம் வந்ததோ சாமி
எப்படித்தான் சிந்தையிடம் தந்ததோ

ஷ. மதன்

உன்னைவிட்டுப்போரேனென்று சொன்னயமாக புகன்று
ஒண்டடியே நீசொல்ல ஒண்டசோத்து ராமனல்ல பெண்ணே
ஒட்டனைப்போல் மண்சுமந்து கொட்டிமே வாணிச்சி தந்த
பிட்டையுண்டு பிரம்படி பட்டவன் ஊரை
சுற்றியே விறகெடுத்து விற்றவன் இந்த
உலகோர்பல வசைகூறிட தலையால்பெரும் பழிவாங்கிடும்
உங்கள் பண்டார ஜாதிக்கு ரோஷமே இல்லை
மங்கையேயிதற்கு பதில்பேசுமே

ஷ ரதி

எங்களுக்கு ரோஷமில்லை உங்களுக்கு ரோஷமுண்டோ
ஏய்த்துவிட்டோடாதீர்வாய்ப்பந்தற்போடாதீர்மாயன்

இட்டவாய்வெண்ணை திருடி கொட்டுமத்தா லடிபட்ட
குட்டு வெளியாகும்படி சொல்லவோ அந்த
பட்டிமாடு மேய்க்கும் புத்தியல்லவோ சொல்ல
இழிவே தரும் வழியேபெரும் இனிபேசிட சரியோ பல
எங்கள் ஜாதிக்குங்கள் ஜாதி மேன்மையோ மாட்டு
பொங்கலிடையருக்கு வல்லாண்மையோ

ஷை. மதன்

மேன்மைதான் எங்கள் ஜாதி தேன்மொழியே எனக்குவாதி
மேதினியிற் கிடையாது ஓதுகிறேனிப்போது பெண்ணே
வில்லாலும் கல்லாலும் பலர் சொல்லாலு மடிபட்டுமே

மேனி நொந்தவனைப் பிரமாதமாய் கையை
வீசிவீசி பேசுகிறாய் விநோதமாய் சென்று

விரிபூங்கணையதை தாவியே வானோடமர் புரியாவிடில்
மீசையுள்ள வாண்பிள்ளை யல்லவே அந்த
ஈசனெனக்கொரு நிகரல்லவே

ரதி

நிகரில்லை என்று சொல்லி மகரமீன் போலதுள்ளி
நீட்டாதீர் நெடுங்கம்பி ஆட்டுக்கோள் மேற்கிளம்பிசற்றும்
நீக்குபோக்கு தெரியாமல் மூர்க்கமாய்ச் சண்டைபோட்டு
நெற்றி கண்ணா லெறியாதீர்புண்ணியா வேண்டாஞ்
சற்றுநேரம பொருத்தருட் புண்ணியா நல்ல
நெறியோதியுஞ்செவிமீதினிலணுவாகிலும்படவேயில்லை
நில்லும் நில்லும் நீர்பெரிய ஜல்லியே அந்த
நிமலன் உமக்கு வைப்பான் கொள்ளியே

மதன்

கொள்ளிவைக்கவந்த சிவன் என் பிள்ளையோ
வாண்டியவன் எங்கள்
கோகுலத்திலே யுதித்தக் காகுத்தன் தயவிருக்க

கோபமூட்டாதே பெண்ணே பாவய் வந்து சேருங்கண்ணே
கொஞ்சங்கூட வஞ்சமாட்டேன் கன்னியே சும்மா
சஞ்சலப்படாதடி விற்பன்னியே முத்துக்
குமர குருபரனேயென துதிமேவிடுங் கவிபாடியே
கொங்கு மெங்கள் மங்களதாஸ் கீதமே அதை
ரஞ்சிதமாகக்கேளடி நற்போதமே

ரதி

கொண்டுகுலம் பேசுவார்கள் உண்டோயிப்பூதலத்தில்
கோடிநமஸ்காரமையா யோடிசெய்யாதீர் துய்யா அன்பர்
கொஞ்சி கொஞ்சி பேசுந்தமிழ் விஞ்சையாக போற்றிபுகழ்
ரஞ்சிதஞ்சேர் மங்களதாஸ் பாடமே அதை
மிஞ்சியே கேட்டருளும் விசேடமே · நல்ல
குணமேவிய ரதிகூறிடு மொருசேதியையினிகேளுமே
கொல்லத் தெருவினி லூசிவிற்கவே சாமி
செல்லவேண்டாம் யாவரும் பழிக்கவே

மதன் ரதி தர்க்கம்

(காலையிலே தென் சோலையிலே என்றமெட்டு)

மதன்

பத்தினிப் பெண்மானே தித்திக்குஞ் செந்தேனே
பாங்கான மாமயிலே சிங்கார
மாங்குயிலேவதையலே படு
பாவி யென்ற நாமம் பாரீர் படையாமல்
தேவியே வாக்கருள் வாய் பருவாதி
தேவியே வாக்கருள் வாய்

ரதி

சித்தஜ வேள்மாரா சுத்த ரணவீரா
செந்திருமால் புத்திரா சிறுதென்றல்
தேருடையச் சித்திரா அங்கு

செல்லாதி ரென்று நானுல்லாசமாச் சொன்ன
சேதி தெரியாமலே துள்ளாதீர்
ஓதியுணராமலே

மதன்

செப்பிய சேதியை ஒப்புக்கொண்டேன் பெண்ணே
தேவேந்திரன் பகைப்பான் செல்லாவிடில்
தேவேந்திரன் பகைப்பான் அந்த
ஜீவாத்மா லிங்கேசன் தேவாதி தேவன்மேற்
பூவாளியைத் தூவியே அரைநொடியில்
சென்று வாரேன் மேவியே

ரதி

அப்பாவி சண்டாளன் சொற்போதனையாலே
ஐயையோ செல்ல வேண்டாம் போர்புரிய
ஐயையோ செல்ல வேண்டாம் இனி
ஆறாத புண்ணுக்கு நேராய் பரமேசன்
நீறா யெரித்திடுவான் உந்தனையே
நீறாயெரித்திடுவான்

மதன்

தேம்பாமற் கேள் மாதரசே சாண்பிள்ளையானாலும்
ஆண்பிள்ளை நானல்லவோ என் சமர்த்தை
தான் புகழ்ந்துச் சொல்லவோ எங்கள்
சீமான் ஜெயமங்கள தமிழ் கீர்த்தியை
செப்படி வாய்திறந்தே
செப்படி வாய்திறந்தே

ரதி

ஆண்பிள்ளையானாலும் பெண்பிள்ளையானாலும்
சாம்பசிவனாரிடம் செல்லாது
ஏன் போறீர் மாசங்கடம் எங்கள்

ஆசான் ஜெயமங்களத் தமிழ்பாடியே
ஆனந்தமா யிருப்போம் எப்போதும்
ஆனந்தமா யிருப்போம்

### மதன் ரதி தர்க்கம்

(நந்தவனத்திலோராண்டி என்ற மெட்டு)

பல்லவி

சித்திரமடமானே மாரன்
செல்லவிடையருள் தித்திக்குந்தேனே

அனுபல்லவி

பத்தாவின் சொல்லு தட்டாதே எந்தன்
பாக்கியமே நல்லபாங்கான மாதே
இத்ததி வாது செய்யாதே கணை
எய்து வருகின்றேன் வையகமீதே சித்

ரதி

பல்லவி

மாதர் படை சுகுமாரா வீண்
வம்புசெய்யாதீர் வதனசிங்காரா

அனுபல்லவி

பாதிமதி யணிகர்த்தன் அந்த
பரமசிவன் நல்லப் பாம்பாட்டி சித்தன்
பாதி முறையற்ற பித்தன் உம்மை
தணலா யெரிப்பானே சாமி உன்மத்தன் மா

### மதன் பாட்டு

முன்வைத்த காலைப் பின் வைக்க நல்ல
மூனைவீரர்க் கழகல்ல மூவர் மதிக்க
பொன்வைத்த மார்பனிருக்க ஒரு
போதும் முடியாது யென்னை ஜெயிக்க சித்

இரதி

அப்படி எண்ணிடலாமா எங்கள்
ஆதிசிவன் றிறமை சொல்லப்போமா
நற்புகழ்ச்சி செய்யலாமா சொந்த
தாய்மாமனேடு சமர் பண்ணப்போமா மா

மதன்

சங்கரன் றன்னை மயக்க நல்ல
தையல் படையது கையிலிருக்க
பங்கம் வராது சிறக்க நான்
பட்சமாய் போய்வாரேன் பரமன் விழிக்க சித்

இரதி

மங்கை படைவில் கரும்பு மலர்
வாளி தென்றல் ரதம் நாணிசுரும்பு
இங்கித முல்லை யரும்பு எல்லாம்
ஈசனுக்கோர் சிறிய துரும்பு மா

மதன்

வாது செய்யலாகுமோடி சிலை
மாரனல் கெட்டவர் கோடானுகோடி
சேதி தெரியாமல் நாடி துன்பம்
செய்யாதே மங்களச் செந்தமிழ் பாடி சித்

இரதி

ஏதுக்கு இத்தனை வாது இந்த
ஏழைசொல் அம்பலந் தன்னிலேற்காது
தோதகம் பண்ணத்தகாது சோம
சுந்திரமூர்த்தியை வெல்பவரேது மா

## மதன் இரதி தர்க்கம்

(பூவருந்திருவே என்ற மெட்டு)

### இரதி

சாமி மன்மதனே அதி
மோக ரஞ்சிதனே பசுந்
நானபஞ்சணைமீதிலெந்தனை கூடியின்பசுகந்தருவாய்
வீரகங்கணனே ரதி
மாவதுங்கனனே சதுர
வேதனுந்திரு மாலுங் கண்டறியாதசெஞ்சடை சங்க
[ரண் மேல்கணை
போடவுங் கெடுவாய் இனி
போவதும் விடுவாய் பெரும
பூதலம்புகழ் சுறுமங்களநாதர் தம்பல சேங்கடவாய் விடும்
ஆகா வுனை விட்டேன் காமதுரையே

### மதன்

காமசுந்தரியே உப
கார மந்திரியே பெருங்
காதல் கொண்டுனையே யணைந்துகொண்டேயிருந்திட
ரஞ்சிதமாய்ச் சொல்லுங்
காரியந்திடுமோ நலங்
காணச் சங்கடமா சிலை
காமனங்கு செலாதிருந்திடில் தேவரெந்தனை நிந்தனையாய்
பரிகாசம்பண்ணிடுவார் வசை
பேசநன்னிடுவார் கடுங்
காலகண்டனை போரில்வென்றுனையே யடைந்துமாம்
சீராய்புணரலாம் கோமையிலே (மங்களமேவிட)

## மன்மதன் பிரயாணமும் தேர் அலங்கரித்தலும்

### ஒப்பாரி

கங்கண கல்யாண குண
சிங்கார ரூபகண
வானோர் தன் சபைக்கு மதன்
தேசிகமாய் போவதற்கு
வஸ்திரா பரண மெல்லாம்
விஸ்தாரமாய் தரித்து
மாயவனைத் தோத்தரித்து தன்
ஆயுதங்களை யெடுத்து
மாரவே ளார்பரித்து
தேர்வசந்தனை யழைத்து
மச்சமில்லா உத்திசஞ்சேர்
பச்சைக்கிளி வாகனத்தை
வாகுட னலங்கரித்து
மோகனமாய் சோடித்து
வாவென்ன அப்பொழுது
ஒலியாமல் தேர்பாகன்
வடமேருவைப்போல்
அடிதட்டுப் பொன்னாலே
வச்சிரப் பலகையாலே
அச்சுதட்ட தன்மேலே
வரிசையாய்க்கால் நிறுத்தி
திருவாசி மேற்பொருத்தி
மகரமீன் கொடிநாட்டி
விகசித ஜாலர்கட்டி
வர்ணரஸ குண்டுகளும்
பானல் தரப்லாச்சுகளும்

வகைவகையா யசஞ்சாடி
சிகரங் கோடானகோடி
வைத்துபொற் சகடைமாட்டி
சித்திரக்கனியை நாட்டி
வசமாய் கடிவாளம்பூட்டி
பசுந்தாகத் தேரையோட்டி
வந்தவ னறிக்கையிட
சுந்தரவிலாச மதன்
மந்தகாசமா யமர்ந்தே
மாதர்கள் படைசூழ
மதராஜன் சொல்லலுற்றார்
ரதிதேவியைப் பார்த்து
மங்கையற்கெல்லாஞ் சிறந்த
இங்கிதப் பெண்ணுபிறந்த
மானே மரகதமே
தேனே திரவியமே
வசையிலாப் பெண்டினமே
இசைபகரும் வண்டினமே
வடிவுடைய கண்மணியே
கொடியிடைப்பெண்ணே ரதியே
மாதவர்கள் கூடுஞ்சபை
நீதமோயான் சென்று
வருகிறேனரை கொடியில்
மருவிய யிப்புவியில்
வஞ்சியே சற்றேனும்
நெஞ்சம் கலங்காதேயென்று
மாதரசியைத் திருத்தி
ஓதுதற்கரிய புத்தி

மதியனேகம் புகட்டி
ரதத்தை விரைவாகத்தட்டி
மண்டலமெலாங் குலுங்க
அண்டமதஇருநிடுமென்ன
வானுலகை நோக்கியந்த
மன்மதன் பயணமிட்டார்

**மதன் சகுணங் காணுதல் ஒப்பாரி**

அன்ன ரதியாளைவிட்டு
உன்னதமா புறப்பட்டு
அவசரமாகத் தேரேறி ரதி
நவிலும் வார்த்தையைமீறி
அங்கஜனர் தேவர்சபை
வங்கணமாய்ப் போகையிலே
ஆனையொன்று வீறிடவும் கரும்
பூனையொன்று நேரிடவும்
அரவங்கள் சீறிடவும்
குருடனெதிராய் வரவும்
ஆந்தை கோட்டான்குழற
மாந்தரெல்லாம் பதற
அங்கொருத்தி மாரடித்து
கங்கணங்களை யொடித்து
அம்மாடி யென்றழவே
கம்மாளன் தேர்வரவே
அறுதலியான குட்டி
கரிய புடவைகட்டி
ஆகுலமாந் தோன்றிடவே
காகங் கரைந்திடவே

அருகியோர் எண்ணைக்குடம்
வரவே வனத்தினிடம்
ஆனசெந்தாய் நாகன்
காணவேங்கைப் புலிகள்
அழுது புலம்பிடவுங்
கழுதைகள் கத்திடவுங்
ஆடவரும் பெண்டிரும்
மாட மாளிகைதோறும்
அலங்கோல மாயிருக்க உள்ளங்
கலங்கியே தத்தளிக்க
ஆகாத சகுணமெல்லாம்
வாகான மன்மதர்க்கு
அதிசயமாகத்தான் விளங்க
மதவேள் மனங்கலங்கி
ஆவதாக்ட்டுமென்று மதன்
அண்டர்சபை சென்றனரே

மதன்வினவும் இந்திரன் விடையும்

மதன் தகனமும் ஒப்பாரியும்

கண்ணாயிரம் படைத்த
மன்னா என்னையழைத்த
காரியமென்ன வென்று மதன்
வீரியமாய் கேட்கையிலே
கணவாயிரப் படையோன்
மனமகிழ்ந்தே துரைத்தான்
காமராஜேந்திரனே உன்
மாமனார் சீலகண்டன்
கடுந்தவஞ் செய்வதாலே
ககனருக்கு மென்மேலே

கலவிதொழில் மாறுபட்டு
பலவிதமாய்த் துன்பமுற்று
கவலைகொண்டதோர் நிமத்தம்
அவசரமா யுமையழைத்தோம்
கங்காளனை யடுத்து
கொங்குமலர் கணைவிடுத்து
கர்த்தன் மாதபசழித்து
சித்தஜனே வாருமென
காலகை முகமலர்ந்து திரு
மால்மகன் சிந்தைநொந்து
கைலாச மூர்த்திபிடம் மதன்
ஒயிலாக சென்றவுடன்
கடவுளை நமஸ்கரித்து
திடமாகவே துதித்து
கரும்புவில்லை வளைத்து
நறும் பூங்கணையெடுத்து
கட்டழகுவேள் தொடுக்க சிவன்
நெற்றி விழியைத்திறக்க
கனல்பட்டு தானெரிந்தார் அந்த
கன்னற்சிலை வேள்மதனர்

மதன் எரிந்தானென தூதர்கள் சொல்ல கேட்டு
இரதி புலம்பல்

எத்தனையோ புத்திமதி
சித்திரத்தை யொத்தரதி
எடுத்துப் பலவிதமாய்
படித்துரைத்தாள் மாரனுக்கு
ஏற்காமல் தேவர்சபை மதன்
மூர்க்கமாய் போனவுடன்

இலகு சப்ர கூடத்தில்
சலவைக்கல் மண்டபத்தில்
ஏங்கித் துரும்பாமெலிந்து
தூங்கு மஞ்சத்தே யமர்ந்து
எண்ணாது யெண்ணியவள்
கண்ணுறக்க மில்லாது
இப்படித் தானிருக்க
அப்பொழுது தூதுவர்கள்
எல்லோரும் ஓடிவந்து
சொல்லலுற்றார் கட்பயந்து
ஏந்திழையே ரதிதேவி
வாய்ந்த சேதியை மேவி
இக்கணமே கேளுமம்மா
துக்கப்படாமல் சும்மா
அங்குச் சிலையைவளைத்து
நக்கன்மேற் கணைதொடுக்க
எரிந்துவிட்டார் காமதுரை
அறிந்துவந்தோமென் றுரைக்க
எட்டுதிசையு நடுநடுங்க
கட்டிலை விட்டேகுதித்து
இடிபோல கூச்சலிட்டு
மடமயிலாள் சிந்தைகெட்டு
எழுந்தவள் மாரடித்து
அழுது பற்களை கடித்து
ஏதென்றெடுத் துரைப்பாள்
தாதியர்களைப் பார்த்து
ஏவல்செய்யும் பாங்கிகளா
காவல்செய்யும் சேடிகளா

எனக்கிசைந்த பெண்டுகளா
 வனக்கதலி தண்டுகளா
ஏரகத்துச் செல்வாம்பாள்
 ஆரூர் கமலாம்பாள்
இணைப்பிரியாத மெல்லி
 கனகாபிஷேக வல்லி
இசைந்ததோர் மதிவதனம்
 பதுந்துள்ள நாகரத்தினம்
இதம்பயிலும் கோகிலமே
 மதிகட்கும் மங்களமே
எல்லாரும் வாங்களடி
 பள்ளியறைக்குள் நாடி
இழவுதனைக் கேளுங்கம்மா
 அழகான மாங்கல்யம்
அற்றுவிழ நாளாச்சே
 உற்றபதவியும் போச்சே
இப்பெரிய மண்டலமும்
 செப்பரிய விண்டலமும்
இழிவாகவே மதிக்கும்.
 சுழல்காற்றிலே பறக்கும்
இலவம் பஞ்சானேண்டி
 நிலவணிந்த பேயாண்டி
என் புருஷனை மடித்தான்
 ஜம்புவிழியா லெரித்தான்
என் கணவனை இழந்து
 அங்கஜனை யான் பிரிந்து
இருப்பேனோ வேறுபட்டு
 கரும்புச்சிலையோனை விட்டு

இங்கு தனியாயிருக்க
நங்கையர்கள் ஞாயமல்ல
என்றலறியே விழுந்தாள் முகம்
கன்றியே சோர்வடைந்தாள்
ஏறிட்டுப் பார்த்திருந்த
ஆரணங்கு தோழியர்கள்
எண்ணரிய பேரெடுத்து
கண்ணீர்தனை துடைத்து
எடுத்து மார்போடணைத்து கரங்
கொடுத்தங் குபசரித்து
ஏலமும் பன்னீரை
கோலமுறவே தெளித்து
இயல்பாகவே வோர்பெண்டு
நயமாக சுக்கைமென்று
ஊதுவாள் திரன்செவியில்
ஊதவே களைதெளிந்து
இச்சைதரு மன்மதனை
பச்சைநிற மேனியனை
இதயத்திலே நினைந்து
கதறி புலம்பலுற்றாள்
கட்டழகு வேள்ரதியாள்

இரதி புலம்பல்

அங்கஜவேல் மதனார்
செங்கண் திருமால்சுதனார்
அமரர்சபை போரேனென்று
விமரிசையாக நின்று
அன்னவர் விடைகேட்க
கன்னிரதியாள் கொடுக்க

ஆயுதங்களை யெடுத்து
பாயும் புலிப்போல்துடித்து
அங்கவர் சென்றபின்பு
மங்கையாள் .சிறுதரும்பு
ஆகவே உடல்மெலிந்து
சோகமுற்றே தெளிந்து
ஆணிப் பொன்னுலிழைத்த
மாணிக்கக் கட்டிலினமேல்
அலங்கோலமாய்படுத்து மனங்
கலங்கியே தத்தளித்து
அயர்ந்து நித்திரைபோக அவள்
பயந்து தன் சிந்தைநோக
அலறியே கீழ்குதித்து
பலவிதமா யோசித்து
அப்பொழுது ரதிதேவி
பொற்கிளியாள் வாய்திறந்து
ஆரடி தாதிகளா என்
நேரிலுள்ள பாங்கிகளா
அங்கமுத்து செங்கமலம்
தங்கமுத்து நற்பவளம்
ஆரணங்குத் தோழிப்பெண்ணே
காரிகைநேர் முத்துக்கண்ணே
அண்டைவீட்டு லட்சுமியே
திண்டுக்கல் ஜானகியே
அனைவருமே வாருங்கள்
கனவின் பலாபலன்கள்
ஆய்ந்துரைக்கத் தப்பாது
வாய்ந்த இப்புவிமீது

ஆதாரமாக நீங்கள்
சோதிடரை கூப்பிடுங்கள்
ஆ என் தலைவிதியோ
மாயன் செய்தசதியோ
ஆகாத காலமிது நான்
வாகா அணிந்திருக்கும்
ஆடை உரித்திடவும்
பாடையொன்று கட்டிடவும்
அழகான மாங்கல்யம்
நழுகிடவே அச்சமயம்
அடிக்கிய கைவளையல்
நொடிக்குள் உடைந்து தையல்
அரைவீட்டுக்குள் புகுந்து
சிறையிருக்கவே மிகுந்து
அலைகடல் ஏழும்வற்ற
மலைகள் பறந்துமுட்ட
அந்திசந்தியில் தோன்றும்
சந்திர சூரியர்மீண்டும்
அதிசயமாய் திசைமாறி
உதயமாகவும் நாரி
அப்படி நான் கண்டெழுந்தேன்
துப்பரியுஞ் சேடிகளா
அங்கம் தனலாகுதடி என்
கொங்கைரெண்டுஞ் சோருதடி
ஆயாச மாகுதடி மனம்
ஓயாமல் வேகுதடி
அன்றைக்கு வாரேனென்று
சென்றவரைக் காணவென்று

அழுது புலம்பலுற்ருள்
அன்னநடைப் பெண் ரதியாள்

## இரதி புலம்பல்

திரிபுக விலாசமுக்த
பருவப்பெண்ணு பிறந்த
செல்வ ரதிக்கிளியால் உயர்
கல்வியிற் சரஸ்வதியாள்
சோலேபழித்த விழியாள்
பாலேநிகர்த்த மொழியாள்
சிங்கார போகனத்தாள்
மங்கையர் கைக்கங்கலனத்தாள்
சிலேமாரனைப் பிரிந்து அவள்
இலகுதிருமேனி நொந்து
சேர் சகிமாரைக்கூடி
பார்க்கப்பசுந்தான லேடி
சித்திரப்படங்கள் கோடி அங்கு
வித்தாரமாகக் கூடி
திகழு நிலேக்கண்ணுடி
மகிழ்ச்சிதரு மேன்மாடி
தேவியவள் சிந்தைநாடி
ஓவியமபோல் முகம்வாடி
சிறந்த நள்பள்ளியறை
திரத்தாலவாய் மதுரை
செஞ்சந்தனம் புனுகு
மஞ்சள்குங்குமம் வாடை

ஜெகமெங்குமே மணக்க
சுகந்தம் பரிமளிக்க
தெண்ணீரென வடித்து வரும்
பன்னீர்தனை எடுத்து
ஜில்லென்று மேல்தெளித்து
உல்லாச பஞ்சணையில்
சீக்கிரமாகப் படுத்து அவள்
தூக்கமின்றியே விழித்து
திடுக்கிட்டு மெய்மறந்து
நடுக்குற்று வாய்திறந்து
சேடிகளைக் கூப்பிடுவாள் அடி
ஓடியே வாங்களென்பாள்
சிந்தைதடுமாறுதென்பாள்
பந்துஸ்தனம் சோருதென்பாள்
செப்புகிறேன் சேதியென்பாள்
அற்புதமாய்த் தோணுதென்பாள்
செவிகொடுத்து கேளுங்களென்பாள்
மௌனமாய் வீற்றிருப்பாள்
சித்தஜனெ ரங்கேயென்பாள்
பித்தந் தலைக்கேறுதென்பாள்
திகைத்துமே மாரடிப்பாள்
சகிமாதர் கைபிடிப்பாள்
திடமுறைக்க வேணுமென்பாள்
மடமயில் போலெழுந்து

தெருவாயிலைத் திறப்பாள் அதோ
வருகிறா ரென்றுரைப்பாள்
தெரிவைதன் முகம் வேர்த்து மதன்
வரும்வழி எதிர்பார்த்து
செப்பமுலை யாரணங்கு
பற்பல வாகப்பிதற்றி
சிந்தாகுல மிருந்து
ரதிதேவி தியங்கலுற்றாள்

## இரதி புலம்பல்

மாமோக ரஞ்சிதனே
தாமோதரன் சுதனே
மையல் தருங்கண்ணியனே
ஐயையோ வேள்மதனே
மாண்டீரே யென்னைவிட்டு
ஆண்டவன் மேற் பாணந்தொட்டு
வாசன் சொல்லைகேட்டு
ஈசன்மேற் கணைபோட்டு
வந்ததே பொல்லாங்கு
இந்திரனார் பெருந்தீங்கு
மாதரசியென்ன செய்வேன்
பூதலத் தெவ்வாறுய்வேன்
மன்னவுமை நினைந்து
கன்னியா னுளஞ்சலித்து
மனவருத்த மாயிருக்க
கனவுகண்டேன் துடிக்க

வாய்ந்த கனவைபோலே
சார்ந்தது மண்மேலே
மங்கை பரமேஸ்வரிக்கும்
சங்கரலிங்கன் றனக்கும்
மகளாய்பிறந்த பின்பு
செகஜகதலத்தோர் மதிக்க
மனமகிழ்ச்சியே மிகுந்து
என்னை புகழ்ச்சியாயெடுத்து
மார்போடு மார்பணைந்து
பார்புகழுவே வளர்த்து
வல்வினை யெல்லாம்பறக்க
கல்வித்தொழில் சிறக்க
வசையற்ற மனுநீதம்
இசைபெற்ற தனுர்வேதம்
மகிழ்தருஞ் சங்கீதம்
புகழ் சிவானந்தபோதம்
மட்டடங்கா சாஸ்திரமும்
கற்றபின் மனத்திடமும்
வந்தினங்கு மல்வித்தை
விந்தைமிகும் வில்வித்தை
மாசிவனர் கற்பித்து
ஆசையுட னுபசரித்து
வளர்த்தகுணத்தை யெடுத்து
கிளர்த்தவென்றூல் தொடுத்து
வாக்கினில் நோாது
தீர்க்கமா யிப்போது

வரிசையாய் வராது
ஒருநாவும் போதாது
வாழுஞ்சுகத்தை துறந்தேன்
பாழும்பெண் ஏன்பிறந்தேன்
மாமதுரை மீனாட்சி
கோமளமே காமாட்சி
மங்களமான வல்லி
இங்கிதமிருந்த செல்லி
மங்காத புஷ்பவேணி
செங்கமல கிருஷ்ணவேணி
மற்றுமுள்ள தாதியர்காள்
பொட்டெனவே வாங்களடி
வாசமலரிழந்தேன்
பூசுங்களப மிழந்தேன்
மஞ்சட்பூச்சை யிழந்தேன்
செஞ்சந்தன மிழந்தேன்
மாங்கல்யம் நாணிழந்தேன்
குங்குமம் தானிழந்தேன்
மலர்க்கூந்தலை விரித்து
கலக்கமாய் மாரடித்து
மண்ணிற் புரண்டிடலாச்சே
கண்ணீர் வடிக்கவுமாச்சே
மாபதிவிரதம் போச்சே
சோபனமும் பாழாச்சே

மலைவிழுந்த வீடானேன்
அலைகடல் துரும்பானேன்
வலைபுகுந்த மானானேன்
நிலைகுலைந்திட லானேன்
வாலிபமான பெண்ணு
ஆளனில்லா பாவியென்று
மண்டலத்தோர் பேசிடுவார்
கண்டவர்க ளேசிடுவார்
வானவர்க ளவமதிப்பார்
தானவரெலாஞ் சிரிப்பார்
மாய்ந்திடுவேன் அரைகொடியில்
பாய்ந்திடுவேன் அக்கினியில்
வம்பன் தேவேந்திரனும்
உம்பர்புகழ் நாரதனும்
வானுலகு தேவர்களும்
ஆனதொரு மூவர்களும்
மாய்ந்தவிடம் புல்முளைத்து
காய்ந்திடவே நான்குறித்து
மதியை நொந்தழுவேனோ
விதியை நொந்தழுவேனோ
மவுனமா யிற்றிருக்கும்
சிவனைத்தான் நொந்தழுவேன்
வட்டமதிக் குடையும்
கட்டழகான வுடையும்
மடமாதர்கட் படையும்
திடமோகன நடையும்

மன்ற நனிகமழும்
　　தென்றல் திருத்தேரமுகும்
மலிந்த மன்மதத்துரையை
　　புலர்ந்திட செய்தோன்வளரனி
வல்லரக்கன் நாடிவந்து
　　கொள்ளை கொள்ளாதேதுணிந்து
வல்லாலகண்டன் தொண்டன்
　　பிள்ளைக்கரியுண்ட சண்டன்
மாலையாயணிந்த நல்ல
　　கௌரவந்துள்ள துள்ள
மாசிவனைப் பிடுங்காதோ
　　ஈசன்வலி யொடுங்காதோ　　என்று
மண்ணிற் புரண்டழுதாள்
　　மங்கைரதி தேவியரும்

**இரதி புலம்பலும் சிவன் மதனை எழுப்புதலும்**

வையகத்தில் நானிருந்து
　　அய்யையோ என்னசெய்வேன்
மாண்டமதனை யெழுப்பி
　　ஆண்டவனே தாருமையா
வாழுமிந்தப் பருவத்தில்
　　சூழுந்தரா தரத்தில்
மனதுபுண்ணாகி நொந்து
　　கணவனையான் பிரிந்து
மாதுபுலம்பிட வசமோ
　　நீதமோ இதுதகுமோ

மருவிடும் புண்ணியமோ
திருவுளச் சம்மதமோ
வள்ளலேஎன் தகப்பா
பிள்ளையல்லவோவுமக்கு
வாருமென்றவள் புலம்ப
ஆபரணமெலாம் புகழும்
மங்கைபாகன் மகிழும்
சங்கரன் தானெழுந்து
மங்கணமாஏதுரைத்தான்
மங்கைரதி தேவியிடம்
மகளேஉனக்கு மட்டும்
மன்மதன் உருபியாக
மற்றுமுள்ள யாவருக்கும்
மன்னை அருபியாக
வாய்த்திடஎழுப்பித் தந்தோம்
சார்ந்த ஆரோக்கியபுரம்
மங்களமா நீங்கள்சென்று
இங்கிதமாய் வாழ்கவென்று
வாழ்த்திவிடை கொடுத்தார்
மங்காத மாசிவனார்

தங்களுக்கு தேவையான புத்தகத்திற்கு
கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்

கிடைக்குமிடம்:-

**T. R. பாலகிருஷ்ண முதலியார்**

நெ-2 எழுத்துக்காரன் தெரு
காலடிப்பேட்டை-சென்னை-19

திரிசிரபுரம் அருட்கவி

# ஸ்ரீமான் துரைசாமிநாவலர்

அவர்கள் இயற்றிய

## எரிந்தகட்சி பாடல்

(பதினான்கு சீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

சங்கினங்கள் வயிறுளைந்து வொண்டள மணிகொழி
    தண்பணைதற் கிடந்துவாளை [க்கும்
தன்முதுகில் நாரை கொத்தும் வேளையிற் குபீரென
    தாவிவான் முகட்டளாவும்
தங்கின் படுகனி சிதறி பூங்கமுகின் குலைசாய்ந்து
    செங்கதலிச் சினையில் மோதி
சேற்றினிடை புதைத்துறங்க மடமிசை தாகியதில்
    தீம்புன லருவிபாய
பங்கமுறும் கழனியதை கரைகோலி ஏருழுவார்
    பரம்படித்துக் கலவை கூட்டி
பக்குவமாக விரைத்தெளிக்க வளர்ந்த செந்நெற்
    பரிமளிக்குஞ் சோழ நாட்டில் [கதிரோங்கி
செங்கமல வாணியருள் துரைசாமி நாவலர் தன்
    சீரடியை முடிமேலேந்தி
சிலைமதவேள் சிவநுதலால் எரிந்ததொருவிபரமதை
    தெரிவிப்பேன் களிகூர் மாதே

லாவணி

மண்டலமெலா நடுங்க
தொண்டை கிழியக் கத்திடும்
மகாசூர வித்துவானே அய்யா அய்யா
மங்களமிகுந்தகுண சங்கர நுதல் விழியாள்
மன்மதவேள் மடிந்ததும் பொய்யா பொய்யா

கண்டனம் புரியவந்தீர்
அண்ட சராசர மெலாம்
காமனாலே உற்பத்தியா சொல்லும் சொல்லும்
கற்பனையாய் பேசி இங்கு
அற்பமான மன்மதனை
கடவுளென்றுரைக்காதீர் சொல்லும் சொல்லும்
தெண்டிரைக் கடல்முரசும்
பெண்டுகட் படையுடைய
சித்தஜவேள் இருப்பிடம் எங்கே எங்கே
சித்தஜன் றனைக்குறித்து
எத்தனைபேர் முத்திபெற்றார்
செப்புவீரெனக்கெடுத்து இங்கே இங்கே
வண்டயிறைக் கற்றுணர்ந்த
பண்டிதராய்ப் பாடவந்த
மகாசூர வித்துவானே அய்யா அய்யா
மங்கள மிகுந்தகுண சங்கர நுதல் விழியால்
மன்மதவேள் மடிந்ததும் பொய்யா பொய்யா
மங்கையரைப் பஞ்சணையிற்
சங்கையறைத் தழுவியே
மன்மத கலவி செய்யும் போது போது
மண்டையுருகியே ஓமகுண்டத்தில் நெய்யாகவிந்து
வடிந்தபொழுது காம னேது ஏது
அங்ஙனம் உருவழிய
மங்கையருகிற் படுத்தால்
அப்பொழுதுண்டாகுதோ சொல்மோகம்மோகம்
அப்படியே சொற்பனம்போல் உற்பவித்த ஆசையது
அடங்கியிருப்பதெந்தப் பாகம் பாகம்

பைங்கரும்பு வில்லுடைய
அங்கஜனே னரூபியா
பிரபிர்ம சொரூபியா கூறும் கூறும்
பருவமதனைப் பலர் உருவிலி யென்று பெயர்
பகர்வதென நன்குணர்ந்து பாரும் பாரும்
வக்கணமாயிப் புவியில்
தங்கமெடல் தோடா பெற்ற
மகாசூர வித்துவானே அய்யா அய்யா
மங்கள மிகுந்தருண சங்கர நுதல் விழியால்
மன்மதவேள் மடிந்ததும் பொய்யா பொய்யா

அறுசீர் விருத்தம்

கடலுலகில் மதனெரிய வில்லையெனக் கண்சிவந்து
கருத்து மாறி
படர்சபையில் சுதிகூட்டி பாடவந்த பாவலரே
பகரக் கேட்பீர்
மடல்விரியும் கோதைபடை மாரவேள் பண்டிகையை
மகிதலத்தில்
திடமுறவே நடத்திவரும் மார்க்கமென்ன தெளிவாக
தெரிவிப்பீரே

ஷை லாவணி

கத்துகடற் புவனத்தில் சத்திபிறந்தது முன்னே
காமராஜன் பிறந்தது முன்னே பின்னே
கருதரிக்காது சில
தெரிவையர் மலடாக
காசினியிலிருப்பதேன் மன்னே மன்னே

சத்து சித்தானந்த பர
முத்திக்கு வித்தான சிவன்
தவயோக சாதனையை அன்று அன்று
சனகாதி நால்வருக்கும்
மனமகிழ்ந்தே யுரைக்கும்
சாம்பசிவனரிடத்திற் சென்று சென்று
சித்தஜன் சமர்புரிய
பற்றியெரிந்த விபரம்
செப்பிடும் புராணங்களே சாட்சி சாட்சி
சிலைமதனெரிந்த தாய்
உலகிற் கொண்டாடுவதைத்
தெரிந்துஞ் செப்பவந்தீ ரத்தாட்சி தாட்சி
மத்தகெஜத் தோடெதிர்த்து
எத்திசையுங் கீர்த்திபெற்ற
மகாசூர வித்துவானே அய்யா அய்யா
மங்களமிகுந்தகுண சங்கர நுதல்விழியால்
மன்மத வேள்மடிந்ததும் பொய்யா பொய்யா
அம்புவனத்திற் சிறந்த
ஜம்புவனங் காவிரிசூழ்
அழகான திரிசிராப் பள்ளி பள்ளி
ஆயகலைகள் பரவுந் தாயுமான ஈசரொடு
அன்னை சுகந்தகுந்தள வல்லி வல்லி
செம்பொன் மலர்த்தாளிணையை
கும்பிட்டு வணங்கிநித்தம்
திசையெட்டுமே விஜயம் செய்து செய்து
திரைகடற் புனலதை
உறுஞ்சிடு முகிலென

தெள்ளமுதக் கவிமாரி பெய்து பெய்து
வம்பர்கள் கருவழுக்க கம்ப நிகராயுதித்த
மாசிலா பத்தரை மாற்று தங்கம் தங்கம்

வாயாடிப் புலவர்களை
பாயாகச்சுருட்டி உடான்
வாங்குந் துரைசாமிக்கவிச் சிங்கம் சிங்கம்

மன்பொதிகை மலையுற்ற
கும்பமுனிபோல வந்த
மகாசூர வித்துவானே அய்யா அய்யா

மங்கள மிகுந்தகுண சங்கர நுதல் விழியால்
மன்மதவேள் மடிந்ததும் பொய்யா பொய்யா

எண்சீர் விருத்தம்

மங்கை ரதியாளை மணம்புரியும்போது
மருவிய நாளோர் திங்கள் மாதர்பூத்த
அங்கஜனர் தன்வயதோ ஈரைந்தாகும்
அமர்ந்தவா ரோக்யபுரம் அவனூராகும்
செங்கண்மால் லட்சுமியும் தாய்தந்தையாம்
தேர்படை கொடிமுரசு இவைகளெல்லாம்
பங்கயனே பரிவுகொடு தந்ததாகும்
பகரக்கேள் திடமிகுந்த பாவலோரே

லாவணி

(வேத வேதாந்த தமிழ் கடலைவாரி என்ற மெட்டு)

வீரகண்டாமணி தோடா மெடல் பெற்ற
வித்வானென் றுவந்தோரேபுலவீரேகுந்து வீரே
தாங்கள் வித்தாரமாகவே கேட்ட கேள்விக்கு
விடையளிப்பேன் சபைநேரே

முடுகு

மிடிதீரவே திரைமேவிய
கடன்மீதா திடமாகவே

விண்ணவர் கூடியமுதங் கடைந்ததின்
மெல்லிடையாள் ரதியென்றுவரக்கண்டுஉமைநன்று
மிகவேண்டியன்போடு வளர்த்தெடுத்தாள் சிலை
வேள் மதராஜனுக் கென்று

லாவணி

மேருமலையதை வில்லாய் வளைத்தவர்
மேவும் இமாசலம் நாடி பலர் கூடி உறவாடி
அதிவிற்பனர் மெச்சிடு சிற்ப நூற்படி
விவாகம் புரியக் கொண்டாடி

முடுகு

மீனலக்கினம் நாழிகைப்பகல்
ஏழரைக்குள்ளே ஜோதிடர்ப்பலர்

லாவணி

விஞ்சையரயிருவருக்கும் குருவார சுபதினம்
மேலும் பொருத்தம் பார்த்தாரே புலவீரேகுந்துவீரே
தாங்கள் வித்தாரமாகவே கேட்ட கேள்விக்கு
விடையளிப்பேன் சபைமேரே

கோதைபடை மாரன் வேஷ்டி உருமாலும்
கோடிசெட்பொன் விலைபெறுமே சேலைதருமே
[மஞ்சள் நிறமே

இளங் கொம்பனையாள் ரதிமாதுக் குடுத்தியே
கூட்டி வந்தார் நல்ல நேரமே

முடுகு

கூறுமேனகை ஊர்வசியோடு
தேவதாசிகள் சீர்நலுங்கிட

லாவணி

கோலாகலத்துடன் மேளவாத்தியங்கள்
கோடையிடிபோல் முழங்க இசைபொங்க நசைதங்க
ஒரு கோடிலா வேதியர் நான்மறைபோதக்
குறைவின்றி தானம் வழங்க
ஆதவ னுத்யகாலை மன்மதாண்டு ஆடித்
திங்கள் கல்யாணமே கனதனமே செய்யுந்தினமே
அட்டியில்லாதவர் பொட்டை கழுத்திலே [ஒரு
கட்டி விட்டா ரந்தட்சணமே
ஆசி கூறவும் தேவராதியர்
வாசமாமலர் தூவமாமணம்
ஆனபதின்மூன்று நாளில் துவாரகை
அன்பாகச் சென்றனர்பாரே புலவீரே பெரியோரே
தாங்கள் வித்தாரமாகவே கேட்ட கேள்விக்கு
விடையளிப்பேன் சபைநேரே
அறுபதினாயிரம் கோபிகா ஸ்திரீகளை
அந்தராதா கிருஷ்ணன் லீலை பகற்காலை ஒருவேளை
செய்ததாகவே சொல்கிறீர் யாருங்காண் நபு
ஆகையால் கேட்டாதீர் வாலை [வார்
அனகபூஷணன் சன்கரர்தியர்க்
குரிய மோகனமே பகரும் வேளையில்
அங்கமில்லான் தேரசைந்த தெவ்வாறெனை அறிவிப்பேன்
நல்ல உத்தரமே அயன்வரமே தந்ததிறமே ஆதலால்
அன்னவன் தேர்மட்டும் ஆடியகாரணம்

அறிந்துகேள் வீரதன் சாரமே
சரபபக்ஷியான சங்கரன் காய்ந்ததால்
சபர்புரியுதே அத்வைதம் அதுபேதம் என்றுவாதம்
செய்துச் சந்திக்கு சந்திப்பாய் குந்தி குந்தி டேப்பை
சாப்பு கொடாதீர் விரோதம்
சாருமங்கையர் கூறுவெம்புனல்
தரை மன்மதன் கோவிலென்றுமே
சாற்ற வந்திரதைக் கேட்குந்த போதனர்
சாபங்கொடுப்பார்கள் பாரே புலவீரே பெரியோரே
தாங்கள் வித்தாரமாகவே கேட்ட கேள்விக்கு
விடையளிப்பேன் சபைநேரே
முத்து வைடூரியம் சுத்திப்பதித்த
முகப்புக் கண்ணாடியின் சேர்வை மணிகோர்வை
ரத்னப்போர்வை யதை
முப்பத்து முக்கோடி தேவரனுதினம்
தப்பாமற் காணுவர் சேவை
முகுந்தனன்பு மிகுந்த தங்கை
சுகந்த குந்தள வல்லி தம்பிரு
முண்டகத்தானை முடிமீது சாற்றி
முழங்கிடுங் கல்வி ப்ரவாகன் கனயோகன்
நல்விவேகன் புகழ்
முந்துக் கரிகாலச் சோழநன் நாட்டிலே
முத்தமிழ் பாடும் வைபோகன்
தத்துவ ஞானத் தமிழ்க்கடலைவாரி
சங்கப்ரசங்க முழங்கும் புவியெங்கும் இசைபொங்கும்
துரைசாமிக் கவிராஜ நாவலர் போற்றியே
சாற்று மொழிகள் விளங்கும்
சாலநான் மறை ஓதுமந்தணன்
மாலுங்கண்டறியாத நின்மலன்

சச்சிதானந்த சதாசிவ மூர்த்தியின்
தன்மை வெளிதல்லபாரே புலவீரே பெரியோரே
தாங்கள் வித்கார மாகவே கேட்ட கேள்விககு
விடையளிப்பேன் சபைநேரே

## எரியாத கட்சி பாடல்கள்

(விருத்தம்)

கருங்குவளை நறுங்கமல மடல் விரியுந் தடம்பணையில்
கணங்கொல் முத்தை
குரங்கினங்கள் காமவாரி கொப்புலமென் றேறெறிய
குமுத புட்பம்
பிறங்கிவர் வெண்ணிலவெனவே முருக்கவிழும் சோழ
நெடிது மேவி [நாட்டில்
உரங்கனிந்த சாமிதுரை யடிபணிந்து மாரன் கதை
ஓது வேனே.

லாவணி

சண்டமாருதம்போல முண்டா த்ட்டியே வந்த
தண்டமிழ்ப் புலவீரே இச்சபைநேரே
ஆன்சர்பாரே கேட்ட கேள்விக்கு
தடையின்றி பதில்கூறீர
மண்டலத்தில் மகவேள் பண்டிகை கொண்டாடவே
வழுத்திடு நாள்களுண்டா எங்கே நீ கொண்டா
காட்டுவேன் ஜண்டா எரிந்தா னென்று
வாதிப்பதென்ன முரண்டா
அண்டபுவன மெலாம் வண்டாரும் பூங்கணையோன்
அணுவுக் கணுவாயிருந்தே அங்கத்தைபிளந்தே
அறிவிற்புகுந்தே தந்தருள்கின்றான்
ஆசையாகி விருந்தே

உத்தார்

சண்டப் புலவா வாயைமூடு
வகை தெரிந்தாலே குந்திப்பாடு ஐயா
தண்டுமுண்டாகப்பாடி தலைகுனிந்தோடாதே காண்
தகல்பாட்சி புலவீரே இச்சபைநேரே
ஆன்சர்பாரே கேட்ட கேள்விக்கு
தடையின்றி பதில்கூடரே

உத்தமரே கேளுங்காண் சித்தஜனிருப்பிடம்
உயிர்களுற்பத்தி வழியே ஆனந்தநிலையே
தந்திடுமிதையே முக்கோணமாகும் ஓங்கார வட்ட
இதையறியாமலே முத்திபெறலாமென்றோ [சுழியே
இருண்டவனத்தில் நாடி நெஞ்சம்வாடி கண்களைமூடி
மூச்சையடக்கி இறந்தவர் கோடானகோடி

சுத்த அத்வைதஞான தத்துவமான பரஞ்
சுடரொளி சிவமென்றே சொன்னதும் நன்றே
தன்மையாய் நின்றே அவர்க்கிரண்டு
துணைவியேன் புகலின்றே

உத்தார்

பித்தம் பிடித்துப் பிதற்றாதே எங்கள்
சித்தஜன் மாய்ந்ததுஞ் சூதே
தத்தித்தலை கீழாக தாண்டிக்குதிக்காதே காண்
தண்டமிழ் புலவீரே இச்சபைநேரே
ஆன்சர்பாரே கேட்டகேள்விக்கு
தடையின்றி பதில்கூடரே

மன்மதன் மாய்ந்திடில் விண்முதற் பஞ்சபூதம்
வந்த விபரமோது ஈதென்ன சூது
இப்புவிமீது ஜீவராசிகள்
மண்ணிலுற்பத்தி யேது

சன்மவினையோற்பேடி தன்மை பூண்டவரையும்
காதல் விடாது வருத்தம் மையலைப் பொருத்தம்
இன்பத்தைத்திருத்தம் ஊமையன் கண்ட
கனவு போல் நினைவுறுத்தும்
வன்மையுடைய மதன் நம்மையும் காட்டுமென்றே
வாரசடைமுடிமீது நற்புனல் மாது
தன்னைவிடாது மறைவாகவே
வைத்த விபரமோது

உத்தார்

தன்மை அறியாமலேல நாடி சும்மா
சாற்றவந்தீரோ ஜமாக்கூடி
ஜென்மவிரோதியாக என் முன்னே பாடவந்த
செந்தமிழ்ப் புலவீரே இச்சபை நேரே
ஆன்சர்பாரே கேட்ட கேள்விக்கு
தடையின்றி பதில் கூறே
பொன்னிநதி பெருகி செந்நெற் கழனிதோறும்
பூம்புனலது நிறைய மடைகள் சரிய
நெற்கதிர் சொரிய குரங்கது கொப்
புளமென்று முத்தை யெரிய
கன்னக களுக்கள் முற்றி வண்ண முத்தைக்கோற்
கரிக்காலச் சோழநாடு சுவர்ணமேடு [கும்
விளங்கு குமபீடு திரிசைநகர்
கடைத் தெருவினில், வீடு
மன்னுபுகழ்பொருந்துசொன்னயத்தால்மிகுந்து
வானுக்கு முபன்யாசன் கவிப்ரகாசன்
சற்குணபோஜன்
சாமிதுரை வளர்மங்கள விலாசன்

சொன்ன வுத்தரந்தன்னை நோக்கும் நெஞ்சில்
மன்னுசந்தேக மதை நீக்கும்
வன்னியக் கண்ணுடைய மாசிவனாலே மதன்
மடிந்தானே புலவீரே இச்சபைநேரே
ஆன்சர்பாரே கேட்ட கேள்விக்கு
தடையின்றி பதில் கூறே

## எண்சீர் விருத்தம்

கலையுணர்ந்த பாவலரே கவனமாய்க்கேள் காமவேள்
வாழ்ந்துவரும் கோயிலெங்கே
சிலைமதனை ஈன்றெடுத்த தந்தை தாயார் செப்பு
அவனுடைய ஊர்பேர் என்ன [கின்ற
மலர்ப்பகழி வில்கரும்பு இளந்தென்றல் தேர்மாதர்
இவை யெலா மகிழ்வு கூர்ந்து [படை
கிலைபெறவே மாரனுக்குத் தந்தார் தான் நீதிநெறி
தவறாது நிகழ்த்துவீரே

## லாவணி

(திருவுற்றிலகு கங்கை என்ற காவடிசிந்து மெட்டு)

மகரக்கடல் புனைந்த ஜெக முற்றிலுநடுங்க
வடவாக்கினிபோல் வந்த தாரையா சற்று
அடக்கமாகவே பதில் கூரையா இனி
வாதனைபுரியாது மோகன வாலையாகிய கோலமா ரதி
மங்கையைப்பெற்றெடுத்ததார்முந்தியே அப்போ
பருத்துவம் பார்த்ததார் குந்தியே
புகழுற்றிலகுரதி திகழுற்ற மதனுக்கு
பொருத்த மென்று சுப முகூர்த்தமே மணம்
புரிந்த தெய்விடம் சொல்வீர் பார்த்துமே

அப்போது கீர்த்தியாய் தாரை வார்த்தவர்
பேரை நேர்த்தியாய் ஓதல் சேர்த்தியே
பொங்கமா ரதிமதனும் கூடியே அவர்
தங்கியே யிருப்பதெவ்வூர் நீடியே

மனமுருகிய சிவன் சனகாதி நால்வருக்கும்
மௌனத்தை போதிக்கு நாளையில் இந்த
மண்ணு விண்ணுமசையா வேளையில் சிலை
மாரன் சுந்திரதேரைந்த காரணந்தனை யேதிருத்த
வழுத்துவீர் கவிராஜ சிங்கமே இதை |வே
மறுத்து விட்டால் வரும் பங்கமே

அனந்தனுகியசேடன் அனையிற்றுயிலுங்கிருஷ்ணன்
அறுபதாயிரம் பேரை லீலையே அவர்
ஒருமிக்கச் செய்திடுங் காலையே மிக
ஆசை தந்தவன் ஓர்மடந்தையை
புரமனைந்திட மேனி நொந்ததாய்
அதட்டிப் பாடவந்த தாரையா சற்று
அடக்கமாகவே பதில் கூறையா

அமுதச்சுவை கடைந்த சமயத்திலே சிறந்த
அவதார மோகினிப் பெண்ணையே பரம
சிவனார்மயல் மிகுந்து நண்ணியே அவர்
ஆசைகொண்டெதிர் மேவியின் புற
வேபுனைந்ததி லேபிறந்திடும்
அரிகர புதல்வரும சாட்சியே இதில்
அறிந்துக்கொள் மன்மதன் சூழ்ச்சியே

இமையவர் கதிபனல் இலங்கு தேவேந்திரன்
ஏற்ற தேகத்தில் யோனிமேய கண்ணுல்
தோற்றுவதார் செயல் ஞானியே இன்னும்

ஈசன் வார்சடைமீது நான்முகன் நவில்சாமளரூபன்
[மார்பிலும்
இங்கித மடந்தையரை தூக்கியே வைத்த
சங்கதி யெ:நித்துரைப்பீர் நோக்கியே
கன்னற்சிலை மதனர் கணை மலர்கட்பெயரின்
கருத்ததனை விளக்கிக் காட்டுவீர்
திருத்தமாகவே பதில் மாட்டுவீர் சுடு
காடுமேவிய காலனுங் காதலாகிடமோதியே முனம
காமன் சமர்புரியும் போதிலே எந்தக்
கணை தொடுத்தான் சிவன் மீதிலே
தன்னிகரில்லாத சிவன் சன்னிதானத்திலமர்ந்து
தற்பரானந்த நிலை விளைவிய அந்த
ஜனகாதி நால்வரும் மேவிய உயர்
தவசாதனை கற்றூர்களா மதனுலயர் வுற்றூர்களா
தடுத்துப்பேச வந்தவராரய்யா சற்று
அடக்கமாகவே பதில்கூறையா

## எழுசீர் விருத்தம்

மட்டவிழும் மொச்சைபவல் பொரிகடலை கனி தேங்
வயிரூர உன்பதற்கே [காய்
கட்டுத்தெறிகாளை பலர் கூடியொரு விளையாட்டாம்
காமவேளுருவ மென்ன
கொட்டைமிலார்வன்னியெருமுட்டையுடன் பேய்கரும்
கூட்டி வைககோலை மேய்ந்து [பை
நட்டுதகனம் புரிவதாலே மதன் முடியுமோ
நாட்டுவீர் நாவல்லோரே
கோடைமிடிபோலே கத்திபாடினுலு மென்றன் கட்சி
கொஞ்சங்கூட நழுவாது நில்லுங்காண் டேப்பை
குப்புறக் கவிழ்த்துமே நீர் சொல்லுங்காண்

கோதைபங்கனை தானடைந்தவனே யெரிந்து பினே
எழுந்தாய் கூறவந்திரே மடிந்ததோர் சவம் உயிர்
கொண்டுமே குலாவு மென்பதே பாவம்

ஆடையில்லாத மங்கை ஒடி ஒளிவதைப்போல்
அபகீர்த்தி யடையவு மாச்சுதே தங்கள்
அருமைபெருமை யெல்லாம்போச்சுதே மதன்
ஆலயந்தனை மேலுங்கொண்டு தொழாப்பண்டிதராரு மிங்கிலே
அனுபவித்தவர்க்கின்பம் காட்டுமே பின்னே
அடையு மோட்சவழியைக் காட்டுமே

நைடதத்திலும் மாரன் மடியவில்லை யென்றுமே
காட்டுதே ஈதொன்றும மாத்திரம் அல்ல
நாதாக்கள் வேதாந்த சாஸ்திரம் தன்னில
நசைகூர்மொழி அனுவாகிலும் பிசகாதினி வசை
சொல்லும் வழிதனை தேடுவீர் [திரனே
நல்லசற்குரு பர்தம் நாடுவீர் அவர்
கடைவிரித்தாவ தென் படைமார வேளன்றி
கடவுள் வேறுண்டோ சாற்றுமே தக்க
விடை சொல்லாவிடில் கம்பி நீட்டுமே அந்த
சகுனராதியர்புகன் வாசிகள் மகிழுங்காமனை எளி மையாகவே
கடிந்து பேசவந்ததாரையா சற்று
அடக்கமாகவே பதில் கூறையா

கொக்குவக்கா நாரைச்சிட்டு கொண்டலாத்துக் காடை புல் புல்
குயில்வானம்பாடி செம்பரந்துகள் வண்ணக்
கோலமயிலோடு குள்ளவாத்துக்கள் பல
கோடாகோடியாய் கூடியேவளர் நீடுமாமலர் சோலை
குரங்குகள் வையாளி போடுமே தென்ன [மேவிய
மரங்கட்கிளை முறியச்சாடுமே

திக்கெட்டும் புகழ் சிறந்த சக்ர வர்த்தியாய் வளர்ந்த
ஜெயவீர சோழ நன்னாடது இந்த
ஜெகமுற்றிலும் மிதர்க்கீடேது வளர்

திரிசையம்பதி அரசனென்றுயர் இனியசெந்தமிழ்
[கனிவு கொண்டருள்
செல்வன் சாமி துரை வாக்கியம் சொல்லத்
தித்திக்கும் பாட்டின் சிலாக்கியம்

தட்டையிலார் வன்னிபிளக்கொட்டைபேய்கரும்
[புடனே
சார்தரும் வைக்கோலை யள்ளிச் சுற்றியே காம
தகனமென்றே கட்சியுங் கட்டியே இனி

தாறுமாறென கூறியேபல வீறுபேசிடும நேரிலே
தவறுமல் மீண்பழிசேருமே இன்னும் [யுமை
ரவுராவதி நரகஞ் சேருமே


சட்டவட்டமாகப் பேசிகுட்டு வெளியாகவும் நீர்
தப்பித்து ஓடவழியைப் பார்க்கிறீர் மிக
கற்பனை புகட்டி நம்மை ஏய்க்கிறீர் ஏழு


காகந்தனையேகாந்தனிலே கொணர்ந்திடும் மாதவன்
தடுத்துப் பேசவந்த தாரையா சற்று [கிகர்
அடக்கமாகவே பதில் கூறையா

மதன ரதி ஒப்பாரி

முற்றிற்று.

கலைமகள் அச்சகம் சென்னை-19.






# ஸ்திரீ புருஷ ரேகைசாஸ்திரம்

விளக்கமான அனேகவிதப் படங்கள் அடங்கிய இச்செந்தமிழ் வசனநூலறிவினால் ஆயுள், விவாக லாபம் குணம், பக்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு சிற்றின்பம், வியாஜ்ஜியம், சக்தி, ஐசுவரியம், கண்டம் ஜயம் வியாதி, அபாயம், வஞ்சகர், பேரின்பம், காரியசித்தி சௌக்கியம், இல்லறசுகம், மரணம் முதலிய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம் அன்றியும் இது விதியின் பலனையும் வாழ்க்கையின் இரகசியங்களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாக இருக்கிறது உங்கள் கையிலுள்ள பலன்களைச் சுலபமாய் நீங்களே தெரிந்துகொள்ளலாம்.

விலை ரூபா 2—00 தபால் சிலவு 1-25

---

கிடைக்குமிடம்: T R. பாலகிருஷ்ணா முதலியார்

*நெ-2, எழுத்துக்காரன் தெரு, காலடிப்பேட்டை சென்னை-19.*

# நவரசகதம்ப
# ஒப்பாரி



சென்னை - இட்டா,

**பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,**

உ

# பெண்டுகள்

# நவரத்தின ஒப்பாரி.



இட்டா. பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்ரவர்த்தி பிரஸ்

நெ. 189, தங்கசாலை தெரு, சென்னை.

1961

கடவுள் துணை.

# பெண்டுகள்

# நவரத்தின ஒப்பாரி.

---

விருத்தம்

பெண்கள் ஒப்பாரி பிரியமாய் பாடுதற்கு
கண்டவர்கள் வாசிக்க துருத்துடனே
அண்டர் முலைவர் அழகாக பாடிவைத்து
சுந்தரமாய் சுப்பிரமணியர் துணை காப்பாமே.

காசிக்கு போனதுண்டு என் ராஜாவே மந்திரியே
கைவிளக்கு தொட்டதுண்டு
கைவிளக்கு தொட்டதோஷம்என்ராஜாவேமந்திரியே
என் கணவனுக்குப் பட்டுவிட்டு,

மதுரைக்குப் போன துண்டு என் ராஜாவே மந்திரியே
மணிவிளக்கு தொட்டதுண்டு
மணிவிளக்குதொட்டதோஷம்என்ராஜாவேமந்திரியே
என் மன்னவனுக்கு பட்டுவிட்டு

காசிவிசிரிவரும் என்னைபெத்தாளே அம்மாடி
கையிலங்கிரி தீர்த்தம் வரும்
காசிராஜன பெற்றபெண்ணு என்னை பெத்தாளே
கண்கலங்கி நிற்குறேனே [அம்மாடி

தட்டிலரிசிவரும் என்னை பெத்தாளே அம்மாடி
தங்கமெல்லாம் பூசிவரும் தட்டுவர நேரஞ் சென்றால்
என்னைபெற்றளே அம்மாடி
சபத்தை நிறுத்திடுங்கோ தனிவிளக்கு ஏந்திடுங்கோ

தொண்ணூரு பூவெடுத்து என்னை பெத்தாரே அப்பா
தொளசிமடம் கட்டிவைத்தேன் [வே
தொளசிமடம் காக்காம என்னை பெத்தாரே அப்பாவே
துக்கமடம் கார்க்கப் போனாய்

ஐந்நூரு பூவெடுத்து என்னை பெத்தாரே அப்பாவே
அழகுமடம் கட்டிவைத்தேன்.
அழகுமடம் கார்க்காம என்னைபெத்தாரே அப்பாவே
அவதிடம் கார்க்க போனாய்

தங்க கொடை பிடித்து நான்பெற்ற செல்வமே
தாசிவீடு போனாலும்
தாசிக்கழுதபணம் நான்பெற்றசெல்வமே
தங்கமடம் கட்டலாமே

வெள்ளிக் கொடைபிடித்து நான்பெற்ற செல்வமே
வேசிவீடு போய்நுழைந்தால்
வேசிக்கழுதபணம் நான்பெற்ற செல்வமே
வெள்ளிமடம் கட்டலாமே.

சுத்தி மதிலெழுப்பி என்னைந் தேடியராஜாவே
சுந்திரரை காவல் வைத்தீர்
சுத்திமதிலிடையோ என்னைந்தேடியராஜாவே
சுந்தரர் சொல்லுறது என் சித்தம் பொருக்கலையே

பக்கமதிலெழுப்பி என்னை தேடிய ராஜாவே
பாண்டியனை காவல் வைத்தீர்
பக்கமதிலிடையோ என்னை தேடிய ராஜாவே
பாண்டியர் சொல்லுறது என் பக்கம் உருகுதங்கே.

சூரியனரியாமே என்னை பெத்தாளே அம்மாடி
ஜொனைக்குள்ளே வைத்திருந்தீர்
சூரியனறியச்சொல்லோ என்னை பெத்தாளே அம்
தூதுசெய்து போனீர்களா [மாடி

பக்கமதிலெழுப்பி என்னை தேடிய அப்பாவே
பகடமரம் தோப்புமாக்கி பக்கமதிலிடிஞ்சா
என்னை தேடிய அப்பாவே
பங்காளி தாங்குவாறு.

சுத்திமதிலெழுப்பி என்னைதேடிய அப்பாவே
சுருளுமரம தோப்புமாக்கி
குத்திமதிலிடியோ என்னை தேடிய அப்பாவே
சித்தப்பன் தாங்குவாறு.

கையால் கணக்கெழுதோ நான்பெற்ற என்மகனே
கருந்தமிழு நாவெழுதோ
ராஜாகணக் கெழுதோ நான்பெற்ற செல்வமும்
நற்றமிழு தாவெழுதோ.

எட்டடிகூடத்திலே நான்பெற்ற செல்வமும்
இருக்கயிடம் கிட்டாமே
இருளடைந்த காட்டிலே நான்பெற்ற செல்வமும்
இனிவிளக்கா நின்றுயா.

பத்தடி கூடத்திலே நான்பெற்ற என்மகனே
படுக்கஇடம் கிட்டாமல்
பாழடைந்த காட்டிலே நான்பெற்றஎன்மகனே
பதிவிசிக்கா நின்றுயா

பொங்கும் மடப்பளியா என்னேதேடிய ராஜாவே
பொன்னல்போகும் மேல்மாடியா
பொங்கி வெளியில் வந்தால் என்னை தேடிய ராஜாவே
புருஷனில்லே என்றுரைப்பார்

ஆக்கு மடுப்பளியா என்னை தேடிய ராஜாவே
அனல்போகி மேல்மாடியர
ஆக்கி வெளியில்வந்தால் என்னை தேடியராஜாவே
ஆளனில்லையென்றுரைப்பார்

மாமரத்திங் கீழிருந்து என்னே பெத்தாளே அம்மாடி
மனக்குறையை சொன்னேனுல்
மாங்கா யுதிர்ந்திடுமா என்னை பெத்தாளே அம்மாடி
மாமரமும் சாய்ந்திடுமா ;

மாமரத்து மேலிருக்கும் என்னே பெத்தாளே அம்மா
மயிலுந் திடுக்கிடுமா
பூமரத்துங் கீழிருந்து என்னே பெத்தாளே அம்மாடி
பெண்குறையை சொன்னேனுல்

பூவும் வதிர்ந்திடுமா என்னே பெத்தாளே அம்மாடி
பூமரமும் சாய்ந்திடுமா
பூமரத்து மேலிருக்கும்என்னே பெத்தாளே அம்மாடி
புருவும் திடுக்கிடுமா

பிஞ்சி புளியமரம் என்னே தேடிய ராஜாவே
பீலிகட்டி யேருமரம்
பிஞ்சிரைப்பேனென்று என்னே தேடியராஜாவே
புத்திலியம் தட்டிலிதய

கண்ணு புளியமரம் என்னே தேடிய ராஜாவே
கருத்துடையா நெல்லிமரம்
கண்ணுலறப்பேனென்று என்னே தேடிய ராஜாவே
கருத்திலேயும் தட்டலியே

பாம்பை எதிரே வைத்து என்னேபெத்தாளே
பாலாற்றை முன்னேவைத்து [அம்மாடி
பாம்பையும் தாண்டுவேனு என்னே பெத்தாளே
பாலாற்றை நீந்துவேனு [அம்மாடி

தேளே எதிரே வைத்து என்னே பெத்தாளே
தேனுற்றை முன்னேவைத்தே [அம்மாடி
தேளேயுந் தாண்டுவேனு என்னே பெத்தாளே
தேனுற்தை நீந்துவேனே. [அம்மாடி

புளியமரம் பிளந்து என்னை தேடிய ராஜாவே
புதுமரக்கா சொப்பனிட்டேன்
பிடிபிடித்துபொரியிரைக்க என்னை தேடிய ராஜாவே
புத்திரனே தேடுரேனே

அத்திமரம் பிளந்து என்னை தேடுய ராஜாவே
அரைமரக்கா சொப்பனிட்டேன்
அள்ளிபொரியிரைக்க என்னை தேடிய ராஜாவே
அருங்குழந்தை காணலியே

கல்லுமேல் கத்தாழம்பூ என்னை தேடிய அப்பாவே
கள்ளரெல்லாம் என் பிறப்பு
கள்ளருக்கு வந்தவங்கோ என்னை தேடிய அப்பாவே
கையால் மதிக்கலியே

வேலிமேல்கத்தாழம்பு என்னை தேடிய அப்பாவே
வேடரெல்லாம் என்பிறப்பு
வேடவருக்கு வந்தவங்கோ என்னை தேடிய அப்பாவே
விரலால் மதிக்கலியே.

காட்டிலிருக்கும் வண்டு என்னை பெத்தாளே அம்மாடி
கழுகு தின்னும் வேடனம்மா
கானகத்தார் பார்த்தல்லோ என்னை பெத்தாளே
கணவனென்று தேடிவைத்தார் [அம்மாடி

புற்றிலிருக்கும் வண்டு என்னை பெத்தாளே அம்மாடி
கழுகு தின்னும் வேடனமமா
பூலோகத்தார் பார்த்தல்லோ என்னை பெத்தாளே
புருஷனென்று தேடிவைத்தார் [அம்மாடி

கல்லுமேல் கல்லடக்கி என்னை பெத்தாளே அம்மாடி
கைலங்கரிபோனாலும்
கல்லுசரக்கிடுமாம் என்னை பெத்தாளே அம்மாடி
கைலங்கிரி கிட்டலியே

ஏணிமேல் ஏணிகட்டி என்னை பெத்தாளே அம்மாடி
எமலோகம் போனாலும்
ஏணிசரக்கிடுமாம் என்னைபெத்தாளே அம்மாடி
எமலோகம் கிட்டிலியே.

பூவும்மரிக்தொழுந்து என்னைபெத்தாளே அம்மாடி
பொழுதோடுங் கண்ணுரங்கும்
பொற்கொடியாள் கண்ணுரங்க என்னைபெத்தாளே
பொழுதுநல்லசாயலியே. [அம்மாடி

தெற்கேசமுத்திரமாம் என்னைதேடிய அப்பாவே
தெருதனிலே பால்கிணரும்
பால்கிணற்றிலே தண்ணிமொள்ள எஅனை தேடிய
பாலகனே தேடுகிறேனே [அப்பாவே

வடக்கே சமும்திரமாம் என்னை பெத்தாளே அம்மாடி
வாசலிலே பால்கிணராம்
பால்கிணற்றில் தண்ணிமொள்ள என்னை பெத்தாளே
பாலகனே தேடுறேனே [அம்மாடி

பச்சமஞ்சள் வெட்டியல்லோ என்னை பெத்தாரே அப்
பவளமஞ்சள் நாறுரித்து [பாவே
பாவிகுளிக்கும் துரை என்னை பெத்தாரே அப்பாவே
பாசிபடர்ந்து தங்கே

ஆற்றிலே வாழைவெட்டி என்னைபெத்தாளே
அடிவாழை நாறுரித்து [அம்மாடி
கட்டிவரும் பூமாலை என்னை பெத்தாளே அம்மாடி
கடலுக்குப் பூவாகும்

குளத்திலே வாழவைட்டி என்னைபெத்தானே
கொடிவாழை நாறுருத்து [அம்மாடி
கொண்டுவரும் பூமாலை என்னை பெத்தாளே அம்மாடி
கொடும்பாவிக்கு மாலையாகும்

ஆத்துங்கரை ஓரத்திலே என்னைப் பெத்தாள
அன்னம் போல் குந்திருந்தீர் [அம்மாடி
அன்னமொன்று பார்க்காமே என்னைப் பெத்தாளே
அம்பு போட்டு சுட்டாளே [அம்மாடி

குளத்துங்கரை ஓரத்திலே என்னை பெத்தாளே
குயில்போல குந்திருந்தீர் [அம்மாடி
குயிலென்று பார்க்காமே என்னை பெத்தாளே அம்மாடி
குண்டுபோட்டு சுட்டாளே.

தாலியிலே பரித்து என்னே தேடிய அப்பாவே
தலேமுழுக போனிடத்தே
தாலுயிலே பொல்லாது என்னே பெத்தாரே அப்பாடே
தலேயிலெண்ணே போகலியே.

ஒத்தக்கல் மேடையம்மா என்னே பெத்தாளே
ஒதிய மரம் சாலேயம்மா [அம்மாடி
நான் ஒரு பெண்ணு நின்னழுவோ என்னே பெத்த
இந்தப்பாவிக்குஉலகமெல்லாந்தானுமழுவும்[அம்மாடி

ரெட்டக்கல் மேடையம்மா என்னே பெத்த அம்மாடி
ரயில்போகும் பாதையம்மா
ராணிமகள் நின்னழுவோ என்னேபெத்த அம்மாடி
பாவிக்கு ராஜாங்கம் தானழுவும்.

பச்சக்கல் மேடையம்மா என்னே பெத்த் அம்மாடி
பவழக்கொடி சாலேயம்மா
இந்தப்பாவிமகள் நின்னழுவோ என்னே பெத்த
இன்றைக்கி பட்டணமும் தானழுவும். [அம்மாடி

மதுரையிலே கூடாரம் என்னே பெத்த அப்பாவோ
மல்லியப்பூ வியாபாரம்
நான் மங்கை வருவேனு என்னே பெத்த அப்பாவே
செடிக்கொரு காவலனுய்.

செஞ்சியிலே கூடாரம் என்னே பெத்த அப்பாவே
செண்பகம்பூ வியாபாரம்
சீதே வருவேனுனு என்னே பெத்த அப்பாவே
செடிக்கொரு காவலனுய்.

சந்திரனரியாமே என்னே பெத்த அம்மாடி
சமுத்திரத்தில் வைத்திருந்தீர்
சந்திரனரியச் சொல்லோ என்னே பெத்த அம்மாடி
சதிசெய்து போனீர்களா,

**பெண்டுகள் நவரத்தின ஒப்பாரி முற்றிற்று.**

உ

# லீலாவதி ஒப்பாரி

இட்டா. பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்ரவர்த்தி பிரஸ்

நெ. 189, தங்கசாலை தெரு, சென்னை.

1961

உ

ஜெகமெங்கும் புகழ்பெற்ற இன்பகான கீதமணி

திருசிரபுரம்

# ஸ்ரீஜத் T. R. தங்கவேலு தாஸ்

அவர்கள் இயற்றிய

# லீலாவதி ஒப்பாரி

## தகப்பனுருக்குப் புலம்பல்

வடக்கு மதுரையிலே வடமதுரைப் பேட்டையிலே
என்னை பெற்ற அப்பா
மல்லிகைப்பூ தோட்டம் வைத்து
மறவனையும் காவல் வைத்தீர்
மல்லிகை மலர்ந்த மணமறிந்து நான்பாவி
வங்காளப் பட்டுடித்தி
வயிரநகை பூட்டி
வண்ண்மடி கோலி நீ பெற்ற செல்வி

மங்கைவந்து பூவெடுப்பேன்
உங்கள் கண் மறைந்த நாழிகைக்கு
அந்த மல்லிகையை காத்திருந்த
மறவேனு சேதி சொன்னுன்
நான் வண்ணமடி யவிழ்த்து
வாடை மல்லிதா னெதிரி இன்றைக்கு
வடித்து விட்டேன் கண்ணீரு
நீங்கள் போகும் வையகமே வந்தாலும்

அந்த வையகத்தில் உள்ளவர்கள்
நீ பெற்ற வயது சிறுசாளுக்கு
வருத்தம்வந்ததேதுயென்பார்
தெற்கு மதுரையிலே என்னை பெற்ற அப்பா
தென்மதுரை பேட்டையிலே
எங்கள் கண்ணுள்ள நாளையிலே
செண்பகப்பூ தோட்டம் வைத்து
அங்கே சேவகனைக் காவல் வைத்தீர்

அந்த செண்பகம் மலர்ந்த
தினுசரிந்து நான்பார்வி
சிங்காரப்பட்டுடித்தி
சிறுநகைகள் தான் பூட்டி
சின்னமடி கோலிஉங்கள்
கண்மறைந்த நாழிகைக்கு
நீபெற்ற செல்வக்கிளி பூவெடுத்தேன்
அந்த செண்பகத்தை காத்திருந்த
சேவகனே சேதிசொன்னன்
நான்சின்ன மடியவிழ்த்து
செண்பகத்தை தானுதரி
என்பிரியமுள்ள அப்பா இன்னக்கி
சிந்திவிட்டேன் கண்ணீரு
நான்சிந்திவிட்ட கண்ணீரு
நீங்கள் போகும் சீமையெல்லாம் வந்தாலும்
அந்தசீமைதனிலுள்ளவர்கள்
நீ பெற்றசெல்வி சிறுசாளுக்கு
சிந்தைகுறை யென்னலென்பார்
பத்துபடி கறக்கும் என்னைபெற்ற அப்பா
பாலரோடு ஓடிவரும்
பழனிமலைச் சன்னதியில்
படிமணியை ஆட்டிவரும்
பவள நிறமேனி பால்பசுவு மிங்கிருக்க
நீங்கள் பரலோகம் பால்சுவை
பாதுகார்க்கப் போனீர்களா
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு
பாலும் கறக்காமல் பாரோடு ஓடாமல்
பழனிமலைச் சன்னதியில்
படிமணியசைக்காமல் பவளநிற பால்பசுவு
பதறியே கத்துறது நீங்கள் போன
பள்ளியறை கேழ்க்கலையோ
எட்டுபடி பால்கறக்கு என்னைப் பெற்ற அப்பா
இளைஞரோடு சேர்ந்து நிற்கும்

ஈசன்மலை சன்னதியில் யிலங்குமணி ஆட்டிவரும்
இருண்ட நிறமனி
இளம்பசுவு இங்கிருக்க நீங்கள்

எமலோகப் பால்பல்வை
எதிர்பார்க்க போனீர்களோ

உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு
எட்டுசேர்கூட இதமாய் கறவாமல்
இளைஞரோடு சேராமல் ஈசன்மலைச்சன்னதியில்

இலங்குமணி ஆட்டிவரும் இருண்டநிறமேணி
இளம்பசு யிறையிரது
என்னைப்பெற்ற அப்பா நீங்கள் போற

## தாயாருக்கு புலம்பல்

இருட்டறைக்கே கேட்கலேயோ
காசினியில் உள்ளவர்க்கு என்னைபெற்ற அம்மா

காப்புவரும் சீப்புவரும் கணக்கில்லாத சீறுவரும்
கனத்த வரிசைவரும் கல்கத்தா பட்டுவரும்

காலை மாடுரெண்டுவரும் கல்லிழைத்தவண்டிவரும்
காசிவிசுவாஸரோட கைலங்கிரி நாதரோட
காசளக்கும்செட்டியோட

கலந்தொருநாள் பெண்பிறந்தேன்
எனக்கு காப்புமில்லை சீப்புமில்லை
கணக்கில்லா சீறுமில்லை கனத்தவரிசையில்லை

கல்கத்தா பட்டுமில்லை
காளைமாடு ரெண்டுமில்லை என்னை பெற்ற அம்மா

கல்லிழைத்த வண்டியில்லை இன்னக்கி
நான்பாவி கண்கலங்கி நிற்கிறேனே

சீமையிலே உள்ளவர்க்கு என்னை பெற்ற அம்மா
சீப்புவரும் சோப்புவரும் சீறுவரிசைவரும்

சிலசீறு முன்னேவரும் சிங்கப்பூர் பட்டுவரும்
சின்னமாடு ரெண்டுவரும்
சிகப்பிழைத்த வண்டி வரும்

செஞ்சி விசுவாசவரோடு ஸ்ரீரங்கநாதரோடு
சிகப்பளக்கும் செட்டியோடு
சேர்ந்தடியாள் பெண் பிறந்தேன் எனக்கு
சீப்புமில்லை சோப்புமில்லை சீறுவரிசையில்லை

சிலசீறுமின்னேயில்லை சின்னமாடு ரெண்டுமில்லை
சிகப்பிழைத்த வண்டியில்லை
என்னை பெற்றதாயே நீபெற்ற செல்வி
இப்போ சிதறி மனம் வாடுறேனே

மண்ணு சுவறுவைத்து என்னை பெற்ற அம்மா
மாதளந்தோப்பு வைத்து
மறநாயும் காவல் வைத்து நீ பெற்ற
மதலைப்பதுமை வைத்து மனது குளிர்ந்து

மகிழ்ச்சியோடு நானிருக்க மண்ணுச் சுவரிழந்து
மாதளந் தோப்பிழைந்து
மறநாயும் காலொடிந்து நீபெற்ற
மதலை நிறங்குலைந்தேன் நீங்கள்

மண்ணுலகைவுட்டு மாயமாய் போனவுடன்
மறநாயுக்கும் சங்கிலிக்கும் என்னை பெற்ற தாயே
இந்தமா பெரிய சீமையிலே என்னைக் கொண்ட
மாபாவி வாசலிலே நீ பெற்ற செல்வி

மறுவார்த்தை சொல்ல வேணுமோ
செங்கச்சுவரு வைத்து என்னை பெற்ற அம்மா
செண்பகத் தோப்பு வைத்து
செந்நாயும் காவல் வைத்து நீ பெற்ற

செல்வி பதுமை வைத்து சிந்தை குளிர்ந்து
சிங்காரமாயிருக்க என்னை பெற்ற தாயே
செங்கச் சுவரிடிந்து செண்பகத் தோப்பிழந்து
செந்நாய் காலொடிந்து நீபெற்ற

செல்லி நிறங்குலைந்தேன் உங்கள்
சீவனும் போனவுடனே
செந்நாய்க்கும் சங்கிலிக்கும் இந்த

சீரலிவான் சீமையிலே என்னைத் தேடிய சாமி
சிங்காரன் வாசலிலே என்னை பெற்ற தாயே

நீபெற்ற செல்லி நான்ஒரு சேதிகளும்
சொல்லவேணுமா

## புருஷனுக்கு புலம்பல்

சந்தன பொட்டுவைத்து என்னை தேடிப்
சரிகை கம்பிவேஷ்டி கட்டி
சல்லாவும் மேல் போட்டு நீங்கள்

சாலைவழிபோனலும் என்னை கொண்டசாமி
சல்லாவும் மேலே பறக்கும்

சமர்த்தருடபேர் விளங்கும் இன்றைக்கி
சாலைவழி போரவர்கள்

சமர்த்தரும் வாராரென்று என்னை தேடியசாமி
சரணமிட்டு கைதொழுவார்

ஜனங்களை கையமர்த்த என்னை தேடிய சாமி
நம்பசீமை சாலைதனில் யாருமில்லை

குங்கும பொட்டு வைத்து என்னை கொண்டசீமான்
குரித்த கம்பி வேஷ்டி கட்டி கொள்ளை காலம் மேல்
கோர்ட்டு வழிபோனலும் உங்கள் [போட்டு
கொள்ளை காலம் மேல் பறக்கும் என்னை தேடிய சாமி

கோமானின் பேர் விளங்கும் இன்றைக்கி
கோர்ட்டுவழி போரவர்கள் என்னை

கொண்டமன்னவரை கும்பிட்டு கையெடு
கும்பிட்டுகைதொழுத

குணவந்தவரைகையமர்த்தி என்னை தேடிய சாமி
நம்பசீமைகோர்ட்டு வழியாருமில்லை

கறுப்புகுதிரைவண்டி என்னை
கொண்டகருணரும்நானும் கருப்பு குதிரைபூட்டி

கலருவைத்த வண்டியேறி
கடைதெருவுபோகையிலே கண்ணும் துடித்திடுச்சே

கனவருத்தம் வந்துடுச்சே
கண்ணுதுடித்தே காரணத்திற்காக

என்கருணரை நானிழந்த
கலங்கியழுகிறேன் என்னைகொண்ட

காயாம்பூ மேனி கலக்கமில்லாச் செம்மேனி
மாதளம்பூமேனி மருவில்லாச் செம்மேனி

கண்டுதெளிவதெப்போ
என்னைதேடியசாமி என்னுடை

கவலைகளும் தீர்வதெப்போ
வெள்ளைக்குதிரைவண்டி வில்லுவைத்த டாப்புவண்டி
என்னைக்கொண்ட வீமரும்நானும்

வெள்ளைக்குதிரைபூட்டி வில்லுவைத்த வண்டியேறி
வீதிவழிபோகையிலே வில்லு நடுங்கிடுச்சே

வெகுவருத்தம் வந்துடுச்சு வில்லும் நடுங்கிய
விஷயத்திற்காக என்னுடைய வீமரைநானிழந்து

வெல்லுரிப்புமேனி விருப்பமுள்ள செம்மேனி
விரும்பிநான் பார்ப்பதெப்போ

என்னைதேடியசாமி நான்பாவியுட
வெகுவருத்தம் தீர்வதெப்போ

## சகோதரருக்கு புலம்பல்

கடல்கரைஓரமரக அருமையுள்ள என்பிறவி
என்னுடகருணரும் நானும்
கைகோர்த்துவந்தாலும் கல்லிழைத்துகாலுநட்டு

கனகமாகபந்தலிட்டு அருமைப் பிறப்பே
புத்தியுள்ள என்பிறப்பே

என்னைக்கொண்ட கருணருக்கு
கையெடுத்துக்கல்லிழைத்த பந்தலிலே இன்றைக்கு

நாங்க உள்ளழைத்து
கஊப்பாற வாரதெப்போ

ஆற்றங்கரை ஓரமாக
அருமையுள்ள என் பிறவி என்னைக் கொண்ட

அர்ச்சுனரும் நானும் அன்போடு வந்தாலும்
அறும்பிழைத்து காலுநட்டு அழகான பந்தலிட்டு

தரும்பிறப்பே தன்மையுள்ள என் பிறப்பே
பொருமைப்பிறப்பே புத்தியுள்ள என்பிறப்பே

என்னைக்கொண்ட அர்ச்சுனருக்கு
கைகோர்த்து ஆசையுடனுள்ளழைத்து

அலுப்பாற்றவார தெப்போ
குளத்தங்கரை ஓரமாக அருமையுள்ள என்பிறவி

என்னுடன் கோமானும் நானும்
குணமாகவந்தாலும் குச்சிழைத்து காலுநட்டு

குறிப்பான பந்தலிட்டு கூட்டுப்பிறப்பே
குணமுள்ள என்பிறப்பே என்னைகொண்டவர்க்கு

கைகொடுத்து குணமுடனே உள்ளழைத்து
குளிராற்ற வாரதெப்போ

லீலாவதி ஒப்பாரி முற்று.

உ

பாரத மாதர் புலம்பும்

# பாவையர் ஒப்பாரி



இட்டா. பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்

1961

உ

கடவுள் துணை

பாரத மாதர் புலம்பும்

# பரவையர் ஒப்பாரி

வடக்கே மழை பொழிய
வகை தப்பி வெள்ளம்வர
வாசமுள்ள மல்லிகைப்பூ
நம்ம வாசல் வழியடைத்துப் பூத்தாலும்

நான் வண்ணமடி கோலி
வங்காரப் பட்டுடித்து
வயிர நகை மேல் பூட்டி
நீங்கள் பெற்ற பெண்ணாள் நான்
வளைந்து வந்தேன் பூவெடுக்க

வண்டில்லா பூவென்று
நான் பாவி வடித்திட்ட கண்ணீரு
என்னைப் பெற்ற அப்பா நீங்கவச்ச
பூந்தோட்டம் போய பாய்ந்தால்

பூவெடுக்கவந்த புண்ணியர்கள் ஐவர்களும்
மழைபெய்த தண்ணீரு
மங்கிவந்து பாயவில்லை
பெண்ணாள் அழுதகண்ணீர்
பூந்தோட்டம் நிறைந்ததென்பார்

தெற்கே மழை பொழிய
திசைதப்பி வெள்ளம்வர
தினுசுக்கொரு மல்லிகைப்பூ
என்னைப் பெற்ற அப்பா
நம்ப சீமை தெருவடைத்து பூத்தாலும்

நான் சின்ன மடிகோலி
சிங்காரப் பட்டுடித்தி
சிறுநகையை மேல்பூட்டி
சிறந்து வந்தேன் பூவெடுக்க

நான் சிறப்பெல்லா பூவென்று
சிந்தி விட்டேன் கண்ணீரு
நீங்க வைத்த சிறு தோட்டம் போய்ப்பாய்ந்தால்
செண்டார்டி வந்த
சீமான் களைவர்களும்
சிறு வாய்க்கால் தண்ணீரு
சிறந்து வந்து பாயவில்லை

நீங்க பெற்ற சீமாட்டி அழுகுங் கண்ணீர்
சிறு தோட்டம் நிறைந்த தென்பர்
பவள மலைமேலே என்னை பெற்ற அம்மா
உங்கள் கண்ணுள்ள நாளையிலே
பச்சை மயில் தோகை பறந்து
விரித்தாடும் நீ பெற்ற பெற்ற பெண்ணுள்

நான் பார்த்து விளையாடிடுவேன்
உங்கள் கண்ணு மறைந்த உடனே
பச்சைமயில் தோகை
பார்க்கக் கிடைக்கிலியே
பதருதல்லோ என் மனது
நீங்கள் போகும் பரலோகம் சம்மதமோ

நெஞ்சிமலேமேலே என்னை பெற்ற அம்மா
உங்கண்ணுள்ள நாலேயிலே
சிகப்பு மயில் தோகை
சிறந்து விரித்தாடும்
நீங்கள் பெற்ற பெண்ணள் நான்
சோர்ந்து விளேயாடுவேன்

உங்கள் கண்ணு மறைந்த உடனே
சிகப்பு மயில் தோகை
சேரக்கிடக்கிலியே
நான்பாவிக்கு சிதருதல்லோ என்மனது
நீங்கள் போகும் சிவலோகம் சம்மதமோ

கருப்பு சைக்கிள் வண்டி என்னைகொண்ட
கருண ராஜா ஏறும்வண்டி
கரும்புமொழியே கற்கண்டு சர்க்கரையே
நல்லரிசிமாவே நயமான தங்கமே
நீங்கள் கருப்பு சைக்கிளேரி

காசிக்கேபோயி
காசி விஸ்வநாதரை
கைதொழுது நின்றீர்களோ
அந்த காசி விஸ்வநாதரும்
கருத்துள்ள பிள்ளேயென்று

தன் காலடிக்கே ஆளாக்கி
என்னை கவலேப்பட செய்தார்களோ
இப்போ கலங்குதல்லோ என்மனது
நான் பாவி வாசலுக்கு
நீங்கள் காலமே வாரதெப்போ

சிகப்பு சைக்கிள்வண்டி என்னைக்கொண்ட
சீமானும் ஏறும் வண்டி
என் அச்சு மடமே
அரசாண்ட ராஜாவே

சிகப்பு சைக்கிளேறி நீங்கள்
சீரங்கம் போயிறங்கி
அந்த சீரங்கநாதரை
சேவித்து நின்றீர்களோ

சீரங்கநாதரும் உங்களைத்
திடமுடைய பிள்ளையென்று
திருவடிக்கே ஆளாக்கி
என்னைத் திகிலடையச் செய்தார்களோ

இப்போ திகிலடையச் செய்தார்களோ
இப்போ தியங்குதல்லோ என்மனது
உங்களுக்கு வாச்ச பெண்ணுள் உனக்கு
ஒரு சேதிசொல்ல வராதெப்போ

பாலூத்தி கல்லிழைத்து
பச்சைகிளி மெச்சிரக்கி
பார்ப்பானிறங்குமிடம்
பத்துலட்சம் ராஜர்மடம்

பார்ப்பானைப் பெற்றெடுத்து
பாங்கியம்மா கண்ணீரு நான்
பெற்ற செல்வவே இந்த
பந்தலிலே சோரவுட்டேன்-

தேனூத்தி கல்லிழைத்து
சிகப்புக்கிளி பெச்சிரக்கி
சீமானிறங்குமுடம்
எட்டுலக்ஷம் ராஜர்மடம்

சீமானைப் பெற்றெடுத்த
சீதையம்மா கண்ணீரு
நான் பெற்ற செல்வமே
இந்த சீமையிலே சோரவிட்டேன்

காலஞ்ஞ கடுதாசி கண்மணியே சேதி கண்டால்
கருத்துடன் எழுதிவிட்டால்
என்னை பெற்ற அப்பா நான்
கோட்டை பிரித்திடுவேன்
குதித்திடுவேன் வாய்க்கரிசி

உயர்ந்த மரம்மேறி சிவந்த குலையிறங்கி
தனிந்த மரம்மேறி தினுசுக்கொரு காயிறக்கி
செப்பூசிகொண்டு செவ்வாளி பூமெடுத்து
அப்பாவே வந்தாலும் அய்யா திருமுகம்
அடியாளுக்கு கிட்டலியே

அடுப்பு மெழுகி
அழகுடனே கோலமிட்டு
பானை கழுவி
பன்னீரு சாய்த்து
சீரகம்போல் சின்னத்தணல் மூட்டி
நற்பவளம் போலே நல்லதணல் மூட்டி

உங்களுக்கு வந்த பெண்ணுள்
பாயசம் ஓரடுப்பு
பக்ஷனமும் ஈரடுப்பு
பொரிக்கரியும் ஓரடுப்பு
போஜனமும் ஓரடுப்பு

இத்தனை விதமும் செய்து
எதிர்ப்பார்த்து நானிருக்க
எமலோகம் சோறுகறி
என்னைக் கொண்ட மன்னவரை
நீங்கள் எதிர்பார்க்க சம்மதமோ

அந்தி ஒதுக்கி என் மாணிக்க முத்தே
மகுட மணிவிளக்கே நான் பாவி
வாசலுக்கு நீங்கள்
அமுதுண்ண வாரதெப்போ

பத்துமலைத்தாண்டி பாவளமாலை சந்திலே
பகவானிருக்குமிடம்
பார்வதியாள் தூங்குமிடம்
பாவை பழுத்திருக்கும்

என்னைப் பெற்ற அம்மா
பகவானிடத்திலே பாவி குறை சொன்னாலும்
பாவைபழம் தின்னவந்த
பத்து லக்ஷம் பக்ஷிகளும்

நான் பாவி குறை கேட்டு
பசியாற உண்ணாமல்
என்னைப் பெற்ற தாயே நான்
ஈசனிடத்திலே
இருசிகுறை சொன்னாலும்
இலவம் பழம் தின்னவந்த
எட்டுலக்ஷம் பக்ஷிகளும்
இருசி குறை கேட்டு
இரை யெடுத்து உண்ணாமல்
என்னைப்பெற்ற அம்மாடி
எகிரிப் பறந்திடுமே

சிறுசாயிருக்கையிலே
என்னைப்பெற்ற அம்மாடி
இந்த சீமையிலே சிரிக்கவிட்டு போனீர்களே
நான் சிறிசு பெருசாகி
சித்தப்பானத்துயிலே

சித்தப்பனுக்கு வந்த
சின்னுயி நீலியம்மா
சீறிடவே வேணுமென்று
செய்கிற சூழ்ச்சியிதே

சித்தப்பன் மார்களெல்லாம்
சீதாமங்க பேசுராங்க
என்னைப்பெற்றதாயே
நீங்கள் போகும் தெய்வலோகம் சம்மதமொ

காவேரி நேர்வடக்கே என்னைப் பெற்ற அம்மா
கண்ணபுரத்தம்மன் கோயில்
கண்ணபுரத் தம்மனுக்கு
உங்கள் கண்ணுள்ள நாளையிலே
நீங்கள் ஒரு கைவிளக்கு போட்டீர்களோ

நீங்கள் கைவிளக்கு போட்ட தோஷம்
உங்கள் கண்ணு மறைந்த உடனே
அந்த கண்ணபுரத்தாளே
கைதொழுது நின்ற நீ பெற்ற
கன்னியின்மேல் நாஞ்சுதம்மா

மாமாங்க குளத்திலே
மங்கை தலை முழுகி
மாணிக்க-நாதருக்கு
மலர்ப்பூசை செய்கையிலே
மன்னவனைப் பரிகொடுத்தேன்
நான் பாவிக்கு மனக்கவலை
ரொம்பவல்லோ.

பாவையர் ஒப்பாரி முற்றிற்று.

உ

# அமிர்த ஒப்பாரி




**இட்டா. பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்**

சக்கரவர்த்தி பிரஸ்

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

1961

கடவுள் துணை

திருசிரபுரம் டி. எஸ். சுடலைமுத்து தாஸ் இயற்றிய

அரிவையர் புலம்பல்

# அமிர்த ஒப்பாரி

### விருத்தம்

அரிவையர்கள் புலம்பும் அமிர்த ஒப்பாரி
பரிமளித்து ஒவ்வென்று
சிறியவன் தெண்டனிட்டேன்
கரிமுகனின் கழலே காப்பு

### தகப்பனுருக்கு

பச்சை கடுதாசி என்னைப்பெற்ற அப்பா
உனக்கு பட்டணத்து மைக்கூடு
நீங்கள் பரலோகம் போரேனென்று

நீ பெற்ற பாவிக்கு பாங்குடனே எழுதிவிட்டால்
உங்ககடுதாசி கண்டவுடன்

என்னைக்கொண்ட பாண்டியரும்
நான் பாங்குடனே வந்து

பவளத்தேர் செய்து
அந்த பவளத்தேர்க்குள்ளே நீ பெற்ற

பாவிநான்பதறி அழுதுவிட்டால்
நீங்கள் போகும் பரலோகம் மோட்சியந்தான்.

சிகப்புகடுதாசி என்னைப்பெற்ற அப்பா
உனக்கு சீரங்கத்து மைக்கூடு

நீங்கள் சிவலோகம் போரேனென்று
நான்வாழும் சீமைக்கு

சீக்கிரம் எழுதிவிட்டால்
உங்ககடுதாசி கண்டவுடன்

சீரகச்சம்பா வாக்கரிசி
சீக்கிரமாய் நானெடுத்து

தென்னைமரம்மேரி தினுசுக்கொருகாயிறக்கி
மாங்காமரமேரி மனசுக்கொருகாயிறக்கி

செந்தாமரைப்பூதேர்கட்டி சீக்கிரமாய் வந்தாலும்
உன்னுடைய திரேகம் பார்க்கக் கிட்டலியே

நீங்கள்போகும் தெய்வலோகம் சம்மதமோ.
மதுரைக்கு கிழக்கே மாரியம்மன் கோவிலுக்கு

என்னைப்பெற்ற அப்பா
உங்கள் கண்ணுள்ள நாளையிலே

நீங்கள் ஒருமணிவிளக்கு போட்டீர்களே
அந்த மணிவிளக்கு போட்டதோஷம்

உங்கள் கண்ணும் மறைந்தவுடன்
நீங்கள்பெற்ற மகள்மேலே சாய்ந்ததையா.

## தாயாருக்கு

சிகப்புரயிலுவண்டி என்னைபெற்றதாயே
நான்பிறந்தசேலத்திற்கு போகும்வண்டி
சிகப்பு ரயிலேறி சேலத்திற்கு போயிறங்கி

நீ பெற்றசெல்லக்கிளி வாய்திறந்து
சேலைவேணுமென்று சென்னால்

எனக்கு சேலை எடுத்திடுவாய்
சிறுநகையும் செய்திடுவாய்.

சீறுவகைகளையும் சிறப்பாக செய்திடுவாய்
நான்சீலேயும் மடிச்சுடுத்தி
சிறுநகையும் மேல் பூட்டி
சீறுகளை முன்னடத்தி சேலத்து
வீதிசிறப்பாக வந்தாலும் அந்த
சேலத்திலே பெய்யு மழை எனக்கு
சேலேநனேயாது சிறுநகையும் மங்காது
சீறுகளும் நனேயாது உங்கள் கண்ணும்
மறைந்தவுடனே சேலேநனேந்திடுச்சே
சிறுநகையும்மங்கிடுச்சே சீறுகளும் நனேந்திடுச்சே
என்னைப்பெற்றதாயே நீங்கள்போகும்
சிவலோகம் சம்மதமோ
பச்சைரயிலுவண்டி என்னைப்பெற்ற தாயே
நான்பிறந்சீமை பட்டணம்போகும் வண்டி
பச்சைரயிலேறி பட்டணம் போயிறங்கி
நீ பெற்றபச்சைக்கிளியாள் வாய்திறந்து
பாவி நான்பட்டுவேணும் என்று சொன்னல்
நீபட்டு எடுத்திடுவாய் பவுன் நகையும் செய்திடுவாய்
நான் பட்டுமடிச்சுத்தி பவுன்நகையும் மேல்பூட்டி
பட்டணம் வீதியும் பலவீதிநான்வந்தால்
அந்தபட்டணத்தில் பெய்யும்மழை
எனக்குபட்டு நனேயாது பவுன்நகையும் மங்காது
உங்கள் கண்ணும் மறைந்தவுடனே
எனக்குபட்டுநனேந்திடுச்சி பவுன்நகையும் மங்கிடுச்சே
என்னைப்பெற்றதாயே நீங்கள்
போகும் பரலோகம் சம்மதமோ.
பொட்டிரயிலு வண்டி என்னைப்பெற்றதாயே
நான்பிறந்தசீமை புதுக்கோட்டை போகும்வண்டி
பொட்டிரயிலேறி புதுக்கோட்டை போயிறங்கி

நீபெற்ற பொன்னுங்கிளி வாய் திறந்து
புடவை வேண்டுமென்று சொன்னால் [வாய்

நீபுடவை எடுத்திடுவாய் பொன்னுபரணம் செய்திடு
நான்புடவை மடிச்சுடுத்தி பொன்னுபரணம் மேல்

அந்தபுதுக்கோட்டை வீதியிலே [பூட்டி
நான் பொன்னுவழிநடந்தால்

அந்த புதுக்கோட்டையில் பெய்யும் மழை
எனக்கு புடவை நனையாது

பொன்னுபரணம் மங்காது
உங்கள் கண்ணும் மறைந்தவுடனே

புடவை நனைந்திடுச்சே
பொன்னுபரணம் மங்கிடுச்சே

என்னைப் பெற்றதாயே நீங்கள்
போகிற பொன்னுலகம் சம்மதமோ

கும்பகோணத்திலே மாமாங்ககுளத்திலே
என்னைக்கொண்ட கோமானும் நானும்

குளித்துத்தலைமுழுகி கும்மேஸ்வரம் கோவிலிலே
நாங்கள் இருபேரும்

ஒரு குழந்தை வரம் கேழ்க்கையிலே
அந்த கும்பேஸ்வர ஈஸ்வரரும்

இக் கோதை முகம்பார்த்து
ஒரு குழந்தையை கைகொடுத்தார்

அந்த குழந்தையுட தோஷமல்லவோ
என்னைக்கொண்ட கோமானைக் கொள்ளையிட்டேன்

திருச்சிக்கு நேர்வடக்கே
திருவானக்காவலின்

ஜெம்புலிங்க நாதரிடம்
என்னைக்கொண்ட சீமானுட நானும்

திரு செல்வன் வரம் கேழ்க்கையிலே
அந்த ஜெம்புலிங்க நாதரும்
இந்த தேவிமுகம் பார்த்து

ஒரு செல்வனைக் கைகொடுத்தார்
அந்த செல்வனுட தோஷமல்லோ

என்னைக் கொண்ட சீமானைக்கொள்ளையிட்டேன்
சிகப்பிழைத்த மோட்டாராம்

என்னைக் கொண்ட சீமானும்
ஏறுமோட்டார் நீங்கள்

சிகப்பிழைத்த மோட்டாரேறி
சீரங்கம் போயிறங்கி

அந்த சீரங்கத்து தாசியோடே
நீங்கள் சீட்டு விளையாடையிலே

அந்த சீரங்கத்து தாசியை
ஒரு செந்தேளு கொட்டாதோ

அவள் சிவலோகம் சேராளோ
என்பாவி வாசலுக்கு

நீங்கள் சீக்கிரமாய் வாரதெப்போ.
கல்லிழைத்த மோட்டாராம்

என்னைக் கொண்ட கருணைராஜா
ஏறும் மோட்டார்

நீங்கள் கல்லிழைத்த மோட்டார் ஏறி
காரைக்குடி போயிரங்கி

அந்தக் காரைக்குடி தாசியோட
நீங்கள் கலந்து விளையாடையிலே

அந்த காரைக்குடி தாசியை
ஒரு கருநாகம் தீண்டாதோ

அவள் கைலாசம் சேராளோ
என்னைக் கொண்ட மன்னவரே

என்பாவி வாசலுக்கு
நீங்கள் காலமே வாரதெப்போ
பவுன் இழைத்த மோட்டாராம்

என்னேக்கொண்ட பாண்டியர்
ஏறும் மோட்டார்

நீங்கள் பவுன் இழைத்த மோட்டார் ஏறி
பழனிமலே போயிறங்கி

அந்த பழனிமலே தாசியோடே
படுத்துறங்கும் வேளேயிலே

அந்த பழனிமலே தாசியை
ஒரு பாம்பிருந்து தீண்டாதா

அவள் பரமலோகம் சேராளா
என்னேக்கொண்ட பாண்டியரே

என்பாவிவாசலுக்கு
நீங்கள் படுத்துறங்க வாரதெப்போ

## சகோதரனுக்கு

பூங்கானச்சோலேகளும்
பொற்றுமரைக் குளமும்
என்கூட பிறந்த தம்பி

நான் வாழும் வாசலிலே
போலீசு காவல்களும்

அந்த பொற்றுமரைக்குளத்தில்
பொண்ணுத்தலேமுழுகி

போலீசை முன் அனுப்பி
பொண்ணுவழிநடந்து

நீவாழும்சீமை புதுக்கோட்டை
வாரேனென்று பொழுதோடே

தந்தி சொல்லிவிட்டால்
தந்தியைக் கண்டவுடன்
நான்காத வழிதூரம்

எக்காளம் ஊதிவர
எட்டளநீர் கண்திறந்து

என்கூடப்பிறந்து தம்பி
எனைகாப்பாற்ற வாரதெப்போ

செண்பக சோலைகளும்
செந்தாம்ரைக் குளமும்

என்கூடபிறந்த தம்பி
நான்வாழும் வாசலிலே

சிப்பாய்கள் காவல்களும்
அந்த செந்தாமரைக் குளத்தில்

செல்லித் தலைமுழுகி
சிப்பாய்களை முன் அனுப்பி

செல்லி வழி நடந்து
நீ வாழும் சீமை சேலத்திற்கு

வாரேனென்று சீக்கிரமாய்
தந்தி சொன்னல்

தந்தியைக் கண்டவுடன்
குதிரையில்மேல் மேளம் வைத்து
கோலாகல மேளமடிக்க
பட்டத்துயானையின் மேல் மேளம் வைத்து

பரபரப்பாய் அடித்துவர
பத்து இளநீர் கண்திறந்து
என்கூடபிறந்த தம்பி எனக்கு
நீபசியாற்ற வாரதெப்போ.

அமிர்த ஒப்பாரி முற்றிற்று.

உ

# மோட்டார் ஒப்பாரி



இட்டா. பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

1961

கடவுள் துணை

# மோட்டார் ஒப்பாரி

## விருத்தம்

முக்கண்ணன் தன்மகனே கோஷிக வாகனரே
முத்தித்தருவாயென்று சித்தத்தில் நான் நினைத்து
மோட்டாரின் ஒப்பாரி பாட்டுதனை பாடுதற்கு
முனைசுழிகளில்லாமல் முடிவுரை வேணுமையா.

ஆதியில் சீமையிலே என்னை பெத்ததொரு அம்மாடி
அந்த அதிசயத்தைக் கண்டதில்லை

சீமைதுரையாலே என்னை பெத்ததொரு ஆச்சிகளா
செய்துவைத்தார் காருவண்டி

காருவண்டி லக்ஷணமும் என்னை பெத்த சதிகாரி
அந்த கலருவைத்த நேர்த்திகளும்

காசினியா ரேரிவர என்னை பெத்தரு ஆச்சிகளா
கனசீட்டு மெத்தைகளும்

கானலடிக்காத எங்கள் கனத்தமுடிராஜாவே
கமான் வளைத்த டாப்புகளும்

கைதிலுப்பஸ்டேரிங்கியும என்னை கொண்ட மணவாளா
கலர்கொடுத்த லக்ஷணமும்

மாடுகட்டி ஓடாத என்னை கொண்ட மணவாளா
மாயப்புரவியைப்போல்

மாயப்புரவியைப்போல் என்னைபெத்ததொரு அம்மாடி
மானிடர்க்கு தீம்புவைத்தார்

டப்புடுப்பு சத்தம் வைத்தார் என்னைபெத்த சதிகாரி
தாரணியில் தெரியவைத்தார்

தாரணியார் தாளரிய என்னைபெத்த சதிகாரி
டிரைவராலே ஓட்டிவைத்தார்

சீமையிலே தானறிய என்ராஜாவே மந்திரியே
சென்னை சீமான் தானெழுதி

சீமைதுரைமார்கள் என்னைபெத்த சதிகாரி
சென்னையிலே ஷாப்புவைத்தார்

பட்டணத்து ஷாப்பிலே என்னைபெத்த சதிகாரி
பார்முழுதுங் காராச்சு

காரோட்டும் டிரைவராலே என்னைபெத்ததொரு அம்
கனத்தகுலை எங்குமாச்சு [மாடி

காருஎங்கும் ஜாஸ்தியாச்சி என்கமலவல்லி யமாமடி
கால்நடைகள் மீதியாச்சு

காரோட்டும் டிரைவர்களை என்னைபெத்ததொ அம்மா
காலியென்று எண்ணமல் [டி

கொடும்பாவி டிரைவருக்கு என்னைபெத்ததொரு ஆச்
கொடுத்தீர்கள் சம்மதித்து [சிகளா

குயில்மொழியை கொண்டவரும் என்ராஜாவே மந்திரி
கொண்டுபோனர் காருஓட்டி [யே

காருஓட்டிபோன மன்னன் என் தருமதுரை ராஜாவே
ரொம்பகாதவழிபோனதினல்

காரோடு காருமுட்டி அடி என்னைபெத்தாரு ஆச்சிக
என் கணவன் தலை துளாச்சு [ளா

காசிக்குபோனதுண்டு என்ராஜாவே மந்திரியே
கைவிளக்கு தொட்டதுண்டு

கைவிளக்கு தொட்டதோஷம் என்ராஜாவே மந்திரியே
என்கணவனுக்குப் பட்டுவிட்டு

மதுரைக்குப்போனதுண்டு என்ராஜாவே மந்திரியே
மணிவிளக்கு தொட்டதுண்டு

மணிவிளக்குதொட்டதோஷம் என்ராஜாவே மந்திரி
என்மன்னனுக்கு பட்டுவிட்டு [யே

காருமுட்டி மாண்டசேதி நம்பகோரட்டு அப்பாவும்
கடினசேதிகேட்டவுடன்

காலாளுஞ் சேகவரும் என்னேக்கொண்ட மன்னவரை
கச்சேரிக்கே தூக்கி வந்தார்

கோரட்டார் தான்பார்த்து ஐயோ என்னேகொண்ட
கொடும்பாவி முண்டைக்கி [ராஜாவின்

கொண்டவனுர் மாண்டசேதி இந்தசதிகாரமுண்டைக்
குறையெழுதி ஆளுவிட்டார் [கு

தந்திபோய் சேதிகொண்டு என்னேபெத்த அம்மாடி
சலிதியிலே ஆளுவந்தான்

தந்திகவருடைத்து அடிநாரே சதிகாரி
தந்தியின் சேதிகேட்டேன்

கடிதத்தை வாசித்த அடிநாரே சதிகாரி
காரணத்தைப் பாாத்திருக்க

காரோடு காருமுட்டி என்னேக்கொண்ட மன்னன்மேல்
காரேரிசெத்தவிதம் கடிதத்தில் தானிருக்க

புருஷனிறந்தசேதி என்ராஜாவே மந்த்ரியே
பெண்ணுளும் தான்கேட்டு

புழுதிபிரண்டோட அந்தமுத்துபெற்ற ரத்தினமும்
புலம்பி யழுகலுற்ருள்

சுத்திமதிலெழுப்பி என்னேதேடிய ராஜாவே
சுந்தரரை காவல் வைத்தீர்

சுத்திமதிலிடியோ என்னேதேடிய ராஜாவே
சுந்திரர்சொல்லுகிறது என்சித்தம் பொருக்கலேயே

பக்கமதிலெழுப்பி என்னேதேடிய ராஜாவே
பாண்டியனே காவல்வைத்தீர்

பக்கமதிலிடியோ என்னேதேடியராஜாவே
பாண்டியர் சொல்லுறது என்பக்கம் ஒருகுதங்கே

பாப்பாரசாதியிலே பத்துலஷம் பெண்களுண்டு
கோமுட்டிசாதியிலே கோடிலஷம்/பெண்களுண்டு
செங்குத்தர்சாதியிலே சேனபெண்கள் லக்ஷமுண்டு
ராஜவம்சங்களிலே நாலு லக்ஷம் பெண்களுண்டு
வன்ய ஜாதியிலே வேண லக்ஷம் பெண்களுண்டு
நான் வேளாள பெண் பிறந்து நான் நாட்டு ரசகுண்டு
மலங்குலேய சம்மதமோ
மாமரத்துக் கீழிருந்து என்னை பெத்தாளே ஆச்சிகளா
மாங்காயுதிர்ந்திடுமோ என்னை பெத்தாளே ஆச்சிகளா
மாமரமும் சாய்ந்திடுமே
மாமரத்து மேலிருக்கும் என்னை பெத்தாளே ஆச்சி
மயிலும் திடுக்கிடுமோ [களே
பூமரத்துக் கீழிருந்து என்னை பெத்தாளே ஆச்சிகளா
பெண்குறை சொன்னுல்
பூவுமுதிர்ந்திடுமே என்னை பெத்தாளே ஆச்சிகளா
பூமரமும் சாய்ந்திடுமே
பூமரத்து மேலிருக்கும் என்னை பெத்தாளே ஆச்சி
பருவும் திடுக்கிடுமோ [களா
கோடி தளவாளும் என்னை பெத்த தாய் தகப்பன்
குவலயத்தில் சீமானும்
குண்டுமணிபோல் பெண்ணுய் என்னைப் படைத்த
குணத்தை மறைத்து வைத்தான் [பிர்மாவும்
சாதம் சமைத்து வைத்து என்னைக் கொண்டபுண்ணி
சாம்பார் குழம்பு வைத்து [யற்கு
பூசனிக்காய் மோர் குழம்பு புடலங்காய் துவட்டலுடன்
லாடு ரவலாடு நல்ல சாம்பார் குற்குந்தாம்
அப்பளம் போளிவடை அதிரசமும் பாயசம்
இத்தனையும் தான் புசித்து
என்னை கொண்ட மன்னவனும்
ஏரி போனுர் காருமேலே

உள்ளூரு தட்டான் யென் ராஜாவே மந்திரியே
உருவுவைத்து தாலிபண்ணி உருவை கயட்டணுமோ
தங்கநிறமே தனூர் சேர்ந்த பாண்டியரே
செங்கழுநீர் தன்குலையே செகமெச்சும் ராஜாவே

உங்கழுத்தா ஆகணுமோ
அஞ்சாரு தட்டான் ரென்ராஜாவே மந்திரியே
ஆணி வைத்து தாலிபண்ணி ஆணியகட்டணுமோ
சித்திரத்தூணே சுலையேந்தும் மாதுனேயே

புத்தியிற் சிறந்தவரே புண்ணியரே ராஜாவே
அரகழுத்தி யாகணுமோ
கோரட்டு தேடியல்லோ என் ஜோட்டு பெண்டுகளா
குலாவி வழி நடக்கையிலே

பக்கமரங்களா பனைமரத்து ஜோடிகளா
ஈச்சமரங்களா இருபுரத்து ஆளுகளா
அசுரவேம்பு தேக்குகளா அமர்ந்திருக்கும் கிள்ளைகளா
சிட்டு குருவிகளா சேர்ந்திருக்கும் பக்ஷிகளா

மயில் குயில் ஆந்தைகளா மா நிலத்து பக்ஷிகளா
மங்கை புலம்புறது என் நாட்டு பறவைகளா
நானிலத்து வண்டினங்காள் நீங்கள்
நடுங்கி கலங்க வேண்டாம்

கன்னி கலங்குறது அடியென் ஜோடு பெண்டுகளா
இந்த காரணத்தை பார்க்கலாமோ
கட்டுக் கழுத்திகளா கம்மி நாட்டு பெண்டுகளா
சட்டம் போல் பிள்ளைகளா என்சைசான தங்கைகளா

ஆத்தாளும் அக்காளும் அடுக்கடுக்கா பார்ப்பவரும்
மாமிகளா கொழுந்திகளா மகராசி பெண்டுகளா
மங்கை கலங்குறது என ஜோடு டுபண்டுகளா
உங்கள் அனைவருக்கும் சம்மதமோ
கூட்டத்தை கண்டவுடன் என்னை பெத்த ஆச்சிகளா
கூக்குரலும் போடலிற்ருன்

மாத்திலே மிட்டுவதும் மண்ணிலே போய்மோதுவதும்
கிட்ட இருந்து பார்ப்பவர்கள் எட்டி பிடிக்கிறதும்

முட்டியடைவதும் முகத்திலரையுவதும்
கையை முறிக்கிறதும் கன்னத்திலரையுவதும்

பார்த்தோர் கலங்கியப்போ இந்தபெண்ணுள் கோலத்
பயந்தோடி நிற்கிருர்கள் [தை

சந்தண மேடையில் என்னைக்கொண்ட மன்னவரும்
சார்ந்திருந்து காரோட்ட

என் கோரட்டு அய்யாவே குவலயத்து ராஜாவே என்
சாமியை பாக்கவேணும் சலுதியிலே வழி விடுங்கோ

குங்கும மேடையிலே என் சாமி துரைராஜாவுங்
குந்திருந்து காரோட்ட

என கோரட்டு அப்பாவே குவல்யத்து ராஜாங்வ முன்
கூட்டம் விலக்கிடுங்கோ என்னைக் கொண்டவரைப்
[பார்க்க வேணும்

அத்தரு மேடையில் என்சாமி துரைராஜாவும்
அமர்ந்திருந்து காரோட்டும்
என் கோரட்டார் சேகுவரே குந்திருக்கும் அப்பாவே
[என்
ஆளனைப் பார்க்க வேணும் அதட்டி விலங்கிடுங்கோ

ஸ்டேரிங்கியை கைபிடித்து என் சாமி துரை அய்யா
சீமதுரை போலிருப்பார் [வும்

கூட்டம் நிறைந்தவரே கும்பினியார் சேகுவரே
தள்ளி விலக்கிடுங்கோ என் தர்மரை போய் பார்க்க:
[வேணும்

கோட்டு காலர் காலர் பூட்சுமாட்டி என்னை கட்டிவிட்ட
குந்தி சாய்ந்து போனவரை [மன்னவரும்

தருமதுரை அய்யாவே சர்கிளிட்ட தூதுவரே—முன்
நெட்டி விலங்கிடுங்கோ என்நேசரை போய் பார்க்க

முக்காடு தூக்கியல்லோ நான்பாவிசதிகாரி [வேணும்
முகம் பார்த்து திகிலடைந்து
கட்டியணைக்கிறதும் கன்னம் கடிக்கிறதும்

கிட்டே படுக்கிறதும் கிள்ளி முகம் பார்க்கிறதும்
பக்கம் படுக்கிறதும் பல்லால் கடிக்கிறதும்

சேர்த்து அணைகிறதும் கேர்ந்ததை சொல்லுவதும்
வாரிசேர்த்து தூக்குவதும் வாயிலடிக்கிறதும்

பக்கம் ஜனங்களெல்லாம் தேம்பி அழுகிறதும்
சேர்த்த ஜனங்களெல்லாம் பதரி அழுகிறதும்

தூர ஜனங்களெல்லாம் துக்கம் கொண்டு நிற்கிறதும்
கச்சேரி துரைமார்கள் கலங்கி மனம் வாடுறதும்

பக்கம் இழுத்து விட்டு தருமதுரை கோரட்டாரும்
பயமுருத்தி நிற்க வைத்தார்

கோரட்டார் தான்பார்த்து அடிடிரைவருட பெண்சாதி
நீ கூக்குரலை செய்யாதே

கொண்ட புருஷனுட கொழுந்தன்மாமி
பெற்றவர்க்கும் உன்னுடைய தாய்தகப்பன்மார்

உடனே வர தந்தி தந்தார்
அறைப்பட்ட டிரைவருட ஆத்தாள் மாமி

ஆசையுள்ள நேசர்களும் வந்தார் உடனே
கோரட்டார் தான் பார்த்து

அடிடிரைவருட பெண்சாதி நீ
கொண்ட புருஷனை தகனம் செய்ய உத்திரவு தந்தார்

உத்திரவு வந்தவுடன் எல்லோருங்கூடி
அறைப்பட்ட டிரைவரை கொண்டு வந்து தகனம்
[செய்தார்

மோட்டார் ஒப்பாரி முற்றிற்று.

உ

# மரகத ஒப்பாரி



இட்டா. பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்
சக்ரவர்த்தி பிரஸ்
நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.
1961

ஸ்ரீகணபதி துணை

புவி எங்கும் புகழ்பெற்ற சோகரஸ திலகம்

திருசிரபுரம் டி. எஸ். சுடலைமுத்தாஸ் அவர்கள்

இயற்றிய

மாதர்கள் புலம்பும்

# மரகத ஒப்பாரி

விருத்தம்

மரகத ஒப்பாரி மானிலத்தின் யான்பாட
கரங்கூப்பி தெண்டனிட்டே கவிபுகழ்
மந்தநுவாய் கரிமுகனே இதுசமயம்
சரம்பணங்கினேன் இந்தசிறுவனுக்
கருள் தாதா

தகப்பனுருக்கு

கோடை இடியிடிக்க என்னைப்பெற்ற அப்பா
நான் பாவி வாழும் வசாலிலே
கோடை மழைபொழியும் நாடு
குளிர்ந்த தென்றல் வீசும் நாடு
இஞ்சி விளையும் நாடு
இருவாச்சி மலரும் நாடு
இருவாச்சி மலரெடுத்து இருதினுசு மாலைகட்டி
ரோடு மேளங்கொண்டு இஞ்சிவர்ண பட்டுகொண்டு
ஈசலத்து மேளங்கொண்டுசிகப்புவர்ண பட்டுகொண்டு
தஞ்சாவூரு மேளங்கொண்டு தங்கநிற பட்டுகொண்டு
அரந்தாங்கி மேலங்கொண்டுஐந்துவர்ண பட்டு
என்னைக்கொண்ட அர்சுனரைமுன்னவிட்டு[கொண்டு
அருமை பிள்ளைகளை பின்னே விட்டு
நான்பாவி அல்லிவழி நடந்து அப்பாவே
உன்னுடைய அங்கம்பார்க்க கிட்டலையே
நான்பாவி உனக்கு கொண்டுவந்த ஐந்துவர்ண பட்டு
உன்னுடைய அங்கத்துக்கு போத்தலையே.

மானஇடிக்க என்னைப் பெற்ற அபாபா
நான் பாவி வாழும் வாசலிலே
மாரிமழை பொழியு நாடு
மழைக்காற்று வீசும் நாடு
மஞ்சள் விளையு நாடு
மல்லிகைப்பு பூக்கும் நாடு
அப்த மல்லிகை பூவெடுத்து மயிளினுள் மாலைகட்டி
மாமதுரை மேளங்கொண்டு பஞ்சவர்ணபட்டுகொண்டு
கும்பகோண மளங்கொண்டுகுறிப்பான பட்டுகொண்டு
என்னைக்கொண்ட புண்ணியவரை முன்னேவிட்டு
புதுக்கோட்டை மேளங்கொண்டுபூபேரடபட்டுகொண்
என்னைக்கொண்ட புண்ணியவான் முன்னேவிட்டு [டு
பிள்ளைகளைப் பின்விட்டு
நான்பாவி பொன்னுவழி நடப்பது
பொழுதோட வந்தாலும்
உன்னுடைய பொன்னுக்க திருமேனி பார்க்ககிட்டி
சித்திரை மாதத்திலெ என்னைப்பெற்றஅப்பா [லையோ
நம்ம சீமை சீரங்கம் சித்திரத்தோர் ஓடையிலே
என்னைக்கொண்ட மீமானே முன்னேவிட்டு
சிறுவர்களை பின்னேவிட்டு
நான்பா சீதைவழி நடந்தேன்
எனக்கு சித்திரத்தேர் கிட்கிரதென்று
நீங்கபத்தடி சிங்கம்போலே பாதை மரச்சிங்கங்களோ
எட்டடி சிங்கம்போலே இடத்தை மரச்சிடுங்கோ
என்னை பெற்ற அப்பா நீங்கள்
போகும் எமலோகம் சம்மதமோ
பங்குனி மாதத்திலே என்னைப் பெற்ற அப்பா
நம்மசீமை பழனி பங்குனித்தேர் ஓடையிலே
என்னைக் கொண்ட பாண்டியரை முன்னேன் விட்டு
பாலர்களைப் பின்னேவிட்டு
நான் பாவி வழி நடந்தேன்
எனக்குப் பங்குனித்தேர் கிட்டாதென்று

எட்டடி யானை போல இடத்தை மரச்சிங்களோ
பத்தடி யானைபோல பாதை மரச்சீங்களா
என்னைப் பெற்ற அப்பா நீங்கள்
போகும் பரமலோகம் சம்மதமோ

## தாயாருக்கு

கொஞ்சி மலைதாண்டி குடகமலை சந்திலே
அங்கே குமரனிருக்குமிடம்
குறத்தியும் தூங்குமிடம்
ஒரு கோவை பழுக்குமிடம்
அந்த குமரனிடத்திலே என்னைப் பெற்றதாயே
என் குறைகளை சொல்லிவிட்டால்
கோவைப்பழம் தின்னவந்த
கோடிகுயில்களும் என்பாவி குறைகேட்டு
கோவைபழம் தின்னமல் என்னை பெற்ற தாயே
இப்போ குதிச்சோடி போனதம்மா
பவளமலைதாண்டி பழனிமலை சந்திலே
அங்கே பரமனிருக்குமிடம்
பார்வதியாள் தூங்குமிடம்
ஒருபரங்கி பழுக்குமிடம்
அந்தப் பரமனிடத்திலே
என்னைப் பெற்ற தாயே நான்
பாவி குறை சொல்லி விட்டால்
பரங்கிபழம் தின்னவந்த
பத்துகோடி பக்ஷிகளும்
என்பாவி குறைகேட்டு
பரங்கிபழம் தின்னமல்
என்னை பெற்ற தாயே இப்போ
பரந்தோடி போனதம்மா
பவுனை உருக்கியல்லோ பத்து அடுக்கு மெத்தைகட்டி
பத்தடுக்கு மெத்தையிலே
என்னை பெற்ற தாயே
நீ பெற்ற செல்விநான்

படுத்துரங்க ஒரு பவளமணி ஊஞ்சலிட்ட
உங்க கண்ணு மறைந்த உடனே
அந்த பவளமணி ஊஞ்சலிலே
படுத்துரங்க வந்தாலும்

என்னை பெண்டிய பாண்டிற்கு
வந்த பழிகாரி சின்னுயி
அந்த பவளமணி ஊஞ்சலிலே
படுக்காதே என்று சொல்லி

பலவிதமாய் திட்டுருளே
என்னை பெற்ற தாயே நான்
பாலப்பிரப்போடே
பதமரியா தம்பியோடே
நான் பாவி பதரிவிட்டேன் கண்ணீரே.

தங்கம் உருக்கியல்லோ தனித்தங்கம் மெத்தை கட்டி
அந்த தனித்தங்கம் மெத்தையிலே
என்னை பெற்ற தாயே
நீ பெற்ற செல்வி நான்

தங்கி விளையாட தருமருக்குவந்த சண்டாளி சின்னுயி
அந்தத் தாமரைப்பூ ஊஞ்சலிலே
தங்காதே என்று சொல்லி
என்னை தலையிலடிக்கிருளே
என்னைப்பெற்ற தாயேநான்
தருமப் பிறப்போட
தன்மையுள்ள தம்பியோட
நான் பாவி தவித்து அழுகிறேனே.

## புருஷனுக்கு

சிகப்பு சைக்கில் வண்டி
என்னை கொண்ட சீமானும் ஏறும் வண்டி
நீங்க சிகப்பு சைக்கிலேரி சிதம்பரம் போயிறங்கி
அந்தசிதம்பர நடராஜரும்

சேவித்து நின்றீர்களோ
உங்களை தீர்க்கமுள்ள பிள்ளை என்று
தன் திருவடிக்கு ஆளாக்கி
என்னை திகிலடைய செய்தார்களோ

உங்களுக்கு வந்த ஆகாத பாவிக்கு
ஒரு சேதிசொல்ல வாரதெப்போ.
பச்சை சைகில் வண்டி
என்னைகொண்ட பாண்டியரும் ஏரும்வண்டி.

நீங்க பச்சை சைக்கிலேரி பழனிமலை போயிறங்கி
அந்த பழனிமலை வேலவரை
பாதந் தொழுதீர்களோ
அந்தபழனிமலை வேலவரும்

பக்தியுள்ள பிள்ளை என்று
தன் பாதத்திற்க ஆளாக்கி
என்னை பரக்க செய்தார்களோ
உங்களுக்கு வந்த ஆகாத பாவி வாசலுக்கு

படுத்துறங்க வாரமதப்போ
தெற்கே வெகுணீரம் என்னை தேடிய ராஜாவே
நீங்கள் திருநெல்வேலி போரேனென்று
ஒரு சீட்டு எழுதிவிட்டார்

ஒரு சேதி சொல்ல ஆளுவிட்டார்
உங்க சீட்டையும் கண்டவுடன்
சீரகச்சம்பாரிசி
சீக்கிரமாய் நான் சமைத்து

சீனி அவரக்காய்
கொத்தவரக்காய்
முருங்கக்காய்
கத்திரிக்காய் வாழைக்காய்
புடலங்காய் வகையுள்ள பீர்க்கங்காய்

வர்ணமுள்ள பாவக்காய்
இத்தனை காய்கறியும் உங்களுக்கு வந்த
ஆகாதபாவி எடுத்து பருமாரி எதிர்பார்த்து நானிருக்க

நீங்க என்னை மாந்திட்டு எமலோக சோறுகரி
எடுத்து உண்க சம்மதமோ

வடக்கே வெகுதூரம் என்னை தேடிய ராஜாவே
வடமதுரை போரேனென்று

வகையுடனே சீட்டெழுதி
வார்த்தை சொல்ல ஆளுவிட்டார்

உங்கவார்த்தைகளை கேட்டவுடன் வால் மிளகரிசி
வகையாக நான் சமைத்து

வடதோசை பாயாசம்
வகைவகைய்ாய் செய்துவைத்து

வாழையிலையிலே வகைவகையாய் பருமாரி
வருவீரென்று எதிர்பார்த்தேன்

வடைதோசை பாயாசம் தின்னுமல்
வானுலகம் போரேனென்று

உங்களுக்கு வந்த ஆகாத பாவிக்கு
ஒரு ஓயர் கொடுத்தால் ஆகாதே

## மாமியாருக்கு

என்தகப்பன் சொல்லைக் கேளாமல்
தாயார் சொல்லைத் தட்டிவிட்டு
என்னை தேடிய படுபாவி அத்தையரே

தந்தை தாய் நீயென்று
உந்தன் மனதை மாலையிட்டு

உங்க வாசல்வந்த நாள் முதலாய்
மஞ்சள் குளித்தறியேன்

மல்லிகை முடித்தறியேன்
உச்சிக்கு எண்ணையறியேன்

உளுந்துவடை தின்னறியேன்
இந்த ஊரார் சிறிப்பாரென்று

என்னை தேடிய அத்தையரே
நான் ஒப்புக்கு அழுகவந்தேன்

பாலாடுமுன்னூறு பால் பசுவு நானூறு
என்னை தேடிய அத்தையரோ

உன்னுடைய வாசலிலே பாங்காக கட்டியிருக்கும்
உன்னுடைய நாளையிலே

மோரைக் குடித்தறியேன்
தயிரைக்குடித்தறியேன் தயிர்பானை நானறியேன்

இந்த் தானுயுள்ளவர் சிறிப்பாரென்று
நான் தவித்து அழுகவந்தேன்

காசுமாலை மூன்றிருகுக் கம்மல்தோடு
கழுத்தட்டியல் ஐந்திருக்கும் கைகாப்பு ஆறிருக்கும்

நான் கன்னி பிராயத்திலே
காய்காய்க்கும் நாளையிலே

அறியாப்பிராயத்திலே என் அங்கத்திலே போட்டு
என்னழகைப் பார்க்காமல்—என்னை

அருத்த சிரிக்கி போல
அலங்கோலமா செய்தீர்களே

இந்த அகிலத்திலுள்ளவர்கள் சிரிப்பாரென்று
உங்கவரச அலரிபுலம்ப வந்தேன்

மாதர்கள் புலம்பும் மரகத ஒப்பாரி முற்றிற்று.

———

பூவிருந்தவல்லி
உபாத்தியாயர் பூ. சே. தா. இராஜு நாயகரவர்கள்
பாடிய

# புருஷனுக்கும் பிள்ளைக்கும் பெற்றோர்க்கும் சொல்லும்

# அற்புத ஒப்பாரி

## புருஷனுக்கு புலம்பல்

மஞ்சாகுப்பம் கூடலூரு என்னைத்தேடியராஜாவே
மருவுவந்து விற்றுதானுல் நான்
மன்னனைத் தோற்றபாவி நாமருவைத் தேடுவேனே
மறுவிலே கூறுவேனே

குற்றாலங் குறநாடு என்னை தேடியராஜாவே
கொழுந்துவந்து விற்றுதானுல் நான்
கொண்டவனை தோற்றபாவி கொழுந்தை தொடுவே
கோழுந்துவிலே கூறுவேனே [னே
ஆளனும் தேவியுமாய் என்னை தேடியராஜாவே
நாங்கள் அசைந்துவழி நடந்தோமானுல்
எனக்கு அழகுவனம்கச்சேரி என்னை தேடியராஜாவே
எனக்கு அருகேவந்து தான்சிரிக்கும்
கொற்றவனும் தேவியுமாய் என்னை தேடியராஜாவே
கூடநடந்தோமானுல், எனக்கு
கும்பகோணம் கச்சேரி கூடவந்து தான் சிரிக்கும்

பத்தூருதட்டானும் என்னை தேடியராஜாவே
பழனிமலே ஆச்சாரி பட்டரையை முன்னேவைத்து
பண்ணினுன் சிறுதாலி அந்த தாலிமேல்தோஷமில்லே
பாவிதட்டானுட கைராசி

கொப்புக்கு கல்புதைத்து என்னே தேடியராஜாவே
கூடாரங் கல்பரவி நாங்கள்
கொப்பு கழட்டணுமோ உனக்கு வந்தபெண்ணுள்
கோடிபிரா யத்திலே

சித்தாடை கட்டும்பெண்ணு என்னே தேடியராஜாவே
சிறுசலங்கை போடும்பெண்ணு என்றைக்கு
சிறுசலங்கை யறுப்பது உனக்குவந்த பெண்களுக்கு
சிவனுடைய கட்டளையோ

பாவாடை கடடும்பெண்ணு என்னே தேடியராஜாவே
பாதரசம் போடும்பெண்ணு நாங்கள்
பாதிலருப்பது என் துரையே
பரமசிவன் கட்டளையோ

பொன்னுலே புத்தகமாம் என்னே தேடியராஜாவே
பொற்பதுமைக் கூடாரம். இப்போ
பிடித்துக் கணக்கெழுத உங்கள் வாசலுக்கு நான்
ஒகு புண்ணியரைத் தேடுறேனே

தங்கத்தால் புத்தகமாம் என்னே தேடியராஜாவே
தணலுபடக் கூடாரம் நீங்கள் தனித்துக்கணக்கெழுத
இந்த சண்டாளன் சீமையிலே ஒரு
தருமரையுந் தேடுறேனே

தாசிமடிமேலே. என்னே தேடியராஜாவே
தங்கம்வைத்துச் சூதாடி
தாசிகடை தோத்ததுவும் எங்கள்
தருமர்கடை ஜெயித்ததுவே

வேசிமடிமேலே என்னேத் தேடியராஜாவே
வெள்ளிவைத்துச் சூதாடி
வேசிநடை தோத்ததுவும் எங்கள்
வீமர்நடை ஜெயித்ததுவே

சங்கமரத்தடியே என்னே தேடியராஜாவே
தங்கிகுறை சொன்னுக்கால் எங்களுக்கு

சகஞ் சலசலக்கும் ஒரு தனிநாகம் ஓசையிடும் ஒரு
தங்கைவர நேரஞ்சென்ருல் என்தாயை எடுக்காதிங்க
தனிவிளக்கு ஏத்திடுங்கோ [நான்
புங்கமரத்தடியே என்னை தேடியராஜாவே

இந்தப்பெண்ணுல்குறை சொன்னுலே அந்தப்
புங்கஞ்சலசலக்கு உங்கள்வாசல் புதுநாசும்ஓசையிடும்
பெண்ணுள்வரநேரஞ்சென்ருல் மாதாவை எடுக்கா
ஒரு மணிவிளக்கு ஏந்திடுங்கோ [திங்க

அரைத்தமஞ்சள் சட்டியிலே என்னை தேடியராஜாவே
ஆபரணம் பெட்டியிலே இந்த
ஆபரணம் போடவந்தாள் அல்லிரும் மூலையிலே
என்னுடைய அர்ஜுனனும் தேர்மேலே

பச்சைமஞ்சள் சட்டியிலே என்னை தேடியராஜாவே
பாதரசம் பெட்டியிலே அந்த
பாதரசம்போடவந்த இந்த பைங்கிளியாள் மூலையிலே
என் பர்த்தாவும் தேர்மேலே

## அத்தைக்குப் புலம்பல்

வாக்குக்கு எண்ணையறியேன் அடியத்தே உன்வாச
வடகந்தாளித்த சாரறியேன் இன்றைக்கு [லிலே
வந்தஜெனம் சிரிக்குமென்று உன் மருமகள்
வரிசைக் கழுகுரண்டி

உச்சிக்கு எண்ணையறியேன் உங்கள்வாசல் வந்த
[பெண்ணுள்
உளுத்தவடை வுண்ணறியேன் என்றைக்கி
ஊரார்சிரிப்பாரென்று அடியத்தே என்
ஒப்புக் கழுகுரண்டி

கடிச்சபிளவறியேன் என்னைவைத்து விட்டுபோற
வனவாசமாயியத்தே நான் கரிக்குழம்புதின்னறியேன்
கண்டஜனம் சிரிக்குமென்று அடியத்தே நான்
கட்டியழுக வந்தேன்

பால்பானைக் கைதவரி அடியத்தேநான்
பதரிவுடைத்தாலும் இன்றைக்கி
பால்போனல் போகுதென்று என்னைவளர்த்த அத்தே
பக்ஷமுட னிருந்தாயே
நெய்பானை கைதவரி என்னைத்தேடிய அத்தே
நேரேவந்து உடைத்தாலும் இன்றைக்கி
நெய்போனல் போகுதென்று அடியத்தேவெகு
நேசமாய் எங்களப்பனுடன் பிறந்த
கப்பலரசியத்தே கடன்காரச் சின்ன அத்தே
நீபோர இடத்திலே பவளம் முகக்கருப்புசேலைவிற்கும்
இப்போவாங்கிவந்துதந்தாலே என்னைதேடிய அத்தே
பட்டுகொசுவங்கட்டி பரந்தோடி மாரடிப்பேன். [நான்

## தாயாருக்குப் புலம்பல்

பத்தெட்டுநாளையிலே என்னைப்பெற்றவளே அம்மாடி
உங்கள்வயிற்றிலகருவுத்தரித்தும்பச்சைகற்பூரம்தின்று
என்னைபெற்றவளே அம்மாடி இந்த கருவைக்கலேக் [காமல்
இந்தகருவைய்யுருவாக்கி அம்மாடிகஷ்டமெடுக்கவைத் [தாயே
வெள்ளிக்கிழமையிலே என்னைபெற்ற அம்மாடி
விடியஐந்து நாழிகையில் என்னை
அந்தரமாய்க் குந்தவைத்து தந்திரமாய் தாலிகட்டி நான்
வாழும்பிராயத்திலே அம்மாடி வருத்தமெத்த வைத் தாயே
பார்க்கவருவோமென்றல் என்னைபெற்ற அம்மாடி
பங்கும் பகையாளி பாதிநாள்தாயாகி அவன்
பார்பை குறுகேவைத்து பாலாற்றை நீந்துவேனே
காசிவிசிறிவரும் என்னைபெற்ற அம்மாடி
கைலங்கிரி தீர்த்தம்வரும் நீங்கள்
காசிமஹாராஜனோடு என்னைபெற்ற அம்மடி நீங்கள்
கலந்தொருநாள் வாழலியே

கும்பைசுரக்காயும் என்னைபெற்றவளே அம்மாடி
கொல்லிமலைத் தேங்காழும் நீங்கள்
கூட்டிகுழம்புவைக்கும் குணமுள்ள தாயிழந்தேன்
ஊமத்தைபூ பூர்க்கும் என்னைபெற்ற அம்மாடி

உள்ளே பாலாப்பழுக்கும் இப்போ நான்
ஊருருதோட்டமென்று நான் உள்ளேவர அஞ்சுரனே
குலுகுலென்று காத்தடிக்கும் உங்களிட வாசலிலே
கொடமல்லி பூத்திருக்கும் இந்தக்

கொடமல்லி பூவெடுக்க என் அம்மாடி
கொலைக்காரன் எங்கிருந்தான்
கன்னிய பெண்களுடன் என்னைபெற்ற அம்மாடி
கடலாடப்போனலும் கன்னிகுளிக்கையிலே என்னை

அம்மாடி நீ கடக்கப்போய் நிற்கணுமா [பெற்ற
தோழியப்பெண்களுடன் என்னைபெற்ற அம்மாடி
துறையாடப் போனலும் தோழி குளிக்கையிலே
என்னைபெற்ற அம்மாடி தூரப்போய் நிற்கணுமா

அஞ்சிமலை நெஞ்சிமலை என்னைபெற்ற அம்மாடி
உனக்கு
அதுவே யிஞ்சிமலைஅந்த செஞ்சிமலை தேனுடைக்கும்
என்னைபெற்ற அம்மாடி அந்த திருடனவ் னெலகி
[உந்தான்

## தகப்பனுருக்குப் புலம்பல்

அண்டம் மதிலெழுப்பி என்னைபெற்ற அப்பாவே
அகடமரம் தோப்பாக்கி இன்றைக்கி
அண்டமதிலிடிஞ்சா எனக்கு
அண்ணன் தம்பி தாங்குவாரு
சத்திரத்துவாழை என்னைபெற்ற அப்பாவே
சமுத்திரத்து நீர்வாழையடி என்னைபெற்ற அப்பாவே
நாங்கள் முகஞ்சோர்ந்து நிற்குறேமே
மந்தாரைப்பூபூர்க்கும் என்னைபெற்ற அப்பாவே
மகடம்பூ சாவடியில் இன்றைக்கி

செந்தாமரைப் பூர்க்கும் என்னைபெற்ற அப்பாவே
எங்கள் சித்திரைபூ சாவடியில்
தங்கத்தழுக்கடிக்க என்னைபெற்ற அப்பாவே

தாசீலுவந்திறங்கும் இன்றைக்கி
தாசீலை கையமர்த்த என்னைபெற்ற அப்பாவே

வொரு தாஷ்டீக ரில்லையோதான்
பத்துகட்டு மாளிகையில் என்னைபெற்ற அப்பாவே
நீங்கள் பாப்பாரைப் போலிருந்தீர்

இன்றைக்கி பாப்பார் முடிசாயவைக்க
அந்தப் பாவியெமன் எங்கிருந்தான்
கல்லிலிழுத்த பள்ளாங்குழி என்னைபெற்ற அப்பாவே

நீபெற்ற பெண்ணுக்கு
வேணுமென்றுகேட்டால் நீங்கள் காசு
பணம்போட்டு கடுகே வரவழைப்பீர்

## சகோதரனுக்குப் புலம்பல்

பட்டுதலக்காணி என்பிறவி தம்பிகளா
பாதையோரம் கச்சேரி என் பக்ஷமுள்ள
என்பிறப்பே உன்னை
பார்ப்பதுதான் எக்காலம்

கருப்புத்தலக்காணி நம்முடைய வாசலிலே
கட்டிலே மெத்தையது என் கண்மணியே
என்பிறப்பே உன்னைக் காண்பதுதான் எக்காலம்
வாழை ஐநூறு என்பிறவி தம்பிகளா

வாழைகன்று முன்நூறு அந்த வாழைகத்திப்
பூவெடுக்க என்பிறவி தம்பிகளா
வரிசைப் பிறப்பிழந்தேன்

தேரோ திருநாளோ என்பிறவி தம்பிகளா உன்னை
தேடிப்பிடிப்பேனோ அப்போ
கடையோ கடைத்தெருவோ என்பிறவி தம்பிகளா
நான் கண்டுப் பிடிப்பேனோ

தாழம்பூ வேஷ்டிகட்டி என்பிறவி தம்பிகளா
தாசிவீடு போனேயானல் அந்த
தாசிவீடு போனபணம் நம்ப
வீடுவந்து சேரலியே
வேஷ்டி வெளுத்துக்கட்டி என்பிறவிதம்பிகளா
வேசிவீடு போனேயானல் அந்த
வேசிவீடு போனபணம் நம்ப
வீடுவந்து சேரலியே
பவழரதம் வேண்டுமென்ருல் என்பிறவி தம்பிகளா
பட்சமுடன் தான் கொடுப்பீர்
முத்துரதம் வேண்டுமென்ருல் என்பிறவி தம்பிகளா
மூடரிட வாசலிலே முன்வந்தழுகிறதா

## பிள்ளைக்குப் புலம்பல்

மைந்தனில்லை யென்றுசொல்லி நான்பெற்ற கண்மணியே
மகாதபசு செய்தேனடா எனக்கு மைந்தன்கலி தீர்க்க [வந்த
மகனென்று நானிருந்தேன் இப்போ எங்களை
மானிலத்தில் விட்டுவிட்டு மகனே நீ எங்கொளித்தாய்
ஆலஞ்சரகெடுத்து என்னைபெற்ற அம்மாடி
அடிகிணறு தீர்த்தங்கொண்டு நாங்கோ
ஆணில்லாபாவிக்கி வைத்தசாதங்கறி ஒரு
ஆண் காக்கை தீண்டலியே
புங்கஞ்சரடுகெத்து என்னைபெற்ற அம்மாடி
புதுகிணறு தீர்த்தங்கொண்டு நாங்கள்
பெண்ணில்லாப் பாவிக்கு பொங்கிவைத்த சாதங்கறி
ஒரு பெண்காக்கை தீண்டலியே
பத்துபவுனிலே என்னைபெற்ற அம்மாடி
பாலகனுக்குகாப்படிச்ச அந்த
பஞ்சணைமெத்தையிலே நான்வளர்த்த அய்யா
படிக்குராயென்றிருந்தேன் இப்போ
படிப்புங்குறைச்சலின்னே நான்பெற்ற அய்யா
பாலகனே பழணமென்னேம்

எட்டுபவுனிலே என்னைபெற்ற அய்யா
இந்திரனுக்குக்காப்படிக்க இப்போ
எழுந்த மெத்தையிலே நான் வளர்த்த அய்யா
எழுதுகிருய் என்றிருந்தேன் எப்போ

எழுத்துங் குறைச்சலின்னும் நான்பெற்ற ஐயா
இந்திரனும் பயணமென்னும்
கணுக்காலி தண்ணியிலே என்னைபெற்ற ஐயாவே
காசைபதியவைத்தோம் இப்போ

காசெடுக்க பிள்ளையுண்டு நம்முடைய வாசலிலே
கருமஞ்செய்ய பிள்ளையில்லை
குங்குமம் வில்வமரம் நான்வளர்த்த அய்யா
குலைசாய்ந்த வேங்கைமரம் இப்போ

கொடும்பாவி நின்றழுதால் எனக்கு
குங்குமத் தோப்பழுகும் என்றைக்கு
கோரட்டுக்கச்சேரி கூடப்பிரண்டழுகும்
கரப்புசிருபிளந்து நான்பெற்ற அய்யாவே

கைலாசம் தீவளர்த்தி இன்றைக்குக்
கண்ணுளன் போடுங்கொள்ளி எங்களுக்கு
காடுகிடுகிடென்னும் இந்தப்பாவிபோகும்
கைலாசம் மோட்சங்கிட்டும்

சிகப்பு சிருபிளந்து நான்பெற்ற செல்வமும்
சிவலோகம் தீவளர்த்து இன்றைக்கு
சீமைகிடுகிடென்னும் இந்தபாவிபோகும்
சிவலோகம் மோட்சங்கிட்டும்

ஒருதாய்க்கொருமகனும் என்னைபெற்ற அம்மாடி
உத்தமியாள் பெற்றபிள்ளை அருமையாய்
உபாத்தியாயர் அன்புடனே ராஜிநாயகர்
அனைவோரும் பாடுதற்கு அற்புதமாய்பாடிவைத்தேன்

அற்புத ஒப்பாரி—முற்றிற்று.

---

சக்ரவர்த்தி பிரஸ், சென்னை-1

உ

கற்புடைய மாதர்கள் பாடிய

# கனகரத்தின ஒப்பாரி



இட்டா. பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

1961

கடவுள் துணை

## அதிக அற்புதமுள்ள கற்புடைய மாதர்கள் பாடிய

# கனகரத்தின ஒப்பாரி

(உரைப்பாட்டு சேர்ந்திருக்கிறது)

## தாயாருக்கு சொல்லுகிற ஒப்பாரி

ஜாதிக்காய் பூ பூக்கும் என்னை பெத்தாரே அம்மாடி
சாத்துக்கொரு பிஞ்சிரங்கும்
ஜனத்தார் சொல்லுகிறது என்னை பெத்தாரே அம் [மாடி
ஜயிக்க மனமில்லையடி

ஏலக்காய் பூப்பூக்கும் என்னை பெத்தாரே அம்மாடி
இடைக்கிடை பிஞ்சிரங்கும்
எதிராளி சொல்லுறது என்னை பெத்தாரே அம்மாடி
எனக்கு இருக்க மனம் சகிக்கவில்லை

தங்கம அடைக்கலம் என்னை பெத்தாரே அம்மாடி
தனிவயிரம் தூத்தும்கலம்
தங்கமரக்கால் கொண்டு என்னை பெத்தாரே அம் [மாடி
தள்ளியளிக்கையிலே தங்கை பாரியென்பார்

ஆத்துக்கொரு மணலே என்னை பெத்தாரே அம் [மாடி
அணைகட்டும் கல்தூணும்
ஆனைமுகஞ் சாய்ந்துவிட்டால் என்னை பெத்தாரே [அம்மாடி
என்னை ஆதரிப்பார் யாருமில்லை

குளத்துக்கருமணலே என்னை பெத்தாரே அம்மாடி
குதிரை கட்டும் கல்தூணும் அந்த
குதிரை முகஞ்சாய்ந்து என்னை பெத்தாரே அம்மாடி
என்னை கொண்டணைப்பார் யாருமில்லை

எட்டுரு கும்பலிங்கம் என்னை பெத்தாரே அம்மாடி
இளநீரும் சந்தனமும்
எடுத்துதான் பூஜைசெய்த என்னை பெத்தாரே அம் [மாடி
எட்டி விலக்கிவிடும்

பத்தூரு கும்பலிங்கம் என்னைபெத்தாரே அம்மாடி
பார்த்துதான் பூஜைசெய்ய
பன்னீரும் சந்தனமும் என்னை பெத்தாரே அம்மாடி
என்னை பார்த்து விலக்கிவிடும்

பாலூத்தி சாதங்காட்டி என்னை பெத்தாரே அம்மாடி
படுக்கையிலே வாய்துடைத்து
பாங்காய் வளர்த்தமகன் என்னை பெத்தாரே அம்மாடி
பார்த்தவிடம் சோம்புகிறேன்
நெய்யூத்தி சாதங்கட்டி என்னை பெத்தாரே அம்மாடி
நித்திரையில் வாய்துடைத்து
நிற்கவிட மில்லையென்று என்னை பெத்தாரே அம்மாடி
நின்றவிடம் சோம்புகிறேன்
பொன்னுங்குடமெடுத்து என்னை பெத்தாரே அம்மாடி
நான் போயிவரம் பார்த்திருந்து
உன் பொன்னுந்திருமேனி என்னை பெத்தாரே அம்
நீ போனவழி தெரியலியே [மாடி
நான் யாரைச்சதமென்பேன் என்னை பெத்தாரே அம்
என்னை ஆதரிப்பார் யாருமில்லை [மாடி
நான் அறியா பருவமதில் என்னை பெத்தாரே அம்மாடி
என்னையலையவிட்டு போனையடி
பொழுதோடிப் போச்சுதடி என்னை பெத்தாரே அம்
பொன்முகத்தைக் காண்பதெப்போ [மாடி
நீ போன வழிதெரியலையே என்னை பெத்தாரே அம்
பின்னாலே வந்திடுவேன் [மாடி

என்னைபெற்ற அருமையென்ன என்னை பெத்தாரே
எனக்கு பேருமிட்ட நேர்த்தியென்ன [அம்மாடி
என்பேர மறந்துவிட்டு என்னை பெத்தாரே அம்மாடி
பெரியவூர் போனயடி
ஒத்தைக்கால் மோடியம்மா என்னை பெத்தாரே அம்
ஓதியமரம் சாலையம்மா [மாடி
ஒருபெண்ணு நின்றழுதாள் என்னை பெத்தாரே அம்
உலகமெல்லாம் தானழகும் [மாடி

கொடியும் எலும்மிச்சை என்னை பெத்தாரே அம்மாடி
கோத்திரமே நற்பவழம்
கொடியிலும் காய்க்காத என்னை பெத்தாரே அம்மாடி
கொடியவிலக்கி வைச்சேன்

ஜாதியிலும் பச்சை என்னைபெத்தாரே அம்மாடி
சத்திரத்து நற்பவழம்
ஜாதியிலும் காய்க்காத என்னை பெத்தாரே அம்மாடி
கதிவிளக்கி வைத்தோமே

---

## உரை பாட்டு

கண்ணுளமாமாவே கைலாசம் போனீரோ
தங்கப்பொன் மாமாவே தமபுரம் போனீரோ
இருபுறமும் நாமிருக்க எங்கொளித்தீர் மாமாவே

சுற்றிஜெனமிருக்க சொல்லாமல் போனதென்ன
அன்புடையாளிங்கிருக்க அரன்பதிக்குபோனதென்ன
பிரியமுள்ளாரிங்கிருக்க நீ பிரமன்பதி போனதென்ன

நீதிதப்பா மாமாவே நீரிருந்தால் லாகாதோ
பொல்லாதாள் நானிருக்கஉன் பொன்முடிபோன
தென்ன அத்தையடி அத்தையம்மா அன்புள்ள அத்

தையரே எக்காலம் சென்றிடுமோ எப்போவந்து சேர்ந்
திடுவாய்சேனைநாள் சென்றிடுமொ திரும்பிவந்துசேரா
மெத்தநாள் செல்லுமோபற்றுமுகங்கேட்டாயோ [யோ

அஞ்சகட்டுமாளிகையிலே அன்னழகுமுடிதேடுறோமே
பத்துகட்டுமாளிகையிலேஉன்பரந்தமுகம் தேடுறோமே
எட்டுகட்டுமாளிகையில் இருந்தால் ஆகாதோ

உன்தங்கமுகங்காணும தயங்குறோமேநாங்களெல்லாம்
உன்முகம்காணமல் புலம்புகிறோம் நாங்களெல்லாம்
எத்திசையும் காவலெண்ணியிருந்தோமே அத்தை
[யம்மா
மக்களையும் காணமல் மறந்துவிட்டால் அத்தையம்மா

---

## பிதாவுக்கு

பவளம் மளிஞ்சிதென்று என்னைபெத்தாரே அப்பாவே
என்னைபக்கத்தில் குந்தவைத்தீர்

பவளம்விளைந்ததென்று என்னை பெத்தாரே அப்பாவே
என்னை பதரிவிலே கூறினீர்கள்

எனக்குமானம் பனிபேயும் என்னைபெத்தாரெ அப்பா
எனக்குமறுகடலும் தண்ணிவரும் வே

மதிக்கவிடமில்லையென்று என்னைபெத்தாரே அப்பா
என்னை மடுவில்தள்ளி விட்டீரே [வே

கோடைபனிபேயும் என்னைபெத்தாரே அப்பாவே
கொள்ளடத்தில் தண்ணிவரும்

கொடுக்கவிடமில்லையென்று என்னைபெத்தாரே அப்
கொள்ளடத்தில் தள்ளிவிட்டீர் [பாவே

## நாயகனுக்கு ஒப்பாரி

தங்கத்தால்புஸ்தகத்தான் ராஜாவே மந்திரியே
தாமரைப்பூகூடாரம் தனித்து கணக்கெழுதும்
பொன்னுவிலங்கையே பொழுதிரங்காபட்டணமே

என்னுளுமிருக்க இச்சைகொண்டராஜாவே
தருமதுரைத் தேடுகிறேன்

புண்ணுல் புஸ்தகங்கள் ராசாவே மந்திரியே
புதுமையுள்ள கூடாரம் பிடித்துக் கணக்கெழுதும்

பூசைநதியே பொம்சொல்லா வாசகமே
ஆசைக்கிசைந்தவரே அழகில்சிறந்தவரே
புண்ணியரைத் தேடுகிறேன்

குரிளிம்களம்புயென்னை தேடியராஜாவே
கொள்ளத்து தாழம்பூ

குளித்துமுழுகையிலே யென்னைதேடி ராஜாவே
கொலைக்காரன் யெங்கிருர்தான்

## பிதாவுக்கு

நந்தவனம்பூந்தோட்டம் என்னேபெத்தாரே அப்பா
நடுகினரும் சந்திரமா [வே
காயகியாள் தண்ணிமெல்ல என்னேபெத்தாரே அப்
உனக்கு நாயமில்லே யென்ருர்கள் [பாவே

பூங்காவனம் பூத்ததோட்டம் என்னேபெத்தாரே அப்
புதுகிணறுச்சத்திரமா [பாவே
பெண்ணெருத்தி தண்ணி மெள்ள என்னே பெத்
பொழுதில்லே யென்ருர்கள் [தாரே அப்பாவே

பூட்டும் அலமாரி என்னேபெத்தாரே அப்பாவே
படிபவுனும் சங்கிலியும்
பூட்டிதிறக்காமல் என்னேபெத்தாரே அப்பாவே
பழுதில்லேயென்ருர்கள்

சாத்தும் அலமாரி என்னேபெத்தாரே அப்பாவே
சரிபவுனும் சங்கிலிதான்
சாத்திறக்காமல் என்னேபெத்தாரே அப்பாவே
சமயமில்லேயென்ருர்கள்

அண்டமதில்யெழுப்பி என்னேபெத்தாரே அப்பாவே
அகடமரம்தோப்பாக்கி இன்றைக்கு
அண்டமதில் இடிய என்னே பெத்தாரே அப்பாவே
அண்ணன் தம்பி தாங்குவாளு

பக்கமதில் எழுப்பி என்னே பெத்தாரே அப்பாவே
பகடமரம் தோப்பாக்கி இன்றைக்கி
சுக்கமதிலிடிய என்னே பெத்தாரே அப்பாவே
பங்காளி தாங்குவாளு

பத்தி மதில் யெழுப்பி என்னேபெத்தாரே அப்பாவே
சுருளுமரம் தோப்பாக்கி இன்றைக்கி
சுத்திமதிலிடிய என்னே பெத்தாரே அப்பாவே
சித்தப்பன் தாங்குவாளு

முத்து மலிந்ததென்று என்னே பெத்தாரே அப்பாவே
என்ன மூலேயிலே வைத்துவிட்டு

எனக்குமுத்துவிலைவந்ததென்று என்னை பெத்தாரே
மூடிவிலை கூறினீர்கள் [அப்பாவே

## உரை சொல்லுகிறது

அண்ணுவே யென்பிறவி ஆகசாம் போனதென்ன
நந்தவனச்சோலைகளும் நலமுடனே யிங்கியிருக்க
புஸ்பமரச் சோலையது புகழாக யிங்கிருக்க
வாசனைகள் போகாமல் வைகுந்தம் போனீரோ
பரிமளங்கள் போதாமல் பரமபதம் போனீரோ
மனையாளும் பிள்ளைகளும் மற்றுமுள்ளா ரிங்கிருந்து
எங்களை நீ தனியே விட்டு இனியவழி போவானேன்
அண்ணுவே அண்ணுவே

## உரை சொல்லுகிறது

உத்தமியே யென்பிறவி நீயிருந்தால்
பூமியில் நீயிருக்கலாகாதோ
நீயிருந்து நான்போக நீதியுண்டே பூமியிலே
நானிருந்து நீபோக ஞாயமில்லை வையகத்தில்
செத்தவர்கள் தன்னுடனே சேதிசொல்லப்போனுயோ
மாண்டவர்கள் தன்னுடனே வார்த்தை சொல்லப்
என்பிறவி போனுயோ [போனுயோ

## உரை சொல்லுகிறது

அருமையுள்ள தாத்தாவே அயன்பாதம் சேர்ந்தாயோ
கொம்பன் முடிபோனவுடன் சீர்குலைந்தோம் தாத்தா
அருமைமுடி போனவுடன் ஆசைவிட்டோம் பாட்டி
[யம்மா
தங்கமுடிபோனவுடன் தங்குவதற்கு யாருமில்லை
தாத்தாவே பாட்டியம்மா

## உரை பாட்டு

என்னம்மாடி பெற்றவளே என் ஆச்சியடி தாயாரே
வீதியிலே நாங்ளெல்லாம் விளையாட வீடு வந்தால்
நீதியுடன் தான்பார்த்து நேர்த்தியுடன் சோறிடுவாய்
பலவீதி நான்திரிந்து பந்தடித்து வீடுவந்தால்

பாஷமுடன் நீபார்த்து பரிந்துமல்லோ சோறிடுவாய்
சோறிட்ட கைமருந்து சொக்கர்பதி சேர்ந்தாயோ
அன்னமிட்ட கை மருந்து அரன்பதிபோய் சேர்ந்தா
கர்த்தாவே என்துரையே கைலாசம்சேர்ந்தீரோ [யோ

உத்தமரே என்துரையே உம்பர்பதி சேர்ந்தீரோ
ஒருத்தியுமாம் என்னை விட்டு நீங்கள் ஓடவந்தான்
[நீதியுண்டோ
ஒருநாளும் பிரியாத மனையாளைப் பிரிந்துவிட்டீர்
அநேக நாள் பிரியாத அடியாளை ஏன் பிரிந்தீர்

என்னைத் தனியே விட்டு எவ்விடமோ போய்நடந்தீர்
பொன்னத்தான் நீர் போயும் பூமியில் நான் தங்குவே
[னோ
கட்டழகா உனைப்பியுந்து கண்ணுண்டாய் வாழ்வே
[னோ
மன்னவனே உனைப் பிரிந்து நான் மண்மேலே
கர்த்தனே என்துரையே [உலர்வுவேனோ

ஒப்பாரி முற்றிற்று

உ

# பஞ்சரத்தின ஒப்பாரி



இட்டா பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்

நெ. 189, தங்கசாலைதெரு, சென்னை.

1961

கடவுள் துணை

## பத்தினிமார் புலம்பல்

# பஞ்சரத்தின ஒப்பாரி

### வெண்பா

பத்தினிமார்கள் புலம்பல் பஞ்சரத்தின ஒப்பாரி
சித்திரமாய்ச் செப்பிவர—செந்தமிழா—வித்தரையில்
பாடும் பதத்தை பதிப்பிக்க பார்வனிலே
தேடுங் கணேசா துயர் தீர்.

தங்கத்தால் புஸ்தகங்கள் ராஜாவே மந்திரியே
தாமரைந்பூ கூடாரம்
நீர் தனித்துக் கணக்கெழுத
நான் தருமரையும் தேடுகிறேனே
பொன்னான புஸ்தகங்கள் ராஜாவே மந்திரியே
புதுமையுள்ள கூடாரம்
மொத்தம் பிடித்து கணக்கெழுத
யான் புண்ண்ணியனை தேடுகிறேனே
செக்கல்கட்டி வில்வமரம் பெத்தாளே அம்மாடி
சிவலோகம் தெப்பக்குளம்
சுவத்தால் மறைக்கல்லோ
என் சிந்தனையும் தீரலையே
கல்லுகட்டி வில்வமரம் பெத்தாளே அம்மாடி
கைலாசம் தெப்பக்குளம் நான்
கண்டுவருவே னென்றால்
கதவால் மறைக்கிலையே
பொன்னு கயரெடுத்து பெத்தாளே அம்மாடி
பூத்தமரம் ஊஞ்சலிட்டு நீர்
போகவனுப்பு மென்றால்
பிரியமணம் கூடலியே
தங்க கயரெடுத்து பெத்தாளே அம்மாடி
தனஞ்செயனார் ஊஞ்சலிட்டு நான்
தனித்து வருவேனானால்
என் தாகத்தை தீர்த்திடுவாய்
ஆலஞ்சரவே யான் தேடிய ராஜாவே
ஆரைபடி மாவே நீர்

அணிந்தமாலை வாங்க நான்
அங்கே வருவேனையா
கிள்ளு கொசவனமே தேடிய ராஜாவே
கிளிமூக்கு வெத்திலியே யான்
இன்னொருவன் சாதமுண்ண
என்னை வைத்துப் போனீரா
செஞ்சியிலே வாழும் பெண்ணு பெத்தாளே அம்மாடி
சேன பணக்காரி யான்
சேற்றிலும் தண்ணியிலும்
சேரவர மாட்டேன்
பூந்தேரை கட்டியல்லோ என்னைப்பெத்த அம்மாடி
பொழுதோ டெடுத்திடுங்கோ
பதினாறும் நாளைக்கு நான்
பழம்பரப்ப வந்திடுவேன்
பார்ப்பார் அரண்மனையாம் பெந்தாரே அம்மாவே
பாக்குவிக்கும் மண்டபமாம்
பாக்குவிலை மதித்து
பாக்கு செய்ய வாரதெப்போ
செட்டி அரண்மனையாம் பெத்தாரே அப்பாவே
சீம்புவிற்கும் மண்டபமாம் நீர்
சீப்புவிலை மதித்து
சீருசெய்ய வாரதெப்போ
காதத்தில் அரிசிவாங்கி பெத்தாளே அம்மாடி
கன்னுந்தவலைவாங்கி நான்
கானகத்தில் பொங்கிதின்ன
கன்னடச்சி யானேனே
தூரத்தில் அரிசிவாங்கி நான்
தூரத்தில் பொங்கிதின்ன
துக்கமுடன் நின்றழுதேன்
செஞ்சிக்கு போனதுண்டு பெத்தாளே அம்மாடி
கைவிளக்கு தொட்டதுண்டு நான்
கைவிளக்கு தொட்டதோஷம்
கைகுழந்தை தானம் பண்ணினேன்

நான் மதுரைக்குபோன துண்டு பெத்தாளே அம்மாடி
மணிவிளக்கு தொட்டதுண்டு
மதுரையிலுள்ள சன்ஞசி
எனக்கு மைந்தன் பல மில்லையென்ருன்

எட்டடுக்கு மெத்தையிலே என்புரவி கண்ணுளர்
இருக்கிருயென் றெண்ணியிருந்தேன் உன்
இருப்பு முடிந்தவுடன்
எமலோகம் சேர்ப்தீரா

பத்தடி கூடத்திலே என்புரவி கண்ணுளா
படிக்கின்ரு யென்றிருந்தேன் உன்
படிப்பு முடிந்தவுடன்
பரமலோகம் போனீரா

தாழ பிலாமரமே என் ராஜாவே மந்திரியே
தங்கிருந்த பட்சியாச்சே நான்
தங்கிருந்த பட்சியை
தனியேவிட்டு போனீரா

ஒண்டி விளாமாமரம் என் சாமி என் துரையே
ஒண்டிருந்த பட்சியாச்சே
ஒண்டிருந்த பட்சியை
உருகவிட்டு போனீரே

கச்சை வரிஞ்சிகட்டி என்னைபெத்த அப்பாவே
காயிதம் ஆடையிலே உன்
கச்சை தளந்துதையா
நான் காயிதம் தோத்தேனையா

சோழன் வரிஞ்சிகட்டி என்னைபெத்த அப்பாவே
சொக்கட்டா ஞடும்போது உன்
சோமன் தளர்ந்துதையா
யான் சொக்கட்டான் தோர்த்தேனையா

கும்பகோணம் சம்பா நெல்லு பெத்தாளே அம்மாடி
கொழுத்த நல்ல தாவிருக்க
மரவேரி தேனழிக்கும்
மரவனுக்கு தயனம்பண்ணீர்

மஞ்சாகுப்பம் சம்மா நெல்லு என்னை பெத்தாளே
மறைக்க நல்ல தாவுமுண்டு [அம்மாடி]
தொம்பேரி தேனழிக்கும்
கொரவனுக்கு தாகம் பண்ணீர்

காண வருவேனென்றால் பெத்தாயே அம்மாடி
கால்லாறு தண்ணீர் வரும்
கால்லாற்றை நீந்திவர
கட்டுமரம் போட்டனுப்பும்

பார்க்க வருவேனென்றால் பெந்தாரே அப்பாவே
பாலாறு தண்ணீர் வரும்
பாலாற்றை நீந்திவர
பாமரங்கள் போட்டனுப்பும்

மல்லிகை பூந்தோட்டம் பெத்தாளே அம்மாடி
மரிக்கொழுந்து பூர்க்கும் வனம்
பூர்க்கும் வனந்தேடி
பொற்கொடியாள் வாரதெப்போ

போரையோ பூவுதிரோ
தங்க ரதம் குலுங்க
தனஞ்செயனார் பெற்ற பெண்ணு
தனித்து வரக் காணலியே

காசிகுளமுண்டு பெத்தாளே அம்மாடி
கப்பமஞ்சள் தோப்புமுண்டு
அரைத்து குளிக்கையிலே
அமங்களியாள் பார்த்தாளோ

மதுரையிலே கூடாரம் தேடிய ராஜாவே
மல்லிகைப்பூ வியாபாரம்
மங்கை வருவேனென்றால்
மரத்துக்கொரு காவலுண்டு

செஞ்சியிலே கூடாரம் தேடிய ராஜாவே
செண்பகப்பூ வியாபாரம்
சீதை வருவேனானல்
செடிக்கொரு காவலுண்டு

கும்பகோணம் சாலையிலே
குறி பார்ககப்
குண்ணுகளைப்
கொற்றவரை

பெத்தாளே அம்மாடி
போனிடத்தே
போலவே நான்
நானிழந்தேன்

மண்ணு கிணறு வெட்டி
மருக்கொழுந்து
பூ முடிக்கும்
புலம்புவதும்

தேடிய ராஜாவே
தோப்பு வைத்து
பெண்ணரசி
சம்மதமோ

மேட்டு தெருவிலே
முத்து ரதம்
ஓட்டமாய்
இன் ரதந்தான்

மூதேவி அத்தையம்மா
போகுதென்று
வந்து பார்க்க
போகுதம்மா

பள்ளத் தெருவிலே
பவழத்தேர்
என் ஆளனைப்
அத்தை ரதம்

அத்தையம்மா நல்
போகுதென்று
பெற்றெடுத்த
போகுதம்மா

கல்லிழைத்த திண்ணையிலே
பொன்னிழைத்த
அக்காளும்
நாங்கள் உட்கார்ந்து

பெத்தாளே அம்மாடி
பாய் போட்டு
தங்கையுமாய்
ஆடையிலே

வந்தான் தபால்காரன்
வாங்கிப்
சீமை
சீக்கிரமாய்

பெத்தாளே அம்மாடி
படிக்கையிலே
கடுதாசி
வந்துதம்மா

கடுதாசி கண்டவுடன்
கட்டாயம்
ஏறிப்
இரங்கறது

பெத்தாளே அம்மாடி
ரயில் வண்டி
புறப்பட்ட வண்டி
பொட்டி வண்டி

கட்டை வண்டியகப்படாமல்
கால் நடையாய்
காசியிலே
காலுருவி

பெத்தாளே அம்மாடி
வந்தோமானால்
தண்ணிமொண்டு
வார்த்திடுவீர்

சேன மனிதருண்டு — பெத்தாளே அம்மாடி
சிதம்பரத்து — தேருமுண்டு
கிதம்பரத்து — தேருடைய
சேன மனிதரையும் — தோத்து விட்டேன்

வேண மனிதருண்டு — பெத்தாளே அம்மாடி
வெங்கலத்து — தேருமுண்டு
வெங்கலத்து — தேருடைய
வேண மணிதரையும் — தோத்துவிட்டேன்

கொம்பு திருகாணி — பெற்ருளே அம்மாடி
கொடி னிறைஞ்ச — பாவக்காய்
கொண்டனைப்பா — ரில்லாத
கொடியோருடே — மக்குறேனே

செம்பு திருகாணி — என்னைப் பெற்ற அப்பாவே
செடி நிறைந்த — பாவக்காய்
சேர்த்தனைப்பா — ரில்லாத
செடியோடே — மக்குறேனே

அச்சடி நால்சிவக்க — என் புறவி கண்ணுளா
யானை முகம் — முந்தாணி
அண்டிவந்து — கொடிபோட
அண்ணன் தம்பி — மெத்தவம்மா

குச்சடி — நால் சிவக்க
என் புரவி — கண்ணுளா
கொண்டுவந்து — கொடிபோட
குதிரை முகம் — முந்தாணி

சீமை புடலங்காய் — பெத்தாத்ள அம்மாடி
சித்திரத்து — கத்திரிக்காய்
ஜீவன் — இருக்கையிலே
சேதி சொன்ன — லாகாதா

ஆவா புடலங்காய் — என்னைப் பெற்ற அம்மாவே
அஞ்சுவித — கத்திரிக்காய்
ஆவிக் — கிடக்கையிலே
ஆளுவிட்டா — லாகாதா

நஞ்சை விளஞ்சி வரும் பெத்தாளே அம்மாடி
நாலுவாய்க்கால் தண்ணீர்வரும்
நஞ்சையிலே காலுவைக்க
நடுங்குதே காலுரெண்டும்
நஞ்சை விலஞ்சிவரும் பெத்தாளே அம்மாடி
பிஞ்சி வாய்க்கால் தண்ணீர் வரும்
பிஞ்சியிலே காலுவைக்க
பின்னுதே காலுரெண்டும்
ஜாதி எலுமிச்சங்கா பெத்தாளே அம்மாடி
சமுத்திரத்து நல்பவழம்
ஜாதியிலும் பூர்க்காமல்
தனிவழியாய்ப் பூர்த்ததம்மா
சொத்து எலுமிச்சங்கா பெத்தாளே அம்மாடி
கோத்திரத்து நல்பவழம்
கொத்திலேயும் பூக்காமல்
கொடிவழியாய் பூர்த்தாயா
பாம்புக்கு ரெண்டுகண்ணு பெத்தாளே அம்மாடி
பார்வதியாள் பெற்றபெண்ணு
பாடைமேல் வைக்கையிலே
பாமபாய் புரளுறேனே
புதளுக்கு ரெண்டுகண்ணு பெத்தாளே அம்மாடி
தேவேந்திரன் பெற்றபெண்ணு
தேருமேல் வைக்கையிலே
தேளா துடிக்கிறேனே
ஓத்தக்கால் மேடையம்மா பெத்தாளே அம்மாடி
ஓதியமரஞ் சாலையம்மா
ஒரு பெண்ணு நின்னழுக
உலகமெல்லாந் தானழுகும்
ரெட்டைக்கல் கேடையம்மா பெத்தாளே அம்மாடி
ரயில்போகும் பாதையம்மா
ராணிமகள் நின்னழுதால்
ராஜாங்கம் தானழுகும்

பஞ்சரத்தின ஒப்பாரி முற்றிற்று.

உ

# சாவித்திரி ஒப்பாரி




இட்டா. பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

1961

உ

கடவுள் துணை

ஜெகமெங்கும் புகழ்பெற்ற இன்பகான கீதமணி

திருசிரபுரம்

## ஸ்ரீஜத் R. T. தங்கமுத்து தாஸ்

அவர்களால் இயற்றிய

சத்தியவான்

# சாவித்திரி ஒப்பாரி

காதலேபேர்கேட்டு என்னைத்தேடியசாமி
உன்னைக் கணவராக நெஞ்சில்வைத்து நான்
கன்னிசிறையிருந்தேன் இப்போ
கன்னிஇறைவனுச்சோ நீங்கள்
காலனூர் போகலாமோ

புண்ணியர் பேர்கேட்ட முதல்என்னைக்கொண்ட
மன்னவனே உன்னைப் புருஷனென்று
நான்நினைத்தேன் பூவைசிறையிருந்தேன்
பூவைசிறைவீணுச்சோ என்னைத்தேடியசாமி
நீங்கள் பொன்னுலகு போகலாமோ

மண்ணவனூர் இல்லாமல் இந்தச்சண்டாளன்
சீமைமஞ்சளிழந்தேன் மணமிழந்தேன் நான்
பூவிழந்தேன் என்னைக் கொண்ட மன்னவனூர்
வாரதெப்போ மங்கை குறைதீர்வ தெப்போ

கொண்டவனூர் இல்லாமல் இந்தச்சதிகாரன்
சீமைகுங்கம் தானிழந்தேன்
குடமல்லிகைப் பூவிழந்தேன் என்னைத்தேடிய
குணவந்தர் வார்தெப்போ நான்
குயிலான்குறை தீர்வதெப்போ

பத்துமலைதாண்டி அந்தப்பழனிமலை சந்நிதியிலே
பகவானிருக்குமிடம் பார்வதியாள் தூக்குமிடம்

அந்தபகவானிடத்திலே என்னைத் தேடிய சாமி
நான்பாங்கிகுறை சொல்லிவிட்டால்
பாவைப்பழம்தின்ன வந்தபத்துலக்ஷம்
பக்ஷிகளும் பவைபழம் தின்னுமல்
பறந்தோடி போகுதிப்போ

எட்டுமலைஒதுக்கி இடும்பன்மலைதாணொதுக்கி
ஈசனிருக்குமிடம் ஈஸ்வரியாள் தூக்குமிடம்
அந்தஈசனிடத்திலே என்னைக்கொண்ட
மன்னவரேநான் இருசிறைச்சொல்லிவிட்டால்
இலந்தைப்பழம் தின்னவந்த எட்டுலக்ஷம்
பக்ஷிகளும் எழுந்தோடிப் போகுதிப்போ

கறுப்புகுதிரையேறி என்னைத்தேடிய மன்னவரே
நீங்க காசிக்கேபோனுல் கரணமகாராஜா
கடவுள்வாராரென்றுஅங்கே
கையெடுப்பார் கோடிஜனம்

சிகப்புகுதிரையேறி என்னைத்தேடியசாமி
நீங்கசீரங்கம்போனலும் செங்கல்வராயரே
தெரிசனமென்றுசொல்லி என்னைக்கொண்ட
மன்னவரேஉங்களைச் சேவிப்பார்கோடிஜனம்

நான்கடலோரம் தொட்டிகட்டி
காசாம்பூமெத்தையிட்டு நான்கன்னிபடுத்து
காலனுடஓலை என்னைகொண்டசாமி
என்னுவில் விழுந்ததுவேநான்
கன்னிபுலம்புறது நீங்கபோன
காலனூர் கேழ்க்கலையோ

தாவார்ம்தொட்டிகட்டி தாளம்பூ மெத்தையிட்டு
நான் தங்கை படுத்திருந்தேன்
தருமருடஓலைவந்து என்னைத்தேடியசாமி

என்தலையில்விழுந்ததுவே நான் தங்கை புலம்புறது
நீங்கபோரதருமலோகம் கேழ்க்கலையோ

சத்திரத்தைக்கட்டிவைத்தீர் கோடிதர்மம்செய்தீர்
இந்தசண்டாள சீமைத்திரம்பாழாச்சு
சகல தர்மம் வீணாச்சு

கூடத்தைக்கட்டிவைத்தீர் சகலதர்மம்செய்தீர்
இந்தப்பாவியுடசீமை கூடமும்வீணாச்சு
கோடிதர்மம் பாழாச்சு

குதிரையின்மீதேறி என்னைக்கொண்ட மன்னவரே
கோட்டைக்கடந்தாலும் கொற்றவனார் வந்தாரென்று
கும்பிடுவார் கோடிஜனம

ஆனையின் மீதேறி அக்கினி கடந்தாலும்
என்னைத்தேடிய சாமி
ஆண்டவனார் வாராரென்று
அடிபணிவார் கோடிஜனம்

சப்பரத்துமீதேறி சாலைகடந்தாலும்
என்னைத்தேடிய கண்ணேசாமி
வாராரென்று சரணமிட்டுக் கைதொழுவார்

தேரின்மேல் ஏறியல்லோ
என்னைத்தேடியசாமி நீங்கதெருவழியே
போனாலும் தெய்வம் வாராரென்று
தெண்டனிட்டு கைதொழுதார்

நீ பூசைசெய்யும் மண்டபத்தே
பொன்விளக்கெரியும் என்னைத் தேடியசாமி
பொன்மணியும் ஓசைவிடும்
உங்களாண்மதறந்த நாழிகைக்கு
என்னைத்தேடியச்சாமி பொன்னுலகில்
பொன்னு விளக்கணைந்து பூஜைமணி
ஓசையின்றி புலம்பியழுகு திப்போ

நீ தவமிருக்கும் மண்டபத்தே
என்னைதேடியசாமி தங்கவிளக்கெரியும்

தங்கமணியும் ஓசையிடும் உங்கள்
கண் மறைந்த நாழிகைக்கு தங்க விளக்கணைந்து
தங்கமணியும் ஓசையின்றி தவித்து புலம்புதிப்போ
சந்தனக்கல் மேடையிலே நாமிருபேரும்
சதுரங்க மேடையிலே எந்தச் சண்டாளர்
பார்த்தாரோ சாபம் கொடுத்தாரோ
சந்தனக்கல் மேடை சதுரங்கமாடாமல்

தயக்கமாய் நிற்குதிப்போ
குங்குமம் மேடை நம்ப கூடி விளையாடையிலே
கொடும்பாவி பார்த்தீரோ
கொடுச்சாபம் தந்தீரோ

இப்பதர்க்கமாய் நிற்குதப்பா
படைமுகத்தில் நின்னாலும்
பகைவர்களுக்கு பதுங்கி ஒளிந்திடுவார்
என்னைக்கொண்ட மன்னவரே
ஏரெடுத்துப் பார்த்தாலும் என்னைத் தேடியசாமி
எதிரில் நடுங்கி ஏங்கிப் பதுங்கிடுவார்

தங்கநிலா வெறிக்க என்னைக்கொண்ட மன்னவரே
நம்ம வாசம் தாளம்பூ மெத்தையிருக்க
உனக்கு வச்ச சதிகாரி காத்திருந்தாங்க
தாளம்பூ மெத்தைவிட்டு இந்தச் சதிகாரியை
கையமர்த்தி நீ தருமராஜா பள்ளிகொண்ட
நான் தங்கை குறை என்ன ஆகும்

பொன்னிநிலா வெறிக்க என்னை தேடிய ராஜாவே
உனக்கு பூபோட்ட மெத்தையிருக்க
நீங்க பூபோட்ட மெத்தைவிட்டு இந்த சதிகாரியை
பூவையைகையமர்த்தி என்னை தேடிய
புண்ணியனர் பள்ளி கொண்டால்
பெண் குறையும் என்னாகும்

நாலு கடல் தாண்டி என்னைத் தேடிய சாமி
உங்களை நாளகராம் வேணுமின்னே
நாட்டிலுள்ளோர் பொருமை
என்னைக் கொண்ட நாயகரை நானிழந்தேன்

ஐந்து கடல் கடந்து என்னைத் தேடியசாமி
உங்களை அருச்சுன்ரை வேணுமின்னே
அடுத்தவர்கள் பொருமை என்னைக்கொண்ட
அருச்சுனரை நானிழந்தேன்

சிகப்பு இரும்பு பெட்டி
சீலை வைக்கும் டிரங்கு பெட்டி
நான் சில சிலறுத்தவள் சீமானைத் தோற்றவள்
சிகப்பிரும்பு பெட்டியிடம்

சீலை வைக்கும் டிரங்கினிடம்
செல்லி குறை சொல்லி விட்டால்
சீலையழுகலாச்சோ சிகப்பிரும்பு மங்களாச்சோ
பச்சை இரும்பு பெட்டி

பவுனுக்கும் டிரங்குப் பெட்டி
நான் பாதியிலறுத்தவள்
பாண்டியரை தோற்றவள்
பச்சை இரும்பு பெட்டியிடம் பவுனு வைக்கும்

டிரங்குனிடம் பாகுறை சொல்லிவிட்டால்
பவுனும் அழுகலாச்சோ
பச்சை நிறம் மங்கலாச்சோ
வில்லெடுத்துக் கைபிடித்து வேகமுடன் தேரேறி

என்னைத் தேடியசாமி வீதிவழி போனலும்
வில்லுக் கதிகாரி விஜயனென்று கைதொழுவார்
அம்பெடுத்துக் கைபிடித்து
என்னைத் தேடிய மன்னர் அவசரமாய்த் தேரேறு

அன்புடன் வெளிபோனல்
அம்புக் கதிகாரி அர்ச்சுன ராஜனென்று
அனைவரும் கைதொழுவார்

மாலை தரிக்கையிலே என்னைத் தேடியசாமி
மாதவர்கள் பார்த்தாரோ

மனத்துயரம் கொண்டாரோ
மங்கையை தனியேவிட்டு
என்னைக் கொண்ட மன்னவரே
நீங்க மாண்டுவிட நீதியுண்டோ

தாலி தரிக்கையிலே என்னைத் தேடியசாமி
அந்த தானவர்கள் பாத்தாரோ
தன் மனது நொந்தாரோ
நான் தையலை தனியேவிட்டு
என்னைத் தேடிய சாமி நீங்க சவமாக நீதியுண்டோ

பழநிமலை சன்னதியில் பால் பசுவும் கோடியுண்டு
பால்சுவைக் காணுமல் பரமலோகம் போகலாமோ
பாவை புலம்புறது என்னைக் கொண்ட
பார்த்தாவே சம்மதமோ

கழுகு மலைச்சன்னதியில் கறவைப்பசு கோடியுண்டு
கறவைப்பசு காணுமல் காலனூர் போகலாமோ
நான் கன்னி புலம்புறது
நீங்க போற காலனூர் சம்மதமோ

சின்னவயதிலே சிறுவயதுநாளையிலே
நாங்கசீட்டுவிளையாடையிலே
இந்தச்சீரழிவான் சீமையிலே
என்னைத்தேடி சீமானைக்கொள்ளையிட்டேன்

ஐந்துவயதிலே அறியாதநாளையிலே
நாங்கள் அன்பாய் விளையாடையிலே
இந்தஅரசுருவான் சீமையிலே
என்னைக்கொண்ட அருச்சுனரைநானிழந்தேன்

பட்டுடுத்தி குடைபிடித்து
பட்டணத்துவீதிவழி பக்கமாய் போனலும்

பட்டணத்து வீதியெல்லாம் என்னைக்கொண்ட
மகுடமணியே பாண்டியனுர் வாராரென்று

பார்த்தஜனம் கையெடுக்கநீ
சிலுக்கு உடுத்தியல்லோ
நீங்க சின்ன குடைபிடித்து
ஸ்ரீரங்கத்து வீதி தெரு வழியே போனலும்

ஸ்ரீரங்கத்து வீதியெல்லாம் என்னைக் கொண்ட
மகுடமணியே சித்தஜனுர் வாராரென்று
தெருவு ஜனம் கையெடுக்கும்
நான் உயிரை இழந்திடுவேன் என்னைத்தேடியசாமி

உன்னோடு உடன் கட்டை ஏறிடுவேன்
உத்தமரில்லாமல் இந்த படுபாவி வாசலிலே
நான் உருவம் குலைகிறேனே
யான் மாண்டு மடிந்திடுவேன் வைகுந்தம்

சேர்ந்திடுவேன் என்னைத் தேடியசாமி
மன்னவரில்லாமல் இந்தச் சண்டாளன்
சீமைநான் மங்கைமயங்குறனே
ஆத்தோரம் மண்டபத்தே அரளிப்பூ மேடையிலே

என்னைதேடிய சாமி அன்னம்வந்துமேதின்னும்
ஆனந்தமாயிருந்தேன் அன்னம் உருமாறி
என்னைக்கொண்டமன்ன அரவமாய் மாறினதோ
குளத்தோரம் மண்டபத்தே

குடமல்லிகைமேடையிலே
என்னைக்கொண்ட மன்னவரே
குயிலுவந்து மேயுதென்று
குணமாகாணிருந்தேன் குயிலுமாறி
என்னைத்தேடியசாமி கொடும்பாம்பாய் உண்டாச்சு

**சத்தியவான் சாவித்திரி ஒப்பாரி முற்றிற்று.**

# புத்தக விளம்பரம்

| | | |
|---|---|---|
| விநாயக புராண வசனம் | ரூ. 12 | 00 |
| அற்புத பூலோக ரம்பை கதை | 2 | 50 |
| நவரச கதம்ப ஒப்பாரி | 0 | 62 |
| விநோத கதைகள் | 0 | 50 |
| மரகத சுந்தரம் | 1 | 50 |
| நாகபூஷணம் | 1 | 25 |
| மஸ்தான் சாகிபு பாடல் | 3 | 50 |
| சார்தர்வேஸ் 4 பக்கிர்கிஸ்ஸா | 4 | 50 |

## வைத்தியம், சோதிட புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| மணிமந்திர வைத்திய சேகரம் | 2 | 50 |
| புலஸ்தியர் மகரிஷி வாத சூத்திரம் 300 | 1 | 25 |
| அகஸ்திய முனிவர் பூரண சூத்திரம் 216பாடல் | 0 | 75 |
| பாலவாகடத் திரட்டு வைத்தியம் 1200-பாடல் | 3 | 00 |
| ஊர்வசி வைத்திய சிட்கா 2-பாகம் சேர்ந்தது | 2 | 00 |
| தன்வந்திரி சுருக்கிடை நிகண்டு-300 | 0 | 75 |
| ஆயுள்வேத சுருக்கம் | 2 | 50 |
| திருமூல நாயனர் வைத்திய காவியம் 1000பாடல் | 1 | 25 |
| புலஸ்தியர்விளக்கிய ஞானகற்பம் | 0 | 75 |
| போகர் 7000 | 15 | 00 |
| நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும் உரையும் | 1 | 50 |
| கனவு காணும் சாஸ்திரம் | 0 | 62 |
| விமகவி பாட்டு உரை | 1 | 50 |
| கைர் நாடி சோதிடம் | 2 | 50 |
| சோதிமாமுனிவர் சோதிட கேரளம் | 1 | 25 |
| சாதகாலங்காரம் மூலமும் - விரிவுரையுடன் | 6 | 00 |
| கணித முருகசேகரம் | 2 | 50 |
| ஹோரா சாஸ்திரம் | 2 | 50 |
| பெரிய சுந்தர சேகரம் | 2 | 50 |
| கௌசிக சிந்தாமணி (3-பாகங்கள்) | 6 | 00 |
| சோதிட மூலாதாரம் | 0 | 62 |
| சர்வ கனவின் பலன் | 0 | 62 |
| நவக்கிரக தோத்திரம் | 0 | 62 |
| மலையாள மாந்திரீக அரிச்சுவடி | 0 | 37 |
| சுத்தண நூல் சாஸ்திரம் | 0 | 50 |

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

நெ. 29, வாலாஜா ரோடு, சென்னை-2